
குடிபாடி வெங்கட சலம்

ஆர். எஸ். சுதர்சனம்



இந்திய
இலக்கியச்
சிற்பிகள்

குடிபாடி வெங்கட சலம்

உள் அட்டையில் காணும் சிற்பக் காட்சியில் பகவான் புத்தரின் அன்னை மாயாதேவி கண்ட கனவின் பலனை மன்னர் சுத்தோதனருக்கு நிமித்திகர் மூவர் விளக்குகின்றனர். அவர்களுக்குக் கீழே அமர்ந்து அந்த விளக்கத்தை எழுதுகிறார் ஓர் எழுத்தர். எழுதும் கலையைச் சித்தரிக்கும் முதல் இந்தியச் சிற்பம் இதுவாகவே இருக்கலாம்.

(நாகார்ஜுன் மலைச்சிற்பம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு.
பட உதவி : நேஷனல் மியூசியம். புது தில்லி)

இந்திய இலக்கியச் சிற்பிகள்

குடிபாடி வெங்கட சலம்

தெலுங்கு மூலம் :
ஆர். எஸ். சுதர்சனம்

தமிழில்
என். தட்சிணாமூர்த்தி அய்யா

சாகித்திய அக்காதெமி

Gudipadi Venkata Chalam - Tamil translation by N. Dhakshina Murthy Aiyah of R.S. Sudarsanam's monograph in Telugu, of the same name. Sahitya Akademi, 1995. Rs. 15 .

முதல் வெளியீடு 1995

ISBN 81–7201–741–3

சாகித்திய அக்காதெமி

தலைமை அலுவலகம்
இரவீந்திர பவன், 35, பெரோஸ்ஷா சாலை, புது தில்லி-110 001.

விற்பனை
'ஸ்வாதி' மந்திர் சாலை, புது தில்லி-110 001.

'குணா பில்டிங்', 304-305, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை, சென்னை-600 018.

ஜீவன் தாரா பில்டிங், 4வது மாடி,
டைமண்ட் ஹார்பர் சாலை, கல்கத்தா-700 053.

172, பம்பாய் மராத்தி கிரந்த சங்கிரகாலய சாலை,
தாதர், பம்பாய்-400 014.

109, ஜே.ஸி. சாலை, பெங்களூர்-560 002.

விலை ரூ. 15/-

அச்சிட்டவர்: வெல்டன் பிரஸ், சென்னை-600 021.

பொருளடக்கம்

துணைக் குறிப்புரை

பாரதநாட்டுச் சமுதாய மறுவாழ்வமைப்பு, புதுமையான இலக்கியப்படைப்பு ராஜாராம் மோகன்ராய் அவர்களால் வங்க மாநிலத்தில் தொடங்கப் பெற்று, நாடெங்கிலும் படிப்படியாகப் பரவலாயிற்று. ஆந்திர நாட்டில் வீரேசலிங்கம் (1848-1919) இப்புரட்சியை உந்துவித்து, வங்க நாட்டில் ராம மோகனராய் செயலாற்றிவந்த செயல்களெல்லாம், அவர்க்குப் பின்னவரான தேவேந்திரநாத தாகூர், கேசவசந்திரசேன், சிவநாத சாஸ்திரி போன்றவரின் பணிகளையும் கூடத் தாம் செயல் பெறச் செய்தார். 1862-இல் பிறந்து குருஜாட அப்பாராவ், ரகுபதிவேங்கடரத்னம் நாயுடு இப்புரட்சியில் வீரேசலிங்கம் அவர்களுக்கு உடந்தையாயினர்.

தொழில் முறையில் சிறந்த கல்வியாளரும் எழுத்தாளருமான வீரேசலிங்கம், அக்காலத்துச் சமுதாயத்தில் தாம் பிறந்த அந்தண வகுப்பின் கேடுற்ற நிலையில், அதனிலும் பெண்ணினத்தின் தாழ்வுற்ற நிலையை உற்றுணர்ந்து, சமூகச் சீரமைப்புப் பணிக்குத் தாமே முன் வரலானார். அவர் தமது நாட்குறிப்பேட்டில் ஓரிடத்தில் இவ்வாறு எழுதியிருந்தார், ''வெறும் புத்தகங்களை எழுதி வெளியிடுவதனால் பயனேதுமில்லை. நாம் நம்பியுள்ள சத்தியத்தை உலகுக்கு எடுத்துரைத்துச் செயல்வடிவில் காட்டத்தகும் திறமை மிக்க செயல்களைச் செய்துகாட்டல் மிகவும் தேவை''. இலக்கிய உரையாக்கப்பணி சமுதாய நல்வாழ்வுக்கு ஒரு துணைக் கருவியாகப் பயன்பெறும் பணியாக வீரேசலிங்கம் மேற்கொள்ளலானார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பின்பாதிக் காலத்தில் ஆந்திர நாட்டின் வாழ்க்கையமைப்பு எவ்வாறிருந்ததென வீரேசலிங்கம் அவர்களின் உரைநடைகளின் வாயிலாகவே நாம் நன்கு புரிந்து கொள்ளலாம். அந் நாட்களில் நலிவடைந்த 'ஜமீன்தாரி' அமைப்பு முறையில் அந்தணரின் வாழ்க்கை நிலையை வீரேசலிங்கம் அவர்களின் புதினத் தொடரான 'ராஜசேகர சரித்திரம்' (1880) முழு விளக்கமாக உருவகப்படுத்தியுள்ளது. ஜமீன்தாரி மானியங்களைப் பெற்றிருந்த ராஜசேகரனைப் போன்ற ஓரிருவரைத் தவிர்த்துப் பிறர்க்கு, வாழ்க்கைக்குத் தேவையான வழியேதுமில்லை.

நிலவுடைமை மிகுந்த ராஜசேகரனைத் துதிபாடிப் புகழ்ந்து நெருங்கி உறவாடி, புரோகிதனாகவும், சித்தாந்தியாகவும் உடல் மருத்துவனாகவும் கோயில் திருப்பணியாளனாகவும் ஏதேனும் பொறுப் பேற்றுத் தமது வாழ்க்கைக்கு வழி கோலிக் கொள்ளும் அந்தணர் களுக்குத் தமக்கெனச் செல்வம், பணத்தாசை தவிர தம் மரபுக் கேற்ற கல்வி, கலைத் திறன்களின் மீதான குறிக்கோள் தவறிப் போய்விட்டது. சற்றேனும் சமஸ்கிருதக் கல்வி வாசனை இல்லாமற் போனமையால் சமையல் பணிபுரிபவனாகவோ, தெருப்பள்ளி ஆசானாகவோ வாழவேண்டும். இவ்வழியு மில்லாமற் போனால், மிச்சமிருந்தது பிணந்தூக்கும் தொழில் தான். இத்தகைய சூழ்நிலைகளில் தன்னுரிமைச் சிந்தனைக்கு, செயற்பாட்டுக்கு, ஈடுபாடுகளுக்குத் தன்னை நிலை நிறுத்திக் கொள்வது எப்படி இயலும்? உயர் குலத்தைச் சார்ந்தவர்களே அன்றைய சமுதாயத்தில் மூடச் செயல்களுக்கும், பயங்களுக்கும், தீய பழக்கங்களுக்கும் பிறப்பிடமானது வீரேசலிங்கம் அவர்களை உளங்குமுறச் செய்து, பொங்கிப் புரட்சியுறச் செய்தது. பெண்களுக்கு அந் நாட்களில் கல்வி மறுக்கப்பட்டிருந்தது. இளமைத் திருமணம் தவறற்ற செயல். ஆடவர் மணம் புரிந்து கொள்ள வயது வரம்பேதுமில்லை. ஆண் எத்தனை மணமாயினும் செய்து கொள்ளலாம். பொருளாதார வறுமையின் விளைவாக, கன்னிகைக் கட்டணத்துக்கு ஆசைகொண்டு மூன்று அல்லது நான்கு வயதுச் சிறுமிகளை வயதான ஆடவர்களுக்கு மணம் செய்வித்தலும், அவர்கள் குறுகிய காலத்திலேயே இறந் தொழிதலும் இயல்பாக நடப்பதாகும். மக்கள் தொகையில் மாற்று வழிகாணாதவாறு இளம் விதவைகளின் எண்ணிக்கை அச்சம் தரும் வகையில் பெருகியது. எந்த வீட்டினைக் கண்டாலும் அத்தகைய விதவைகளே! ஊதியம், படி ஏதுமில்லாத பணிப் பெண்களாகவும் ஏவல் மகளிராகவும் தன் மானம் மதிப்பேதும் பேணாது இளம் விதவைகள் தம் வாழ்வைக் கடத்தினார்கள். மணம் முடித்த இளமங்கைக்கு உரிய வயதடைவதற்குள், கணவனுடன் இருந்து, குடும்பம் நடத்தச் சென்றாலோ, கர்ப்பமடைவதும், பிரசவமாவதும் ஒரு பெரிய கண்டமாகவே இருந்து தீரும். இருட்டறையில் இருக்கச் செய்து, காற்று நீரில்லாமல் பத்து நாட்கள் எரிக்கும் கோடையிலும் கூட, தாய் சேயினை அப்படியே அடைத்துவைப்பர்! 'செவ்வாப்பு' எனும் தீயவினைகள் உள் நுழைந்து தாய்க்கும் சேய்க்கும் தீங்கு விளைவிக்குமென்ற மூடநம்பிக்கை இதற்குக் காரணம். நோயின்மைக் கோட்பாடுகளை அறியாமல் மூட நம்பிக்கையின் விளைவாக இறக்கும் சிறு குழந்தைகளும் எண்ணற்றவை. இக்கண்டங்களைக் கடந்து தாய்மைப் பேறடைந்த பெண்டிர் குழந்தை வளர்ப்பு அறியாமல் ஒரு புறம், மாமியார் நாத்திகளுடன் புடவைகள் நகைகளுக்கெனத் தொடரும் கலகங்கள் ஒரு புறமாகக்

குடும்ப வாழ்க்கையை ஒரு நரகத்துன்பமாக்கிக் கொண்டனர். பெண்களுக்குத் தம் வாழ்க்கையில் எந்த வயதிலும் மகிழ்ச்சி யுடனும் அறிவுடனும் இருப்பதற்கு வாய்ப்பில்லாத சூழ்நிலை களைத் தெளிவாக விவரிக்கும் 'சத்தியவதி சரித்திரம்' (1884) என்ற தொடர்கதையில் வீரேசலிங்கம் ஓவியமாக்கினார். அறிவின்றி, குடும்பத்தில் பலமற்ற குலமகளிர் தம் வாழ்க்கையை வாழ்ந்து தீர வேண்டும். தமது கணவன்மார்களோ உண்டான செல்வத்தை அழித்து விலைமாதர்களுடன் கேளிக்கை வாழ்க்கை நடத்தலானார் கள். விலை மாதர்களோ ஒரு தனிப்பட்ட குலத்தவர்கள். அவர் களுடன் உறவு கொண்டிருப்பது பெருமைக் குரியதாகக் கருதியிருந்தார்கள். வீரேலிங்கம் இத்தரமற்ற சமுதாயத்தை விடுவிக்க வேண்டி, முதலாவதாகப் பெண்களைக் கல்வியறிவு பெறச் செய்வதற்கென முனைந்தார்.

1874 இல் பெண்களுக்கெனப் பாடசாலையைத் தனியாக நிறுவியதுடன் வீரேசலிங்கத்தின் சமூகப் போராட்டம் தொடங்கியது. 1874 அக்டோபர் மாதத்தில் 'விவேக வர்த்தனி' பத்திரிகையை நிறுவி, அதன் வழியாகத் தற்கால அறிவியல் பிரசாரத்தில் முனையலானார். அதில், கடவுள் ஒருவரே எனவும், மூட நம்பிக்கைகளைச் சாடியும், பெண்கல்வியை ஊக்குவித்தும், ஆரோக்கிய நெறிகளை விளக்கியும், விலைமாதரின் தொடர்பு களைக் கண்டித்தும், இன்னபிற செயல்களை முறையாக எழுதி வெளிட்டார். 1876 இல் தமக்கென அச்சகம் அமைத்து, தமது பத்திரிகையை மாதமிருமுறை இதழாக வெளியிட்டார். 1879 இல் விதவை மறுமணத்தை ஒப்புக் கொள்ளத்தக்க சாஸ்திர ஆதாரங் களைத் தொகுத்து, ஒரு பொது அரங்கத்தில் கருத்துக்களைப் படித்துப் பேசி ஊக்குவிக்கலானார். இதற்கு உடன்பட்ட கைம் பெண்களையும் ஆண்களையும் சம்மதிக்கச் செய்து அரசின் ஆதரவுடன் 1881 இல் முதன் முதலாக விதவைத் திருமணத்தைத் தாமே முன்னின்று நடத்திவைத்தார். அதன் பிறகு ராஜமகேந்திர புரம் மற்றும் சென்னையில் இத்தகைய நாற்பது விவாகங்களைச் செய்து வைத்தார். 1883 இல் பெண்டிர்க்கெனவே 'சதி இத போதினி' என்ற பத்திரிகையைத் தொடங்கி 1886 வரைக்கும் நடத்தினார். 'விவேக வர்த்தனி' 1890 இல் நின்று போகவே, 1891 முதல் 'சத்தியசம்வர்த்தனி' என்ற பத்திரிகையை நடத்தினார். உயர் நிலையிலிருந்த பெரியவர்களையும் அதிகாரிகளையும், அவர் களுடைய முறையற்ற செயல்களை, நெறியின்மையை, லஞ்ச ஊழல்களைத் தம் பத்திரிகையில் நன்றாகச் சாடி விமரிசனம் செய்து, அவர்களுடன் நேரடிப் போரையே நடத்தி, நீதி மன்றங்களிலும் அவற்றை எதிர்கொண்டு அவர் செயல் புரிய நேர்ந்தது. இவ்வாறாகத் தமது ஆற்றலையும் அறிவையும் செல்வத்தையும், ஆசிரியர் பணிபுரிந்து ஈட்டிய வருவாயையும், ஆகத் தமது செல்வமனைத்தையும் மக்களுக்கென இழந்துவிட்ட

வீரேசலிங்கம் தெலுங்கு நாட்டின்யுக புருஷராக விளங்கலானார். இலக்கியத் துறையிலும் தலையாய இடம் அவருடையதே! தொடர்கதை, நாடகங்கள், சொற்பொழிவு, கட்டுரை, பத்திரிகைத் தலையங்கங்கள் போன்ற பல பணிகளைத் தொடங்கிய மையிலும், இயல்பான வாழ்க்கைக்கேற்ற பேச்சு நடையில் இலக்கியப் பெருமை சேர்ப்பித்தமையிலும் அவர் ஓர் வழிகாட்டியானார்.

வீரேசலிங்கம் தொடங்கிவைத்த சமுதாய, பண்பாட்டு மறுமலர்ச்சி இயக்கம் மேலும் பரவ நேர்ந்ததுடன், தற்கால அறிவியல், பகுத்தறிவு வாதத்துக்கும் தலையாய இடமளித்து, அது ஒரு புதிய வாழ்க்கை நெறிக்கு வழிகோலலாயிற்று. இப்புதுமை நெறிமுறையே தெலுங்கு மொழியின் செயல் முறை விமரிசனக் (Critical realism) கோட்பாட்டிற்கு வடிவமைப்பளிக்கலானது. அக்காலத்தில்தான் வங்க மொழியிலிருந்து பங்கிம் சந்திரர், ரவீந்திரநாத தாகூர், ஆங்கில மொழியிலிருந்து கீட்ஸ், ஷெல்லி, ஸ்காட் போன்றோரின் இன்பச்சுவையியம் (Romanticism) தெலுங்குக் காவியங்களிலும் புதினப் படைப்புக்களிலும் இடம் பெறலாயிற்று, இப்பணியில் தலையாயவர்களும் சிறப்பான வர்களும் ராயப்ரோலு சுப்பராவ், வேங்கட பார்வதீஸ்வரர், சிலகமர்த்தி லக்ஷ்மி நரசிம்மம் ஆவார்கள். குருஜாட அப்பாராவ் இச் செயல்பாடுகளுக்கென 1887 இல் 'கன்யாசுல்கம்' எனும் நாடகத்தை எழுதினாராயினும், வெறும் செயல் முறைக் கென வென்றில்லாமல், மானிடவியல் வாதத்தைத் தமது கவிதை களிலும் கதைகளிலும் தொடர்புறச் செய்து, 'கன்யாசுல்கம்' இரண்டாம் பதிப்பில் (1909) அந் நாடகத்தைச் சிறப்புறும் வகையில் அதன் அமைப்பைத் தமது வாழ்க்கைக் கோட்பாட்டிற் கேற்றவாறு மாற்றியமைத்தார்.

1871 இல் சென்னையில் தென்னிந்திய பிரம்ம சமாஜம் நிறுவப் பெற்றது. வீரேசலிங்கம் 1878 இல் நிறுவிய பிரார்த்தனை சமாஜம் 1895 வரையில் பிரம்ம சமாஜத்தின் கிளையாக உருவாகவில்லை. எனவே முதலிலிருந்தே வீரேசலிங்கம் மதத்தைக் காட்டிலும் சீரமைப்புக்கே மிகுதியான அக்கறை காட்டினார். 1897-1905 ஆம் ஆண்டுகளில் அவர் சென்னையில் தமது செயல் முறைகளைத் தொடரலானார். 1905 ஆம் ஆண்டில் ராஜமந்திரியிலும், காக்கி நாடாவிலும் பிரம்ம சமயப் பிரசாரம் நன்றாகப் பரவலானது. இதற்குக் காரணம் 1904 இல் ரகுபதி வேங்கடரத்னம் நாயுடு காக்கிநாடாவில் பித்தாபுரம் ராஜா கல்லூரிக்கு முதல்வராக நேர்ந்ததே. இதனில் வீரேசலிங்கம் முயற்சியுமிருந்தது. பிரம்ம சமாஜத்தின் தலைவரான நாயுடு அவர்கள் தெய்வமொன்றே என்னும் கோட்பாட்டுடன், தன் னொழுக்கத்தையும் நேர்மை நெறிகளையும் தமது மாணாக்கர்

களுக்குக் கற்பித்தார். அவருடைய சீரிய ஒழுக்கம், நேர்மை, அறநெறி ஆகியவை அவரை நூற்றுக்கணக்கான இளைஞர் களிடையில் புகழ்பெற்றவராக்கின. அவரை அவர் களனைவரும் 'பிரம்ம ரிஷி' எனப் போற்றினர். 1894 இல் பிறந்த குடிபாடி வெங்கடசலம் 1911 இல் காக்கிநாடாவுக்கு மாணாக் கனாக வந்து, பின்னர் வேங்கடரத்னம் நாயுடுவிடமே ஆசிரியர் பணியைப் பெற்று (1915 இல்) பிரம்ம சமாஜத்தின் செயலாளராக ஆனார். வெங்கடசலம் மீது 'பிரம்ம ரிஷி'யின் மதிப்பு முழுமையாக இருந்ததில் வியப்பேதுமில்லை.

ஆந்திர நாட்டில் மரபு நெறிப் புரட்சியைக் கொண்டு வந்த நிறுவனங்கள் - பிரம்ம சமாஜம், ஆர்ய சமாஜம், திவ்யஞான சமாஜம் ஆகியவை. எனவே ஆங்கில இலக்கியமும் வங்க மொழி இலக்கியமும் தெலுங்கு இலக்கியத்தில் புதியதொரு விழிப் புணர்வைத் தந்தன. இளமையிலிருந்தே வெங்கடசலம் மீது இப்புத்துணர்வு தாக்கிச் செயல் புரியலாயிற்று. அவர் வாழ்க் கையில் நேர்ந்த நிகழ்ச்சிகளினூடே இவ்வெழுச்சி மேலும் வலிமையளித்தது. தெள்ளத் தெளிவான அவரின் மாற்றங்களுக்கு சமுதாயவமைப்புடன் கூடிய ஒரு பொருளை, பயனீட்டை, உருவாக்கத்தை ஈட்டித் தந்தன. இந்நிலை, வெங்கடசலம் வாழ்க் கையைப் பற்றிப் படித்தறிந்தால் கண் கூடாகத் தெளிவாவது உண்மை.

வீரேசலிங்கம் போன்ற செயல் திறனாளரான எழுத்தாளருக்கும் வெங்கடசலத்திற்கு மிடையிலான தலையாய வேற்றுமையைக் குறிப்பிட வேண்டும். வீரேசலிங்கம் தமது சமுதாயச் சீரமைப்புப் பணிகளைத் தமது வாழ்க்கையின் முதன்மைக் குறிக் கோளாகக் கொண்டு, ஒரு நெறிமுறைக் கேற்பச் செயலரங்கத்தில் நுழைந்தார். பிரம்ம சமாஜத்தில் அவர் சேர்ந்தமையும், புதுமைக்குரிய பல மாற்றங்களைத் தெலுங்கு இலக்கியத்தில் தோற்றுவித்து இலக்கியப் படைப்பாளராக ஆனமையும் தமது ஆக்கப் பணிக் குறிக்கோளுக்குத் துணை நின்றனவேயல்லாமல் தலையாயனவல்ல. வெங்கடசலம் செயல் அவ்வாறன்று! தமது பிறப்பிலிருந்தே இளமைத் துயரங்களூடே உழன்று, துன்பங்களிடையில் வளர்ந்தமையால், தமது உரிமைக் கெனவும் தமக்குரிய செயல்போக்கினை உருவமைத்துக் கொள்வதற்கெனவும், வீரேசலிங்கம் அவர்களின் செயல் பாடுகளை அறிந்து வேங்கடரத்னம் நாயுடுவின் சமயத் தீவிரத்தையும் உணர்ந்து அவற்றின் இயல்புகளையேற்றவரான வெங்கடசலம், குறைந்த காலத்திலேயே அவற்றைத் தம்மில் மிளிரச் செய்துத் தமது உள்ளுணர்வு வேட்கையில் முறையான வளர்ச்சி பெற்றவராகி வந்தார். சலம் அவர்களின் ஆய்ந்தறியும் ஆவலும் உள வளர்ச்சியும் இலக்கிய வளமையுடன் வெளிப்பட்டு

வந்தன. சலம் அவர்களின் வாழ்க்கையும் தாம்பட்ட துயரங்களும் அவரது உரையாக்கங்களில் எதிரொலித்துச் சமுதாயச் சீரமைப்புப் பணியில் ஆர்வமிகச் செய்தன. அவை சலம் அவர்களைச் செயல் வீரர் வடிவத்தில் மக்களிடையில் தோன்றச் செய்தன. 1968 இல் சலம் அவர்கள் அளித்த நேர்முகப் பேச்சின் போது, 'ஸ்ருஜன' பத்திரிகையின் நவீன் என்பவருடன் மே 1968 இல், இதனை அவர் தெளிவாகக் கூறினார். ''எனக்குச் சமுதாயச் சீரமைப்புப்பற்று மிகவும் குறைவு. மக்கள், நானும் கூடச் செயல் முறையில் சிறந்தவராக வேண்டுமென்பதே என் வேண்டுதல். நானே சமுதாயப் புரட்சியில், மன மாற்றப் புரட்சியில் தலையிட வில்லை. மக்கள் மனம் மாற வேண்டுமென்றுதான் ஆவல் கொண்டேன்''.

புதுமை இலக்கியப் படைப்பாளராகச் சலம் அவர்கள் உருவாக நேர்ந்திருந்தும் அவரின் உறுதிப் பாடும் நோக்கமும் இலக்கியப் படைப்பில் இல்லை! ''நடைமுறை மொழிபற்றிய வாதம் இருந்தது பற்றி அறியேன். பல புத்தகங்கள் எழுதினபிறகு கூட என் நூல்கள் தெலுங்கு இலக்கியங்கள் என்ற நிலை யடைந்ததும் அறியேன். எனக்கு இந்நாட்களில் தெலுங்கு இலக்கியத்தில் மாற்றம் புரியவோ, மேலும் சிறப்புறச் செய்யவோ எண்ணமேதுமில்லை. நான் என்ன எழுதினாலும் அவற்றின் நியாயமும் உண்மையும் எனக்கு அன்றே தெளிவானவை. ஆயினும் நான் என் எழுத்துக்களில் இவற்றுக் கென ஏன் போராட்டம் செய்து வந்தேனென அன்று அறிந்திலேன். இது என் இயல்பு. நான் அவ்வாறு பிறந்து விட்டேன் எனக் கருதுகிறேன். இன்று எனக்கு இறைவன் அருளால் வெளியான ஒளியில், என் வாழ்வை வேகவைத்த நிகழ்வு உண்மை, நியாயம், தேவை என்னவென்று புலப்பட்டன. என் உரையாக்கங்கள் என் வாழ்க் கைப் போராட்டத்தையே எதிரொலித்தன. எனது முயற்சி சமுதாயத்தைச் சீரமைப்பதற்காகவன்று; என்னைச் சீர்திருத்திக் கொள்வதற்காகவே''. (மே, 1968 'ஸ்ருஜன' பத்திரிகையாளருடன் நேர் முகம்).

சலம் கருதியிராமற் போயினும் அவருடைய உரையாக்கங்கள் அவரின் வாழ்வின் பட்டறிவிலிருந்தும் நாட்டத்திலிருந்தும் தமது அரிய அழகுணர்ச்சியிலிருந்தும் வந்தமையால் அவற்றைப் படிப் பவரை மிகவும் கவர்ந்தீர்க்கலாயின. அவை புதிய எழுத்தாளர் களுக்கு வழிகாட்டலாயின. வாதம், பிரதிவாதம், சர்ச்சைகளுக் கெனப் பாத்திரங்கள் ஏற்படுத்தப் பெற்றன. திருமணம், பெண்டிரின் பெருமை, காதல், பாலுணர்வுத் தொடர்புகள், தனி நபர் உரிமை போன்ற கருத்துரைகளில் மரபுவழிப் பாங்கினை மாற்றி, புதுமைக் காட்சியையும் எளிய செயல் போக்கினையும் (Liberal attitude) சலம் அவர்களின் உரையாக்கங்கள் வரவேற்றன.

தமது சொந்தக் கருத்தென உணராத சலம் அவர்களின் படைப்புக் களின் கருத்துக்கள் யாவும் அவரையே சார்ந்திருந்தன. அவரைத் தமது குருவாகவும், தேர்ந்த ஆசானாகவும் செயலாக்க மிக்கவராகவும் கருதிப் போற்றியவர் பலர். அவரை அணுகித் தொடர்பு கொண்டவர்களும் விமரிசித்தவர்களும், நெருங்கி நட்பு கொண்டவர்களும், அவரின் போற்றுதலைப் பெற்றவர்களும், தமது ஆவல் நிறைவேறாதவர்களும் எத்தனையோ பேர் இருந்தனர்.

சலம் படைப்பித்த இலக்கியம் ஆந்திரநாட்டில் தோற்றுவித்த பெரு மாற்றங்களுக்கு, எடுத்துக்காட்டுக் கெனச் சில தலைசிறந்த எழுத்தாளர்களின் கருத்துக்களைக் காண்போம்:

இக்கருத்துத் தொகுப்பு கொர்ரபாடி வெங்கட சுப்பையாவின் 'சலம்: அவரது இலக்கியங்கள்,' தேசி வெளியீடு என்ற நூலிலிருந்து:

''வெங்கட சலம் ஓர் எளிய மனிதரல்லர். அவர் ஒரு மாபெரும் அறிவுச் சிகரம். மூவகைத் தெலுங்கு நாட்டு இளம் பெண்டிர் ஆடவர்தம் இதயங்களில் அறிந்தும் அறியாமலும் ஆழ்ந்த அன்புருவமாகக் காட்சிதரும் ஓர் வியப்புமிக்க சக்தியாவார்! இதற்குமுன் என்றும் எவரும் எண்ணிப்பார்க்க வியலாத அற்புதமான உள்ளப்பற்றினை உண்டாக்கியிருந்தது அவராற்றல் பெருமை. சாஸ்திரங்களெனவும் சமுதாய மரியாதை எனவும் பொருளற்ற கட்டுப்பாடுகளில் சிக்கிக் கசங்கிப் போய், வெளிப்பட ஏதும் கூறவியலாதத் துன்பங்களால் குமுறிப் போன எத்தனையெத்தனை இதயங்களினூடே அன்பு ஒளியை ஏற்றிவைத்தது அவரின் பெரும் சக்தி. ஆணும் பெண்ணும் மரப் பொம்மைகளல்லர். ஆடவர் பெண்டிரிடையில் உடல் தொடர்பைக் காட்டிலும் வலிமை மிக்கது ஒருவரோடொருவரின் நட்புப் பிணைப்பு. இது அவர்களின் ஒரு சமநிலைவாய்ப்பினாலேயே கைவரப்பெறும் எனும் உயர்ந்த உண்மையை நிலை நாட்டியது அம்மகாசக்தி...'' (அசண்ட ஜானகிராம்).

''இந்நூற்றாண்டில் மேலை நாடுகளிலே ஃபிராய்டு உளக் கோட்பாட்டுப் பிரசாரங்களின் விளைவாக நேர்ந்த மாற்றங்கள் போன்று ஏறத்தாழ சலம் அவர்களின் கட்டுரைகளினால் தெலுங்கு நாட்டில் பெரிய மாற்றங்கள் நிகழ்ந்தனவென்று கருதுகின்றேன்.'' (புச்சி பாபு).

''சலம் தமது உரையாக்கங்களினின்று எத்துணையளவும் வேறுபடவில்லை எனவும், சலம் அவர்களின் வாழ்க்கை, தாம் படைத்த காவியங்களனைத்தையும் விட உயர்ந்த தெனவும், ஒளி மிக்கதெனவும் கருதக் கூடியவர்களே சலம் அவர்களை ஓரளவுக்கு உணர்ந்தறியவியலும்.'' (பி.வி. நரசிம்மராவ்)

''சலம் ஒரு கதைக்காரர், நாடகாசிரியர், கட்டுரையாளர், புரட்சி எழுத்தாளர் மாத்திரமல்லர். உண்மையில் அனைத்துக்கும் ஆழ்ந்த சக்தியான ஒரு பெரும் போராட்டமே சலம். அப்போராட்டம் இலக்கியக் கலையைத் தனது படைக்கலனாகக் கொண்டு ஒளி விளக்கமில்லாத சமுதாயத்தின் உள்ளுறைந்து போன அமைப்புகளை அசைத்து அதிரடிக்கிறது. மனித இயந்திரத்தினூடே கிடக்கும் குற்றங் குறைகளை விரல் எடுத்துக் காட்டுகின்றது. மண்டிமழுங்கிப் போன வண்ணக்கண்ணாடியைத் துப்புத் துலங்கச் செய்து உண்மை நிலையைக் காட்டச் செய்கிறது. மொழியையும் இயல்புநிலையையும் ஒன்பது சக்திகளுடன் நிரப்பி, புத்துலகமொன்றைப் படைக்கின்றது. ஒரு பிரம்ம சமாஜத்துக்கு, விதவை விவாகங்களுக்கு, ஓரினக் கொள்கைக்குப் பிடிபடாத எதிர்வாதக் கண்ணோட்டம் அதனுடைய எதிரி, அவ்வனைத்துக்கும் வினா வெழுப்புகின்றது, சோதனை செய்கின்றது, எள்ளி நகைக்கின்றது.

''சலம்! அவரினுள் வலிமை மிக்க இரு பக்கங்கள் உள்ளன. ஒன்று அன்றாட நிகழ்வுகளைத் தெளிவுறுமாறு காட்டும் கூரிய ஆற்றல். இரண்டாவது, ஒவ்வொரு நுண்மையான வனப்புடன், தமது எழில் மிகுந்த வாக்கிலிருந்து வெளிப்பெற்ற கலைத்திறமை. முதலாவது அவரை மாபெரும் புரட்சி எழுத்தாளராகச் செய்கையில், இரண்டாவது சிறப்புமிக்க கவிஞராக்கியது.....'' (இந்திரகண்டி ஹநுமத் சாஸ்திரி)

''வாழ்க்கையை வாழ்க்கையாக முதன் முதலாகத் தெலுங்கர்களுக்குக் காட்டிய தெலுங்குக் கதாசிரியர் சலம். வாழ்க்கை என்பது சித்தாந்தமாகாது, போராட்டமுமன்று. இதனில் அத்தனையும் உள்ளன. சிறப்பாக அன்றாட வாழ்க்கையில் வெளிப்படும் சின்னஞ்சிறு மகிழ்ச்சிகள், அவ்வப்போது கண்ணீரும்கூட, புதிய அறிமுகங்கள், தொடர்புகள், காதல் சுவை, இடர்பாடுகள், அச்சங்கள், வேண்டுதல்கள், மன நிறைவு, மனக் குறை, எண்ண அலைகள், ஊகங்கள், இவையனைத்தையும் தொடர்புறுத்தி நம்மிடத்தில் வாழ்க்கையை வாழச் செய்விக்கும் ஓர் ஆர்வக்கிளர்ச்சி, இன்பம் ஆகிய இவையில்லாமை வாழ்க்கையே இல்லை. வாழ்க்கை எந்த ஒரு மனித இயல்புக்கும் முழுமையுடையதன்று. இவ்வனைத்தையும் சேர்ந்து முழுமையுடன் வாழ்வதில்தான் இன்பம் உள்ளது. இத்தகைய வாழ்க்கையைத் தமது வாழ்வின் வாயிலாக ஒரு நிறைந்த, முழுமையுள்ள வெளிப்பாடாக அமையுமாறு செய்தார் சலம். வாசகர்களின் பட்டறிவுக் கதவுகளைத் திறக்கச் செய்தார். அதனாலேயே மக்கள் அவரின் உரையாக்கங்களில் ஆர்வமிக்கவராயினர். அவருடைய கருத்துக்களை ஒப்புக் கொள்ளாதவர் கூட அவர் கதைகளை விரும்பிப்படித்தனர். சலத்தை வசைமொழிந்த

வாறே படித்தனர். ஏனெனில் சலத்தின் கருத்துக்களைவிட, கோட்பாடுகளை விட, அவரின் எழுத்தோவியங்கள் மேலானவை... சமைத்துப் படைக்கப் பெற்ற மார்க்ஸ் கோட்பாடுகளல்ல சலம் அவர்களின் சிந்தனை வாழ்வு. எத்தகைய 'இயம்' அல்லது சித்தாந்தத்தையோ நம்பிக்கொண்டு மூளையை ஈர்த்துக் கவரச் செய்யவில்லை. சிந்தனையுலகில் செயல்வீர யாத்திரிகர் சலம்... சலம் எத்தகையதோர் ஆற்றலைப் பொங்கச் செய்து, அதனால் சலம் இத்தகைய வாதி எனவோ, சமுதாய நல்லுணர்வற்றவர் எனவோ, அவருக்குப் பொருளாதாய நூலறிவு கிடையாதெனவோ முடக்குவாதம் செய்வது எவ்வாறுள்ளதெனில், பெருஞ்சூறைக் காற்றுக்குச் சாலைவிதிகள் தெரியவில்லையே என மோதிக் கொள்வது போலுள்ளது. இன்றைய உலகுக்குச் சலம் அவர்களின் தேவை இதில்தான் உள்ளது என்கிறேன். அதாவது சகிப்பின்மையை, போலிப் பெருமையை, இயல்புவாத மதிப்பினைத் துறந்து, தமது வாழ்க்கையிலும் தமது உள்ளத்தினூடேயும் இன்பத்தைத் தேடிக் கொண்டாலன்றி மனிதனுக்கு அமைதி கிட்டாதென்ற நற்பாடத்தை நமது தற்கால உலகம் சலம் அவர்களிடமிருந்து, புதிதாகக் கற்றுக் கொள்ளாமல் தப்பித்துக் கொள்ளுமெனில் இதற்கு இறுதிநிலை கிடையாது.''

(இஸ்மாயில், 'சலம் வாழ்க்கைத் திருவிழா' கட்டுரை, கவிதை வடிவமைதியில் 1987.)

வாழ்க்கை

இளமை

''முதலும் முடிவுமில்லாத இப்படைப்புக்கான தலையாய அசைவு சூன்யத்தில் கருவுருவாகிய பொழுது ஐம்பூதங்களுடன் கூடி, காணாவண்ணம், நானும் பிறந்தேன் இந்த லட்சத்தரைகோடி உயிரினத்துடன் கலந்து, ஒளிக்கும், ஒலிக்கும், உணர்வுக்கும் முறையாகப் பிணைந்திணைந்து, உருவாகி வெளிப்பாட்டினை நிறுவியமைத்துக் கொண்டேன்,'' என்கிறார் சலம். தமது வாழ்க்கை வரலாற்றினைத் தொடங்கியவாறு.

சலம் எனப் புகழ்பெற்ற வெங்கடசலம் 1894 மே பதினெட்டாம் தேதி புத்த ஜயந்தி நாளன்று சென்னை கபாலீஸ்வரர் கோவில் தெருவில் ஓரில்லத்தில் பிறந்தார்.

''கனவில் தொலைவில் எங்கேயோ நாதஸ்வரமேள ஒலி. கபாலீஸ்வரர் மடியில் இருக்கிறேன். அவர் கழுத்திலுள்ள கபால மாலையைப் பிடித்துக் கொண்டு பசியுடன் அவ்வோட்டினை வாயினுள் வைத்துக் கொள்கிறார். நான்கு சொட்டு நீர் என் வாய்க்குள் விழுந்தது. அவர் கருணையுடன் புன்னகைத்து, ஆம், இந்தப் பிறவிக்கு அவ்வளவுதான், அவ்வளவே...'' இது சலம் தமது வாழ்க்கையைக் குறித்த விளக்கமாகும். 1979 மே ஐந்தாம் தேதி அருணாசலத்தில் மரணமடைந்தார்.

கங்கராஜு எனும் வீட்டுப் பெயருடையவர் தமது சொந்த இடமான கிருஷ்ணா மாவட்டத்தின் கொம்மூரிலிருந்து காக்கி நாடாவுக்குச் சென்று சேர்ந்து அங்கு கொம்மூரிக்காரரென அழைக்கப் பெற்றனர். இவர்கள் நியோகி அந்தணர்கள். லோகிதாச கோத்திரத்தார். கொம்மூரி வெங்கடசலம் அவர்களின் மகன் கொம்மூரி சாம்பசிவராவ். இவர் மணம் புரிந்த வெங்கட சுப்பம்மா குடிபாடி வெங்கடராமய்யாவின் மகள். இவருடைய ஊர் குடிவாடா வட்டம் வெங்கடாபுரம் கிராமம். வெங்கட ராமய்யா ஆங்கில ஆட்சியில் வருவாய்த்துறையில் பணிபுரிந்து

நில அளவை அலுவலராக ஓய்வு பெற்றார். அவருக்கு அரசாங்கம் திவான் பகதூர் பட்டமளித்துப் போற்றியது. மகப்பேறில்லாத வெங்கடசுப்பம்மாவை இவரின் தலைமகனான வெங்கட சலத்தைத் தத்துப் பிள்ளையாக ஏற்கச் செய்தார். அதனால் கொம்மூரி வெங்கடசலம் குடிபாடி வெங்கடசலம் எனவானார். ஓய்வு பெற்றபின்னர் வெங்கடராமய்யாவை, தோட்ல வல்லூரின் ஜமீன்தாரருக்குக் காப்பாளராக (Receiver) அரசு நியமித்தது. தோட்லவல்லூரிலேயே சலத்துக்கு எழுத்தறிவு தொடங்கப் பெற்றது.

தோட்லவல்லூரின் இளமைப்பருவ நினைவுகளைப் பற்றிச் சலம் இவ்வாறு எழுதுகிறார். ''எங்கள் தாத்தா காப்பாளர். நாங்கள் அவ்வூரில் இளவரசர்கள். குதிரைகள், யானைகள், பணியாட்கள், கிருஷ்ணா நதி, அதன் கரையில் தோட்டங்கள், மணல் தீவுகள், அத்தீவுகளில் காடுகள். எங்கள் வீட்டுக்கெதிரிலேயே கோட்டை. அதன் பின்புறம் அழகிய தோட்டம்... அந்தக் கோட்டையில் எத்தனை மாடிகள்! மேல்மாடிகளனைத்தும் மூடிக்கிடக்கும். ஆள் நடமாட்டமில்லாத அவ்வறைகளில் அமர்ந்து கொண்டு எத்தனைக் கனவுகள் கண்பேன்... எல்லாச் சிறுவர்களுக்கும் சொன்னதைப் போன்றே எங்கள் தாயார் ராமாயணக் கதைகள் சொல்வார். சீதை அழுது அழுது பூமாதாவின் மடியினுள் சென்றாளென்றதும், அவ்வேதனைக்கு எவ்வளவு வருத்தப் படுவேன். அந்த ராமனை நினைத்துக் கொண்டால் இன்று கூட என் கோபம் தணியவில்லை....''

''என் முதல் நினைவு எனக்கு ஐந்து வயதாகியிருந்த போது என் தந்தை என்னை அடித்தது. இரண்டாவதாக நினைவுக்கு வருவது அவர் என்னை அடித்தது. மூன்றாம் நினைவும் மீண்டும் அவர் அடித்தது. இதற்கிடையில், அவரே எனக்குப் படிப்புச் சொல்லித் தருவதெனப் பாடசாலையிலிருந்து நிறுத்தப்பட்டேன். பாடங்கள் சொல்லித்தருவதென்றால் கேள்விகளைக் கேட்டு அடிப்பதுதான். என் தந்தை என்றாலே வெறுப்பு எனக்கு. எவ்வளவு அடி அடித்தாலும், இனிப் போதும் என்றாவது, இனித் தவறு செய்யேன் என்றாவது, பொறுக்க முடியவில்லை என்றோ நான் சொன்னதில்லை. தொடர்ந்து அழுவேன் வலி பொறுக்க முடியாமல். எவ்வளவு நேரம் அழுகிறேன் பார்க்கலாமென்று அவர் என் மென்னியைப் பிடித்து அடிப்பார். இப்படி எங்களிருவருக்கும் ஜென்ம விரோதம் ஏற்பட்டுவிட்டது.''

சலம் தந்தைக்கு வருவாய்த் துறையில் வேலை கிடைத்தாலும் செய்ய விரும்பவில்லை. ''அவருக்கு வருமானமுமில்லை வேலையுமில்லை. தாம், மனைவிமக்களுடன் மாமியார் வீட்டில் இருந்தார். அத்தை, மாமா மிகவும் நல்லவர்கள்... பொறுக்க

வியலாமல் அவர் வீட்டிலிருந்து வந்து இங்கு இருந்தாலாகிலும் அந்தக் கிராதகன் அடிப்பதை நிறுத்தமாட்டானோ என்று....''

சலம் என்றால் தாய்ப்பாட்டிக்கு மிகுந்த செல்லம். சலம் வழக்கமாகப் பாட்டியின் அறைக்குள் வந்து அவர் கட்டிலின் கீழேயே படுத்துறங்குவார். அவ்வம்மையார் நோயுற்றிருந்ததால் எப்போதும் கட்டிலின் மீதே கிடப்பார். அந்த அறை சலத்துக்குத் தன் தந்தையிடமிருந்து பாதுகாப்பளித்தது.

சலத்தின் தாய் தொடர்ந்து பிள்ளைப் பேறுற்றமையால் நலங் குன்றி, எப்பொழுதும் படுக்கையாகவே இருந்தாராம். அவருக்கு, சலத்துடன் சேர்ந்து ஒன்பது குழந்தைகள். ஆண் பிள்ளைகள் ஐவர், பெண்கள் நால்வர். ''அவர் இரண்டு முறை இறக்கும் நிலைக்கு ஆளானார். ஆனால் விட்டுவைப்பவராக இல்லை அந்தக் கருணை மிக்க கணவன். நள்ளிரவுவரை என் இளைய தம்பியரும் தங்கைகளும் அழுது வைப்பார்கள். ஒவ்வோர் இரவும் தவறாமல் அத்தனை வலிமை குன்றிய நிலையிலும், சோர்வடைந்து தூக்கக் கண்களுடன் என்தாய் தாலாட்டுப் பாட்டுக்கள் பாடுவார் ஊஞ்சலை ஆட்டியவாறு...பாடிப்பாடி, மேலும் அக்குழந்தை அழுதுகொண்டேயிருக்க, 'என்ன செய்வேன்? இன்னும் தூங்கமாட்டாய்?' என்று பரிவுடன் கூறவும், அக்குரலைக் கேட்டு மென்மையாகப் புலம்புவான். ஆனால் அக்காலத்துத் தாய்மார்களைப் போன்று சிறு குழந்தைகளை அடிப்பவரல்லர் எங்கள் அம்மா.''

தோட்லவல்லூருக்குப் பிறகு சலத்தின் தாய்ப்பாட்டனார் தெனாலிக்குச் சென்று வசிக்கலானார். அந்நாட்களில் ''நண்பகலிலிருந்து அக்கம்பக்கத்திலுள்ளவர்களுக்கு நாள் தோறும் எங்கள் தாய்ப்பாட்டி பாரதம் படித்துச் சொல்லுவார். பாடசாலைக்குச் செல்லாமல் எங்கள் தந்தை சொல்லும் படிப்பிலிருந்து தப்பித்து என் தாய்ப்பாட்டியின் பின்னால் அமர்ந்து கொள்வேன். அவர் அங்கு வரமுடியாதென்று எனக்குத் தெரியும். புராணம் முடிந்த பிறகு, எந்த ஆட்டத்திலோ, சாப்பாட்டுக்கு முன்போ நான் கிடைத்துவிட்டால் என் தந்தையார் என்னை அடித்துத் தள்ளுவார்....'' என்கிறார் சலம்.

சலம் இளம் பருவத்திலிருந்தே உபாதை, தலைவலி என வலிமை குன்றியிருந்தார். ''என் எண்ணம் என் தந்தை அடித்த அடிகளால் ஏதோ நேர்ந்திருக்கிறது என்பதே. கல்விக்கூடத்தில் பாடங்களைச் சரியாகப் படிக்கும் திறன், ஆசிரியர்கள் சொல்வதைச் சரியாகக் கேட்டறியும் வலிமை எனக்கில்லாமல் போனது.'' கல்விக் கூடத்தில் சிறுவர்களுடன் நட்பு ஏதுமில்லை. வீட்டில் உறவினர்களாயினும் அக்கம் பக்கத்திலுள்ளவர் களாயினும் பெண் குழந்தைகளுடனேதான் நட்பிருந்தது சலத்துக்கு.

வீட்டில் புராணக் கூட்டத்தின் பயனாக இறை வழிபாடும் பக்தியும் உண்டாயிற்று சலத்துக்கு, ''விஷ்ணு பகவானுக்கும் பூஜைகள் செய்வேன். செங்கற்களை அடுக்கி ஒரு சிறு கோவிலாகக் கட்டினேன்... அந்தப் பூஜை எனக்கு அத்தனை மகிழ்ச்சியைத் தரும். கல்விக்கூடத்தில் அமர்ந்திருக்கும் போதும் அவ்வாலயத்தையும் அதனுள் தெய்வத்தையும் நினைத்துக் கொண்டால் மகிழ்ச்சி நிறைந்தவனாவேன்.''

சலத்துக்கு இளமையிலேயே உபநயனம் நடந்தேறியது. அக்கறையுடன் சந்தியா வந்தனம் செய்து, காயத்திரி ஜபம் செய்வார். தலையில் சிறிய சிண்டு முடி போட்டிருப்பார். கிணற்றருகில் தண்ணீர் சேந்திக் குளித்துத் தூய உலராடை அணிந்து கொள்வார். சலம் அன்றாட நியம வழிபாடுகளைச் செய்வது கண்டு தாத்தா தமது ஆஸ்தியில் ஒரு பாதியை அவர் பேருக்கு எழுதி வைத்தார்.

பத்து வயதாவதற்கு முன்னரே தந்தையின் கொடுமையையும் தாயின் நோயுற்ற அவல நிலைமையையும் அன்றாட அனுபவ மாகக் கண்டறிந்த சலம் சில உறுதி மொழிகளைக் கொள்ளலானார். ''என்றும் மணம் புரிந்து கொள்வதில்லை. வற்புறுத்தல் மீது மணமேற்க நேரினும் மகப் பேறேதும் பெறலாகாது. அவ்வாறு பெற்றாலும் அவர்களை அழவைக்கக் கூடாது. அவ்வாறு அழுதாலும் எதுவாயினும் அவர்களை அடிக்கக் கூடாது.'' அவ்வாறே சலம் தமது குழந்தைகளுக்கு முழு உரிமை அளித்தார். 'குழந்தைக் கல்வி' எனும் நூலை எழுதினார். இளமை யிலிருந்தே உலகினை விமரிசனைக் கண்ணோட்டத்தில் பார்த்த தனாலும் முறையாக ஒழுக்கங்களைப் பற்றியும் நீதி நெறிகளைப் பற்றியுமான மனப்பாங்கினை வளர்த்துக் கொண்டமையாலும் உலகம் பற்றிய வெறுப்புணர்வை ஏற்படுத்திக் கொண்டார் சலம். உலகத்தை மட்டுமின்றி மக்களிடையில் அப்படி இல்லை! கண் கூடான நெறிமுறைகளுக்குத் தலைமையிடமளிப்பது, அதனை அச்சமின்றி அறிவுறுத்தி உணர்த்துவது சலம் அவர்களுக்குப் பிறவியுடன் வந்த குணம். ஒரு முறை பாடம் நடத்திய போது ஆசிரியர், ''பால் எளிதில் செரிக்கும் உணவு'' என்றார். சலம் உடனே எழுந்து, ''எனக்குச் செரிக்காது'' என்றார். எல்லாரும் சிரித்தார்கள். ஆனால் சலத்தின் எண்ணம் என்ன என்பதை இச்சிறு வெளிப்பாடு தெள்ளத் தெளிவாக்குகின்றது! தனக்கு அனுபவ வாயிலாக உண்மையில்லாதவற்றை சலம் ஒப்புக்கொள்ள மாட்டார். தெளிவுகொண்ட நெறி முறையைச் சான்றாகக் கொண்டு ஏற்று, உலகில் ஒவ்வொரு நிகழ்வையும் வினவி எதிர்த் திடும் சலம் வாழ்க்கை முழுவதும் அவ்வாறே செயல் புரிந்தார்.

அவரின் மறுப்புணர்வுக் கொள்கையை அவர் குடும்பத்தில் முதலில் குறிப்பிடப் பெற்றவகையில் காட்டும் வாய்ப்

பேற்பட்டது. அவருடைய தங்கையின் திருமணம் நடந்த பொழுது சலம் உயர்நிலைப் பாட சாலையில் படித்துக் கொண்டிருந்தார். சலம் தங்கை அம்மணி மணமகனைப் பார்த்துவிட்டு அழலானாள். தாத்தாவுக்கு மாப்பிள்ளையின் மீது நல்ல கருத்தில்லை. ஆனலென்ன, மணம் முடிந்து விட்டது. இது குறையாகத் தேன்றியது சலத்துக்கு. அதன் பிறகு அம்மணி விருப்பத்துடன் 'மணவினை' நிச்சயித்தனர். அம்மணியின் அழுகையைக் கண்டு சலம் மைத்துனருக்குக் கடிதம் எழுதினார். ''என் தங்கைக்கு விருப்பம் உண்டா இல்லையா என்று தெரிந்து கொண்டாயா?'' எனக் கேட்டார். ''இது பற்றிய எண்ணத்தைப் புரிந்து கொள்ள வேண்டுமென்றே, அவளை அழைத்துச் செல்லலாம் என்று வருகிறேன்.'' எனத் தங்கையின் கணவர் பதில் எழுதியிருந்தார். 'சுபச் சடங்கு' நடக்கும் இரவு சலம் மற்ற பெண்களை அழைத்துக் கூட்டி, 'மணவினை' நடக்க விடாமல் செய்வதற்கு உறுதியாக முயன்றது, சலம் தந்தை அவரை அடிக்க வந்தது, சலம் எதிர்த்துக் கொண்டது, சலத்தை அவர் வீட்டிலிருந்து வெளியேற்றியது எனப்பெரிய குழப்பமே நிகழ்ந்தது. சலத்தின் நடத்தையைக் கண்டு பெரியவர்களெல்லாரும், தாத்தா உள்ளிட்டு, பயந்து போனார்கள்.

''விடிந்ததும் அம்மணிதன் அறையிலிருந்து வந்து என்னைக் கண்டும் காணாமலும் சென்றாள். அவ்வளவுதான் எங்கள் நட்பு... கர்ப்பாதான அறையில் பெண்கள் எவ்வாறு மாறிவிடுகிறார்கள் என முதலில் வியப்பாக இருந்தாலும், இறுதியில் பொருள் விளங்கியது,'' என்கிறார் சலம். அதன் பிறகும் அம்மணி தன் மாமியார் காட்டிய வற்புறுத்தல்களைப்பற்றிச் சலத்துக்குக் கடிதங்கள் எழுதினாள். அப்போது சலம் சென்னையில் பி.ஏ. படித்துக் கொண்டிருந்தார். பிரம்ம சமாஜமும் வீரேசலிங்கம் போராட்டமும் சலத்தைக் கவர்ந்தீர்த்தன. அம்மணியை வீட்டுக்கு அழைத்து வந்துவிடுமாறு தம் வீட்டுக்கு இறுதி அறிவிப்பு அனுப்பி, வீசேரலிங்கம் அவர்களை நாடலானார் சலம். அதற்கிடையில் அவர்கள் அம்மணியின் மாமியாரிடம் சமாதானம் பேசியதும், மாமியார் தன் மருமகளைப் பரிவுடன் நடத்தியதும் போன்ற மாற்றங்கள் நேர்ந்தன. அதன் பிறகுப் போகப் போக அம்மணி, சலம்தான் தனது குடும்பத்தைக் கெடுப்பதற்கு முயன்றதாகப் பழியும் சுமத்தினாளாம். ''பெண்களின் இயல்பான வழக்கம் என்னவென்று தெரியவந்தது எனக்கு. தமக்கு உதவிபுரிய முயற்சிப்பவர்களைப் பெண்கள் கடைசியாக என்ன சொல்கிறார்கள் என்பது தெரியவந்தது,'' என்கிறார் சலம்.

திருமணம்

அம்மணியின் திருமணம் ஆனவுடனேயே சலத்தின் திருமணத்துக்கும் தலையிட்டார்கள் பெரியவர்கள். சலத்துக்குப்

பதினாறாம் வயது, உயர்நிலைப் படிப்பு முடிவடைந்தது. சலத்துக்கு இளமையிலிருந்தே எத்தனையோ பெண் நண்பர்கள். அவர்களில் அப்போதே சிறப்பாக மூவர் தம்மைக் காதலித்ததாகச் சலம் சொல்லிக்கொள்வார்.

''தம் குலத்திலேயே மணம் புரியுமெண்ணமிருந்ததால் அவ்வாறு செய்து கொள்ளவில்லை. அவர்களுடன் சேர்ந்து வாழவும் வாய்ப்பில்லை. எவ்வளவோ வருத்தப் படுகிறேன் என் பெரிய தந்தையின் மகள் ரமணாவுடனேயே என் திருமணத்துக்கும் அனுமதி அளிக்குமாறு. மதத்தின் மீதும் சாஸ்திரங்கள் மீதும் உறவினர்கள் மீதும் எனக்குள் எத்தகைய வெறுப்பு வளர்ந்தது!'' சலம் என்ன பிடிவாதம் செய்தும் அவருக்குத் தம் பதினாறாம் வயதில், 1910 இல், திருமணம் செய்வித்தார்கள்.

சலத்தின் திருமணத்துக்கு முன்னர், அதாவது எட்டு முதல் பதினாறு வயதில் தமது காதல் களிகளைப் பற்றிக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். பிறர் அறியாது, கற்பனை (Romantic) உலகில் சலம் சிறுவயதிலிருந்தே தன்னை நிலைபடுத்திக் கொள்வதற்குரிய வாய்ப்பினையளித்த சூழ்நிலைகள்; தாய் தந்தையர் கண் காணிப்புக் குறைபாடு; புராணக் கதைகள் எண்ண உலகத்தில் உருவாக்கிக் கொண்டு அவற்றில் தன்னை மறந்து ஈடு கொண்டமைக்குத் தோட்லவல்லூரின் இயற்கை எழில்; ஜமீன்தார் போன்ற வாழ்க்கை ஆகியவை அளித்த ஊக்கமே. சலம் தனது உடல் வலிமையின்மையினால் ஆண்பிள்ளைகளுடன் கலந்து பழகுவதற்குப் பதிலாக, பெண்குழந்தைகளுடன் கலந்து பொழுது போக்கியது, பெண்களுடன் அன்றைய நட்பினைப் பற்றி, பெண்மையின் வனப்பில் தனக்கேற்பட்ட மோகத்தைப்பற்றி 1940 ஆம் ஆண்டுகளில் எழுதிய 'எண்ணங்கள்' என்ற நூலில் விவரித்திருக்கிறார். அவர் வாழ்க்கையில் மறக்க வொண்ணாத அன்றைய நட்புக் கன்னியர் மூவர்.

பங்காரம்மா, ''நான் இளஞ் சிறுவன் அதாவது எட்டு வயது. அவளுக்கு இருபது வயது. அவளைப்பார்த்த முதற்கணமே வியத்தகு பாசம் பிறந்தது, அவளுடைய எழில் மிகுந்த தோற்றத்தினால் சிறுவயதில் நான் உறங்கச் செல்லுமிடத்தின் எதிரில் ரவிவர்மா வரைந்த லக்ஷ்மி ஓவியம் ஒன்று பெரிதாக இருந்தது. விடியும் முன்னரே பாடசாலை உள்ளது என்ற அச்சத்துடன் எழுந்தால், என் துயரக் கண்களுக்கு முதல் காட்சி லக்ஷ்மி படம் தான். அவ்வம்மையை, அந்த லக்ஷ்மியை நேசித்தேன்... பங்காரம்மாவைப் பார்க்கும் போதெல்லாம் எனக்கு நிலைபெற்ற சித்திரமான லக்ஷ்மி நினைவுக்கு வந்து, பங்காரம்மாவை நேசிக்கலானேன்... அத்தனைச் சிறிய வயதிலேயே என் ஆண்மை என்னை வெட்கத்திலாழ்த்தி பாதிக்கச் செய்தது... எவ்வாறோ ஒருநாள் அவள் மடியில் தவழ்ந்தேன்.

தன்னை மறந்து அவள் சிரித்தாள். சுற்றிலும் பிற பெண்டிர்கள்... என் கை அவள் கழுத்தையும் கன்னத்தையும் தடவி ஆராய்ந்ததும், என் கண்களை மேல் நோக்கி அவளது புன்னகைக்காகத் தேடியதும் அவள் அறியாள்... என் உடலுக்கு வயது மிகக் குறைவானதே. எந்தக் கவர்ச்சியோ அறிவோ தெரியாது. ஆனால் இந்த இதயம்! எத்தனையோ பிறவி அனுபவத்தை, எத்தகைய அனுபவப்பலனை, எத்தனை மண வேள்வித் தீப்பிழம்பாக ஒன்று திரளச் செய்திருக்கும்!... அந்நாளிலிருந்தே நிலையாக நின்று விட்டாள் பங்காரம்மா. என் வாழ்க்கைக் காட்சியின் முதல் காதல் ஜோதியாக எந்தத் தோற்றத்திலும் முயற்சியின்றியே அவளின் வனப்பு மிகு எழிலை இணைத்துப் பொருத்திக் காண்கிறது என் உள்ளம்.''

எண்ணங்கள் 16-17 வது பக்கம்.

சுந்தரம்மா, ''என் பழைய பெண் நண்பர்களில் சுந்தரம்மா தலையாயவள். அவளை 'ஊசி' என்று அழைப்போம்.... சில நாட்களிலேயே சுந்தரம்மா பெயருடன் என் பெயரையும் சேர்த்துப் பாடசாலை சுவர்களின் மீது எழுதலானார்கள்..... ஓர் அஷ்டமி நினைவு நாளன்று மாலையில் என்னைப் பார்க்க வந்தாள். கடுமையான எதிர்ப்புகளுக்கிடையில் மீண்டும் பார்த்ததால் எதிர் நோக்கிச் சென்று, ஜாதி மல்லிப்பூ முடிப்புக்குப் பின்னால் தெரிந்த சிறிய தோள்களும் மஸ்லின் சட்டைக்குக் கீழிருந்த அவ்விள மையான தோள்களைத் தழுவிக் கொண்டேன். அந்த நினைவு நாள் எட்டாம் பிறை நிலவு, வெண்ணிற ஜாதிமல்லிகைப் பூ, சுந்தரம்மா இம்மூன்றும் நிலைபெற்றுவிட்டன என் இதயத்தில்... இருளில் படிகளின் மீது கட்டி அணைத்து அழைத்துச் சென்று அமர வைத்தேன், இருட்டிவிட்டது என்று பயந்துபோன பெண்ணை.... சுந்தரம்மா எழுந்து நின்றாள்... ''நாளை பொழுது விடிவதற்கு முன்... தவறாமல்'' எனக் கூறிச் சென்று விட்டாள். மென்மையான நிலவொளியில் ஆடிக் கொண்டிருந்த சிறுமிகள் கூட்டத்தில் தேடிக் கொண்டிருக்கிறேன். ஒல்லியான உடல், கன்னத்தை யொத்த மென்மையான பாதம், ஊசி போன்ற மூக்கு, நிலவை விழுங்கும் சடை, காற்றில் மிதப்பதுபோல் பறந்தோடும் என் அன்புக் காதலிக்கென.... காணப் பெற்றேன். என்பக்கம் பார்க்கமாட்டாள். சிறுமிகளுடன் ஆர்ப்பரிக்கிறாள். சிரிக்கிறாள். தொலைவாக ஓடினாலும் நெருங்கி உராய்ந்தவாறு போகிறாள். இந்த வருத்தம் மட்டுமன்று, இத்தகைய சார்ந்து இராத தன்மை, வேறுபாடான தரம் மட்டுமில்லை, பெண்மையின் மீதான ஆண்மை ஆளுமையை மேலோங்கச் செய்தது! ஆயினும் இத்தகைய ஆடல்களே அடுத்த கணம் என்ன செய்யுமோ எப்படி மாறுமோ என அறியவியலாத ரகசிய விந்தை அல்லாவிடில் பெண்மை எத்தனை ஊக்கமற்ற, பழக்கப்பட்ட, உணர்வற்ற

உயிராக நேர்ந்திருக்கும்! சுந்தரம்மாவும் நானும் கலந்துரையாடுவதும் காதலிப்பதும் எவ்வாறு தடைபட்டுப் போயிற்று? ஏன் வெறிக்கனவுகள் கண்டோம்? ஊழ் வினைக்கும் குலத்துக்கும் எதிர்ப்புக்காட்ட ஏன் கடுமையாக முயற்சித்தோம்? சுந்தரம்மா! இனி நமது நட்பு நிறைவேறாதென்று கண்டுகொண்ட அன்றிரவு சீன விளக்கொளியின் கீழ்புதிய பந்தலில் நீ நோக்கிய பார்வை, ஏனோ இப்பெருங்கடல் மீது நள்ளிரவில் பாதி நிலா தோன்றிய போதெல்லாம் உன்நினைவு வருகிறது. ஆண்டு முழுவதும் உன்னை மறந்தாலும், அஷ்டமி இரவு இருள் சூழமுன் குழந்தைகள் கூச்சலிடும் வேளையில் என் அருகில் வந்து அமர்ந்து 'மறந்து போனாயா?' என்று வருத்தத்துடன் பேசுகின்றாய்.''

எண்ணங்கள், 48,49,50 பக்கங்கள்

சி. ''எனது சி-கண்களைக் கீழே தாழ்த்தி, 'இதோ, கனவு காண்போம் காலமெல்லாம்! என்றால் - அந்த ஆணையின் படி கைகளைக் கீழே தாழ்த்தி வாழ்நாளெல்லாம் கனவு காண்கிறேன்.'' சின்ன வயதில் காதலித்துக் கைவிட்டுப் போன 'சி'-விசாகப்பட்டினத்தில், 1937 இல் மீளவும் சலத்துக்குத் தான் எதிர் பார்த்தவாறு, அப்போது அவள் மணம் புரிந்து கொண்டிருந்தவளாகவும், சலம் அவளுடன் கடற்கரையில் தங்கியிருந்ததாகவும், கடைசியில் அவள் விட்டுச் சென்று விட்டதாகவும் 'எண்ணங்கள்' என்ற தமது நூல்வாயிலாகத் தெரியவருகிறது. ''ஆன்மாவை நாடிக் கண்கள் தேடுகின்றன. என் காதலுக்கு நுழைவாயில் கண்கள். உன் கண்களைப் போன்ற கருணை விழிகள் இல்லை,'' என்றேன் சி-யிடம் தடைகளும் எதிர்ப்புகளும் நம் இதயங்களில்தான் உள்ளன. இரும்பைப் போன்ற வலிமை அதற்கில்லை. ஆனால் நம் ஆன்மாவுக்கு உள்ளது. முயற்சி செய். வாழ்க்கையை, எதிர்காலத்தை நினைத்துக் கொண்டு அஞ்சாதே எனப் பேச்சுக்குச் சொன்னேன். ஆனால் உன் ஆன்மாவுக்கு விளங்காது என் மொழி. அர்த்தம் செய்து கொள்ளும் திறமை என் ஆன்மாவுக்கு இல்லை. அதனாலேயே நமது வாழ்வு இப்படியாக நேர்ந்தது. முடிவில் என்னை மறந்து போனாய். ஆம், மறந்து போனேன். அப்படி மறக்காமல் நினைவிலிருந்தால் தாங்கமுடியவில்லை. விருப்பமில்லாத வெளிச்சத்தின் மீது ஆசை கொண்டால் பயன் ஏது? ஏன் தோன்றினாய் நீ? பல்லாண்டுகளாக நிலைத்துவிட்ட பெயர் நீ. என் முன்னால் மனித உருவத்தில் தெய்வமாய் ஏன் நின்றாய்? உனது முள்ளாலான பஞ்சணையைக் கண்டு நான் ஏன் தூரமாகச் செல்லாமற் போனேன். சி-யைக் கண்டபோதெல்லாம் அவளிடத்தில் இவ்வுலக அழகெல்லாம் எனக்குக் காணத்தெரிகின்றது. இவ்வுலக அழகிலெல்லாம் அவள் தெரிகின்றாள். இப்படியே இந்த இரண்டு தோற்றங்களும் ஒன்றாக இணைந்துவிடக் கூடாதா? அப்போது அவளுடைய இல்லற

வாழ்வு, நீதி, நெறி, நிபந்தனை, உலகம், அவள் நினைவு என ஏதுமே எனக்கு இராது, என்னைத் தீண்டாது. இனி அவளை நான் அத்தகைய ஆர்வத்துடன், மிகுந்த வேட்கையுடன் விரும்ப வேண்டிய தேவை இராது. சி-யின் நயனங்களில் மிளிரும் அந்த இயல்பிலாத பெருவனப்புக்குக் குரிய அந்த இனிக்கும் உடலில், உதடுகளின் மென்சிரிப்பில், அந்த அகன்ற பார்வையில் வியப்புக் குரிய ஆன்மா இருக்கிறதென்று ஆசை கொண்டு, அவளை அதிசயமாக நாடினேன். அவள் உடலைக் காமுற்றேன். அவள் ஆன்மாவைப் போற்றினேன்.

''என்னைப் போன்ற எளியவனை ஏற்றுக் கொண்டாளோ, எத்தனை எளியவள் அவள்! என்பேன். ஏற்றுக் கொள்ள வில்லையோ, எத்தனை கொடியவள் எனச் சினம் கொள்கிறேன். இனி அவளைப் பார்ப்பேனென வெட்கமடைகிறேன். விந்தையான மனித இதயம்!

''நான் காணும் சி-யிடம், அத்தனை அழகும் உண்மையில் சி-யிட முள்ளதா? இல்லையெனில் ஒரு சாதாரண மங்கையிடம் இந்த அழகு ஆராதனையெல்லாம் நானாகக் கற்பனை செய்து கொண்டது தானோ?... இத்தனை அழகையும் கற்பனை செய்யவியன்ற என் மனம், இத்தனை இன்பத்தைக் கற்பனை செய்து கொண்ட என் இதயம், சி-எனும் ஓர் உருவம் இல்லாமலேயே கற்பனை செய்ய இயலாத இத்தகைய இன்பத்தை! அந்த ஆற்றல் உண்டாகுமா! வெறும் பிரமையா?''

எண்ணங்கள், 44,53,55,60-62 பக்கங்கள்.

சலம் தம் முன்னிளமைப் பருவத்தில் காதலித்த இம்மூன்று பெண்மணிகளின் கதை சலம் அவர்களின் உள்ள வளர்ச்சிக்கான சான்றுகளாகும். பங்காரம்மா அவர் போற்றிய 'முதலாவது காதல் ஜோதி,' அவருடைய உளக் காட்சியில் அழகுணர்வுக்கோர் அளவுக்கல். சுந்தரம்மா தம்முடன் கண்ணாமூச்சாடி, கிடைத்தும் கிடைக்காதவளாகிவிட்ட பெண்மையின் கவர்ச்சிப் பொருள். ஒவ்வோர் ஆண்டும் 'அஷ்டமி விரத' இரவு அன்று அவள் நினைவு வருகிறதாம். இனி 'சி'-யோ அவரின் கற்பனைக் காதலுக்கொரு சான்றான தோற்றம். கற்பனையாளரின் துயரப் பிரச்சினையைச் சலம் நம் முன் வைக்கிறார். ''என்னைப் போன்ற எளியவனை ஏற்றுக்கொண்டாளோ, எத்தனை எளியவள் அவள்! எனக்கருது கிறேன். மறுத்துவிட்டாளெனிலோ, எத்தனைக் கொடுமை யானவள் எனச் சினமடைகிறேன். விந்தையானது மனித இதயம்,'' ஆனால் இம்மனநிலை பிரச்சினைக்குத் தீர்வு, விடிவு என்ன? ''எனது பணிவுக்கும் அடக்கத்துக்கும் சி-யின் எழில் மிகுந்த தோற்றம் ஆதாரம். 'நான், நான், நான்' எல்லாம் நானே! வேறேதுமில்லை. சி-அவள் அழகு, இந்தக் கடல், இந்தவானம், இவ்வுலகம் அனைத்தும் நானே! நானே இருக்கிறேன்.

அவ்வளவுதான், வேறேதும் இல்லை! இருந்தென்ன? அத்தனையும் நானே! எத்தகைய இன்பத்தைத் தருகிறது அந்த எண்ணம்! அச்சம், வலி, இறப்பு, எல்லாம் நானே! ('எண்ணங்கள்', 62-ஆம் பக்கம்) அவ்வமைதியை அடைவதற்குச் சலம் வாழ்நாள் முழுவதும் வேதனைபட்டார். முயற்சித்தார். ''காதலில் பரந்தநிலை இல்லை. பல வண்ணங்கள் இல்லை. ஆழ்ந்து உணர்வதே சிறப்பானது,'' ('எண்ணங்கள்,' 52 ஆம் பக்கம்), என்கிறார் சலம், 'எல்லாம் நானே' என்ற அத்வைத தத்துவத்தை அடைவதற்கெனப் பெண்மாயையில் அடிபட்டு உழன்றதைத் தவிர்க்கவில்லை!

சலத்துக்கு விருப்பமில்லாவிட்டாலும் பதினாறாம் வயதில், 1910 இல், தாத்தா, தாய், தந்தையர் அவருக்கு மணம் செய்வித்தனர். ''இந்த மணத்தினால் எனக்கு விருப்பமான, அன்புருவான இரு அண்ணியர் கிடைக்கலாயினர். அவர்களைப் பார்த்து மன நிறைவுற்று அமைதியுடனிருந்தேன்,'' என்கிறார் சலம். மாமனார் உப்புலூரி ராம சேஷய்யா நிறைந்த செல்வந்தர். அவரது மூத்த மனைவியின் மகள் பெத்தரங்கநாயகம்மா. முதல் மனைவி காலமானபிறகு இரண்டாம் மனைவியின் மகள் ரங்க நாயகம்மா, சிட்டி ரங்கநாயகம்மா என இருவர். ஆண்பிள்ளைகள் இல்லை. சலத்துக்குச் சிட்டிரங்க நாயகம்மாவைக் கொடுத்து மண முடித்தனர். எனவே பெத்தரங்கநாயகம்மா, ரங்கநாயகம்மா என அண்ணியர் இருவர் சலத்துக்கு. இவ்விருவருமே இளம் விதவைகள்! சலம் திருமணத்துக்குப் பிறகு ராமசேஷய்யாவின் இரண்டாம் மனைவி, அதாவது சலம் மாமியார் காலமானார். ராமசேஷய்யா மூன்றாம் மணம் முடிக்க முற்பட்டார். இளம் விதவையான இரண்டாம் மகள் அத்திருமணத்துக்கு மறுப்பு தெரிவித்தும் அவர் செவியேற்கவில்லை. பின்னால், ராம சேஷய்யாவின் சொத்து தமது மகள்களுக்குச் சேராமல் பிறர்கை வசமாகியது. சலத்தின் மனைவி சிட்டிரங்க நாயகம்மாவுக்கு நகைகள் கூடக் கிடைக்கவில்லை. அவள் அக்கா ரங்கநாயகம் மாவுக்குப் பிறந்த வீட்டில் காலங்கழிக்கும் வாய்ப்பும் போய் விட்டது. அவள் சலம் வீட்டில் அடைக்கலம் பெற்றாள். அதன் பிறகு ராமசேஷய்யாவின் மூன்றாம் மனைவி வெளியேறி விட்டாள்.

தெனாலியில் உயர்நிலைப் படிப்பு முடிந்த பிறகு, 1911 இல் சலம் காக்கிநாடாவில் எஃப்.ஏ. படித்தார். பிரம்ம ரிஷி எனப்புகழ்பெற்ற ரகுபதி வேங்கடரத்னம் நாயுடு கல்லூரி முதல்வர். பிரம்ம சமாஜத்துக்குத் தலைவர். அவருடைய அறிவாற்றல், போதனைகள், காக்கிநாடா மக்களிடையிலும் கல்லூரி மாணாக்கர்களிடையிலும் அவரை மிகப் பெருமை யடையச் செய்திருந்தன. சலம் அவருக்கு மிகவும் நெருங்கிய

வராயிருந்தார். அந்தத் தெம்புடன்தான் தங்கை அம்மணி 'மணவினை' நாளன்றும் பிறகு அவளது மாமியார் வீட்டுக் குடித்தனத்திலும் தலையிட்டுப் பகைமையேற்படுத்திக் கொண்டார். ''ஹிந்துக்களின் பொய், மோசம், கொடுமை, குழந்தை மணம், கட்டாயக் கைம்பெண் நிலைமை, இவையாவும் என்னை அளவற்ற கலக்கமடையச் செய்தன. அரைத்த மஞ்சள் உருண்டையை, கற்களை, படங்களைத் தெய்வங்களாக்கிக் கொண்டு வழிபடுவது ஈனமெனத் தோன்றியது. எனக்கு நெறிமிக்க ஒழுக்கத்தின்பால் பற்று அதிகமாயிற்று... இந்தப் பொய்யான நீதிகளன்றி, உண்மை நெறிகளைக் கண்டு, அவற்றை வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டுமென உறுதிமொழி செய்து கொண்டேன்....''

காக்கிநாடாவில் சலம் படிப்பு நிறைவேறியதும் தம் மனைவி குடித்தனத்துக்கு வந்து சேர்ந்தாள். அவளுக்குக் குடும்பப் பணியாட்கள் செய்யும் வேலையைக் கொடுக்கப் பெரியவர்கள் முயற்சிக்கையில், சலம் அதற்கு மறுப்பு தெரிவித்தார். வீட்டுக்குச் சற்றுத் தொலைவிலுள்ள தோட்டத்தில் பூப்பந்தாட இடம் அமைத்து, தம் மனைவி, தம்பி, தங்கையருடன் சேர்ந்து ஆடத் தொடங்கினார். இவர்களின் எக்காளப் போக்குகளைக் கண்டு ஊரிலுள்ளவர்கள் வசை மொழியலாயினர்.

சலம் பி.ஏ. படிப்புக்கெனச் சென்னைக்குச் சென்று, தம் மனைவியையும் அழைத்து வந்து பாடசாலையில் சேர்த்து அவளைப் படிக்க வைப்பதற்குப் பிடிவாதம் பிடித்தார். அவ்வாறானால் பணம் தர முடியாதென்றார் பாட்டனார். ''நள்ளிரவாயிற்று. வண்டி வாசலில் வந்திருக்கிறது. என்னிடம் பணமேதுமில்லை. எங்கே போவோம், என்ன செய்வோமெனத் தெரியாது... சென்றுவருகிறேன் என்று சொல்வதற்கு என் தாத்தாவின் அறைக்குச் சென்றேன். தூங்குவது போலிருந்தார் பாட்டனார். அவர் முதுகுப்புறமாக நான் நின்றவாறு, 'தாத்தா நாங்கள் ஊருக்குப் புறப்படுகிறோம்' என்றேன். பேசாமல் ஒரு கையால் என்னை அருகிலிழுத்து மார்பில் இறுகப்பிடித்து அணைத்துக் கொண்டார். ஏதும் பேசாமல் கண்ணீர் விட்டார்.... அவர் என்னை அகலவிட்டதும் ஒரு கத்தை நோட்டுக் கட்டைக் கொடுத்து ஒரு பேச்சும் பேசாமல் திரும்பிப்படுத்துக் கொண்டார். நான் தழுதழுத்த குரலில், 'சென்று வருகிறேன்' எனக் கூறிவந்துவிட்டேன்.'' (தன் வரலாறு, 29 ஆம் பக்கம்)

மனைவி சிட்டிரங்க நாயகம்மாவைச் சென்னையில் உணவு விடுதியில் சேர்த்துப் படிக்க வைக்கக் கருதிய சலத்தின் எண்ணத்தை உறவினர்கள் இருபுறத்திலிருந்தும் கடுமையாக எதிர்க்கலானார்கள். சலம் பாட்டனாருடன் பிடிவாதம் செய்து இறுதியில் உணவு விடுதியிலல்லாமல் சென்னையில் மனைவி

உடன் குடித்தனம் வைத்துப் படிப்பிப்பதற்கு ஒப்புக்கொள்ளச் செய்தார். அவ்வாறே வீடு பார்த்து, குடிவைத்துத் தம் இல்லாளை செயின்ட் தாமஸ் கான்வெண்ட் பாடசாலையில் இரண்டு ஆண்டுகள் படிக்க வைத்தார் சலம்.

சலம் சென்னையில் பி.ஏ. முதலாண்டு படித்துக் கொடிருந்தபொழுது மகன் ரவி பிறந்தான். 1913 இல் பாட்டனார் காலமானார். பிள்ளைக்குப் பணம் அனுப்பவேண்டிவருகிற தென்று தாயும் தந்தையும் சென்னையில் அவர் வீட்டில் வந்து தங்கிவிட்டார்கள்.

பாட்டனாருக்களித்த சொற்படி அவர் இறப்புக்குப் பின்னர் சலம் அவருக்கு எல்லாக் கடமைகளையும் சடங்குகளையும் செய்து நிறைவேற்றினார். அதன்றிச் சமயச் சடங்குகளில் தமக்குத் தொடர்பேதுமில்லை எனவும் கூறிக் கொண்டார். அவர் முழுமையான பிரம்மசமாஜவாதியானார். பி.ஏ. முடிந்ததும் வேலைக்கு முயற்சி செய்தார், 1915 இல் ''என் தாய் தந்தையர் மனம்போனபடி சொத்தைச் செலவிடலாயினர். என் விபரீதப் போக்கினைக் கண்டு, ஆத்திர மடைந்து, ஆண்பிள்ளைகளில்லாத என் மாமனார் தமது பெருத்த செல்வத்தை பிறர்வசமாக்கி விட்டார். இவ்வாறு என் வாழ்க்கையிலிருந்து இரு பெரிய ஆபத்துகள் தப்பிச் சென்றுவிட்டன.'' (தன் வரலாறு.)

சலம் சென்னையிலிருந்த பொழுது அண்ணி, இளம் கைம்பெண் ரங்கநாயகம்மா ஒரு முறை சென்னைக்கு வந்தார். கடற்கரையில் அமர்ந்து கொண்டு சலத்துடன் அவர் தமது எதிர்காலத்தைப்பற்றி சிந்தனை செய்யலானார். அவருக்கு மறுமணம் செய்துவைக்கமாட்டார்கள். ''நான் இங்கு வந்தால் என்னைப் படிக்கவைப்பாயா வெங்கடசலம்?'' என அவர் கேட்கலானார். அவருக்கு மருத்துவம் பயின்று மருத்துவராக வேண்டுமென்று ஆசை. படிக்கவைப்பதாகச் சலம் வாக்களித்தார். ''இவருக்கென்ன? வாக்களிக்கிறேன், ஆங்கிலம் ஒரு சொல் கூட வராத இவருக்கு. நானே பிழைக்க அறியாத நிலையிலுள்ளேன். இவரை டாக்டராக்குகிறேன்? ஆனால் பெண்களிடையிலும் தனது பெரிய சாதனைகளுக்கு முடிவில்லை. அவ்வாறு தான் துணை இருந்துவருகிறார் கடவுள் இன்று வரையிலும்.''

(தன் வரலாறு)

பிரம்ம சமாஜம்

சலம் பி.ஏ. முடித்து வேலை முயற்சியிலிறங்கினார். முதல்வர் ரகுபதி வேங்கடரத்னம் நாயுடு காக்கிநாடா கல்லூரியில் அவருக்கு போதகர் பணியைக் கொடுத்தார். ''அவருடைய அன்புக்குரிய மாணாக்கனாகிவிட்டேன். அவர் எத்தனை

பெருமை மிக்கவர்! அவரே எனது முதலாவது போற்றரும் குருவானார்.'' (தன் வரலாறு, பக்கம்38)

காக்கிநாடாவில் பிரம்ம சமாஜத்தின் பல்வேறு பணிகளில் முழு ஈடுபாடுள்ளவரானார் சலம். மனைவி சிட்டிரங்க நாயகம்மாவை 'சி'- என்று சலம் அழைப்பார். பிறகு ரங்கமாலதிபாய் எனப் பெயர் மாற்றி வைத்தார். ''இறைவனிடம் பக்தி, மக்களின் மிகுந்த சகோதர பாசம் இவ்விரண்டு பண்பும் என்னை ஆழ்ந்து பற்றிக் கொண்டன.. என்னிடமுள்ள குறை பாடுகளை அடியோடு அகற்றக் கடுமையான முயற்சியை வாழ்நாளெல்லாம் செய்து வந்தேன்... நான் செய்த பணிகள், நான் எழுதிய எழுத்துக்கள் அனைத்தும் மக்கள் நல்வாழ்வுக்கென வல்ல, என்னை நானே நலந்திருத்திக் கொள்ளவே. முதலாவதாக, குலச் சின்னங்களை அப்புறப்படுத்துவது, இரண்டாவது இன வேற்றுமையின்றி உணவருந்துதல். மூன்றாவதாக, பெண்ணுரிமை பெறல். நான்கு, உருவவழிபாடு செய்யாமை. இவ்விதமாக அளவற்ற ஆர்வத்துடன், நிறை மகிழ்ச்சியுடன் இரண்டாண்டுகள் கழிந்தன. எப்போதும் எண்ணுள்ளேயே கடுமையான போராட்டம். என் இயல்பு இன்னும் மேன்மை பெறவேண்டும் எனவும் உறுதிப்பாடு மேலோங்க வேண்டும் எனவும் இறை வனருள் பெற வேண்டினேன். இதற்கிடையில் தாகூர் எழுதிய கீதாஞ்சலி என் வாழ்க்கையில் இணைந்தது. அன்றிலிருந்து இதுநாள் வரைக்கும் தாகூரின் வழிபாட்டுப் பாடல்கள் என் வாழ்க்கையில் ஆழ்ந்த செல்வாக்குள்ளனவாக இருந்து வருகின்றன. அவர் இயற்றி இசைத்த தனித்ததோர் இறைவன் என்னருகில் வந்து என் பக்கத்திலேயே அமர்ந்திருப்பது போலிருக்கும். (தன் வரலாறு, பக்கம் 30)

அந்நாட்களில், 1915-19 இல், பிரம்ம சமாஜத்தில் இரு பிரிவுகளிருந்தன. நன்னெறிபற்றிய துறவிகள், செயல்முறைப் பயிற்சியாளர் என. பிரம்ம சமாஜத்துக்குச் சலம் செயலாளர், நாயுடு அவர்கள் தலைவர். அந்நாட்களிலேயே கிருஷ்ண சாஸ்திரி எழுதிய பிரார்த்தனை கீதங்களில் அவருடைய கவிதைப் படைப்புமிகவும் புகழடைந்து, அவர் மதுரகவி (lyricpoet) எனப் பெயர் பெற்றிருந்தார். கிருஷ்ண சாஸ்திரி, சலம், கரிமெள்ள வீரபத்ரராவ், காடேபல்லி சூர்யபிரகாசராவ், மொக்கபாடி ராமமூர்த்தி ஆகியோரனைவரும் பிரம்ம சமாஜத்தின் செயல் முறைப் பயிற்சியாளரில் தீவிரவாதிகள். சலம் பூணூலை எடுத்தெறிந்து விட்டார். அவர் மனைவி மாலதிபாய் எனப் பெயர் மாற்றிக் கொண்டதோடன்றி, தாலிச் சரடையும் கழற்றிவிட்டார். காக்கிநாடாவில் சலம் அவர்களின் இல்லம் ஹரிஜன மாணாக்கர்களின் நிலையமானது. இப்போக்குகள் மிதவாதி களுக்குப் பிடிக்கவில்லை. ரகுபதி வேங்கடரத்னம் நாயுடு

சலத்தின் தீவிரத்தைக் கட்டுப் படுத்தும் எண்ணத்துடன், ''அதில்லையப்பா! பிரம்ம மதம் என்றால் பூணூல் உள்ளதா இல்லையா என்பதில்லை. அது கூடியவரை கடவுள் ஒருவரென்று வழிபடுவோரனைவரிடமும் அன்பு செலுத்தும் இரக்கப் பண்பாகும். இதனை உணர்ந்தறிய வேண்டும்,'' என அறிவுறுத்தியும், மிதவாதிகளைச் சலம் வெறுத்தொதுக்கியதைத் தவிர்க்கவில்லை. இளைய சமுதாயத்தினர்க்கு, சலம் ஓர் வழிகாட்டி. மாமனார் கொடுத்திருந்த காசிப் பட்டாடைகளைக் கிழித்து பிரம்ம சமாஜக் கொடிகளாகத்தைக்கச் செய்தார். பெண்டிரும் ஆடவரும் ஒரு சேர நகர சங்கீர்த்தனம் பாடித்திரிந்தார்கள். பீரார்த்தனைக் கூட்டங்களுக்கு வருகை தந்து, வராதவர்கள் இல்லங்களுக்கு மேளதாளத்துடன் சென்று வரவேற்று அழைத்து வருவார்கள். மகவிழா விருந்துக்கு எல்லாரில்லத்துக்கும் எல்லாருமாகச் செல்லும் வழக்கத்தைச் செய்து, சமுதாயத்தில் குல வேற்றுமை, பெரியோர் சிறியோர், செல்வந்தர் வறியோர் என்ற ஏற்றத்தாழ்வுகளை நடைமுறையில் முடிவு கட்டுவதற்கெனச் சலம் முயற்சி மேற்கொண்டார். சலம் 'தர்மசாதனி' என்ற பத்திரிகைக்குத் தத்துவார்த்தப் பொருள்களைப் பற்றிய கட்டுரைகள் எழுதுபவர். 1919 ஜனவரி பதினோராம் தேதி 'கிருஷ்ணா' பத்திரிகையில் சலம், முட்னூரி கிருஷ்ணாராவ் இதற்கு முன் பிரம்மசமாஜத்தை விமர்சித்து எழுதிய தலையங்கக் கட்டுரைகளைக் கண்டனம் செய்து ஒரு கடிதம் எழுதினார். ''இறைவன் படைப்புக்குத் தொடர்பான ஒருமைப்பாட்டில் வேற்றுமை தோன்றுமாறு கிருஷ்ணா பத்திரிகை ஒருமைப்பாட்டினை அறுதியிட்டு வலியுறுத்துகிறது. பிரம்ம சமயம் இறைவனின் படைப்பனைத்தும் ஒன்றெனவோ வேறுபட்டதெனவோ கூறவில்லை. ஒருமைப்பாடு எத்தனை உண்மையானதோ வேற்றுமையும் அத்தனை உண்மையான தென்கிறது. படைப்பு, இறைவன் என அறுதியிட்டு வலியுறுத்து வது... உருவ வழிபாட்டினை ஒப்புக் கொள்வதற்கென்றல்லவா! ஒருமைப்பாட்டு நிலையைத் தெரிந்துணராமல் போவது அறியாமையேயன்றி, அவ்வாறே வேற்றுமை நிலையை இல்லை யெனலும் அத்தகைய அறியாமையே.'' சலத்துக்குச் சிறந்த தத்துவப் பேரறிவு நிறைந்துள்ளதை இக்கடிதம் தெரியச் செய்கிறது. இதற்கிடையில் வேங்கடரத்னம் நாயுடு ஜஸ்டிஸ் கட்சியில் சேர்ந்தார். இக்கட்சி அந்தணரல்லாதாரின் போராட்டத்தின் ஓர் அரசியல் அமைப்பு. குலம் மதம் வேறு பாடுகளுக்கப்பாற்பட்ட நாயுடு அதில் ஏன் சேர்ந்தார் என்ற கேள்வி எழுந்தது. ''பின்தங்கிய இனத்துக்கு நீதி கிடைக்கச் செய்து, சேவை புரிவதற்காகவே,'' என நாயுடு சமாதானம் கூறவும், அந்தண இளைஞர் சிலர், ''அப்படியானால், நாங்கள் சேர்கிறோம்'' என்றனர். ''நீங்கள் பிராமணர்கள். நீங்கள் சேரலாகாது!'' என்றார்

நாயுடு. அதிலிருந்து இளைஞர்களுக்கும் அவருக்குமிடையில் வேறுபாடுண்டாயிற்று. நாயுடு நான்கு ஹரிஜனப் பெண்களை வளர்த்து ஆதரித்தார். அவர்களில் ஒருத்தியான சுகுணம்மாவை, தாரகம் என்பவர் மணம் புரிந்து கொண்டார். தாரகம் மொக்கபாடி ராமமூர்த்தியின் சகோதரி மகன். இத் திருமணத்தை நாயுடு ஒப்புக் கொள்ளவில்லை. இவ்வாறாக நாயுடுவின் பிரம்ம சமாஜத்தினரும் சலத்தின் செயல் முறைப் பயிற்சியாளர்களும் வேறுபட்டவராயினர். அந்தச் சமயத்தில்தான் சலம் ரத்னம்மாவுடன் காதல் தொடர்பில் சிக்குண்டார். இத்தகைய தொடர்பின் விளைவாக, சலத்தின் உள்ளக்கிடக்கை பற்றிய ஐயப்பாடுகள் எத்தனையோ தோன்றிவிட்டன. அவரை பிரம்ம சமாஜத்திலிருந்து வெளியேற்ற நேர்ந்தது அவரின் ரத்னம்மா தொடர்பான நிகழ்வுகள்.

ரத்னம்மா மொக்கபாடி ராமமூர்த்தியின் மைத்துனி. ராமமூர்த்தியும் அவர் மனைவி சந்திரமதியும் கல்கத்தா சென்றிருந்தனர். முரட்டுத் தங்கை இந்துவையும் ரத்னம் மாவையும் வீட்டிலிருக்கச் செய்து சென்றனர். ரத்னம்மா கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தாள். சலத்திடம் பாடங்கள் பயில்வதற்காக அவர் வீட்டுக்கு அடிக்கடி வந்து கொண்டிருந்தாள். குழந்தை எழுந்து அழுது கொண்டிருப்பதாகக் கூறி, சலத்தை அவள் வீட்டுக்கு அழைத்துச் சென்றாள் ரத்னம்மா ஓர் நாளிரவு. அழும் குழந்தையைச் சமாதனம் செய்து சமாளித்த பிறகு, தான் தனியாக இருக்க நேர்ந்ததற்கு கண்ணீர் சிந்திய ரத்னம்மாவைச் சலம் அருகிலழைத்துக் கொண்டார். ''அவளை நெருங்கி ஆறுதலாகப் பிடித்தேன். அவள் என் மடியில் சாய்ந்து தழுவிப் பிடித்துக் கொண்டாள். என்ன இது? என்ன செய்கை பாவம்! பாவம்! எனும் நடுக்கத்துடன் தடுமாறிக் கொண்டிருந்தன எங்கள் கண்கள். 'கடவுளே! கடவுளே இந்தப் பாவத்திலிருந்து தப்பிக்கச் செய்யுங்கள்' என்றன எங்கள் இதயங்கள். ஆனால் மன்மதனே எங்கள் மனநிலையைச் சற்றும் கருதாமல் துணியவைத்து வெல்கிறான்...'' அதன் பிறகு நாள்தோறும் இரவில் சலம் ரத்னம்மா வீட்டுக்குச் செல்லலானார். சலத்தின் மனைவி சொன்னாள்: ''பாடங்கள் மிகவும் கடினமாகி வருகிறாற் போல் இருக்கிறது. நீங்கள் இரவு நெடுநேரங்கழித்தும் வராமலிருக் கிறீர்கள்.''அவளின் சொற்களுக்குச் சிரித்த சலத்தைப் பார்த்து, 'சி' துயரத்துடன் கண்ணீர் விடலானாள். அவளுக்கு ரத்னம்மாவைக் கண்டாலே பகை. சலம் பிரச்சினையில் சிக்கினார். ஆயினும் ரத்னம்மாவை விலக்கிக் கொள்ளவியலாமல் போனார். சலத்தின் மனைவி வெறுத்துப் போய் தெனாலிக்குப் போய் சேர்ந்தாள். மகன் சலத்துடன் இருந்துவிட்டான். ''கடவுள் துரோகி, சிரித்துக் கொண்டிருக்கிறேனே'' எனும் பாவச்சுமை சலத்தின் உள்ளத்தை உறுத்தலானது. ஒரு நாள் ரத்னம்மாவுக்குக் கடிதம் எழுதினார்,

இனிவிலகியிருக்க வேண்டுமென்று. அவள் வந்து ஒரு பெரிய குழப்பத்தையே உண்டாக்கினாளென்கிறார். பிறகு அவள் வராமல் போகவே தாமே அவளைப் பார்க்கச் சென்றார். அவள் விஷம் குடித்து விழுந்துகிடந்தாள். குழந்தை இந்து அழுதுகொண்டிருந்தாள். சலம் அவளை வைத்தியரிடம் அழைத்துச் சென்றார். ராமமூர்த்திக்குக் கடிதம் எழுதினார். ராமமூர்த்தி திரும்பவும் வந்து சலத்துக்கு நீதி போதனைகள் பல கூறினார். பிரம்ம சமாஜ நண்பர்களனைவரிடமும் சலம் செய்த அநியாயத்தைப் பற்றித் தெரிவித்து நியாயம் கோரினார். அவரை நிந்தனையும் செய்யலானார். சலம் இதன் விளைவாக பிரம்ம சமாஜத்திலிருந்தும் காக்கிநாடாவிலிருந்தும் வெளியேற நேர்ந்தது. ராஜமண்டிரி வந்து எல். டி. பயிற்சியில் சேர்ந்தார்.

ஒதுக்கப்பட்டவர்

பிரம்ம சமாஜத்திலிருந்து அகன்று 1919 இல் சலம் எல்.டி. படிப்புக்காக ராஜமந்திரி சேர்ந்த பொழுது, அவர் சமாஜத்திலிருந்து நீக்கப்பட்டிருப்பவரென்பதறியாமல் சமாஜத்தினர் வீரேசலிங்கம் அவர்களின் ஆனந்தா தோட்டத்தில் அவருக்கொரு பங்களா ஏற்பாடு செய்திருந்தனர். ஆனால் காக்கிநாடா சமாஜத்தவர், சலத்துடன் தொடர்பு கொள்வது நல்லதன்றெனச் சொல்லவும் அதிகாரிகள் உடனே அவ்வீட்டைக் காலி செய்யச் சொன்னார்கள். ''எந்த இடமடா நிலை உனக்கு, சலம்?'' எனச் சிந்தனை செய்துகொண்டிருந்த சலத்துக்கு, அந்தத் தோட்டத்திலேயே ஒரு பாழடைந்த மாட்டுக் கொட்டகையிலிருந்து சலத்தின் அத்தை ஸ்ரீ மகாலக்ஷ்மி இடமளிக்கலானார்.

ஸ்ரீ மகாலக்ஷ்மியைச் சலம் 'அப்ருதா' என்றழைப்பார். சென்னையில் ஒரு முறை அவ்வம்மையாரின் இல்லத்துக்குச் சென்றிருந்தார். அவர் மிகவும் அழகான பெண்மணி. இளம் விதவையான அவரை, சலத்தின் பெரியதந்தை வீரேசலிங்கம் சரணாலயத்தில் தங்கவைத்தார். அக்காப்பகத்தைப் பார்ப்பதற்காக வந்த ஒரு பெரிய அதிகாரி, நீதிபதி சேஷகிரிராவ் அவரை விரும்பி விவாகம் செய்து கொண்டார். அதுவரை வீரேசலிங்கத்தின் புரட்சிப் போராட்டத்திற்குத் துணைபுரிந்துவந்த நீதிபதி சுப்பா ராவ், தமது தம்பியே விதவையை மணம் புரிந்து கொண்டதால் வீரேசலிங்கத்தின் தீராப் பகைவரானார். இவ்வாறுதான் இருந்தது சீர்திருத்தவாதிகளெனச் சொல்லிக் கொண்ட பெரியவர்களின் மனநிலை அந்த நாட்களில்! நீதிபதி சேஷகிரிராவுடன் தென்னா டெங்கும் சென்று திரும்பிவந்த ஸ்ரீ மகாலக்ஷ்மி கணவரின் இறப்புக்குப் பிறகு, பெருஞ் செல்வத்திற்குரியவரானார். அவரை மறுமணம் செய்துகொண்ட காரணத்துக்காக உறவினர்கள் எவரும் அவரில்லத்துக்கு வராமல் போகவே, சென்னையில் குடிவைத்தார். அங்கு அவர் அழகுக்கும் செல்வத்துக்கும் பல

ஆந்திர நபர்கள் சூழலானார்கள். அவருக்குக் கமலா என ஒரு மகள். சென்னையிலிருந்த பொழுது நெருங்கியிருந்த நண்பர்கள் ஸ்ரீ மகாலக்ஷ்மியை ஒரு ஜமீன்தாரருக்கு விற்றுவிட்டார்கள். திருட்டுக் கல்யாணம் செய்து வைத்தார்கள். அந்த ஜமீன்தாரர் அவரைக் கல்கத்தா மெயிலில் ஏற்றி அழைத்துச் சென்று எங்கோ வித்தியாரண்யத்தின் நடுவில் ஒரு மாளிகைக்குள் தங்கவைத்துத் தலைமறைவாக இருக்கச் செய்தார். கையெழுத்துக்கள் வாங்கி அவர் சொத்துக்களைச் சிறிது சிறிதாகக் கவர்ந்து கொண்டார். மகள் கமலா வயதுக்கு வந்ததும் ஜமீன்தாரர் அவள் வசமாகத் தொடங்கிவிட்டாராம். ஸ்ரீ மகாலக்ஷ்மி எத்தனை பேருக்குக் கடிதங்கள் எழுதினாலும் பயனற்றுப் போனது. கடைசியில் வெங்கடரத்னம் நாயுடுவுக்கு எழுதிய கடிதத்தினால் போலிஸ் அறிக்கை சென்று, காவலதிகாரிகள் அவரை வீரேசலிங்கம் அவர்களின் காப்பகத்தில் சேர்ப்பித்தனர். இந்த நிகழ்ச்சிகள் அனைத்தும் காக்கிநாடாவிலிருந்த போதே சலத்துக்கு நாயுடு சொல்லியிருந்தார். சலத்தின் அத்தையின் பேரழகைப் பற்றி நாயுடு, 'கொள்ளை அழகில் கொன்றேவிடுவாள்' என்றாராம்.

சலத்தின் அத்தையின் இச் செயல்களெல்லாம் அந்நாளையப் பெண்களின் துயரநிலைக்கு நல்ல சான்று. அழகும் செல்வமும் இருந்தபோதும் விதவையான பெண்ணுக்கு, தனிமையான ஒருத்திக்குப் பாதுகாப்பில்லை. அத்தகையோர் ஏறத்தாழ ஒதுக்கப்பட்டவரே. வீரேசலிங்கம் அவர்களின் மதிப்பும் கடும் முயற்சிப் பிடிப்பும் ஆற்றிய அரும்பணி, விதவையான ஒரு பெண்ணை மீளவும் மணமுடிப்பித்ததன் வாயிலாகச் சமுதாயத்தில் சேரச் செய்ததுடனன்றி, அத்தகைய மணங்களை எத்தகைய பேர்வழிகள் எந்த நோக்கத்துடன் செய்து கொள் கிறார்களென அவர் கருத்திற் கொள்ள இயலவில்லை. அத்தகைய துயருற்றவர்களுக்கு, சமுதாயத்தில் ஒதுக்கப்பெற்றிருந்த பெண்டிருக்கு ஆதரவாக நிற்கும் முயற்சியில் ஈடு கொள்ளலானார் சலம். ஆனால் சலம் தாமே சமுதாயத்தினின்றும் பழக்க வழக்கங் களினின்றும் ஒதுக்கப்பட்டவராக நேர்ந்ததால், தாம் செய்த உதவி வெளிப்பட்டதேயன்றி, அதன் உண்மைத் தோற்றத்தை உணர்த் தவியலாமற் போயிற்று. சமுதாயத்திலிருந்து சலம் மேலும் அப்புறப்படுத்தப்படலானார். சலத்துக்குத் தமது இலக்கியக் கட்டுரைப் பணிதான் சமுதாயத்தை எதிர்த்துப் போராடுவதற்குரிய தண்டாயுதமாயிற்று. செயல் புரிந்ததற்கே பகையாளனாகிவிட்ட சலம், தமது உரையாக்கங்களின் வாயிலாகச் செயலோச்சுவதற்கு, தனிநபர் உரிமைக்குக் கடுமையான முயற்சி செய்யலானார்.

சலம் அத்தையின் விருந்தினரானார். ''அத்தையின் மடியில் ஒரு சிறுவனாக நான் கழித்த நாட்கள் மிகவும் மகிழ்ச்சி யளிப்பவை. தூங்கி எழுந்தவுடனேயே நடு தோட்டத்துக்கு ஓடிப்

போவேன். நான் கடவுளை விட்டகன்றாலும் அவர் என்னை விட்டகல மாட்டார். பெரிய மரங்கள், மறுமணம் பூக்கும் செடிகள், என் இதயத்தை வானத்து நீலத்துக்கே எழும்பச்செய்யும். எனது ஒற்றைத் தம்புராவை எடுத்துச் சென்று மக்கள் நடமாற்றமற்ற அக்காட்டின் இடையில் பாடிக்கொண்டும் ஆடிக் கொண்டிருப்பேன். கல்லூரியும் நான் வெறுத்தொதுக்கும் வீட்டுப்படிப்பும் இல்லாமற்போனால் எத்தகைய இன்பமான காலம்!''

சலம் அத்தையின் இல்லத்திலிருந்தபோது, சலத்தின் மாமனார் மறுபடியும் மணம் செய்து கொள்ளவும் இருக்க இடமில்லாமல் போன சலத்தின் அண்ணியார் ரங்கநாயகம்மா ராஜமண்டிரியிலிருந்து வந்துசேர்ந்தாள். அப்போது சலத்தின் மனைவியும் மகன் ரவியும் தெனாலியில் இருந்தனர். ''எங்களுக்கு இவ்வூரில்யாரும் குடியிருக்க வீடு தரமாட்டார்கள். அவரோ என் அத்தை. இத்தோட்டத்துக்குரியவர் அவருக்குப்பாதுகாப்பளித் திருக்கிறார். அவரோ எனக்குப் பாதுகாப்பளித்துள்ளார்,'' என விளக்கினார். சலம் தம் அண்ணிரங்கநாயகம்மாவிடம். ''நான் வந்திருப்பது உனக்குச் சங்கடமா?'' என்றாள் அவள், ''நீங்கள் வந்திருப்பதால் என் உள்ளத்துக்கும் இத்தோட்டத்துக்கும் ஒரு ஒளியை ஏற்றிவைத்திருக்கிறீர்கள்,'' என்று சலம் அவளை அத்தையிடம் அழைத்துச் சென்றார். தாம் சென்னைக் கடற்கரையில் கொடுத்த வாக்குறுதிக்கேற்ப அவளுக்குப் படிப்புச் சொல்லித்தரத் தொடங்கினார்.

சலம் அண்ணிரங்கநாயகம்மா அது முதற் கொண்டு சலத்தின் வாழ்வில் உறுதுணையாகலானாள். அவ்வம்மையை, சலம், அவர் குழந்தைகள் 'மன்னி' (அண்ணி என்ற சொல்லுக்கு மறு சொல்) என அழைக்கலாயினர். இவர்களைத் தமது வீட்டில் நெடுங்காலம் வைத்துக் கொண்டு உணவளிக்கும் வசதியற்ற அத்தை ஒருநாள் ''இனி போதும் போய்ச் சேருங்களப்பா'' என்றாராம். தமக்கு வீடுகிடைப்பது அரிதெனத் தெரிந்திருந்த சலம், லக்ஷ்மி ராவ்பேட்டையில் தாழ்குலத்தார் குடிசைகளில் ஒன்றை ஏற்பாடு செய்துகொண்டு அதில் 'மன்னி'யையும் ரவியையும் குடும்பமாக வைத்தார். அவருக்கு எல்.டி. பயிற்சிக்கென உதவித் தொகையாக மாதம் பதினைந்து ரூபாய் கிடைத்தது. அதனைக் கொண்டே சமாளித்துக் கொண்டிருந்தார்கள். வீரேசலிங்கம் உயர் பாடசாலையில் 'மன்னி' ஐந்தாம் படிவத்திலும் மனைவி 'சி' நான்காம் படிவத்திலும் சேர்ந்து படித்துக்கொண்டிருந்தார்கள்.

எல்.டி. நிறைவடைந்த பிறகு சலம் தமது குடும்பத்துடன் தெனாலிக்குச் சென்றார். அவரைத் தமது தந்தையாரோ உறவினர்களோ வீட்டில் வரவிடவில்லை. அவருக்கு உரிமை உள்ள வீட்டிலிருந்தே வெளியேறச் சொன்னார்கள்.

அவ்வுரிமையை உறுதிப் படுத்திக்கொண்டு அச் சொத்தினைத் தமதாக்கிக் கொள்ளும் முயற்சியைச் சலம் செய்யவில்லை! சலத்துக்குப் பணம், சொத்து, அதிகாரம், செல்வாக்கு என்றால் தொடக்கத்திலிருந்தே வெறுப்பு. அவற்றுக்கென வாழ்க்கையில் எப்போதுமே முயற்சிக்கவில்லை. சலத்துக்கு ஹொசப்பேட்டில் நகராட்சிப் பாடசாலையில் தலைமையாசிரியர் பணி கிடைத்தது. வேலையில் சேர்வதற்குள் மன்னியைச் சென்னைக்கு அழைத்துச் சென்று ராயபுரம் பெண்கள் பாடசாலையில் சேர்த்து படிக்கச் செய்தார். அங்கு ஓரிடத்தில்தான் அவருக்கு உணவு விடுதி வசதி கிடைத்ததது. அங்கு எல்லோரும் கிறிஸ்தவர் களாயினும் அம்மதத்தில் சேருமாறு மன்னியை எவரும் வற்புறுத்தவில்லை. ஹிந்து கல்விக் கூடங்களில், அரசாங்கப் பாடசாலைகளில் கிடைக்காத தங்கும் வசதி, ஆதரவு இந்தச் சமுதாயப் புறக்கணிப்புக்காளானவளுக்கு அங்கு கிடைத்தது. மன்னி கல்விக் கூடத்தில் சேர்வதற்கான உதவி புரிந்த கிறிஸ்தவ நண்பரின் நல்லிதயம், அவரின் கடவுளின் மீதான மெய்நம்பிக்கை சலத்தை நன்றாக அசைக்கலாயின. பெண்ணாசையின் நிமித்தமாக, இறைவனிடமிருந்தும் பிரம்ம சமாஜத்தினின்றும் விலகிப் போனவரெனக் கருதப்பெற்ற சலத்தின் இதய முழுமையும் 'நன்றியுணர்'வால் நிரம்பி வழிந்தது. ஆயினும் ''யாருக்கு நன்றியுணர்வு? அவர் தான் இல்லையே! எத்தனை அநீதி செய்தார் எனக்கு. என்னை நம்ப வைத்து, என் பக்தியைப் பெற்றுக் கொண்டு, நான் இருக்கறேன், இதுதான் தேவை என...'' (தன் வரலாறு, பக்கம் 86 இல்). சலம் அப்போதுதான் தமது கடவுளில்லை வாதத்தை எண்ணலானார். இறைவன் இருக் கின்றதை உணர்ந்தாலும், தமக்குத் துணைபுரியவில்லையல்லவா. ஏன் நினைக்க வேண்டும்? எனும் சிந்தனையிலிருந்தார் சலம்.

சலம் ஹொசப்பேட்டிலிருந்த போது, 1921 இல், நண்பர் பிரகாசம் சலத்திடம் வந்து காக்கிநாடாவில் ரத்னம்மா நிகழ்ச்சி களில் உண்மையில் நடந்ததென்ன வென்று கேட்கலானார். சலம் காக்கிநாடாவை விட்டு வந்த பிறகு நிகழ்ந்த மாற்றங்களைப் பற்றிக் கூறினார். கல்கத்தா செல்வதற்கு முன்பு சில மாதங்களாக ராமமூர்த்திக்குத் தம் மைத்துனி ரத்னம்மாவுடன் உடலுறவு ஏற்பட்டிருந்ததாம்! ரத்னம்மா விஷம் அருந்திவிட்டாளெனச் சலம் கடிதம் எழுதியதற்கு, அவர் தம்மால்தான் அவள் கருவுற்றிருப் பாளெனப் பயந்து திரும்பிவந்தார் ராமமூர்த்தி. வந்ததும் சலம் செய்கையறிந்து தம் மீது பழி நேராமல், சலத்தைப்பற்றி பிரம்ம சமாஜத்தினரிடம் குற்றம் புரிந்தவராகப் பழி சொல்லலானாராம். சலம் வெளியேற்றப்படத் தான் செய்த துரோகத்துக்கு வருந்தி, பிரகாசத்திடம் சொல்லியழுது இப்போது அவரைத் தூதாக அனுப்பியிருந்தார். காக்கிநாடாவிலிருந்து சலம் வெளியேறிய பிறகு நேர்ந்த மாற்றங்கள் இவ்வாறிருந்தன. ரத்னம்மாவுடன் தன்

கணவனின் தொடர்பைப் பொறுக்க வியலாமல் சந்திரமதி எல்லாரிடமும் ராமமூர்த்திக்கும் ரத்னம்மாவுக்குமான தொடர்பை வெளிப்படுத்தத் துவங்கிவிட்டாள். ஒரு முறை ரத்னம்மா மார்வாடி கோவிலுக்கெதிரிலிருந்த ஆழமான மடுவில் விழுந்துவிட்டாளாம். அவள் செய்த இந்த இரண்டாவது தற்கொலை முயற்சியுடன் பிரம்ம சமாஜத்துக் கிருந்த பெயரும் புகழும் அடியோடுசரிந்து போயிற்று. சந்திரமதி பிறந்த வீடு போய்ச் சேர்ந்தாள். அவளுடைய தாய் தந்தையர் போலிஸுக்குப் புகார் தந்தனர், ராமமூர்த்தி அவளது உரியவயது வராத மகளைக் கெடுத்துவிட்டார் என்று. ஆனால் ரத்னம்மா உரிய வயதடைந்தவள் என வழக்கைத்தள்ளிவிட்டனர். ராமமூர்த்தி சமுதாயத்திலிருந்து வெளியேற்றப்பட்டார். வீட்டுக்காரரும் வீட்டைக் காலி செய்யவைத்தனர். ராமமூர்த்தியிடமிருந்த பண மெல்லாம் தீர்ந்துவிட்டது. ராமமூர்த்தியும் ரத்னம்மாவும் மொத்தத்தில் வீடிழந்தவராயினர். ராமமூர்த்தியும் ரத்னம்மாவும் சேர்ந்து ஹொசப்பேட் வருவதாகப் பிரகாசத்தைத் தூதனுப்பி யிருந்தார். சலம் அவரை வருமாறு தந்தி அனுப்பியிருந்தார். ராமமூர்த்தி, ரத்னம்மா, பிரகாசம், சத்யவதி, சலம் வீட்டில் வந்திறங்கினார்கள்.

''எப்போது அவர்கள் வந்து தஞ்சம் கேட்டார்களோ, அப்போதிருந்தே 'சி' ரங்கநாயகம்மா தனது பழைய கோபத்தை யெல்லாம் மறந்து அவர்களைத் தனது இதயத்திலிருத்திக் கொண்டாள். அவர் தாய்மையடைந்திருந்தார். அவர்கள் எவரும் அவருக்கு உதவி புரியவில்லை. 'சி' எல்லாருக்கும் சமைத்துப் பரிமாறினாள். எல்லாரும் சேர்ந்து ஒன்றாகக் கதைகள் பாட்டுகள் சிரிப்புமாக... ராமமூர்த்திக்கும் பிரகாசத்துக்கும் என்பாட சாலையில் வேலைவாங்கி வைத்தேன்.'' (தன் வரலாறு, பக்கம் 87.)

சலத்தின் மகள் சௌரீஸ் ஹொசப்பேட்டில் பிறந்தாள், 1921 ஏப்ரல் பதின்மூன்றாமற் தேதி.

சலத்துக்கும் அதிகாரிகளுக்கும் போராட்டங்கள் நிகழ்ந்தன. மாணாக்கர்கள் சலத்தை ஆதரித்ததனால் பணியிலிருந்து உடனே நீக்கப்பெறவியலவில்லை. ஆனால் குடியிருந்த வீட்டிலிருந்து வெளியேறுமாறு கோரினர். சலத்தின் மீது பரிவு கொண்ட விவசாய அதிகாரி ஒருவர் பாத்ரோ, அவர் ஊருக்கு மூன்று கல் தொலைவில் காட்டிலிருந்த அரசாங்கக் கட்டிடமொன்றைச் சலத்துக்கென ஏற்பாடு செய்துதந்தார். அவ்வியற்கைச் சூழ்நிலை சலம் குடும்பத்துக்கும் நண்பர்களுக்கும் மிக்க மகிழ்ச்சியளித்தது.

ஹொசப்பேட்டில் பணியை முடித்துக் கொண்டபிறகு சலமும் ராமமூர்த்தியும் சென்னை சென்று ராமசாமிநாயகர் சத்திரத்தில் தங்கியிருந்து நிலையான வேலைக்காக முயற்சி

செய்யலாயினர். சலத்துக்கு ராஜமண்டிரி பயிற்சிக் கல்லூரியில் ஆசிரியர் பணி கிடைத்தது. ராமமூர்த்திக்கு ராஜமண்டிரி மத்திய சிறைச்சாலையில் வேலை கிடைத்தது. இருவரும் குடும்பங் களுடன் ராஜமண்டிரி வந்து சேர்ந்தார்கள்.

ராமமூர்த்திக்குச் சிறைச்சாலை அலுவலர்கள் குடியிருப்பில் வீடு கிடைத்தது. ரத்னம்மாவை மையமாகக் கொண்டு அவ்வீடு கவிஞர்களுக்கும் நண்பர்களுக்கும் கிருஷ்ண சாஸ்திரி, முத்து கிருஷ்ணா போன்றவர்களுக்கும் கூடிப் பேசும் இடமாயிற்று. சத்யவதியும் பிரகாசமும் வேறு குடியமைத்து, அவர்களுடன் கலந்து கொள்வார்கள். சலத்துக்கு ஹிந்துக்களோ பிரம்ம சமாஜத்தவரோ வீடு வாடகைக்குத் தரும் சூழ்நிலையில்லாமற் போகவும் ஒரு பெரிய சாயபு வீட்டின் ஒரு பகுதியை ஏற்கலானார். கோதாவரிக் கரைக்கு அருகிலிருக்கும் அவ்வீட்டிற்குச் சலத்தின் கல்லூரி நண்பர்களில் ரஹ்மான், பத்ராசலம், ஒரு காவல் அதிகாரி மாலைப் பொழுதில் தேநீருக்கு வந்திருந்து பேசிக் கொண்டிருப் பார்கள். சாயபு வீட்டுத் திருமணத்துக்கு வந்திருந்தது காஜி சாஹிபு உருது, மற்றும் பார்சி மொழிகளில் காதல் கவிதைகள், இன்னிசைப் பாட்டுக்களைச் சலத்துக்கு இரவில் பாடிக் காட்டுவார். ஹிந்து மதத்தால் வெளியேற்றப்பட்ட சலத்தை முஸ்லிம் நண்பர்கள் இவ்வாறு அன்பு செலுத்திப் பெருமைப் படுத்தினார்கள்.

தன்னுரிமைக் கொள்கையாளர்

ரத்னம்மா விவகாரத்தில் பிரம்ம சமாஜத்தைவிட்டு விலகி காக்கிநாடாவிலிருந்து 1919 இல் ராஜமண்டிரி வந்த சலம் அவர்களின் செயற்பாடுகளில் பெரிய மாற்றம் நேர்ந்தது. அண்ணி ரங்கநாயகம்மாவும் மனைவியுடன் சலத்தின் வாழ்க்கைத் துணைவியானார். அண்ணியை டாக்டருக்குப் படிக்கவைக்க வேண்டுமென்ற ஆவலுடனிருந்தார் சலம். 1921 இல் ஹொசப்பேட் சென்ற பிறகு, சௌரீஸ் பிறக்கும் தருவாயில், ரத்னம்மா மற்றும் ராமமூர்த்தி சலத்திடம் வந்து தங்கியதுடன், சலத்துக்கு ரத்னம்மாவுடன் மீண்டும் உறவு தொடர்ந்துவிட்டது. 1922 இல் அனைவரும் ராஜமண்டிரி போய்ச்சேர்ந்தார்கள். அந்நாள் காண்டுகளில் சலம் தாமே மாற்றமடைந்தவராகக் காணப் பெற்றார். 1922 இல் ராஜமண்டிரி திரும்பி வந்த பிறகு, தமது மன மாற்ற வாழ்க்கையைக்குறித்து, சலம் 'தன் வரலாற்றின்' பதினோராம் அத்தியாயத்தில் விளக்கம் தருகிறார்: கோதாவரி ரயில் நிலையத்துக்கு ஒரு நாள் மாலை சென்றிருந்த பொழுது பழைய நண்பர்களிலொருத்தி வண்டியிலிருந்து இறங்கி ராமமூர்த்தியிடம் போவதாகக் கூறவும், அவளைச் சலம் தம் வீட்டுக்கு அழைத்துச் சென்றதும், அவர்களை 'சி' வெளியில் போகச் செய்ததும், சலம் உடன் வந்தவளைத் திருப்பியனுப்ப

ஏதும் தோன்றாமல் கோதாவரிக்கரை மீது அமர்ந்திருந்ததும், இருட்டியபிறகு, தம் மனைவி மகன் ரவியை அனுப்பிச் சாப்பிடவருமாறு வேண்டியதையும் விவரிக்கிறார். அங்கு வந்த பெண் வரலக்ஷ்மி 'சி'க்குக் காக்கிநாடாவில் தெரிந்திருந்த பேர்வழிதான் அவள். 'சி' மறுபடி கர்ப்பமாகியிருந்தும் எல்லாப் பணிகளையும் தானொருத்தியே செய்து கொள்ள நேர்ந்தது. பணிசெய்யச் சலம் குடும்பத்தில் வேலைக்காரிகளோ, உதவிக்கு மருத்துவர்களோ கிடையாது. வீட்டு வேலைகளில் எப்போதாவது சலம் துணைபுரிவார். வந்தவர்களுக்குச் சமைத்துப் போட்டுக் கொண்டிருந்தார், மனைவி அவருக்குப் பிடிக்காதவர்கள் வந்தால் மட்டும் உணவைத் தாழ்வாரத்தில் வைத்துப் பரிமாறிப் போகச் செய்வார். அத்தகைய சமயங்களில் சலம் வந்த விருந்தினர்களை, கோதாவரிக் கரையிலுள்ள பச்சைப்பிரம்பால் யாரோ கட்டிப்போட்ட கொட்டகையில் இருக்கச் செய்வார். அந்தக் கொட்டகையை நான்கணாவுக்கு வாங்கி, அதில் கட்டில், அசைந்தாடும் நாற்காலி ஒன்றைச் செய்து வைத்துக் கொண்டார். தமது பெண் நண்பர்களை அங்கே அழைத்துச் சென்று தங்கச் செய்வார். ரத்னம்மா அவரைத் தேடி வந்தால் அவளுடன் அங்கேயே காலங்கழிப்பார். இந்நிலையில் வசந்த் பிறந்தான். 'சி' மருத்துவத்துக்காகத் தெனாலி சென்றிருந்தார். மகன் ரவியும் உடன் சென்றான். சலம் ஓட்டலில் உணவுண்டு, கல்லூரிக்குச் சென்றால் சௌரீஸுடன், அருகிலிருக்கும் சாயபு வீட்டில் சாப்பிட்டு விடுவார். மாலை நேரத்தில் கோதாவரியில் படகு ஏறிப்பொழுது போக்குவார். இரவில் தனிமையில் தத்து வார்த்த எண்ணங்கள். இவ்வெண்ணங்களுக்கு பெர்ட்ரண்ட் ரஸ்ஸல், மெட்டர்லிங்க் நூல்கள் துணைபுரிந்தன. ''கடவுள் எனும் பெரும் புளுகை இத்தனையுகமாக எப்படிச் சுமந்த இவ்வுலகம்?'' என நினைப்பார். ஆனால் பொழுது புலர்ந்தபின் இயற்கை வனப் பினைக் கண்டு ''இந்த எழில், அதாவது இந்த இயற்கை அழகினுள் பொதிந்துள்ள பரிவு, காணும் ஈகை இவற்றை சந்தேகிப்பது முழு மடமை. இந்த வெளிச்சத்தினூடான மென்மை, இனிமை, இளங்காற்றின் இனிய சுகம் இவையாவும் பொருளற்றனவல்ல, என நினைத்து மகிழ்வேன்.'' (தன் வரலாறு, பக்கம்100.)

ரத்னம்மாவுடனான தொடர்புக்கு உரிமைக் காதல் சித்தாந் தத்தை (doctrine of free love) சலம் உருவாக்கிக் கொண்டதற்கான சிறப்பான தொடர்புள்ளது. இவ்வுரிமைக் காதல் கோட்பாட்டிற்கு அடித்தளமானவர்கள் சலமும் ராமமூர்த்தியும். இவ்விருவரின் நோக்கம், எண்ணம், நட்பு, கிருஷ்ண சாஸ்திரி முதலான புதுமைக்கவிஞர்களை, 1919-24 இல், புகழ் மிக்கவராக்கின.

ராமமூர்த்தி கல்கத்தா செல்வதற்கு முன்னரே காக்கிநாடாவில் சலத்துக்கும் ராமமூர்த்திக்குமிடையில் ஓர் உரையாடல் நடந்தது:

''ராமமூர்த்தீ! எனக்கு மீண்டும் மீண்டும் சந்தேகம் தோன்றுகிறது. எங்கேயாவது எந்த அழகான பெண்களைப் பார்த்தாலும் நான் மிகவும் கவர்ச்சிவசப்படுகிறேன். அதைப் பாவம் என்கிறாயா நீ?''

''பாவமென்று தான் சொல்வேன் நான்,'' என்றார் அவர்.

''ஆம், எனக்குத் தெரியும். புராணங்கள், சாஸ்திரங்கள், பெரியோர்கள், நமது பிரம்ம சமாஜ குருமார்கள் அனைவரும் இதனைக் கடுமையாகக் கண்டிக்கிறார்கள். அவர்கள் சொல்வதெல்லாம் உண்மையாக இருக்கலாம். ஆனால் எனக்கு உண்மையாகத் தோன்றவில்லை. நாம் இவற்றையும் உருவவழிபாடுகளையும் உயர்வாக ஆக்கிக் கொண்டோம். இந்த விதிகளுக்கு மட்டும் எதற்காகப் பணிந்து போகவேண்டும்? எப்போதாவது தெய்வம் இச்செயல்களையெல்லாம் கெட்டவை என்று நேரடியாகச் சொன்னதா?''

''ஆனால் உன் உள்ளிருக்கும் ஆன்மா என்ன ஆனது?''

''என் உள்ளுணர்வு இதில் தவறேதுமில்லை என்றுதான் சொல்கிறது.''

''என்னவோ அப்பா எனக்குத் தெரியாது,'' என்றார் ராமமூர்த்தி. (தன்வரலாறு, பக்கம்77.)

அப்போதுதான் ராமமூர்த்தி, சலம் இருவரும் ரத்ரனம்மாவிடம் அவள் கவர்ச்சிக்காளாகியிருந்தார்கள். மேல் கண்ட உரையாடலில் சலத்தின் வழிகாட்டு நெறி ராமமூர்த்தி மீதும் தாக்கம் கொண்டது. ராமமூர்த்திக்குள் ஐயப்பாடுகளேதேனுமிருந்தால் சலம் வெளிப்படுத்திய கருத்துரையினால் அவை பஞ்சாகிப் பறந்தோடியிருக்கும். அதற்கிடையில் ராமமூர்த்தி ரத்னம்மாவுடன் தொடர்பு வைத்துக் கொண்டார். இது சலத்துக்குத் தெரியாது. ராமமூர்த்தி கல்கத்தா சென்றபிறகு சலமும் ரத்னம்மாவின் கவர்ச்சிக்காளாகிப் பணிந்தார். ராமமூர்த்தி கல்கத்தாவிலிருந்து வந்தபிறகு அவ்வம்மையின் நடவடிக்கை அவருடைய செயல் போக்குக்கும் சலம் செயல் போக்குக்கும் உள்ள வேறுபாட்டினைத் தெளியச்செய்தது. ஆனால் ராமமூர்த்தி அன்புள்ளங்கொண்டவர். அவருக்கும் சலத்துக்குமிடையிலிருந்த அருமையான நட்புப் பிணைப்பு மீளவும் ஹொசப்பேட்டில் அவர்களை நெருங்கி ஒன்று சேர்த்தது. சேர்த்ததுடனல்லாது, இருவருமே ரத்னம்மாவைப் பங்கிட்டுக் கொண்டனர். 1992 இல் ராஜமண்டிரிக்கு எல்லாரும் மீண்டும் வந்தபிறகு இருந்த நிலைமையைக் குறித்துச் சலம் இவ்வாறு எழுதியுள்ளார்:

''மாலையில் ராமமூர்த்தியையும் ரத்னம்மாவையும் விட்டு வரும்போது ஒரு நூறு முழத்துக்கப்பால் என் பின்னாலேயே ஓசைப்படாமல் புறப்பட்டு விடுவார் ரத்னம்மா. ராமமூர்த்தி தமது

மாளிகை முற்றத்தருகில் சிலை போன்று நின்றுகொண்டிருப் பதைப் பார்க்க வேண்டும். அவரைப் பார்க்கவே அச்சம் தரும் அதுமட்டுமின்றி அவருள் பொங்கி எழும் உணர்ச்சிகள் எப்போது வெளிப்பட்டுச் சிதறுமோயென...'' இப்படி வந்த ரத்னம்மா சலத்துடன் 'பச்சைப் பாம்பு'க் குடிசையில் அன்றிரவு முழுதும் காலங்கடத்துவாள் போலும்.

ரத்னம்மா காதலைப் பங்கிட்டுக் கொள்வதால், பொறாமை யைப் போக்குவது, நட்புறவைக் காப்பாற்றிக் கொள்வது, தமது சொந்த உரிமைக்கு மற்றெல்லாவற்றையும்விடத் தலையாய மதிப்பளித்து நடந்து கொள்வது என்று சாதனையே புரிந்தார்கள் ராமமூர்த்தியும் சலமும். இந்த அருஞ் செயல் வாயிலாகவே அவர்கள் தன்னுரிமைக் காதல் கோட்பாட்டினை (free love doctrine) உருவாக்கிக் கொண்டார்கள்.

பிரகாசம், கற்பனைக்கவிஞர் கிருஷ்ண சாஸ்திரி இந்தக் கோட்பாட்டிற்கேற்ப நடந்து கொள்ள முயன்றாலும், நடை முறையில் சலம் மற்றும் ராமமூர்த்தியின் நிலைமையைப் புரிந்து கொள்ள வியலாமற் போனார்கள். பிரகாசம் மனைவி சத்யவதிமீது கிருஷ்ண சாஸ்திரி நாள்தோறும் ஒரு பாடலை எழுதிக் கொண்டு வருவாரெனவும், பிரகாசம், கிருஷ்ண சாஸ்திரி, சத்யவதி இம்மூவரின் போக்குத் தனக்கு மிகவும் வேதனையை உண்டாக்கி யிருப்பதாகவும் ராமமூர்த்தி ஓரிரவு சலத்திடம் வந்து முறையிட்டுக் கொண்டாரென, சலம் எழுதியுள்ளார். பிரகாசம் மட்டும் தம் மனைவியை அவ்வப்போது பாதுகாத்துக் கொள்வாராம்!

சலம் 1939 இல் எழுதிய 'அருணா' தொடர்கதையில் விவரித்த காட்சி: பீட்டர் வீட்டில் அருணா, பீட்டர், நாகஸ் என ஒன்று சேர்ந்து புரியும் செய்கை, கணவன் ஜெயராவ் வருகை. இவை நடந்த நிகழ்ச்சிகளின் உருவகமா? இல்லையா, எனும் ஐயத்தை உண்டாக்குகிறது. சமுதாயத்தின் சாதாரண நடைமுறைச் செயல் களின் கண்ணோட்டத்தில் ஆராய்ந்தால்தான் இது தோன்றுகிறது. ஆயின் 1922-24 இல் இத்தகைய நடைமுறைக் காட்சிகள், ரத்னம்மாவை மையமாகக் கொண்டு சலம், ராமமூர்த்தி, பிரகாசம், கிருஷ்ண சாஸ்திரி போன்றவர் வருகையினாலிருந்த நிலைமை இதுவென எளிதாக உணர்ந்து கொள்ளலாம். ராமமூர்த்தியின் மனைவி சந்திரமதி, சலம் மனைவி 'சி' இதற்கெல்லாம் கடுமையாக எதிர்த்துத் தகராறு செய்தனர். இறுதியில் செய்வதேது மின்றிக் கணவர்களின் நடவடிக்கைகளைப் பொருட்படுத்தாமல் இருக்கலாயினர்.

தன்னுரிமைக் காதல் கோட்பாட்டிற்கு இலக்கிய வடிவம் தமது முதல் தொடர்கதையான 'சசிரேகா'வில் (1921 இல்) அளித்தார் சலம். இப்புதுக் கதையை ராமமூர்த்திக்கு சமர்ப்பணம்

செய்தார். அவ்வாறே கிருஷ்ணா சாஸ்திரி தனது 'பிரவாசம்' நூலை எழுதி ராமமூர்த்திக்கே சமர்ப்பணம் செய்தார். முத்து கிருஷ்ணாவும் புதுக்கவிதைகளைத் தொகுப்பாக்கி 'வைதாளி கர்கள்' எனும் நூலாக ராமமூர்த்திக்குச் சமர்ப்பணம் செய்தார்.

கிருஷ்ண சாஸ்திரியின் சமர்ப்பணம் பாடல்களில் ராம மூர்த்தியை விவரித்திருக்கும் பாங்கு, அன்று அவர்க ளிடையிலிருந்த நட்புறவுக்குப் பெரும் சான்று:

"ஓ மனித மாணிக்கமே, ஓ ராமமூர்த்தியே!
அமிழ்தினுமினிக்கும் காதற்சிகரமே!
அன்பெனுமரசோச்சும் பேரரசே! நட்பின் சீலமே!
நின்னிதயத்தில் நல்லாட்சி செய் ரத்னாகர
ராமூ, காதற் பெருஞ் செல்வ முடையோய்!
...
இத்தகைப் பிழைப்பு இனியுனக் கொப்பதே,
என்னுச்சமே! உச்சமே!"

'ரத்னாகர ராமூ' சிலேடையில் ரத்னம்மா கண்முன் நிற்கின்றாள்!

சலம் இளமையிலிருந்தே தீவிர உள்ளத்துணர்வுகளைக் கொண்டவர். தந்தை செய்த கொடுமை, வீட்டில் கடைப்பிடித்த கடுமையான செயல் முறைகள், கட்டுப்பாடுகள் ஆகியவற்றால் வெளியுலகப் போக்குகளில் மனம் திரிந்து, சமுதாயத்தின் நீதி நெறிச் செயல் முறைகளைக் குற்றங் கூறி, உண்மையான நெறிகளுக்கான திட்டமமைத்துக் கொள்ள வேண்டுமெனச் சலம் எப்போதோ உறுதிபூண்டிருந்தார். அதற்குத் தமது செயல்பா டுகளை வெளிப்பாடாக நடத்திக்காட்டலானார். இத்தகைய தேடும் நாட்டத்தில் பிரம்ம சமாஜத்தினரின் கொள்கை நெறிகள், ஆக்கப்பணிகள் முதலில் அவருக்கு உயர்வாகத் தோன்றின. ஆனால் அந்த சமாஜம், செயல்முறைகளில் அவருடைய தீவிரமான போக்குக்கு ஈடுகொடுக்க இயலாக் குறை பாடுள்ளனவாகத் தோன்றின. இந்நிலையில் ரத்னம்மாவின் ஈர்ப்பு, அவருடைய தொடர்பு, ராமமூர்த்தியின் நட்பு ஆகியவை அவரிடத்தில் பெரிய மாற்றங்களைக் கொண்டுவந்தன. அவரை பிரம்ம சமாஜத்திலிருந்து விலக்கியாயிற்று. இதனைக் குறித்து, சலம் 'தன் வரலாற்றில்' இவ்வாறாக எழுதியுள்ளார்: "என்னதான் முயன்றும் காதல் களியாட்ட நாட்டத்திலிருந்து இது நாள்வரைக்கும் வெளியேறி வெற்றிபெற வியலாமற் போனேன். அதுவே இல்லாமற்போயின் நான் பிழைப்பதே எதற்கு! ஒரு பெண்ணுடன் சில நாட்கள் நட்புறவு கொண்டிருந்தால், என்னுள் உள்ள காதல் ரசனையும் ஆர்வமும் குறைந்து மேலும் ஈர்க்கவியலாமல் போகும். அப்போது இன்னும் ஒரு புதிய காதல் தொடர்புக்கென மனம் துடித்துக் கொண்டிருப்பேன். இது, இது உயர்வான காதலாகாது. பெண்டிரிடமிருந்து எனக்கு

அத்தனையாண்டுகளாக இந்தப்பாசம் இருந்து கொண்டேவந்தது. எவ்வளவு காதல் மயக்கத்திலிருந்தேன். அவை கனவே...ஆனால் அதே கனவுதான்... ஆனால் காதல் சுவை காமவெறியில் முடிவுறுவதால் பாவமெனத் தோன்றுகிறது. என்னுள் பரவி ஒளிரும் இறைவனுக்கு வேக உணர்வு மிகுதி எனக் கருதினேன். இந்தக் காதல் ரசனை உணர்ச்சிகளிலிருந்து தப்பித்துக் கொள்ள வேண்டும், வெற்றி கொள்ளவெண்டும், என எத்தனைக் கடுமை யாக முயன்றேன்! மேலும் இது 'சி'க்கு வேதனையானது. ஆனால் சிருங்கார ரசனை இல்லாமல் நான் பிழைத்திருப்பதென்பது கூடாத நிலை எனக்கு. இன்னொன்றிலோ, மற்றெதிலுமோ சுகமுமில்லை, அர்த்தமுமில்லை,. இறைவனை எவ்வளவு வேண்டிக் கொண்டிருப்பவன்... சிருங்காரம் பாவமென்று உண்மையில் இந்த சிருங்கார ரசனையறியாத ஜடங்கள் இத்தகைய பொய்யான கட்டுப்பாடுகளை ஏற்படுத்தினார்களா?... பெண்ணை நினைத்தால் பாவம். மணம் என்று முடித்துவிட்டால், அக்கணத்திலிருந்தே எண்ணங்களில் மட்டுமின்றி, அவள் உடலை ஏது செய்தாலும் புனிதமானது. இதைத் திருமணம் என்கிறார்கள். இப்படி ஆழமான சந்தேகங்கள் மேலோங்கலாயின. முறையாக இந்த ஐயங்களால் என் உள்ளம் படைப்புக்கட்டளைகளிலிருந்து எதிர் மாறாகத் திரும்பியது....'' (தன் வரலாறு, 40,41-ஆம் பக்கம்.)

மேற்காணும் கருத்துக்களுக்குத் தமது முதல் உரையாக்கமான 'சசிரேகா' புதினத்தில் சசிரேகா பாத்திரத்தின் வாயிலாக 1921 லேயே முழு வெளிப்பாட்டையும் அளித்தார் சலம். சசி ரேகாவாகப் பேசி, பிரம்ம சமாஜ உறுப்பினரான நவஜீவன தாசுடன் செய்வது சலமே என நமக்குக் காணப்பெறுகிறார். சிருங்காரம் இயல்பான செயல்பாடு மட்டுமன்று, தெளிவாக அது தனது 'அறிவின் உரிமை'யெனவும் வாதம் புரிகிறாள் சசிரேகா. ஆயினும் சிருங்காரத்திற்கெனத் தனது முழு உரிமையை மணவினைக்கட்டுப்பாட்டுக்கென இழந்துவிடுவதை அவள் மறுத்தெதிர்க்கிறாள். அவளுக்குக் கிருஷ்ணனுடனுள்ள தொடர்பு இளமையிலிருந்தே மலர்ந்து வந்த 'நட்புறவெ'ன்றும், சுந்தர ராவுடனான தொடர்பு 'மோகம்' எனவும் ராமாராவின் மீதான ஆழ்ந்த பற்றுதல், 'காதல்' எனவும் சலம் அத்தொடர்கதையில் வலியுறுத்தி விளக்கியுள்ளார். அதன்பிறகு 'ஸ்திரீ' எனும் நூலில் கூடக் காமத்துக்கும் மோகத்துக்கும் காதலுக்கும் உள்ள வேறுபாடுகளை இவ்வகையாகவே வலியுறுத்திக்காட்டினார். சலத்தின் பார்வையில் அழகு உணர்வு இல்லாத, வெறும் உடலுறவுக்கான காமம் விலங்குத் தன்மையானது, கீழ்த்தரமானது. மோகம் அழகினை ஆராதிப்பதுடன் கூடி முடிந்த மனிதனின் இயல்பான வெளிப்பாடு. அதற்குச் சமுதாயம், திருமணச் சடங்கு குறுக்கிடலாகாது. மோகம், பிரேமை எனில் சௌந்தர்ய சம்பத்தின் ஆனந்த நிலை மிகுந்து வரும் உயரிய

வெளிப்பாடு மட்டுமே. இதனை நிறைவேற்றிக் கொள்ள வேண்டுமெனில் ஒருவர் தனது உரிமையை, ஒரு நடைமுறையைக் கட்டுப்பாடுள்ளதாகச் செய்ய வேண்டுமென்பது சமுதாயத்தின் நோக்கம். இவ்விதம் நடைமுறைக் கட்டுப்பாடு செய்வதென்பது, அழகின் ஆழமான ஈர்ப்பு எத்தனை வகையாக மாறுமோ, எத்தனை தோற்றங்களைப் பெறுமோ, எத்தனைப் புதிய பற்றுக்களை நிலைபெறச் செய்யுமோ என அதன் வளர்ச்சி மாற்றங்களைச் சிதைக்கச் செய்வதாகுமன்றோ. அதனால் தனிநபர் உரிமைக்கே மற்றெல்லாவற்றைக் காட்டிலும் தலையாய மதிப்பு. அதன் பின்னரே அழகுணர்வின் ஆற்றல், ஈர்க்கும் மோகம், கவரும் பிரேமை. சசிரேகை ராமாராவினைக் காதலித்து ஆழ்ந்து நேசிக்கலானாள். அனால் அக்காதலுக்காகத் தனது உரிமையை, செயல்களை ஈடுவைத்து அவனை மணம்புரிந்து கொள்வதை மறுத்துவிட்டாள். ராமாராவ், சமுதாயம் மற்றும் அதன் கட்டு திட்டங்களற்ற தொடர்பு கொள்ள ஒப்புக்கொள்ளாமற் போனமையால் அவள் தற்கொலை புரிந்து கொண்டு செயலற்று இறந்தழிந்தாள். சலத்தின் உரிமைக் காதல் கோட்பாட்டு உருவகமிது.

சிருங்காரத்தில் தனிநபர் உரிமை என்றதும் விரும்பும் நபரின் விருப்பம் மட்டுமின்றி, விரும்பப் பெறும் நபரின் உரிமை, அதாவது அந்நபரின் விருப்பு வெறுப்புகளுக்குத் தலையாய இடமளிக்க நேர்கிறது. ஒரு நபரின் தன்னுரிமைச் செயற்பாடு மற்றொருவரின் தன்னுரிமையைக் குறைக்கச் செய்வதோடு மட்டுமின்றி அதற்குக் கட்டுப்படச் செய்வதும் நேர்மையாகாது. இந்நெறிக்குக் கட்டுப்பட்டு, சலம் தம் வாழ்க்கையை வரையறைக்குள்ளாக்கியமையாலேயே, அவருக்கு எத்தகைய அமைதியின்மையும் துயரங்களும் எதிர்ப்படலாயின. அவற்றை 'அமினா' புதினத்தில் (1924-42) சலம் ஓவியமாக்கியிருந்தார். சலத்தின் மனைவி 'சி'யுடன் அண்ணியாகிய 'மன்னி'யுடனும் காதல் கொண்டவாறே, உடலழகு நட்புறவுக் காரணங்களினால் தம்மைக் கவர்ந்தீர்த்த பிறபெண்களுடனும் தயக்கமின்றித் தொடர்பு வைத்துக் கொண்டவரானார். இத்தொடர்புகளுக்கு உடல் ஒரு தடையாகாது அல்லது தேவையுமில்லை! தனிநபர் உரிமை ஒன்றே இதற்கு அடிக்கல்!

சலத்தை ரத்னம்மா எவ்வளவு கவர்ந்தாளாயினும், சலம் தமது உரிமையை, தாமே உருவாக்கி அமைத்துக் கொண்ட நெறியை ஓயவிடவில்லை. ராமமூர்த்தி, சலத்தின் தனிநபர் உரிமைக்காதல் கோட்பாட்டிற்கு உடன்பாடு தெரிவித்தார். ஆனால் சலத்திற் கிருந்த அழுத்தமான உள்ள உறுதி, உரிமையின் மீது, அவர் வாழ்க் கையின் மீது சலத்திற்கிருந்த பற்றுதல், ராமமூர்த்தியிடமில்லை. அவர் முழுவதுமே ரத்னம்மாவுக்குத் தம்மை ஒப்படைத்து

விட்டிருந்தார். தமது நண்பர்களனைவரையும் நேசித்தார். ரத்னம்மா 1927 இல் ஜெயந்தி சுப்ரமண்யம் எனும் டாக்டர் ஒருவரை மணம் புரிந்து கொண்டாள். அது ராமமூர்த்தியின் காதலுக்கும் நம்பிக்கைக்கும் கோடரி கொண்டு பிளந்தாற் போலானமையால் தாங்கவொண்ணாத ராமமூர்த்தி தற்கொலை புரிந்துகொண்டு மரணமடைந்தார். தான் இறக்குமுன் ராமமூர்த்தி எழுதிய கடிதம் சலத்துக்கு மிகவும் வேதனையளித்தது. அக்கடிதத்தில் ராமமூர்த்தி சலத்துக்கு அளித்த செய்தி:

''இருக்கட்டும், இறக்கட்டும், நீ செய்யும் நல்ல பணி ஆண்களுக்கும் பெண்களுக்கும் ரத்தம் சதை இருந்தாலும் இதயம் இருக்கும் நாட்களில்தான் உன் புத்தகங்கள் வாழும். அதன்பிறகு கூட...

''துயரப்பட்டுக் கொண்டிருக்கும், போராடிக் கொண்டு இருக்கும் பெண்கள் எல்லாருக்குமே கண்ணீர் விட்டவாறு இறந்து போகின்றேன். எப்போதும் போலவே அவர்களுக்கு உதவிபுரிந்துவா.

''வாழ்க்கையில் எனக்கு எந்தப் பணியுமிருப்பதாகத் தோன்ற வில்லை. குறையோடு கிழவனாகிக் கிழே மிதிபட்டு வாழ எனக்கு விருப்பமில்லை. நீயோ கலைமேதை. வாழ்நாட்களுக்கும் மேலாக நெடுங்காலம் வாழ்ந்திருக்க வேண்டும் நீ.....''

சலம் உள்ளக்கிடக்கையின் விளக்கம்: ''என் பாவமெல்லாம் நான் அனைவராலும் காதலிக்கப்படவேண்டும் என்ற ஆசைதான், என்றார் ராமமூர்த்தி. இதை விட அச்சம்தரும் பாவத்தை அறியாது உலகம். ராமமூர்த்தீ! உனது மரணம் தோல்வியாகாது என, சமுதாயத்தின் மீது மட்டுமல்லாமல், மனித இயல்பின் மீதும் சாக்காட்டின் மீதுமான வெற்றிமுரசம் என்று கூறுவதற்காகவே மிச்சமாக இருக்கிறேன் நான்.''

1921-24 ஆம் ஆண்டுகளில் சலம் தனிநபர் உரிமைக் காதல் கோட்பாட்டினை உருவாக்கிக் கொண்டு தம் கொள்கையாகப் போற்றிய காலத்தில், அவரின் மனநிலையைக் குறித்து, 'தன் வரலாறு' நூலில் இவ்வாறு எழுதினார்:

''நான் தெய்வத்திடம் பக்தி கொண்டிருந்த நாட்களிலும் மற்றெல்லாவற்றிலும் அவர்தான் எனக்குப் பற்றுக்கோளாவார். அவரே சரணாகதம். அவ்வீஸ்வரனைப் பற்றி எப்போது சந்தேகங்கள் தோன்றினவோ, அன்றிலிருந்து பெண்களே என் தெய்வமாயினர். பெண்ணினிடத்தில்தான் என் வாழ்க்கைப் பேறு இருந்தது... என்னை, என் துயரங்களை, என் நோக்கங்களை, என் விருப்பங்களை என எல்லாவற்றையும் அவள் ஒருத்தியே தீர்க்க வல்லவள். அவளுடைய காதலை ஏற்கப் பெற்றநாளே நான் பெரிய பாக்கியவானாகிறேன். ஆனால் என் புத்தி தடுமாற்றம் என்

மனமும் இதயமும் ஒருத்தி மீதே நிலைத்திருந்தாலும், சென்னையிலுள்ள 'மன்னி'யை நினைத்த மாத்திரத்தில் என் மனம் தன்னை மறந்து விடுகிறது. இதற்கிடையில் யாராவது என் பக்கமாகக் கையசைத்தாலும், என்னைப் பார்வையால் கவர்ந் தாலும், நிலை கொள்ளாமல் அவளருகில் விரைந் தோடுவேன். இந்தத் தடுமாற்றத்தினால் என் உளமார்ந்த காதலுக்குக் களங்க மேற்பட்டதில்லை. இந்த இனிய மகிழ்ச்சியை அடைய எனக்கு மிகுந்த ஏக்கம். இந்தவகைக் குணத்துடனேயே என் வாழ் வெல்லாம் போராடினேன். இன்றைக்கும் போர் புரிந்து வருகிறேன். ஆனால் என்னை விட்டகலாது அந்தக் குற்றம். அதனால் எத்தனைச் சிக்கலில் இறங்கிவிட்டேன். சகிக்கவியலாத சூழ்நிலைகளை எதிர்க்க நேர்ந்தேன். (தன் வரலாறு, 87,88 ஆம் பக்கம்)

1921-24 ஆம் ஆண்டுகளில், ராஜமண்டிரியில் சிந்தாதீட்சிதர் சலத்தின் உடன் பணிபுரிந்தவர். அவருடைய நட்பு சலத்தை இலக்கிய அரங்கத்திற்குக் கொண்டு செல்லத் துணைபுரிந்தது. புத்திலக்கியக் கழகக் கவிகளின், கதாசிரியர்களின், நாடக ஆசிரியர்களின் தகுதி சலத்துக்கும் உண்டாயிற்று. கோதாவரிக் கரையில் சலம் குடியிருந்த வீட்டுக்கருகிலேயே 'சித்ராங்கி மேடை' இருந்தது. ராஜராஜ நரேந்திரன் தனது மகனான சாரங் கதரனுக்கென எண்ணியிருந்த சித்ராங்கியைத் தானே மணம் புரிந்தமையால் நேர்ந்த நிலைமைகளில், சித்ராங்கி சாரங்கதரனைத் தன் மாளிகைக்கு வரவழைத்து, காதலை வெளிப்படுத்தவும், அது மறுக்கப்படவும், பழிவாங்கக் கருதி அரசனிடம் குற்றம் புரிந்தானென முறையிட்டு, அவனது கை, கால்களை வெட்டிவிடுமாறு செய்ததாக ராஜமண்டிரி நகரத்தைக் குறித்த ஒரு வரலாறு புகழ்வாய்ந்த நாடகமாக ஆந்திரநாட்டில் பரவலாகத் தெரிந்திருந்தது. அக்கதையைத் தொடர்காவியமாகத் தமது அனுபவ ஆற்றலால் இயற்றி, புரட்சிகரமான நாடகமாகச் சலம் உருவாக்கியமைத்தார். மூன்று நாட்களுக்குள்ளாக, அந்நாடகத்தை எழுதத் தொடங்கி, ஞாயிறன்று இரவு முடித்து, இரவோடு இரவாக ஊரில் தீட்சிதர் வீட்டுக்குச் சென்று, தமது 'சித்ராங்கி' நாடகத்தைப் படித்துக் காட்டினார் சலம். தீட்சிதர் மகிழ்ச்சி பொங்க அக்கதையைக் காவியமாக்கத் துணை புரிந்ததாகத் தெரிவிக்கிறார் சலம். அக்கதையை தீட்சிதரே 'சாஹிதி' பத்திரிகைக்கு அனுப்பி, சலத்தை வாசகர் உலகுக்கு அறிமுகமாக்கி வைத்தார்.

சிறுவயதிலிருந்தே புராணங்களிலும் கதைகளிலும் இருந்த விருப்பத்தினால் சலம் தெலுங்குக் காவியங்களை மாணாக்கப் பருவத்திலேயே படித்தறிந்திருந்தார். வேதம் வேங்கடராய சாஸ்திரியின் 'பிரதாபருத்ரீயம்', குருஜாட அப்பாராவின் 'கன்யா

சுல்கம்' ஆகியவை அவரை மிகவும் கவர்ந்த நாடகங்கள். அந்நாடகங்களின் கதைப்பாத்திரப் படைப்புக்களையும் ஏற்றுச் செய்தார். 'கன்யா சுல்கம்' கதையின் நடைமுறை மொழி, அதன் உரைநடை தம்முள்ளத்தில் நிலைத்த முத்திரையாகப் பதிந்த தென்று சலம் சொல்லிக் கொள்வார். முதல் உரையாக்கங்களில் சிலவற்றை எளிய நடையில் எழுதினாலும், (சசிரேகா), தீட்சிதலுவின் பழக்கமுண்டான பிறகு, கிடுகு ராமமூர்த்தியின் கண்கூடான எளிய நடை மொழிப்புரட்சிச் செயலைக் கேட்டறிந்த பிறகு, சலம் உயிர்ப்புள்ள வழக்குறு மொழியிலேயே தமது உரையாக்கங்களைப் படைத்தார்.

சலம் உரையாக்கங்கள் மாற்றங்களைத் தோற்றுவித்தன. ''என் கதைகளின் வாயிலாகத் தாக்கிய அடிகள் எவரும் எதிர்த்துப் பேசவியலாதவாறு, உடலை நிமிர்த்தத் தொடங்கியது தெலுங்கு வாசகர் உலகம். அதன் ஓசை எனக்குக் கேட்டுக் கொண்டே இருக்கிறது.... விரைவிலேயே அவ்வாசகர்கள் என்னைச் சுற்றிச் சூழலானார்கள். எனது சொல்நடை உயர்வானதெனவும் அதனை ஒவ்வொருவரும் பின்பற்ற வேண்டுமென எதிர்பார்த்தார்கள்... முயன்று என்னுடன் பழக்கம் கொண்ட இளைஞர்கள் நான் எழுதிய சிருங்காரம் மற்றும் என் புரட்சிக்கருத்துக்களுக்கு, அவற்றைக் கடைப்பிடிப்பதற்கு மறுக்க வியலாமல், இகழ்வாகப்பேசி, அச்சமடையச் செய்பவர்களின் தாக்குதல் களைத் தாளவியலாமல், கலக்கத்துடன் பயந்து என்னை விட்டு ஓடலானார்கள்... ஏதாவது ஒரு பத்திரிகை என் கட்டுரைகளை வெளியிடத் தொடங்கினால், அன்று முதலே அதன் புகழ் பரவலாயிற்று. கிருஷ்ண சாஸ்திரி, நண்டூரி, தீட்சிதலு ஆகியோரன்றி பிற கட்டுரையாசிரியர்களில் ஒவ்வொருவரும் காரணம் காட்டவியலாத பகைவரே... பெண்களைத் துன்புறுத்தி வாயில் திணித்துக் கொள்பவர் மீதுதான் என் தாக்குதல். என் புரட்சிப் போருக்குத் துணையாயிருந்தது என் கலைத்திறமை... நான் காணும் கனவுகள் அனைத்தும் கூடுமானவரையில் கதைகளிலும் நாடகங்களிலும் எதிரொலிக்குமாறு செய்தேன். எனது சிருங்கார ஆராதனை, அழகின் மீதான ஆவல், மற்றும் என் விருப்பங்களனைத்தையும் அவ்வுரையாக்கங்களில் கூறி யிருந்தேன். என் வாழ்க்கைக்குத் தலையாய கூறு அர்த்தமற்ற அமைதியின்மை. கனல் தெரிக்கும் உள்ளக் குமுறல். எதையோ எட்டிப்பிடித்தாக வேண்டுமென்ற கடுமையான எரியும் தீ....'' (தன் வரலாறு, பக்கம் 102,103.)

தன்னுரிமைக் கோட்பாட்டின் வெளிப்பாடு சலத்தின் உரையாக்கங்களில் இருமுகமாகக் காட்சியளிக்கின்றது. திருமணச் சடங்கு முறைகளிலுள்ள கேடுகள்; கற்பனையின் வெளிப்பாடான உயர்ந்த நோக்கமும் வேட்கையும் (romantic feelings and quest).

பெண்ணுரிமையையும் பாலுறவு உரிமையையும் ஆதரித்து வாதிடும் சலம் மற்றும் அவரது உரையாக்கங்களினால் கவரப் பெற்றுச் சலத்துக்கு உடன்பாடான பெண்கள் எத்தனையோ பேர். தமது தீவிரவாதம், மாறுபாடான கொள்கையின் விளைவாக ஒரு புறமும், பிரம்மசமாஜத்தின் வாயிலாக விளக்கப் பெற்றமையால், சமுதாயத்துக்கு மீளவும் ஏற்புடையதென ஆனது மட்டுமின்றி, அதன் மீது சொல்லத்தகுந்த அளவு வெற்றியுடன் செயல்புரியவும் செய்தார் சலம். சமாஜத்தில் அவருடன் ஒருமித்த கருத்து இல்லாமற் போயினும், சமுதாயத்தின் மேல்நிலையிலிருந்த பெருமக்களில் பலர் அவருடைய நண்பர்களாயினர். உரை யாசிரியர் என்ற பெருமை பெறாதவராக இருந்திருப்பின், சலம் வெறும் 'ஸ்திரீலோலனா'கப் பெயர் தெரியாத பேர்வழியாக மறைந்து முடிந்து போயிருப்பார்!

கோதாவரிக்கரை மீது ஒரு குடில் அமைத்து, அதற்கு 'உமர்கய்யாம்' எனப் பெயரிட்டு, அங்கு சலத்தின் நண்பர்கள் காப்பி சிகரெட்டுடன் கூடிக் குழுமி பொழுது போக்கிக் கொண்டு இருக்கலானார்கள். பசவராஜ் எனும் துணைப் பதிவாளரும் அதில் அங்கத்தினர். அவருடைய தோற்றத்தைப் பற்றிச் சலம் 'தன் வரலாற்றில்' நீண்டு விவரித்திருந்தார். வைசியரான பசவராஜ் கடைசியில் கிறிஸ்தவ மாதை மணந்துகொண்டு, சமயச் சொற் பொழிவாளராக மாறிவிட்டார்.

இக்காலத்தில்தான் மன்னி ஹைதராபாத் மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து டாக்டர் தேர்வுக்குப் படித்துக் கொண்டு இருந்தார். விடுமுறை வந்தால் கையில் பணம் இருப்பின் சலம் ஹைதராபாத் சென்று அவரைப் பார்த்துவிட்டு வருவார். அவர் விடுமுறைக்கு இங்கு வந்தால் 'சி' வைக்கும் உணவைத் தாழ்வாரத்திலிருந்தவாறு சாப்பிட்டு, 'பச்சைப் பாம்பு'க் குடிலுக்குச் சென்று சலத்துடன் காலம் கழிப்பார். 'சரணாலயத்தி' லிருந்தும் அத்தை அடிக்கடி வருவார். காலில் அணிய செருப் பில்லாமல் துணிக்கந்தலைக்கட்டிக் கொண்டு வெயிலில் நடந்து வருவார். அவரது துயர நிலைக்கு வருந்தி, மன்னி அவரை ஹைதராபாதில் செவிலியர் பயிற்சியில் சேர்த்தார். சரோஜினி நாயுடுவின் கணவரான மேஜர் நாயுடுவுக்கு மன்னியின் மீதும் அத்தையின் மீதும் தனித்த இரக்க உணர்வு ஏற்பட்டிருந்தது. சலம் மகனான ரவி நோய்வாய்ப்பட்டால் அவரிடம் காண்பிப்பார்கள். நலம் பெற வாய்ப்பில்லாத இதயநோய் எனவும், ஐந்தாறு ஆண்டு களுக்குமேல் அவன் பிழைத்திருக்க மாட்டான் என்று அவர் கருத்து தெரிவித்தார்.

புதிய செயல்பாடு

1924 இல் சலம் பதவி உயர்வடைந்ததனால் பந்தருக்கு மாற்றலாகிச் செல்லலானார். அதற்கு முன்னதாகவே தீட்சிதலு

ராஜமண்டிரியிலிருந்து மாற்றலாகிப் போய்விட்டார். பந்தரில் சலத்துக்குப் புதிய நண்பர்கள் ஏற்படலாயினர். இவர்களில் டாக்டர் அஹோபலராவ், வயலின் வித்வான் ஜலகம் சுப்பமண்ய தேவர குறிப்பிடத்தக்கவர். இவர்களுடன் பெரியம்மா சின்னம்மா என அழைக்கப் பெறும் இரு பெண்கள். டாக்டரும் இந்தப் பெண்மணிகளும் பந்தர் கல்லூரியில் உடன் படித்தவர்கள். அதன் பிறகு இங்கிலாந்து சென்று படித்துவிட்டு வந்தவர்கள் அஹோபலராவ் இல்லம் ஓர் ஆசிரமம் போன்றிருக்கும். மேலை நாட்டு நாகரிகம், புதுமையான நடையுடைகளைக் கொண்ட இவர்கள் சலத்தை அன்புடன் வரவேற்று ஆதரித்தார்கள். இவர்கள் செல்வாக்குடன் சலம் அதுவரைக்கும் வாழ்க்கையில் ஏற்படுத்திக் கொண்டிருந்த உறுதிப்பாடுகள் மேலும் வலுவடைந்தன. வயலின் வித்வான் சுப்ரமண்ய தேவரின் தொடர்பினால் சலத்துக்கு இசைப்பயிற்சியில் மிகுந்த ஆர்வம் தோன்றலாயிற்று. ரவி நன்றாகப் பாடுவான் ''என்ன கெடுதி என்னாலே'' என்று ரவிபாடினானென்றால், ரவியின் நோயைப்பற்றியறிந்திருந்த சலம் இதயம் குமுறிப் போவார். டாக்டரோ அப்பாட்டை மீண்டும் மீண்டும் பாடுமாறு அவனை வேண்டுவார். சலம் டாக்டரிடம் ''அவன் களைத்துப் போயிருக்கிறான் டாக்டர்,'' என்பார் தாள முடியாமல். மேலுக்குக் கடுமையான மனிதராகத் தோன்றினாலும் டாக்டர் பெருந்தன்மை மிக்கவர், இரக்கம் மிக்க பண்பாளர் எனச் சலம் விவரித்தார். டாக்டர் 'சித்ராங்கி' நாடகத்தை நடத்திக் காட்டச் சலத்தை மிகவும் ஊக்குவித்தார்.

பந்தரிலிருந்து சலம் அனந்தபுரத்துக்கு 1925 இல் மாற்றலடைந்தார். அங்கிருந்த பொழுது கிருஷ்ண சாஸ்திரி அனந்தபுரம் வருகை, ஹரீன் எனும் ஹரீந்திரநாத சட்டோபாத்யா வுடன் அறிமுகம் ஆகியவை நிகழ்ந்தன. அவர் அக்கறை காட்டினால் ரவியின் நோய் குணமாகும் என்றார்கள். நோய் தீரவில்லை. சலத்தின் நம்பிக்கையின்மையே இதற்குக் காரணம் என்று 'சி' சலத்தைக் குறை கூறினார். அனந்தபுரத்தில் இருக்கும் போது 'சி'க்கு ஹிந்து சமுகத்தினரிடம் மிகவும் தொடர்பு ஏற்பட்டது. பக்த சமாஜத் தலைவரும், தலைவியுமான புத்தா சுந்தரம்மாவும் அவருகற்கு ராஜராஜேஸ்வரி மந்திரோபதேசம் செய்வித்தனர். ரவி நோயினால் மருத்துவசாலையில் சேர்ந்தான். சற்று நலமாகி வீட்டுக்கு வந்த பிறகு ரவிக்காகக் கிருஷ்ண பகவான் பிரார்த்தனையாகத் தொட்டில் ஒன்று செய்யச் செய்து பக்த சமாஜத்துக்கு அளித்தனராம். பன்னிரண்டு வயதான ரவி இசைப பயிற்சியிலும் இசைக்கலை நுட்பங்களிலும் காட்டிய ஆர்வம் போலவே, தந்தையார் அவனுக்கு கற்பித்த இலக்கியத்திலும் மிகுந்த ஊக்கமும் அக்கறையும் காட்டலானான்.

அதிகாரி என்ற வகையில் சலம் அனந்த புரத்திலிருந்து ஏலூர் வந்து சேர்ந்தார். ஏலூரில் கிறிஸ்தவ சமயத்தினருடனும் நவநாகரிக இளமங்கையருடனும் 'சி'க்கு அறிமுகமாயிற்று. நண்டூரி சுப்பாராவ், பிற எழுத்தாளர்களும் வரலாயினர். சலம் இல்லத்திலேயே 'சித்ராங்கி' நாடகம் ஒத்திகை நடத்தினார்கள். ஆண் பெண் இருபாலரும் நாகரிக உரையான 'ஜம்பர்'களை அணிந்திருப்பார்கள். 'மன்னி' கூந்தலைக் கத்தரித்து அழகு முடி வைத்துக் கொண்டார். சலம் கூட 'ஜம்பர்' அணிந்து 'பேண்ட்' போட்டுக் கொண்டார். ஏலூரில் மகான் கொண்டய்யா என ஒருவர் தொட்டாலே நோய் தீர்ந்து விடுமென்று கேள்வியுற்று, ரவியை அழைத்துச்சென்றார். அவர் தொட்டதும் நோயுற்றிருந்த ரவி எழுந்து நடக்கத் தொடங்கினான். ஆனால் அன்று பகலுக்குப் பிறகு எப்போதும் போலப் படுக்கையில் வீழ்ந்தான். சலத்துக்கு ரவியின் நோய் தீராதென்ற உள்ளக் கிடக்கை மிகலாயிற்று.

ஏலூரில் இருந்தபொழுது, 1926 இல், சலம் குடும்பம், அவரின் தாய் தந்தையர் எல்லாரும் சேர்ந்து பூனா சென்றார்கள். அங்கு சலத்தின் தம்பி கோபாலாவுக்குப் பொறியியல் துறையில் உத்தியோகம். பூனாவில் ரவிக்குச் சிகிச்சை செய்தார்கள் பலன் ஏதுமில்லை.

மன்னி ஔரங்காபாதில் ஹவுஸ் சர்ஜன் நேர்முக மருத்துவப் பயிற்சி முடித்த பிறகு, கரீம் நகரில் பணிக்கான ஆணை கிடைத்தது. 'சி' குழந்தைகளுடன் அங்கேயே இருக்க ஏற்பாடு செய்து கொண்டார்கள். அங்குதான் ரவி இறந்தான்! சலத்துக்குத் தந்தி அனுப்பி அவர் வருகைக்காக ரவியின் உடலை மூன்று நாட்கள் அப்படியே வைத்திருந்தார்கள். சலம் வரவில்லை எனவே ரவிக்கு இறுதிச் சடங்கு செய்து திரும்பினார்கள். ரவியின் இறப்பினைக் குறித்து, 'தன் வரலாறு' நூலில் இவ்வாறாக எழுதினார். ''ரவி இறந்து போனான். இறக்கும் தருணத்தில் நான் அவன் அருகில் இல்லை. அவன் பட்ட வேதனையைப் பார்த்தால் எவருக்குமே இவன் எதற்குப் பிழைத்திருக்க வேண்டும், இறந்து போவதே நிம்மதி என எண்ணத் தோன்றும். அவன் இறந்த பிறகு எங்கு செல்வான்? நான் அவனை விட்டு விட்டு இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறேன்? அவனுடைய உடல் தோற்றம் அத்தகையது..... ரவி பிறந்து மறைந்து போனதுடன் என்னுள்ளே ஏதோ ஒன்று அறுபட்டுப் போயிற்று. உண்மையில் எங்கிருந்து மகிழ்ச்சி வாழ்க்கையின் ஜீவனாக வருகிறதோ அந்த நரம்பு அறுந்து போனது....உள்ளூர உண்டாகிவரும் மகிழ்ச்சி அற்றுவிட்டது. என் வாழ்க்கைக்கு அவ்வளவுதான்.... செடியின் அழகு, வானத்தின் வனப்பு, பறவைகளின் ஓசை, தண்ணீரின் குளுமை மற்றெல்லாமும் அவனோடு கலந்து கரைந்து போயிற்று. நான் தனிமையாகி விட்டேன்.... மீண்டும் சௌரீஸ் சற்றுப்

பெரியவளாகி, என்னுடன் சேர்ந்து இக் கனவுலகில் மகிழ்ந்து பங்கு கொள்ளும் வரை நான் தனிக்கட்டையாகி விட்டேன்....'' (தன் வரலாறு, 152-155.)

1929 இல் குண்டூரில் தீட்திதலுவை மறுபடியும் காணலானார். ''ஹிந்து மதத்தைக் கண்டனம் செய்ததில் நான் காணத்தவறிய உண்மைகளைப் பற்றி, என் பார்வையின் வெப்பத்தைத் தணித்து மாற்றம் உண்டாக்குவதற்கு முயன்றவர் தீட்சிதலு,'' என்கிறார் சலம். (தன் வரலாறு, 109). தீட்சிதலுக்கு மதவழிபாடுகள் மீதும் சடங்குகள் மீதும் நம்பிக்கை உண்டு. சலத்தின் நம்பிக்கை யின்மையும் எதிர்ப்புகளும் அவர்களின் நட்பிற்குத் தடையாயில்லை. மாறாக, கருத்து வேறுபாடுகள் அவர்களை மேலும் நெருங்கிப் பிணைத்தன! தீட்சிதலுவின் வேண்டுதலினால் சலம் தமது ஒற்றைத் தலைவலியிலிருந்து நீங்கி நலம்பெறக் கார்த்திகைச் சோமவார விரதமிருந்து, நலமடையாமல் போகவும், அதன் பின்னர் சூரிய நமஸ்காரம் செய்யத் தொடங்கினார். மகள் சௌரீஸைக் கூடச் செய்யச் செய்தார். 1950 வரை சூரிய வழிபாடு நாள்தோறும் செய்து கொண்டு வந்தார், உடல் நலத்திற்காக தீட்சிதலு சலத்தை சுகர்நாடி ஜோதிடம் சொல்லும் ஒரு தமிழரிடம் அழைத்துச் சென்றார். நாடியில் சலத்தின் கடந்த கால வாழ்க்கையெல்லாம் வியப்புறுமாறு பொருந்தியிருந்தது. ஆனால் அவரின் காதல் வாழ்வினைப் பற்றியோ உரையாக்கப் பணிகளைப் பற்றியோ அதில் ஏதும் கூறவில்லை! செய்யும் தொழிலைப் பற்றியும் ஏதுமில்லை! எதிர் காலத்தில் பொன்னும் பொருளும் ஏராளமாகச் சம்பாதிப்பார் என்றிருந்தது. இது சலம் மனநிலைக்கு ஒருப்படாத செய்தி. அனைத்தையும் விட முதலாவதாகச் சலத்தின் புத்திரர் எவரும் பிழைத்திருக்கமாட்டார்களென இருந்தது. 'சாந்திகள் செய்வதென்றால் உனக்கு நம்பிக்கை இல்லை. செய்யவுமாட்டாய், உன் குழந்தைகள் வாழ மாட்டார்கள்' என்று இருந்தது.

இது சலத்துக்கு அழுத்தமான பிரச்சினையானது. சுகர் நாடி ஜாதகத்தில் சொன்ன சாந்திகளைச் செய்வதற்கெனச் சலம் மனைவி 'சி' தொடங்கலானார். தனி நபர் உரிமையில் நம்பிக்கை கொண்ட சலம் அவருக்குத் தடையாக இருக்கவில்லை. ஆனால் தமது கொள்கை என்ன ஆவது? ''கடைசியில், குழந்தைகளின் வாழ்க்கையில் குறுக்கிட எனக்கென்ன அதிகாரமுமில்லை என்று சாந்திகள் செய்ய எண்ணினேன். அவற்றில் ஒன்று ராமேஸ்வரம் ருகில் சேதுவில் ஸ்நானம் செய்வது, நாங்களனைவரும் சேதுவுக்குச் சென்று அங்கு ஜாதகத்தில் சொல்லியிருந்தவாறு சாந்திகளைச் செய்துவந்தோம்... என் குழந்தைகள் எவரும் இறக்கவில்லை. மேலும் எனக்கு எத்தனையோ குழந்தைகளாகி விட்டனர்....'' (தன் வரலாறு, 112.)

தாம் கடவுள் மறுப்பாளரெனக் கருதியிருந்த சலத்துக்கு ஜாதகம் ஜோதிடத்தில் நம்பிக்கை ஏற்பட்டது. இவ்விரு நிலைக்குமிடையில் ஒரு உடன்பாடு மேற்கொள்வதற்கென சலம் முயற்சி செய்தார். ''ஜாதகங்கள் மனிதர் கையில் ஏதுமில்லை யெனவும், எல்லாம் இதுவரைக்கும் வரையறுக்கப் பெற்றுவிட்ட தெனவும் உறுதிசெய்கின்றன. இந்த ஜாதகங்கள் உண்மையானால் பாவ புண்ணியங்களும் உள்ளன. அவற்றின் பெரிய பட்டியலும் உள்ளது எமன் கையில். எனவே இறைவன் உள்ளானா? இருப்பின் இவ்வுலகம் இப்படி இருக்குமா? இந்தச் சந்தேகமும் இந்தக் கேள்வியும் என்னை நெடுங்காலம் உறுத்திக் கொண்டிருந்தன. (தன் வரலாறு, 113)

''இன்றைக்குப் பெரிய பெரிய மேதாவிகள், வெளிப் படையான கடவுள் மறுப்பாளர்கள்....கிடைத்த விஞ்ஞானத் துடன் தமது நம்பிக்கைகளை ஒப்பிட்டுக் காண நேராமற்போயின், தமது அஸ்திவாரம் எங்கு உடைந்து தகர்ந்து போகுமோ என்ற பயத்துடன், எந்த வித ஆராய்ச்சியும் செய்யாமல் இவையெல்லாம் மூட நம்பிக்கைகள் என்று அடித்துப் பேசிவிடுகிறார்கள். இனி, இறை வழிபாட்டாளர்கள்... ஒரு சிறிதாவது சிந்தித்துப் பார்க்கச் சொன்னால் எரிந்து விழுகிறார்கள்.... தெளிவாவது என்ன வென்றால்... மனித வாழ்க்கையில் சில தலையாய நிலை களாயினும், தலையாய பொருள்களாயினும் இதுவரைக்கும் உறுதி செய்யப் பெற்றுள்ளதெனலாம்.... நாடி சாஸ்திரத்தின் படி இன்றுவரையும், இன்னும் பிறக்காதவனின் வாழ்க்கைச் சிறப்புகள் பல்லாயிரமாண்டுகளுக்கு முன்னரே எவரோ காணநேர்ந்தது, அவற்றை விளக்கிப் பனையோலைகளில் எழுதி இருக்கச் செய்தனர்''. (தன் வரலாறு, 114-115)

சலம் குண்டூருக்கு வந்திருந்த ஒரு மகானிடம் யோகாசனங் களைக் கற்றுக் கொண்டார். உணவுக் கட்டுப்பாடுகளைக் கடைப் பிடித்தார். ஆயினும் தமது உடல் நலக்குறைவு தீர்ந்தபாடில்லை. சில ஆசனங்கள் அவரது உடல் நலம் பேண அன்றாடச் செயல் முறையாயிற்று.

1930 இல் மன்னி விஜயவாடாவில் டாக்டராகப் பணியில் நிலைத்ததுடன், சலம் மனைவியும் குழந்தைகளும் அங்கேயே நிலையாக வசிக்கலாயினர். சலம் மட்டும் பணியின் பொருட்டு ஊர் திரிந்து கொண்டிருந்தார். 1950 வரை இந்த ஏற்பாடு நிறைவேறிவந்தது.

விஜயவாடாவில் குடியமைத்துக் கொண்டபிறகு சலம் மனைவி 'சி' எனும் ரங்க மாலதீபாய், சலம் அண்ணி, 'மன்னி' டாக்டர் ரங்கநாயகம்மா இருவரும் சுதந்திரப் போராட்டத்தில் மிக்க ஆர்வமுடன் பங்கு கொண்டனர். அவ்வாறு நகரத்தில் புரட்சியாளர் பெருமக்களுடனும் பிறருடனும் அறிமுகம்

ஏற்படுத்திக் கொண்டனர். மாலதீபாய் இன்ஷூரன்ஸ் ஏஜெண்ட் பணியிலும் இருந்தார். அதோடு அவர் நகராட்சி உறுப்பினர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப் பெற்றார், 1931இல் நரசாரால் பேட்டையிலிருந்து சலம் 1931 ஜனவரியில் விஜயவாடாவுக்கு மாற்றம் பெற, மனைவி, அண்ணியின் செல்வாக்கைப் பயனுறச் செய்தார். சலம் தம் உடைகளில், பேச்சில், நடத்தையில் பொறுப் பில்லாமல் முறையான ஒழுக்க நெறிகளுக்கு மாறுபட்டவராகவு முள்ளார் என்ற பழிகளைப் போக்க மனைவி மாலதிபாய் கணவரது அலுவலகத்துக்குச் சென்று, தம் கணவரின் சார்பாக, அவர் ஒழுக்க விதிகளுக்குட்பட்டு நடந்து கொள்வார் என்று உத்தரவாதம் கொடுத்துவிட்டு வந்தார். ஜனவரி பன்னிரண்டாம் தேதி கடிதத்தில் இந்தச் செய்தியைச் சலம் தீட்சிதலுக்கு எழுதியிருந்தார்.

சுதந்திரப் போராட்டத்தில் சிறை செல்வதைப் பற்றித் தமக்குள் ஏற்பட்ட மனவெழுச்சிகளைக் குறித்து, சலம் தீட்சிதலுக்கு இவ்வாறு எழுதினார்: ''வெறும் சொற் பொழி வாற்றுவதும், சிறைக்குச் செல்வதும் மிகப் பெரிய வீரச் செயலாகி விடாது. ஆனால் மக்கள் மடிந்து கொண்டிருக்கிறார்கள். நான் இறப்புக்கு அஞ்சுபவனல்லன். ஆனால் இறக்க வேண்டு மென்பதில்லை. வாழ்க்கையில் ஆசையுண்டு எனக்கு... போராட்டத்தில் சாவதற்குக் கோழைத்தனமானவன் எனக் கருதுவது கோழைத்தனமல்லவா? அங்கு போய் நாட்டுக்கு நான் செய்யக்கூடிய உதவியை விட செல்லாமலிருப்பதால் என்னைச் சார்ந்தவர்களுக்குச் செய்யும் உதவி மிகவும் அதிகம்... எனக்கு உவகையூட்டிய காதல் எண்ணம் அன்று இல்லை. கோழைத்தன மானவனென என்னை நான் நிந்தனை செய்து கொள்வதனால் உண்டாகும் வேதனை...''(மே இருபத்தைந்தாம் தேதிய கடிதம்.) சங்கத்திலிருந்து விலகிவந்த பிறகு சமுதாயச் சீர்திருத்தத்தில் ஈடுபட்டிருந்தால் நன்றாயிருந்திருக்குமோ என்ற நினைப்பு வந்தது சலத்துக்கு இதுவே முதல் தடவையும் கடைசியானதும் கூட. சலம் தனிநபர்வாதி. கூட்டத்தில் சேர்ந்து கொள்வது அவருடைய அடிப்படைக் கோட்பாட்டிற்கே மாறுபட்டது.

நம்பிக்கை-சாதனை

1931-50 ஆம் ஆண்டுகளில் சலத்திடம் வந்த மாற்றங்கள்: கடவுள் மறுப்புக் கொள்கையாளர், தன்னுரிமைக் கோட் பாட்டாளர், அழகினை ஆராதிப்பவர் எனப் பெயர் பெற்ற சலம் ஸ்ரீ ரமண மகரிஷியை பகவானாகவே நம்பிப் போற்றி, அவரை அணுகி இறைவனே கண்கூடாகத் தோன்றியிருக்கிறார் என்று அருணாசலத்துக்கு அவ்வப்பொழுது செல்லலானார். இது உள்ளார்ந்த மனமாற்றமேயல்லாமல், எத்தகைய செயல்முறை களிலும் நிகழ்ச்சிகளிலும் உலகாயதமான நடவடிக்கைகளில் சலம்

தம் வாழ்க்கையிலான பெருமைகளைக் காட்டியவராகத் தோன்ற வில்லை. இவ் இருபதாண்டுகளில் சலம் தீட்சிதலுக்கு முறையாக எழுதிவந்த கடிதங்களில் நமக்கு, சலம் அவர்களின் மொத்தமான நிலைமையைப் படிப்படியாக வெளிப்படக் காணலாகிறது. அவ்வப்போது எழுதிய இக்கடிதங்கள் சலம் 1973 இல் எழுதின 'தன்வரலாறு' நூலைவிடத் தலை சிறந்தனவாகவும் விரும்பி அறிந்து கொள்ளக்கூடியனவாகவும் காணப்பெறும், நாம் ஆராய்ந்து பார்த்தால்.

தாம் கடவுள் நம்பிக்கை இல்லாதவராயினும் ஜாதகங்களை நம்பாமலிருப்பதற்கில்லை எனச் சலம் தெளிவாக்கியுள்ளார். தீட்சிதலுக்கு எழுதிய கடிதங்களில் சுகர் நாடி ஜாதகத்தில் தமது புதல்வர்கள் இறந்து போவார்கள் எனவும், தமக்கு சாந்தி போன்ற சடங்குகளில் நம்பிக்கை இல்லாமல் அவற்றைச் செய்யாம லிருந்துவிட்டால் குழந்தைகளனைவரும் செத்துப் போவார் களென எழுதியிருந்ததைக் கேட்டபிறகு, ரவியின் மரணம் உண்டாக்கிய சோகத்துடன் தைரியத்தை இழந்துவிட்ட சலம், சம்பிரதாயம் விதிக்கும் சாந்திகளைச் செய்வதற்கு நிச்சயம் செய்து கொண்டார். அதற்காகக் குடும்பத்துடன் முறைப்படி ராமேசுவரம், சேது சென்று தரிசித்தார். சுகர்நாடியில் சொன்னவாறு 'எள்வேள்வி' செய்து சாந்தி நடத்தினார். ராமேசுவரம் சுற்றுப் பகுதியில் ராமபிரானின் வரலாறுகளிலுள்ள சிற்பக்காட்சிகளைக் கண்டு, ''ஸ்ரீ ராமரென்பவரே இல்லாமற் போயிருப்பின், இத்தனை பெரும் பொய்யை இத்தனை கோவில்களும் சிலைகளும் சிற்பங்களகக் காட்சி பெற வைத்திருக்க முடியுமா என்ற சந்தேகம் தோன்றுகிறது,'' என ராமனின் அஸ்திவாரத்திலே நம்பிக்கை அரும்பியதைக் காட்டினார். ஆயினும் இடையில் ராமன் மீது பக்தி வந்து விட்டதாகாது! ''அவரின் ஏக்கம் எனக்குப் புரிகிறது, அவர் மனைவிக்காக. ஏன் அடிக்கடி மாறும் என் முடிவில்லாத பெண்துணைகளுக்கு, என்பது போல.'' (மே 25, 1934 கடிதம்.)

'அடிக்கடிமாறும் பெண்துணை' என்பது பேச்சுக்காகவன்று. சலம் அவ்விருபது ஆண்டுகளில் தமக்கு இசைந்த பெண்களுடன் தன்னுரிமைக்காதலைத் தடையின்றி நிகழ்த்திவந்தார். 1933 ஆகஸ்ட் பதினோராம் நாளைய கடிதத்தில், ''மூன்று மாதங்களுக்கு முன்தான் நான் ஒரு பெண்ணைக் கடத்தியதற்காக நீதி மன்றம் நடவடிக்கை எடுக்கும் சூழ்நிலையிலிருந்து மிகக் குறைந்த வாய்ப்பினால் தப்பிக்கவானேன்.'' அதாவது, வயதுக்கு வராத ஒரு காதலியைப்பற்றிக் குறிப்பிட்டிருந்தார், 1933 நவம்பர் பதினோராம் தேதிக் கடிதத்தில், 'விடுமுறைபெற்றுக் கொண்டு வாருங்கள். எவரும் புதிய பெண்களாக இல்லை என்னிடம் இப்போதைக்கு. ஆனால் எதிர்பார்க்கிறேன். வந்தாலும் உங்களுக்குத் தொல்லை கொடுக்கவிடமாட்டேன் அவர்களை' என்றார் தீட்சிதலுவை

வரவேற்று. 1934 நவம்பர் பதினோராம் தேதிக் கடிதத்தில், ''கசிகிரியில் வேடிக்கையான நிகழ்ச்சி. எனக்குப் பழக்கமில்லாத உயர் நிலைப் பாடசாலைப் பெண் ஒருத்தி நள்ளிரவில் என் வீட்டுக்கு வந்து, என்னை எழுப்பி, தன்னைக் காதலிக்க வேண்டினாள். ஒரு கனிவான பெண்! எவ்வளவு உணர்ச்சிமிக்க ளாயிருந்தாள் அவள்!'' அதே கடிதத்தில், ''இப்போதெல்லாம் ஸ்பென்சரில் குடிக்கிறேன், அளவுக்கு அதிகமாக. ஆனாலும் எப்போதும் நினைவிழக்கமாட்டேன், எவ்வளவு குடித்தாலும்,'' எனக் கூறிக் கொள்கிறார். 1935 நவம்பர் இருபத்தாறாம் தேதிக் கடிதத்தில், ''அவளுக்காக நான்படும் வேதனையை நான் குடித்து மறந்திருக்க முடியுமானால் நன்றாகயிருக்கும். ஆனால் அவ்வாய்ப்பில்லை. கூட நண்பரில்லாமல் குடிப்பதில் எனக்குச் சுவைபடவில்லை. பெண்ணைத்தவிர என்னை அடித்தளத்தில் அசைக்கக் கூடியது ஏதுமில்லை.''

இவ்வாறு பெண்மையில், தன் காதலுணர்வில், தமது நம்பிக்கையை, அழுத்தமான மனவெழுச்சியை அறிவித்தவாறு, அதே கடிதத்தில், ''ஆகட்டும் திருவண்ணாமலை செல்வோம்'' என்கிறார் தீட்சிதலுவுடன். ஜாதகங்களுக்கு, ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சருக்கு, சலத்தை அறிமுகம் செய்துவைத்து தீட்சிதலு இப்போது திருவண்ணாமலை ராமண மகரிஷியையும் அறிமுகம் செய்துவைத்து, திருவண்ணாமலை செல்வதற்குச் சலத்தையும் வரவேண்டினார். சலம் வாழ்க்கையில் புதிய அத்தியாயம் துவங்கியது.

1936 டிசம்பரில் தீட்சிதலு திருவண்ணாமலை சென்று சலத்துடன் ரமண மகரிஷியை தரிசனம் செய்து கொண்டார். மகரிஷி மலைமீதேறித் திரும்பிவந்து கொண்டிருந்தார். அனைவரும் ஒருபக்கமாக ஒதுங்கி நின்றார்கள். சலம் அசையவில்லை. மகரிஷி அருகில் வந்த பொழுது தீட்சிதலு சலத்தை ஒரு பக்கம் இழுத்தார். அவர் இவர்களைக் கடந்து சென்று, சட்டென்று நின்று, பின்புறம் நோக்கிச் சலத்தைப் புன்சிரிப்புடன் பார்த்தார். ''அத்தருணத்தில் எனக்கு ஏதும் தோன்றாவிட்டாலும், அக்கணம் தொடங்கி என்னை வெற்றி கொண்டுவிட்டார் பகவான் எனத் தோன்றியது.'' (பகவான் நினைவுகள்). சலம் அந்த வாய்ப்பில் தமது செயல் வடிவத்தில் பகவான் கருணையால் ஈர்க்கப்பெறாதவரானாலும், தோன்றா நிலையில் அவருக்கு அந்தக் கணம் தொடங்கித் தாம் அவருடையவரானார். ஆசிரமத்தில் வேதபாராயணம் நடந்து கொண்டிருந்தது. அது முடிந்தவுடன் சிந்திக்காமலேயே ரவீந்திரரின் வங்க மொழிப் பாடலைக் குரலெழுப்பிப் பாடலானார். அதில் 'ஜீவன வல்லபா, ப்ராணரமணா, சங்கர சோபன சுந்தரா, யோகி ஜன சித்த விமோஹனா' என 'வாழ்வின்

லல்லவா, உயிர்காப்பவரே, சங்கர இன்பநிலையழகரே, துறவிகளின் உள்ளத்தில் கவர்ந்தவரே' என்று பகவானிடம் தன்னை அர்ப்பணித்துக் கொண்டுவிட்டார்.

1936 டிசம்பரில் பகவான் ரமணமகரிஷி தரிசனம் செய்து கொண்டாலும் அதற்கு முன்னரே சலத்தினுள் ஒரு மாற்றம் தொடங்கிவிட்டது. யோகப் பயிற்சி செய்வது, பிராணாயாமம் செய்வது அவர் வழக்கம். அதன் விளைவாக 'ஆனந்த அனுபவத்தையும் சக்தியையும் மேலோங்கச் செய்து கொள்ள வேண்டும்' என ஆவல் கொண்டார். யோகப் பயிற்சி உயர் இன்பநிலையை மேம்படுத்துவதற்குப் பதிலாக, அவரின் உள்ளத்துக்கு நல்ல சாந்தி அளிக்கத் தொடங்கியது. ''என் உடல் மீதான கட்டுப்பாட்டுத் திறமையை ஓரளவுக்குப் பெற்றேன். எனது பாலுணர்வுகள் முழுமையாகக் கட்டுப்படலாயின. அதாவது உடலுறவாசை யாராவது ஒருத்திக்கு நான் தேவைப் பட்டால் ஒரு வாரத்துக்கு முன்னரே தெரிவிக்க வேண்டும்.'' (ஜனவரி 28, 1936 கடிதம்). சலம் ஜோதிடரைப் பார்த்துப் பேசியது முதல் ஏதோ பெரிய மாற்றம் வரவேண்டுமென்று எதிர்பார்க்கத் தொடங்கி விட்டார். மனிதர்களுடனான தொடர்புகளில் வெறுப்பு தோன்றலானது. (ஏப்ரல் 26, 1936 கடிதம்). 1936 மே மாதத்தில் தீட்சிதலு சலத்தைக் கண்டு பேசிய போது பறைக்குல பிச்சம்மா எனும் யோகினியைப் பற்றி அவர் சலத்திடம் சொன்னார்.

ஆசிரமத்திலிருந்து திரும்பி வந்த பிறகு 1937 ஜனவரியிலிருந்து தீட்சிதலுக்கு எழுதிய கடிதங்களில் பகவானைப் பற்றிக் கூறாத கடிதம் இல்லையென்றே கூறவேண்டும். பிச்சைக் காரனுக்குப் பிச்சை போடாமல் செல்லும்போது, அவன் 'பகவான்' பெயரைச் சொல்லும்போது, மீளத்திரும்பி அவனுக்கு ஓரணா பிச்சையிடுதல், ஆசிரமத்துக்குக் கொஞ்சம் பணம் 'மணி ஆர்டரில்' அனுப்புதல் போன்ற கடமைகளைச் செய்தார் சலம். (ஜனவரி 2,11,1937 கடிதங்கள்). ஆனால் பகவான் போதித்த வேதாந்தம் தமக்கு ஒப்பக்கூடியதாக இல்லை. ''எனக்கு 'பெண்' இருக்கிறாள். உங்களுக்கு 'தெய்வம்' இருக்கிறது,'' என தீட்சிதருக்கு எழுதினார். (ஜனவரி 11,1937 கடிதம்). 1938 பிப்ரவரியில் 'நான் யார்?'' (Who am I) எனும் ஆங்கில நூலை வாசித்தார். இது ரமண மகரிஷி சிறப்பாகப் போதிக்கும் ஆன்மீக நெறிநூல். சலத்துக்கு நெல்லூரிலிருந்து விசாகப்பட்டினம் மாற்றலாயிற்று. பகவான் நிலையாக அவருள் வடிவங் கொண்டிருந்தார். ''எனது பகவானின் அனுபவங்கள்! அவை மிகமிகப் புனிதமானவை! மிக மிக நகைப்புக்குரியவை காகிதத்தில் வரையும் வகையில்'' (பிப்ரவரி 17, 1937 கடிதம்). இந்தக் காலத்தில்தான் 'எண்ணங்கள்' (Musings) எனும் புதியவகை உரையாக்கத்தைத் துவங்கியிருந்தார். தமது கருத்துக்களை

அவ்வப்பொழுது காகிதத்தில் வரைவது, இவை பிறகு தொகுப்புக்களாக வெளியிடப் பெற்றன. சலம் பால் பிரண்டன் நூல்களைப் படித்தார். (ஜூன் 7,1937). பால் பிரண்டன் மகரிஷியிடம் வந்த மேலைநாட்டுச் சீடர்களில் புகழ்மிக்க சிறந்த சாதகர் ஆவார். சலத்துடன், சௌரீஸ் கூட பால் பிரண்டன் மகரிஷியைப் பற்றி எழுதிய கருத்துக்களின் மீது ஆர்வம் காட்டலானார். 'நான் யார்?' என்ற ஆன்மிகச் சிந்தனையை மகரிஷி சொன்ன வழிமுறையில் சாதனை செய்யலானார் சலம். (ஜூன் 7, 1937 கடிதம்). இந்தப் பயிற்சி தமக்கு ஒருமித்த உள்ளுணர்வளிக்கின்ற தென்றார். (ஜூன் 26, 1937). முயற்சி செய்து வந்தால் தன்னிலைமை மறந்து மயக்கம் வருகின்றது. மாலையில் சரியாக ஆறு மணிக்கு பகவான் உள்ளுணர்வனைத்தையும் தம் வயமாக்கிக் கொண்டமையால் விசாகைக் கடற்கரையில் அமர்ந்து கிடப்பார். சினிமா பார்ப்பது, கதைகள் எழுதுவதை நிறுத்திவிட்டார். (ஜூலை 5, 1937). கோழி முட்டை, இறைச்சி உண்பதை நிறுத்திவிட்டார். பெண்ணுறவுக்கெனத் தாமே முன்னிட்டு 'வேட்டைக்கு'ப் புறப்படலாகாதென உறுதி பூண்டார். தமக்கு ஏற்படும் சம்பவங்களில் பகவானுடைய எண்ணமும், அவர் கண்கூடாகக் கவனித்துக் கொண்டிருப்பதாக உணர்ந்தார். ஒவ்வொரு நிகழ்ச்சியும் கடவுளின் நிர்ணயத்தின் மீதே நடந்து வருகின்றதென்ற நம்பிக்கைக்கு வந்தார். கடைசியில் தமது பழக்கங்கள், சுகங்கள் எல்லாவற்றையும் விலக்கிக் கொண்ட பிறகு, தாம் புகவிருக்கும் வெற்றுநிலையை உள்ளூர உணர்ந்து, சமாதிநிலைக்கொப்பான, அச்சந்தரும் விதமான ஆழ்நிலை தியானத்தில் ஆழ்ந்தனுபவித்தார். (ஜூலை 11, 1937).

அப்போழுதுதான் சலத்துக்கு பெண்ணொருத்தியிடம் தொடர்பு ஏற்பட்டது. தம் உள்ளத்துக்குள், சிந்தனைப் போராட்டத்தில், ''நான் எந்தப் பாவமும் செய்யவில்லை. மிக உயர்ந்த ஆன்மிக வாழ்க்கைக்கு நான் இன்னம் பக்குவமடையவில்லை என்று எண்ணுகிறேன்,'' என ஆறுதலடைந்து கொண்டார். (ஜூலை 7,1937)- வாழ்க்கை சுவையற்றதாய் காணப் பெற்றமையால் சந்தேகம், நம்பிக்கையின்மைக்கிடையில் இப்படியும் அப்படியுமாக ஊசலாடலானார். (ஜூலை 17,1937). ''பகவான் என்னைக் கைவிட்டவராக நேரும்போது, பெண்ணின் கரங்களை நாடிச் சென்றேன். நான் அழுக்கேறியவனாகவும் என் ஆன்மா நோயுற்றிருப்பதாகவும் உணர்கிறேன். இன்று மாலை அவள் நன்கு அழகுபடுத்திக் கொண்டு வந்ததும், காதலுணர்ச்சியுடன் அவள் பக்கம் பார்க்க முடியவில்லை... கடவுள் வேடிக்கை புரிகிறார். முதலில் நம்மை வேதனைக்குள் ஆழ்த்தி, தம்மைச் சரணடைவதற் கேற்றவாறு செய்துவிடுகிறார்.'' (ஜூலை 31,1937). பகவானைத் தவிர்த்துத் தமக்கு இன்னொரு மார்க்கமில்லை என்ற நிலைக்கு வந்தார். (ஆகஸ்டு 5, 1937) இதற்கிடையில் தமக்கொரு தேர்வு.

தாம் மிகவும் விரும்பிப் போற்றிய பெண்ணொருத்தி, தமக்கு எந்த வகையிலும் உறவு கொள்ள வழியில்லை என்றிருந்த அந்தப் பெண் திடீரெனத் தேடி வந்துவிட்டாள். ''என் வாழ்க்கையில் நிகழவியலா தென்றிருந்த இனிமையான கனவு உண்மையாயிற்று. அவளைப் பார்த்தாலே போதும், காதல் கொள்ளாமலிருக்க மாட்டார்கள். நினைத்துப் பார்க்க முடியாத அழகு பிம்பம் அவள். ஆனால் ஆன்மாவின் நிலையைக் கண்டுணர்வது அதனைவிட இனிமை யானது... அவள் கண்களில் காணும் இனிமை, கனிவு, காதல் என் மனம் கற்பித்துக் கொண்டதுதானே!.. செய்யும் பணி, படித்த படிப்பு என்னவோ, பேச்சு, சிந்தனை, ஆசை, தியானம் எல்லாம் இறைவனுக்கு அப்பாற்பட்டவையே''. (அக்டோபர் 27, 1937). இப்படி பெண், அப்படி பகவான். இந்நிலையில்தான் சலம் உதவிக் கண்காணிப்பாளராக, குடிவாடாவுக்கு மாற்றப் பெறலானார், 1938 இல்.

சில நாட்களுக்கு தியானத்தை நிறுத்தி வைக்குமாறு ஆசிரமத்திலிருந்து சலத்துக்கு ஆணை வந்தது. (பிப்ரவரி 17, 1938). சலம் அவ்வப் பொழுது ஆசிரமத்துக் கடிதம் எழுதி ஆறுதல் பதில் பெற்றுக் கொண்டிருந்தார். ஏப்ரல் 1938 இல் சலம், மனைவி மகள் சௌரீஸ் உடன் அருணாசலம் சென்றார். சௌரீஸ் ஆழ்நிலை தியானத்திலிருக்கலானாள். (ஏப்ரல் 18, 1938). சலம் மட்டும் ஆசிரமத்தில் தாம் ஆவல் கொண்ட மெய்ஞ்ஞான விளக்கம் ஏதும் கிடைக்காமற் போகவே, தியானத்தை நிறுத்திவைக்குமாறு கூறிய அறிவுரையின்படி இறைவனைப்பற்றி முழு முயற்சியுடன் சிந்திப்பதை நிறுத்திவிட்டார். அந்தச் சமயத்தில் குடிவாடா அருகில் குருமத்தாலி கிரமத்திலிருந்த மால பிச்சம்மா எனும் யோகினியுடன் சலத்துக்கு அறிமுகமாயிற்று. அவரைப்பற்றி தீட்சிதலு 1936 மே மாதத்திலேயே சலத்துக்குக் கூறியிருந்தார். சலத்தையும் சௌரீஸையும் மிக்க பரிவுடன் அன்பாக வர வேற்பார் அவ்வம்மையார். சௌரீஸ் பெரிய ஞானியாகப் போகிறாளென ஜோதிடம் கூறினார் அவ்வம்மையார். சலத்தைப் பார்த்ததும் கைகளைப் பிடித்துக் கொண்டு ஒவ்வொரு தடவையும் அவர் கரங்களில் தாமே பழங்களையோ மாவுப்பண்ட பிரசாதத்தையோ ஊட்டுவார். அவர் சலத்தை வரச் சொல்லித் தாமே செய்தியனுப்புவார். ஒரு தடவை சலத்துடன், ''உங்களுக்கு ஐந்து பெண்களில்லை, ஆறு மகள்கள். நானொருத்தி,'' என்றார். சலம் கடைசியாக அவரைக் கண்டு பேசியபோது ஒரு சிறப்பு நிகழ்ந்தது. அவ்வம்மையார் இரண்டு நாட்கள் சமாதி நிலையிலும் ஒரு நாள் விழிப்பு நிலையிலும் இருப்பது வழக்கம். ஜனவரி 24, 1939 ஆம் தேதி பிச்சம்மா விழிப்பு நிலையிலுள்ள நாளென்று நினைத்து சலம் அவரைப் பார்க்கச் சென்றார். ஆனால் அவர் சமாதி நிலையில் படுத்திருந்தார். சலம் அருகில் அமர்ந்துகொண்டார். அவ்வம்மையார் கைகளை நீட்டித் தனது நடு இடுப்பின் மீது

அவரை அமரவைத்துக் கொண்டு, ''ஒரு கையை என் முதுகின் மீதுவைத்து, மறுகையை என் மார்புபக்கமாகத் தடவினார். பணமும் மூக்குக் கண்ணாடியும் தட்டுப்பட்டன. இதற்குள் அவர் மீண்டும் சமாதி நிலையில் ஆழ்ந்தார். என் கால்களிலிருந்து மேலெழும்பியவாறு மின் விசை உணர்வு போன்று தாக்கிப்பரவலானது. ரத்தம் முழுவதுமாகத் தலைக்குள் ஏறி நிரம்பியது போலிருந்தது. காதுகளில் பெருத்த நாத ஓசை. ஐந்து நிமிஷங்களில் திரும்பலாமென்றிருந்த நான் அப்படியே ஒரு மணிவரை அமர்ந்திருந்தேன்.'' சலம் புறப்படுவதற்காக எழுந்த பொழுது அவர் கண் திறந்து, சலத்துக்குப் புருவ மத்தியில் ஒளியொன்று தோன்றியதா என்று கேட்டார். சலம் இல்லையென்றார்! ''ஏனோ, யாருக்குத் தெரியும்!'' என்றார் அவ்வம்மையார் சலத்தைச் சோகமாகப் பார்த்து! ஆழ்நிலை ஆன்மிக அனுபவம் பெற்ற மனிதர்கள் பிறர் உள்ளத்திலும் வியத்தகு மாற்றத்தைக் கொண்டுவரக் கூடும் என்று சலத்துக்கு உறுதியான நம்பிக்கை ஏற்பட்டது. (ஜனவரி 25, 1939).

1938 டிசம்பரில் சலம் தாம் தனியாக அருணாசலம் சென்று வந்தார். வந்த சில நாட்களிலேயே மேலே கூறிய அனுபவம் உண்டாயிற்று. இறைவன் அருளோ, மால பிச்சம்மா அளித்த சிறப்பான அனுபவமோ, அல்லது இரண்டின் விளைவோ, சலத்தினுள்ளாக ஒரு புதிய மாற்றத்தைக் கொண்டுவந்தது. 1927 இல் ரவி மரணத்துக்குப் பின்னர் வாழ்க்கையின் மீதான வெறுப்பு மீளவும் தோன்றலாயிற்று. உள்ளூர நாளும் இறைவனை நாடியவண்ணமான மன நிலை போய்விட்டது. ஜோதிடர்களை நாடிச் சென்றார், எதிர் காலத்தைப் பற்றி அறிய. ஆனால் எல்லா நிகழ்ச்சிகளையும் பகவான் பார்த்துக் கொள்வார் என்ற நம்பிக்கை ஒரு புறம். 1939 செப்டம்பரில் மறுபடியும் அருணாசலம் சென்றார். சௌரீஸ் கூடச் சென்றாள். பகவானின் திருப்பார்வையால் சௌரீஸிடம் பெரிய மாற்றம் வந்தது. அவள் அருணாசலத்தில் நிலையாகத் தங்கப் போவதாகவும் வேறு வாழ்க்கை தனக்குப் பிடிக்கவில்லை எனவும் தெளிவு படுத்தினாள். அவளின் அரிய அனுபவத்தை, உறுதிப்பாட்டை ஒரு கடிதம் வாயிலாக 'பாரதி' பத்திரிகையில் பிரசுரித்தாள். சலமும் பகவான் அருள் தம் பக்கமிருப்பதாகவும், அவர் தம்முடன் பேசுவது போன்ற மெய்ஞானத்தைப் பெற்றவரானார். (ஜனவரி முதல் தேதி, 1940). கடவுள் அவ்வப்போது சலம் கனவுகளில் காட்சியளிக்கக் கண்டார். அக் கனவுகளைப் பற்றிச் சலம் தீட்சிதலக்கு விளக்கமாகக் கடிதங்கள் எழுதியிருந்தார். (ஜனவரி 21, பிப்ரவரி 13, ஏப்ரல் 10, அக்டோபர் 9, டிசம்பர் 11, 1940 மற்றும் மார்ச் 5, 1941).

சலம் 1940 மே மாதத்தில் மீளவும் அருணாசலம் சென்று பகவானை தரிசனம் செய்தார். ''சௌரீஸ் மூலமாக அவருடைய

பார்வை என்மீது பரவுகிறது''. (மே 13, 1940). ஆனால் சலம் அவ்வப்போது தமது ஜாதகத்தை ஆராய்ந்து வருவதை நிறுத்தவில்லை. ஜூலை 7, 1940 கடிதத்தில் தமக்குச் சுக்கிர திசை இந்த நாளிலிருந்து தொடங்கியுள்ளதெனவும், பகவானுக்கு எல்லாமே அர்ப்பணமாக்கிவிட்ட தமக்கு சுக்கிரன் போகங்களைத் தருகிறாரா, பார்க்கவேண்டும் என்று சொல்வார். செப்டம்பர் 4, 1940 கடிதத்தில் சுக்கிரன் ஒரு காதலியைக் கொணடு சேர்த்ததாகக் கூறி, அதற்கு முன் இத்தகைய தொடர்பை பகவான் அறுபடச் செய்து விட்டாரெனவும், அந்தப் பெண்ணைத் தொலைவாக, லக்னோவுக்கு அனுப்பிவிட்டதாகவும் எழுதியுள்ளார். இப் போதைக்கு இச்சை கொண்ட பெண்ணின் காதல் வேகத்தையும், காமக்கலையில் அவளின் ஆழ்ந்த அறிவைப்பற்றியும் சொல்லியவாறு, தமது மனநிலையை இவ்வாறு வெளிப்படுத்து கிறார்: ''இப்போது அவள் கண்களை உற்றுப் பார்த்ததில் இரண்டு முறை அக்கண்களூடே பகவானைக் கண்டேன்... இந்த உடலுறவு ஆன்மிக மெய்ஞ்ஞானமாக எனக்கு நேரவேண்டும். இல்லை யெனில் பகவான் தொடர்புள்ள உடலனுபவமனைத்தும் பௌதிகமாக ஆழமாகப் பதிய வேண்டும். இப்படித் தோன்றியது எனக்கு... வரட்டும் அந்த மாது. பத்து ஆட்களின் வலிமையுடன் ஆண்டவன் அருளும் சேர்ந்து ஆற்றலுடனிருப்பதை உணர்கிறேன்.'' செப்டம்பர் 9, 1940 கடிதத்தில், தமது காதலியின் அனுபவத்தால் அப்போது வெறுப்புணர்வுண்டாகித் தப்பித்துக் கொள்ளத் தோன்றியது.

சலத்துக்குக் காய்ச்சல் வந்துவிட்டது. 'காய்ச்சலில் கனவுகள். அதில் பகவானும் அவருடன் சௌரீஸூம் இருக்கக்கண்டேன். ஜூரத்தில் எதிர்பாராத நிலையில் காதில் கேட்ட சொற்கள்: 'நீ அனுபவத்தை ஆதாரமாகப் பெறவேண்டுமானால், பிறருடைய அனுபவங்களையும் ஏற்றுணர வேண்டும்.' (அக்டோபர் 10, 1940).

எதற்கு இது தொடர்பாக உள்ளது எனத் தெரியவில்லை யெனவும், தமது சந்தேகங்களுக்குச் சமாதானம் என்னவோ என்றார் சலம்! ஆனால் அவருடைய இந்த வாக்கியம் தம் வாழ்க்கையில் இறுதியாகப் பெற்ற பலனுக்கு ஓர் எடுத்துக் காட்டாகிறது. சலம் ஈசுவர சாட்சாத்காரமான இறைமை மெய் யுணர்வினைக் காணப் பெறவேண்டுமெனவும், தமது பிரச்சினை களுக்கும் சந்தேகங்களுக்கும் பகவான் வாயிலாக நல்ல ஞானம் உண்டாக வேண்டுமெனவும் ஆழ்ந்த ஆவல் கொள்ளலானார். அருணாசலம் 1950 இல் சென்று நிலையாகத்தங்கிவிடக் கருதிய பொழுது பகவான் ரமண மகரிஷி சமாதியடைந்தார். அதன் பிறகு சௌரீஸ் வாயிலாக இறைவனின் இனிய ஒலி சலத்துக்குக் கேட்கலாயிற்று. சலம் அதனை இறைமை மெஞ்ஞானமென உள்ளுணர்ந்து தம் பிற்கால வாழ்க்கையை நடத்தினார். ஆன்மீக

நிலையில் இறைமை மெய்ஞ்ஞானம் தமக்கு ஏற்பட்டதுடன், சலத்துக்கு அது சௌரீஸ் வாயிலாகத் தமக்குக் கிட்டியதென்பதற்கு மேற்சொன்ன வாக்கியமே அவரின் எதிர்காலத்தின் லட்சியமாக அறிந்து கொள்ளலாம்.

1940 டிசம்பரில் சௌரீஸூம் உடன் வர சலம் மகரிஷியிடம் சென்றார். அங்கு சங்கீதம் கேட்க வாய்ப்பில்லையெனக் குறைபட்டுக் கொண்டபோது, சலத்துக்கு அன்று மாலையே இனிமையான பிடில் சங்கீதம் பகவானின் பொதுக் கூடத்திலிருந்து ஒலிக்கக் கேட்டு மகிழ்ந்தாராம்! உணவுக்கு என்ன செய்வதென்று சிரமப்பட்டுக் கொண்டிருந்த போது வேண்டிய சாப்பாடு கிடைத்ததாம் ! எல்லாம் பகவான் திருவிளையாடல் என எண்ணினார் சலம். ''நமக்குத் தெரியாமல் நமது ஆன்மாவில் எந்த மூலை இருட்டறையில் பகவான் செய்ல் புரிகிறாரோ நமக்கென்ன தெரியும்?... அவர் திருவருளால் ஒவ்வொரு சுகமும் துக்கமும் ஆன்மாஞானம் எனும் பசும் பொன்னாக மாறுகின்றது.'' (ஏப்ரல் 25, மே18, 1941). இத்தகைய ஆழ்ந்த நம்பிக்கைக்கு வந்து விட்டார் சலம். 'விண்ணப்பங்கள்,' 'யசோதை கீதங்கள்' என்ற இறைவனைத் துதித்துப் போற்றும் பக்திப்பாடல்களை எழுதினார். ஒரு புறம் போற்றி வழிபாடு, மற்றொரு புறம் பிராணாயாமப் பயிற்சி. இப்பயிற்சியில் சில அச்சந்தரும் நிகழ்ச்சிகளைக் காணநேரின் குவலயானந்த சுமாமி எனும் பெரியாரிடம் சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்ளவும் பகவான் ரமண மகரிஷியின் அருளாசிக்காகவும் கடிதமெழுதினார். அப்போதுதான் ரவிந்திரநாத தாகூர் இறந்த செய்தி எல்லாருள்ளத்தையும் கலக்கியது. (ஆகஸ்டு 8, 1941).

ஒரு புறம் இரண்டாம் உலகப்போர் நடந்து கொண்டிருந்தது. சலத்துக்கு இந்தச் செய்திகளே பிடிக்காது. ''எனக்கு வெடியோசை கேட்காது. நான் பத்திரிகை படிப்பதில்லை. ரேடியோவைக் கேட்க மாட்டோம் எங்கள் வீட்டில்.'' (பிப்ரவரி 8, 1942). உத்தியோக தர்மத்தை இயந்திரத்துக்கொப்பாகச் செய்துவந்தார். எதிர்பார்த்த ஆன்மிகஞானம் தவிர சிறப்பாக வேறேதும் நிகழவில்லை! இதற்கிடையில் பகவானைப் பற்றிய கனவு ஒன்று (மே முதல் தேதி, 1942) கண்டார். தனது ஆணவமலத்தை ஒழித்து வெற்றி கொண்டாலன்றி இறைவனின் மெய்க்காட்சி கிடைத்தல் அரிது என்பதை அக்கனவு அறிவித்தது. என்ன செய்வதெனத் தோன்ற வில்லை. ஜாதகத்தில் சுக்கிரதசை நடந்து கொண்டிருந்தது. ''கையாலாகாத சுக்கிரன்! கையாலாவதாயின் பகவானிடம் சென்று எனக்காக வேண்டி உதவக்கூடாதா? ''இறைவன்.... என்பக்கமாக எப்போது திரும்புவாரோ தெரியவில்லை. ஆனால் குழப்பம் ஏது மில்லை. இப்போதைக்கு என் பக்தியின்

பரம்பொருளைக் காண நெடுங்காலமிருக்கிறது.'' (நவம்பர் 6, 1942).

பெண்மை - இறைமை

இதற்கிடையில் லீலா - உண்மைப் பெயர் செல்லாயம்மா, சலம் வாழ்க்கையில் நுழையலானாள். 'எண்ணற்ற பெண் வேட்கையில்' சலம் பல ஆண்டுகள் நாடிய நாட்டத்தில் 'லீலா' இறுதிக்கட்டமாகத் தோன்றினாள். பகவான் தரிசனத்துக் கெனத் தவித்துக் கொண்டிருந்த சலத்துக்கு, அவரது முந்தைய செயல் களையெல்லாம் எரித்தொழிக்கச் செய்வதற்கு உற்றதுணையாக பகவான் அனுப்பிய பெண்ணுருவமாகத் தோன்றுகிறது, இந்த 'லீலா'வுடன் சலம் கொண்ட தொடர்புகளைப் பார்த்தால்.

''பூவுலக சொர்க்கம்... என்ற கடந்த பத்து நாட்களில் என் உதடுகள் மகிழ்ந்தறிந்த இனிய சுவை'' (நவம்பர் 11, 1942) ''என் வாழ்நாளெல்லாம் அழகினை ஆராதிக்கத் தேடிக் கொண்டிருக்கிறேன். இன்றைக்கு அது கிடைத்தது.'' (டிசம்பர் 8, 1942). அவள் நயனங்களில் நான் இறைவனைக் காண்கிறேன். நான் தவறாகச் சொல்வதாகக் கருதாதீர்கள். என் மனத்துள்ளிருக்கும் தேவையைக் குறிப்புணர்ந்து தனது உயர்ந்த கருணையால் என் கடைசி ஆசையைத் தீர்க்க முன்வந்து, அவளுடைய அழகு மிக்க உருவத்தைத் தாங்கி வந்து என் கரங்களில் சேர்ந்தது இறைவனே! என் அனுபவம் ஆன்மிகப் பெருக்கில்லை என்றால் இனி வேறு எதுவாகவும் இராது !'' (ஜனவரி 22, 1943).

லீலாவிடம் அவர் பகவானையே பார்த்தார். சலத்திடம் லீலா ஒரு பெரிய ரசிகை. பெண்மை இதயத்தைப் புகலிடமாகச் செய்து கொண்ட மாபெரும் கதாசிரியை, எத்தனையோ ஆண்டுகளாகக் கிட்டாத கனிமரமான மனிதரைக் கண்ணால் கண்டு, தனது கவர்ச்சிச் செய்கைகளால், மிகுந்த அழகும் ஆற்றலும் கொண்ட அவள், அவரைத் தன்னவராக்கிக் கொள்ள வேண்டுமென்ற பேராவலுடன் போராடினாள். ரசிகன் நிலையில் மாறுபட்ட பெரு மேதை, பெண்மைச் செல்வத்தின் வெறுப்பாளர், பெண்மைக்குப் பதிலாக பகவான் ரமணரைப் போற்றும் பக்தர் சலத்தின் உள்ளத்தினுள்ளேயே பகையாளரானார். இவ்விருவரும் ஒருவரை யொருவர் தம் பக்கமாகத் திருப்பிக் கொள்வதற்குக் கடும் முயற்சி செய்தனர், இத்தகைய உளப் போராட்டத்தில் சலத்துக்கு பகவான் அருள் கூடியதால் தமக்கே வெற்றிகிட்டியதெனக் கடிதங்கள் வாயிலாகத் தெளிவாகின்றது. அது ஒரு சக்திக்கு மேற்பட்ட கட்டம்.

சலத்துக்கு விரைவாகவே லீலாவுடன் வேறுபாடு ஏற்பட்டுவிட்டது. இனி அவள் போய்விடுவாளோ என்று அச்சங் கொள்ளலானார். தமது துயரத்தை ''பகவான் பாதங்களில்'' வைத்து வேண்டித் தொழுதேன். லீலாவுக்கு அன்றிரவு கனவு

தோன்றியது. அவள் அதற்குமுன் பகவான் பெயரைக் கேட்டிருந்தாளேயன்றி, அவர் மீது எத்தகைய சிந்தனையுமில்லை. அவள் கனவில் பகவான் கோபத்துடன் பார்த்து 'அவனுக்குத் தீங்கு செய்யாதே, அவனை விட்டுப் போய்விடாதே, கூடவே இரு' என்று கட்டளையிட்டாராம். அவர்கள் தகராறு அத்துடன் தீர்ந்தது. சலத்துக்கு பீமாபட்டினம் மாற்றல் கிடைத்தது. (ஆகஸ்டு முதல் தேதி 1943).

பீமாபட்டினத்துக்குச் சலம் தம் குழந்தைகளுடன், லீலா, அவள் மகள் ஆகியோர் சென்றார்கள். பீமாபட்டின அழகு, லீலாவுடைய உதவி இவ்விரண்டினாலும், தாம் மகிழ்ச்சியின் சிகரத்தையடைந்து விட்டதாகக் கருதினார். ஆனால் அவள் கோபித்துக் கொண்டு மகளை அழைத்துக் கொண்டு போய் விட்டாள். சலத்துக்கு அமைதியில்லை. துக்கந்தாங்க முடியாமல் லீலாவைப் பார்க்கக் காக்கிநாடாவில் அவள் வீட்டைத் தேடிச் சென்றார். (டிசம்பர் 11, 1943). ஆயினும் ஒரு புறம் சலத்துக்கு நம்பிக்கை, இதெல்லாம் பகவான் நடத்தும் லீலை எனவும், அவர் நம்பிக்கை அடித்தளமாக நிலைத்தது. ''இன்றைக்கு எனக் கென்ன தோன்றுகிறதென்றால், பகவானே இந்த அதிசயமான நிலைமையை ஏற்படுத்தியுள்ளாரென்றும், அது நான் ஆன்ம ஞானத்தைத் தேடி, அழகினை ஆராதிப்பதன் வாயிலாகச் சாதனை செய்ய முயல்கிறேனோ அந்த மார்க்கத்தை எளிதாக்கவே இந்நிலையை அளித்திருக்கிறாரென்றும் தோன்றுகிறது. எங்கள் இருவரையும் இந்த அனுபவம் இறுதியில் உன்னத நிலைமைக்குக் கொண்டு செல்ல வேண்டும். இல்லாவிடில், எங்களிடையில் ஒளிரும் இந்த சுகானுபவ உண்மைக்கு, ஆன்மஞான மேம்பாட்டுக்கு ஏதோ உடைபட்டு இருக்க வேண்டும்.'' (டிசம்பர் 11, 1943).

தாம் பகவானிடம் தஞ்சமடைந்தவாறு லீலாவும் கூட பகவானிடம் தஞ்சம் புக முயன்ற சலத்துக்கு லீலாவின் கனவில் பகவான் தோன்றியது போன்ற நிகழ்ச்சிகள் நிறை மகிழ்ச்சியளித்தன. லீலாவும் தம் உறுதிக்கேற்பத் தானாக உடன் வரலானாள். முறையாக அவள் பற்றற்றவாறு சலத்திடம் சொன்னாள்: பகவான் என்னை ஆண் பெண் இருவருக்கும் பயனில்லாமல் செய்துவிட்டார். (ஜனவரி 7, 1944). சலம் தீட்சிதலுக்கு எழுதிய கடிதங்களில் லீலாவை 'என் ராணியார்' எனக் கூட விவரித்திருந்தார் ஏப்ரல் 17, 1944 இல் மறுபடியும் லீலா கண்ட கனவைப்பற்றி எழுதினார். சலத்தை பகவானும், பகவானைச் சலமும் விட்டகலுவதாக இல்லை என்ற எண்ணம் லீலாவிடம் உறுதி செய்வதாக இருந்தது அக்கனவு. இதனால் அவள் மனக் குறையைப் பற்றி தீட்சிதலுக்கு மே 19, 1944 கடிதத்தில் எழுதியிருந்தார் சலம். அந்நாட்களிலேதான்-

''உனக்குக் காமக் களியாட்டங்களில் மனநிறைவே இல்லையா? உனது இந்தப் புதிய பெண்ணுறவு உன்னைவிட உணர்ச்சி ஈடுபாடு குறைந்தவளுடையதெனக் கருதுகிறேன்...'' என எழுதிய நண்பர் ஒருவருக்குச் சலம் தமக்கும் லீலாவுக்கு மிருந்த தொடர்பை இவ்வாறு விவரித்தார்: ''உண்மையான காதலில் மனப் போராட்டங்கள் தேவையற்றவை.... நான் கடினமான புத்தகங்களையோ, அறிஞர்களின் உரைகளையோ மகிழ்ச்சியுடன் ஏற்பவன். மேலும் நானும் அவளும் தொடர்ந்து பதினைந்து நாட்களாக, வேறு செயலேதுமின்றி, உலகில் கதவைத் தாளிட்டுக் கொண்டு ஒன்றாக வாழ்ந்தோம். காற்று, ஒளி, வானம் எங்கள் தோழமை. படிப்பதும் நெடு நேரம் பேசுவதும் தவிர உடலுறவு அதிகமில்லை எங்களிடையில். இருவரும் ஒருமித்திருப் பதில் ஓரின்பம். நான் அவள்கண்களை உற்று கண்டால் என் மந்திரத்தில் கட்டுண்டிருப்பாள்!.. காதல் வயப்படாதவளிடம் உறவு கொள்ள எனக்கியலாது. காதல் வசமானேனோ அவளிடம் ஏதும் என்னை அறுவறுக்கச் செய்யாது!'' தம் மந்திரத்தில் அவள் கட்டுண்டது போலத் தாமும் அவள் மந்திரத்தில் கட்டுண்ட வரானார். சௌரீஸிடமிருந்து தமக்கொரு அறிவிப்பு வந்தது. அவளுக்கும் ஓர் கனவு. அக்கனவில் தீட்சிதலு சலத்துக்குக் கடிதம் எழுதினாராம். ''நீ அவள் கண்களில் பகவானைக் காண நேர்ந்தால், நீ படும் துயரங்களுக்குப் பொருளுண்டு. அப்படி யில்லையெனில், தொடர்பை விட்டுத் தள்ளிவந்துவிடு.'' (செப்டம்பர் 23, 1944).

சலம் லீலாவிடையிலான தொடர்பை சௌரீஸ் விழிப்புடன் கண்காணித்து வந்தாள். சலத்துக் காதல் ஏதுமில்லை. சலம் தமது பல பெண்களிடமிருந்து, குறிப்பாக மன்னியிடமிருந்து முற்றிலும் விலகிவிட்டார். லீலாவை ரமணாசிரமத்துக்கு அழைத்துச் செல்ல வேண்டுமென்ற சலத்தின் முயற்சிகளைத் தடுத்து லீலா அவரை அமைதியிழக்கச் செய்தாள். அவள் மனம் மாற பகவானைத் தொழுது வேண்டினார். இதற்கிடையில் லீலாவின் மகன் நோயுற்றான். அவன் உயிருக்கே தீங்கு. ''அவனைப் பிழைக்க வைக்குமாறு பகவானைத் தொழுது முறையிடுகிறேன். அவன் பிழைத்தால் பகவானைப் பார்க்க வருவாயா?'' என லீலாவைச் சலம் கேட்டார். ''அவளுக்கு பகவானிடம் வரவிருப்பமில்லாதது தெரிந்தது. எனக்குள் அவளுடன் சிக்காமலிருக்கச் செய்வது பகவானின் பங்கும் தொடர்புமே என அவள் தெரிந்துள்ளாளென நினைக்கிறேன்.'' (தன் வரலாறு, 238 ஆம்பக்கம்).

வழியில்லாமல் லீலா ஒப்புக்கொண்டாள். சலம் பகவானுக்குத் தந்தியனுப்பினார், லீலாவின் பிள்ளையைக் காத்தருளுமாறு. உடன் அப்பிள்ளைக்கும் உடல் நலம் தேறி

நிம்மதி ஏற்பட்டது. லீலா, அவள் மகள், சலத்துடன் சேர்ந்து 1945 கிறிஸ்துமஸ் விடுமுறை நாட்களில் அருணாசலம் சென்றார்கள். லீலா பகவான் அருகில் செல்லவில்லை. கடைசியில் பகவானிடம் விடைபெற்றுக் கொள்ளச் சலம் சென்றபோது, லீலாவும் பிறரும் அவர்பின் செல்லவில்லை. பகவான் சலத்துடன் கோபமாகப் பேசினார். சலம் நடுங்கியவாறு அவரிடம் விடை பெறாமல் லீலா ஆகியோருடன் திரும்பிவந்து விட்டார். திரும்பி வந்தபின் லீலாவுக்கு நலங்குன்றியது. தான் இறந்துபோக நேருமென்ற அச்சம் அவளுக்கு. என்ன செய்வதென்ன தெரியாமல் மனம் குழம்பினார் சலம். சலம் தமது வேலையைத் துறக்க முடிவு செய்தார். ''இத்தனை ஆண்டுகளுக்குப்பிறகு மறுபடியும் ஆன்ம ஞான மெய்யுணர்வுக்கு நாட்டம் கொள்ளலானேன். இருளில் ஒளியைத் தேடிக் கொண்டிருக்கிறேன்.'' (பிப்ரவரி 27, 1947). ''லீலாவின் துளைக்கும் கணைப் போராட்டத்திலிருந்து தப்பிக்க மூன்று நாட்களாக 'தியானத்'திலிருக்கிறேன். மாயை வடிவமான பெண்ணின் வானுலக அவதாரமாகக் காண்கிறாள் அவள்... அவளை நான் வென்றேனானால் என் ஆணவத்தை வென்றவனாவேன்.'' (ஜூலை 2, 1947). ஆணவ மனத்துடன் முடிந்து போன பெண்ணாசைப் பிடியிலிருந்தும் வெளிப்படும் நிலையை அடைந்தார் சலம். அத்துடன் லீலாவுடனான காதல் களி முடிந்து போனது.

1947 அக்டோபரில் சலத்தின் மகன் வசந்த் காரணமில்லாமல் வீட்டைவிட்டு வெளியேறிப் போனான். அவனுக்கு வாழ்க்கை பொருளற்ற, சுவையற்ற பயணமாகத் தோன்றியது. அதன் பிறகு அவன் இருப்பிடம் தெரியாமல் போனான்! சலத்தின் அண்ணி டாக்டர் ரங்கநாயகம்மா (மன்னி) அறுவைச் சிகிச்சை செய்ய நேர்ந்து உடல்நலமற்றவரானார். சலத்தின் மீது மேலதிகாரிகள் விசாரணை வேறு நடந்தது. தாம் எழுதிய புத்தகங்களைத் தெனாலியில் பாடசாலைக்கு விற்றதுதான் குற்றம். சலம் விசாரணைக்கு நேரில் வர மறுத்தார். ஜனவரி முதல் தேதி, 1948 இல் டாக்டர் ரங்கநாயகம்மா மரணமடைந்தார். 1948 நவம்பரில் அருணாசலத்திலிருந்து சலத்தின் மனைவி விஜயவாடா வந்தார். சலம் உடல் நலங்குன்றித் துயருற்றார். சலமும் சௌரீஸும் அருணாசலம் போய்ச் சேரமுடிவு செய்தார்கள். இந்த நிலையில் லீலா சலத்தின் உறவை விலக்கிக் கொண்டு போய்விட்டாள். (மே 29, 1949). சலம் 1949 ஜூனில் அருணாசலத்தில் ஆறு நாட்கள் தங்கியிருந்தார். அருணாசலத்துக்குத் தம் குடும்பத்துடன் குடி பெயர்ந்து செல்ல ஏற்பாடுகள் நடந்தன. டாக்டர் ரங்கநாயகம் மாவின் மருத்துவக் கருவிகள் மற்ற பொருள்கள் யாவையும் விற்கப் பெற்றன. பிப்ரவரி 11, 1950 ஆம் தேதி, சலம் தம் குடும்பத்துடன் அருணாசலம் போய்ச் சேர்ந்தார்.

துறவுநிலை

சலம் அருணாசலம் போய்ச் சேர்ந்த இரண்டு மாதங்களில் (ஏப்ரல் 14, 1950) பகவான் ஸ்ரீ ரமண மகரிஷி மகாசமாதியடைந்தார். தீட்சிதலு வந்து சலத்துடன் பதினைந்து நாட்கள் தங்கிச் சென்றார். அருணாசலத்துக் கருகிலிருந்த பசுமலை சுவாமி எனும் சன்யாசியிடம் பக்தியேற்பட்டு சௌரீஸும் சலமும் அவரிடம் சென்றார்கள். பசுமலை சுவாமிகளிடம் தன்னை அர்ப்பணிக்குமாறு பகவான் கூறிச் சென்றார் என சௌரீஸ் கூறினாள். (மே 2, 1950)-. அதற்குப் பசுமலை சுவாமிகள் நல்லவரல்லர் எனத் தெரிந்தது. அதற்கு உடந்தையாயிருந்த சலத்தைத் தூற்றிச் சபித்தாள். ''மாடே என வசைந்து, காட்டில் முள் செடியாகப் பிறக்கச் சபித்தார்கள்,'' (மே 26, 1950). சலத்துக்கும் நடனக்காரிக்கும் இரண்டு மாதங்களில் கேடு நேரவுள்ளதென்று பசுமலை சுவாமி சொன்னார். (ஜூன் முதல் தேதி, 1950) சலம் குடும்பத்தினர் அருணாசலம் திரும்பிவிட்டனர். பசுமலை சுவாமி சலம் வீட்டுக்கு வந்து அன்பான வார்த்தைகளைப் பேசினார். (ஜூன் 16, 1950). இவற்றையெல்லாம் சலம் அவ்வப்போது தீட்சிதலுக்கு எழுதியவாறிருந்தார்.

கடைசியாக பகவான் அருள் தமக்கு முழுமையாகவுள்ள தெனவும் அவரே தமக்குத் தஞ்சமெனவும் நம்பிக்கையுடன் இருக்கலானார் சலம். (செப்டம்பர் 9, 1951). அமைதியின்றி, பணமில்லாமல் ஆதரவற்ற நிலையில் இருக்க நேர்ந்தார் சலம். அந்தச் சமயத்தில்தான் சென்னையிலிருந்து சினிமாவுக்கு வசனம் எழுதுவதற்காக அழைப்புவரவே சென்னை சென்றார். ''என் வாழ்வுக் கனல் மேலும் மூள்வதற்கென, பூர்த்தியாக இத்தகைய ஆசைகளை என் உள்ளத்திலிருந்து அழிப்பதற்கெனவோ என்னவோ என்னைச் சென்னைக்கு வரவழைத்துக் கொண்டார் பகவான்,'' என்கிறார் சலம் ஒரு கடிதத்தில். (ஜூலை 7, 1951). அதனை பகவான் இட்ட பணியாக ஏற்றுச் செயல் புரிந்து உள அமைதி பெறுமாறு எழுதிய தீட்சிதலுக்கு, ''இது சாத்தான் வேலை. நான் பணத்துக்காக வேலை செய்கிறேன். இதை பகவான் பணி என மாட்டேன்,'' என எழுதினார். (ஜூலை 23, 1951). சென்னையில் அந்தச் சூழ்நிலைகள், மனிதர்களின் போக்குப் பிடிக்காமல் மீண்டும் அருணாசலம் வந்து சேர்ந்தார். ''பகவான் ஒருவரின் சக்தியில் மட்டும்தான் நம்பிக்கை. நாள் முழுவதும் மாலை இருட்டும் வரை பகவானின் சமாதியின் முன்பே காலம் கழிக்கின்றேன்.'' (ஆகஸ்டு 2, 1951).

பகவான் தியானத்தில் நெடுங்காலம் கழித்துவந்த சௌரீஸ், கடைசியில் பகவான் பரிபூர்ணமாகத் தரிசனம் தந்தார் எனவும், சலம் குடும்பத்தைக் காக்கவும் பக்தர்களுக்கு சிறந்த வாழ்வளிக்கவும், உலக மக்களுக்குப் புதியதோர் அறத்தைப்

புகலவும் தாம் வந்திருப்பதாகச் சொன்னது சலத்துக்குப் புரிந்தது. ஆகஸ்டு 15, 1951 ஆம் தேதி இது நிகழ்ந்தது. சலம் உடல்நலனைத் தேற்றிக் கொண்டு ஆன்மிக ஞான போதம் பெறுவதற்குத் தகுதியாக்கிக் கொண்டும் தமது ஞான உபதேசம் ஈஸ்வரன் செய்துள்ளார் எனவும், சலம் அவ்வுபதேசத்தை ஏற்று நடந்து கொள்ள வேண்டுமெனவும் சௌரீஸ் அறிவுறுத்தினாள். சலமும் உடன்பட்டார். உணவு, உறக்கம், ஆற்றவேண்டிய உடல் மற்றும் உள்ளப் பயிற்சிகளைப் பற்றிச் சலத்துக்குப் பாடம் தொடங்கியது. உடல் நலம் குதிர்ந்ததும் உள்ள அமைதி கிடைத்ததும் பொருளாதாரப் பிரச்சினை முறையாகத் தீர்ந்ததும் சலத்துக்கு இறையுணர்வும் வலுவடைந்தது. தீட்சிதலுக்கும் சிவுகுல நரசிம்மம் போன்ற நண்பர்களுக்கும் ஆர்வத்துடன் கடிதங்கள் எழுதி, அவர்களையும் வருமாறு அழைத்தார் சலம். டிசம்பர் முதல் தேதி, 1951 அன்று பசுமலை சுவாமி மரணமடைந்தார். ஜனவரி 1952 இல் தீட்சிதலு வந்தார். பகவானின் திருவுள ஆணையைக் கேட்டு, சலம் விரும்பியவாறு தாமும் நிலையாக அங்கு இருப்பதற்கு வருவதாகக் கூறி, தீட்சிதலு சென்று விட்டார். ஆனால் சென்ற பிறகு அவர் சலமும் சௌரீஸூம் ஏதோ மன பிரமையிலாழ்ந்து விட்டதாகவும், பகவான் காட்சி தந்ததைத் தம்மால் நம்பமுடிய வில்லையென எழுதிவிட்டார்! ''முதலாவதாக முக்தியடைந்த மகான்கள் மீளவும் பிறக்க மாட்டார்கள்,'' என்பது தீட்சிதலுவின் வாதம். இதற்குச் சலம் வேதனைப்பட்டு பதில் எழுதினார்: ''பகவான் சௌரீஸூக்குக் காட்சிதந்து, தான் இருப்பதாகவும், புராணங்கள் உண்மையெனவும், நீதி தர்மம் நிலைக்க வேண்டு மெனவும், மாமிச உணவு பயன்தராது எனவும் சொன்னால், இத்தனை ஆண்டுகள் நான் நம்பியவற்றுக்கு, எழுதியவற்றுக்கு அவர் கூற்று வீணானவையென, கடவுள் அல்லன் எனப் போகச் செய்தேனா? லீலாவையும் அவள் அழகையும் அவளுடன் என் தொடர்பு அனைத்தையும் விட்டெறிந்து விட்டார் இறைவன். எவையும் மிக்கதல்ல என்பதை நான் இல்லையென்றேனா? நம் மனதுக்கேற்பப் பேசினால்தான் இறைவனா? ஈஸ்வரன் உங்களுக்கு நேரடியாகக் காட்சிதர வேண்டுமா? எந்த விதமான காட்சியைக் காட்டினால் நம்புவீர்கள் நீங்கள்? சிந்தனை செய்யுங்கள். எந்தக் காட்சியைக் காட்டினாலும் அக்காட்சியில் சந்தேகங்கள் வராமலிருக்குமா? எங்களுக்கு இத்தனைக்காலம் வரிசையாக அனுபவத்தில் வந்தவை, எங்களின் மாற்றம், நாங்கள் சொல்பவை இவை ஏதும் உங்களுக்கு உண்மைக் காட்சியாக மாட்டா உங்களுக்கு! பகவான் எந்த உண்மைக்காட்சியை அளித்திருக்கிறார் உங்களுக்கு, கனவைத்தவிர! பிரமையில்லாத உண்மை தெய்வங்கள் எவருக்கு இதனைவிட என்ன செய்துள்ளன?'' (அக்டோபர் 13, 1952). 1953 இல் ஜல சூத்ரம் ருக்மணி நாத சாஸ்திரி அருணாசலம் வந்திருந்தார். அவரும், பிறகு

வந்த யாமிஜால பத்மநாபஸ்வாமி போன்ற பிற இலக்கிய வாதிகளும் பண்டிதர்களும் சலம் சொல்லிக் கொண்டிருந்த பகவான் தரிசனச் செய்தியை நம்பினார்கள். எத்தனையோ சம்பவங்களைப்பற்றியும் பகவான் காட்சி தந்ததைப் பற்றியும் பேசலானார்கள்.

1961 இல் சில பத்திரிகைகளில் ஜோதிடர்கள், 1962 பிப்ரவரி நான்கு, ஏழாந்தேதிக்கிடையில் எட்டு கிரகங்களின் சேர்க்கையால் பிரளயம் நேர விருக்கிறது என்றும் கடல் பொங்கிக் கரையோரத்தின் பெரும் பகுதியை நீர் சூழ்ந்து கொள்ளும் என்றும் எழுதத் தொடங்கினார்கள். சலம் தெய்வத்தன்மையடைந்த 'சௌரீஸை'க் கேட்டார், பிரளயம் நேருமா? என்று. ''நேரவிருக்கிறது. நண்பர்களுக்கெல்லாம் எழுதுங்கள். நான் கூறியவாறு அவர்கள் பாதுகாப்பாக இருந்தால் நான் அவர்களைக் காப்பாற்றுவேன்,'' என மறுவுரை கிடைத்ததாம். சலம் 'தன் வரலாற்றில்' எழுதினார்: ''இவையாவும் நடக்கவியலாதவை எனவும் செயலில் நிகழுமெனத் தோன்றவில்லை என அவர் கூறியவாறு எல்லாருக்கும் எழுதினோம். என் நண்பர்களாகட்டும், அவர்களனைவருக்குமே நான் ஒரு வெறிப்புரட்டுக்காரனாகத் தெரிகிறேன் என்பதை அறிவேன். ஆனால் பகவானின் போதனை களை நம்பி அத்தனை மாதங்கள் செயல்புரிந்திருக்கிறேன். ஆனால் பிரளயம் நேராதபடி நிறுத்திவிட்டேன் என்றார். எனக்கு தெய்வத்தின் கூற்றுக்களில் முழுவதுமாக நம்பிக்கை போய் விட்டது... ஒரு நாள் பகவான் வருத்தத்துடன் 'என்னைவிட்டு ஒதுங்கிவிட்டாயா?' எனக் கேட்டதும் அவருடைய பக்தனானேன். அன்று முதல் அவர் சொன்னவாறு சாதனை செய்துவருகின்றேன். அவரும் அபயமளித்துக் கொண்டிருக்கிறார். நான் அவரிடம் சரணமடைந்து ஊசலாடிக் கொண்டிருக்கிறேன். என் உடல் நலம் குறைந்து வருகிறது. நடப்பதற்குக் கூட இயலாமற் போய்விட்டேன்.'' (1972).

பிரளயத்தைப்பற்றி நடந்த இடைமறிப் பேச்சுக்கள் கடைசியில் பிரளயத்தை வரவிடாமல் இறைவனே நிறுத்தி விட்டாரென்ற சௌரீஸின் சமாதானம், இறைவன் அருள் கிட்டி யிருந்தவரென்ற நிலைமையை நகைப்பிடமாகச் செய்தது. சலத்தைச் சூழ்ந்திருந்த பண்டித நண்பர்கள் அகன்று போனார்கள். சலமும் பகவானைப் பற்றி அனைவருக்கும் கூறி, தமக்கு பதில் எழுதிய அனைவருக்கும் அறிவுரை புகட்டியும் வரவேற்றும் கடிதம் எழுதும் செயலை நிறுத்திக் கொண்டார் அதன் பிறகு.

'தெலுங்கு ஒளி சலம்' எனும் நூலில் ஸ்ரீ புராணம் சுப்ரமண்ய சர்மா இவ்வாறு விளக்கியுள்ளார்:

''பகவான் தரிசனம் கிடைத்தது என்பது ஒரு புதிர்.... சௌரீஸ் கொள்கையின்படி பகவான் அவர் அழைக்கும் போது வந்து பேசும்

குரு ஆவார். பகவான் அவருடன் ஒன்றான பிறகு இறைவன் காட்சிதந்தார். பகவானிடம் அவருக்கு ஆன்மிகத் தொடர்பு உள்ளது. இறைவன் வந்தார் என்றால் இறைவன் வேறு பகவான் வேறல்லர். சலம் இருந்த குழம்பிய மன நிலையில் இறைவன் தரிசனம் இல்லாமல் தப்பவியலாது. சலம் குடும்பத்தினர் ஒருவர் பின் ஒருவராக அடிபணியாமல் தப்பவியலாது. இந்தச் செயல் திட்டம் சலம் குடும்பத்தினர்க்கு அறவழி ஊக்கத்தை அளித்திருக்கலாம்... சௌரீஸ் தெய்வம் வந்து பேசுவது போன்ற குழப்ப நிலைக்கு, தீட்சிதலு பணியமறுத்தார். ரமணாசிரமம் குழப்பத்தில் சிக்கித் தடுமாற்ற நிலையிலிருக்கும் பொழுது, தெய்வம் வந்து மருள், அருள்வாக்கென்று சலத்தின் வீடு மற்றொரு 'ரமணஸ்தான்' ஆனதும், பக்தர்கள், சீடர்கள் ஏற் படலானதும், உற்சவங்கள் நடத்துவதும் ரமணாசிரமத்தினருக்கு இணையானதொரு போட்டிக்குக் காரணமாகிவிட்டது..."

சலம், சௌரீஸைப் பற்றி, அவர்களது பக்தியில், வழி பாடுகளில், ஆன்மஞானத்தில் குறைகாணத் தோன்றவில்லை. சலத்தின் மனநிலையிலும் பணத்தட்டுப்பாட்டிலும் நிலையற்ற தருணத்தில் சௌரீஸ் தெய்வம் வந்து அருள்வாக்குக் கூறல் தொடங்கியது. சலத்தின் வெளிப்படையான பிரச்சினைகளுக்கும், உடல் நலம் மற்றும் உள அமைதிக்கும் தீர்வு கிடைத்தது. ஆனாலும் சலம் அத்துடன் நின்றுவிடவில்லை. பகவான் சிந்தனையில் ஈடு பெறவேண்டிய அவர் உள்ளம், சௌரீஸின் அருள்வாக்கை ஆதாரமாகக் கொண்டு, மக்கள் போற்றுமாறு அவர்களைக் கவர்வதில் திரும்பியது. ஆன்மாஞான போதத்தைவிடப் பிரசாரம் அதிகமாயிற்று. அது மட்டுமன்று, படித்த மேதைகளும் கட்டுரையாளர்களும் வந்து பகவானைப் பற்றி எழுப்பிய வினாக்களின் போக்கும் இனிய உரையாடலாகக் காணவில்லை! அவற்றுக்கு ஆர்வத்துடன் விடையிறுத்த போக்கும் அவ்வாறே. இவர்களில் விஸ்வநாதா, நண்டூரி, ஸ்ரீஸ்ரீ போன்ற கவிஞர்களின் முற்பிறப்பினைப் பற்றியும் அவர்களின் கவியாக்கும் ஆற்றலைப் பற்றியும் பகவானுடன் ஒப்பிட்டுப் பேசலானார். சலத்திடமிருந்த அகங்காரம் புதிதாகப் பொருத்திப் பேசும் இவ்விளக்கங்களுக்கு பிரளயத்தைப் பற்றி வாக்கு நகைப்பிடமானதுடன் திரைவிழுந்தது! கடைசியில் சலத்துக்குக் கிடைத்தது என்ன? என வினவினால், வாழ்நாளெல்லாம் காதல் காதலென ஏங்கித் தவித்துப் பெற்றது ஆணவம், காமம், பகைமை உணர்வுதான். எந்தக் காதலை அமைதியுடன் பெறவியலாமற் போனாரோ, அந்தப் பற்றினை, அச்ச மற்ற நிலையை மகள் சௌரீஸ்வாயிலாகப் பெறலானார். சலம் வாழ்நாளனைத்தும் தாம் பிறரிடம் கண்டவாறு காதலித்ததாகவும், தொடர்பு கொண்ட தாகவும், போற்றப்பட்டதாகவும் தெரியலானதே தவிர்த்துத்

தம்மைக் காதலித்தவர்களின் காதலைக் குறிப்பிட்டு அதற்குத் தம்மை அர்ப்பணித்துக் கொண்ட சாயல் ஏதும் காணப் பெறாது. அதற்கு அவருள்ளிருந்த ஆணவம் தடை! கிரகங்களின் சேர்க்கையால் பிரளயம் நேரவிருந்ததைப் பற்றிச் சலம் சொன்னவற்றைப் பாருங்கள்:

''எனக்கு பகவான் அருள் கூற்றில் முழுமையாக நம்பிக்கை போய்விட்டது. ஒரு நாள் பகவான் வருத்தத்துடன் 'என்னை விட்டு விலகிப்போனாயா?' எனக் கேட்டபோது அவருடைய பக்தனானேன்.'' அவ்வாறு கேட்டது சௌரீஸா பகவானா? இந்த சந்தேகம் அவருக்குத் தீரவில்லை. அது நமக்கும் தீராது!

சௌரீஸின் எண்ணங்கள், கருத்துக்கள் துணையாயிருக்க அருணாசலத்தில் சலம் செய்த தாகூரின் கவிதை மொழி பெயர்ப்புகளில் கீதாஞ்லி, உத்தாரணா, பல சேகரம், காணிக்கை, வனமாலி, மத நூல்கள், சுபவார்த்தைகள், பகவத் கீதை, ஏசுவின் வாழ்க்கை, நிர்விகல்பம் குறிப்பிடத்தக்கவை. இவையன்றி தமது 'தன் வரலாற்றை'யும் தமது நண்பர்களைப் பற்றிய வேறு நூல்களையும் எழுதினார். தமது கடிதங்களைத் தொகுதிகளாக வெளியிட்டார் சலம். இறுதிவரையிலும் எழுத்தாளராகவே வாழ்ந்தார் என்பதில் ஐயமேதுமில்லை.

1974 ஜூலையில் சலத்துக்குப் பட்ச வாதம் வந்துவிட்டது. அது இரண்டாவது முறை. அதற்கு முன் ஒரு முறைவந்த போது சௌரீஸ் கொடுத்த விபூதியுடன் டாக்டர் கொடுத்த மருந்துகளாலும் புறா ரத்தம் பூசியதாலும் பெருமளவுக்கு நலமடைந்தது. இரண்டாவது தடவைகூட சௌரீஸ் சலத்தின் மீது கைவைத்து அப்படியே பதினைந்து நிமிஷங்கள் தொட்டபடியே ''நம்பிக்கையை மட்டும் இழக்காதே. எல்லாம் பகவான் பார்த்துக் கொள்வார் அப்பா'' என்று ஆறுதல் கூறினாள். அதன்பிறகு சலம் எழுந்து உணவருந்த நடக்கலானார். உணவுக்குப் பிறகு 'மருகேலரா' எனும் தியாகராஜ கிருதியைக் கூடப் பாடினார். மறு நாள் காலை டாக்டர் பரிசோதனை செய்து அவருக்குப் பட்சவாதம் இல்லையெனக் கூறினார்.

1975 ஏப்ரல் பதின்மூன்றாம் தேதி அநசூயா என்ற பூர்வாசிரமப் பெயர் கொண்ட ஜில்லெள்ளமூடியம்மா ஆந்திர நாட்டில் புகழ் பெற்றிருந்த யோகினி. அவர் தென்னாட்டுச் சுற்றுப் பயணத்தின் போது, அருணாசலம் வந்தார். சலம் அவருக்கும் அவர் குழுவினர்க்கும் விருந்தளித்தார். அவ்வம்மையாரிடம் சலம் கூறினார். ''ஒரு மாபெரும் சன்யாசினி ஒரு பாவியிடம் வந்திருக்கிறீர்.''

சலத்துக்கு அவ்வம்மையார் புத்தாடைகளைப் பரிசளித்து அவரை அன்புடன் அருகிலமரத்திக் கொண்டார். அவர் திரும்பிச் செல்கையில் சலம் சொன்னார். ''நான் எத்தனையோ ஆண்டுகள் இறைவனைத் தேடிக் கொண்டிருந்தேன். இன்று எங்கே உனது பகவான் என எவராவது கேட்டால் சொல்வது எளிது. காட்டுவதென்பது அதைவிட எளிது,'' என்று கூறி அவ்வம்மையாரைக் காட்டிச் சலம் வணங்கினார். அவ்வம்மையாருக்கு ஏப்ரல் 21, 1976 இல் எழுதிய கடிதத்தில்:

''நான் ஒரு மூலையில் மிகவும் மௌனமாக விழுந்துகிடக்கின்றேன். முதுமையில் எந்த அசைவுமில்லாமலுள்ள என்னை மறக்காமல், திரும்பத்திரும்ப உங்கள் கருணை உள்ளத்தால் எவரோ ஒருவர் வாயிலாக எத்தனைமுறை அன்பு வார்த்தைகள் அளித்திருக்கின்றீர்கள்! இப்படிப்பட்ட உங்கள் கருணைக்கு நான் என்ன அளிக்க முடியும், என்ன செய்வேன் என்றறியாமல் தடுமாறிக் கொண்டிருக்கிறேன். நீங்கள் எத்தனை வகைகளில், எத்தனை முறை எனக்கு ஞான விழிப்படையச் செய்தும் கண் திறக்காமல் உள்ள எனது பேரிருளை விரைவிலேயே உங்கள் திருவடிகளில் கொண்டு சேர்த்து விடுகிறேன். அதன் பிறகு உங்கள் விருப்பம்,'' என்று அர்ப்பணித்துக் கொண்டார் தமது பக்தி சிரத்தையுடன்.

இறுதிமுறையாக பிப்ரவரி 24, 1978 ஆம் தேதி ஜில்லெள்ள மூடியம்மையாருக்குச் சலம் எழுதிய கடிதத்தில் ''நான் படும் துயரம் எனக்கு உரியதுதான். அல்லாமல் அதற்குக் காரணம் நான்தான் என அறிந்து கொள்ள வியலாதிருக்கிறேன். தப்பிக்கும் வழிவகை உங்கள் புனிதக் கரங்களிலிருந்தாவது கிடைக்காதா?'' என எழுதினார். இச் சொற்களில் சலம் முமுட்சுவெனும் துறவு நிலையடைந்து வருவதை உணரவியலும்.

1979 ஏப்ரல், மே மாதங்களில் காய்ச்சலும் கபமும் வருத்த வேதனைபட்டார் சலம். வயதானமையாலும் பேசவுமியலாத நிலையில் பலங்குன்றியமையாலும் எங்கோ பார்த்தவாறு இருப்பார். ஏதேனும் படித்துக் கேட்கச் செய்தால் பொருளுணர்ந்து கொண்டவரைப் போலிருந்தார். கடைசி நாள், மே நான்காம் தேதி, தம்மைப் பார்க்க வந்த உறவினர்களை அடையாளங்கண்டு அருகிலிருக்கச் செய்தார். எதிர் மூச்சு வாங்கலானது. கண்களினின்று நீர் வழிந்தது. ஆயினும் டாக்டர் சில நாட்கள் அவ்வாறிருக்கலாமென்றார். டாக்டர் சென்ற சில நிமிஷங்களில் சலம் உடலை விட்டகன்றார். சௌரீஸ் அப்போது அருகிலிருந் தாள். அன்று வெள்ளிக்கிழமை இரவு ஒன்பது மணி ஐந்து நிமிஷம் 1979 மே நான்காம் தேதி.

சலத்தை 1979 மே ஆறாம் தேதி ஞாயிற்றுக்கிழமை ஒன்பது மணிக்கு, சவப்பாடை கட்டாமல் அவரைச் சக்கர நாற்காலியில் அமர்த்தி எடுத்துச் சென்று தகனம் செய்தார்கள். பாடைகட்டுதல் போன்ற பிற சடங்குகள் தமக்கு வேண்டாமென்பது சலத்தின் கோரிக்கை. அதன்பிறகு அஸ்திகளைச் சேர்த்துப் புதைத்துச் சமாதி கட்டினார்கள்.

இலக்கியப் படைப்பாளர்

''கலைஞர்கள் அமைதியிழந்து அடித்துக் கொண்டார்கள் இவர்களுக்குப் பொறுமை குறைவு. வாழ்க்கைக்கு அவர்களிடையில் ஒருமைப்பாடமையாமற் போனமையே அவர்களது கலைவளத்துக்கு மூலம்: எளியோர்கள் எளிதாகச் செய்து கொள்ளக்கூடிய சமன்பாடு அவர்களாலாகாது, அவர்களிடையில் தோன்றும் கொள்கை வேறுபாட்டினால்'' (சலத்தின் கடிதம் 1944)

''பெண்ணாசை தவிர்த்து வாழ்க்கையில் எனக்கு வேறு பொருளேதுமில்லை. எப்போதுமில்லை. காதலே போதுமென நான் திருப்தியடைந்தேன். இதனுள்ளே ஆன்மிகப் பேராவலை நான் பெறக் கூடுமானாலன்றி, வாழ்க்கை இப்படியே முடிந்து விடும். நான் காதல் வயப்படாத சமயங்களில் வாழ்ந்தவனாகத் தெரியவில்லை, காதலைப் பொருத்தமான கருத்தாழமிக்க பொருளில் ஏற்றுக் கொண்டாலும். இனி மேலும் எந்தக் காதல் வாய்ப்பு வரவுள்ளதோ என்ற எதிர்பார்த்தலுடனேயே வாழ்ந்து வருகிறேன். அது தவிர எதற்காக வாழவேண்டும் என்று எனக்குப் பொருள்படவில்லை.'' (சலத்தின் கடிதம்;, 1944.)

''எனது அழகாராதனை, என் பற்றுதல்கள் எல்லாம் என் கட்டுரைகளே கூறும்.'' (தன் வரலாறு.)

''இளமையிலிருந்தே எனக்குக் கதைகளிலும் புத்தகங்களில் ஆவல் அதிகம். புராணங்கள் மட்டுமின்றி என்னென்னவோ காவியங்களைப் பாதி பொருளறிந்தும் அறியாமலும் படித்துத் தீர்த்தேன். அவற்றில் சிறப்பாகக் 'காதல் சுவை'க் கட்டங்களைத் தேடியபோது... வெங்கடராய சாஸ்திரியின் 'பிரதாபருத்ரீயம்,' அப்பாராவின் 'கன்யா சுல்கம்' எனக்கு மிகவும் பிடித்தமானவையாகத் தென்பட்டன. அதன் உரைநடை, மொழி நடையில் என் உள்ளுணர்வுடன் ஒன்றி நிற்கின்றது. நான் உரையாக்கம் செய்கையில் எனக்குத் தெரியாமலே, பேச்சு மொழியிலேயே எழுதினேன். எனது முதல் கதைகளை புத்தக நடையில் எழுதினேன். உண்மையில் அந்நாட்களில் மொழிப்புரட்சி என்றொன்று உள்ளதென எனக்குத் தெரியாது. தீட்சிதலு சொல்லியே அறிந்தேன். மொழி எவ்வாறு மாற்றமடைய வேண்டுமென எனக்குத் தெரிவிக்க விரும்பியவர், கணவனுக்கு எப்படி.

முத்தமிடவேண்டுமென எண்ணியதற்கு ஒப்பாகும். 'ஆனால் இந்தச் சலம் ஒருவகையாக அதைப் புதைத்துப் புதுமை செய்தான்'. என் மொழி நடையில்தான் அவர்களுக்கு என்ன பயமோ! மேலும் என் மொழி நடை அச்மில்லாமல், கூச்சமின்றி, நடுக்க மற்ற பழைய சுவர்களைத் தகர்க்கும் ஒரு தீவிரவாதி, ஒரு தலைமையான மொழி நடையாளரின் கைகளில் உருவாகியது. மிக விரைவாகவே இலக்கியப்படைப்புக் கொள்கைகள் அனைத்தும் சிதைந்து போயின சலத்தின் மொழி நடையில். எழுத்துக்களில் அத்தனை வேகம், அத்தனை தவிர்க்கவியலாத நிலை, அத்தனை நடுக்குறும் கவர்ச்சி நிறைந்திருந்தன. ஓரிருவரே எதிர்த்துச் சமாளிக் கவியலாமல் தோல்வியடைந்து, என் மொழிநடையையே ஏற்கலாயினர்.'' (சலம், 'தன்வரலாறு'.)

சலத்தின் உரையாக்கங்கள் அவருள்ளிருந்த அமைதியின்மை, நாடிய நாட்டத்திலிருந்து உருவானவை. அதனாலேயே அவ்வுரை யாக்கங்களில் ஒருமைக் கோட்பாடு, முறையான வளர்ச்சி மாற்றம் காணக்கிடக்கின்றது. பெண்மையின் இயல்பை, பெண்ணின் அழகுச் செல்வத்தை ஆராதித்துக் கவிபாடும் வல்லவர்கள், கட்டுரையாளர்கள் எத்தனையோ பேர் உள்ளனர். சலம் தமது உரையாக்கங்களில் பெண்ணை ஒரு கருவியாகப் போற்றாமல், பெண்ணை மையமாக வைத்து, அவளது மெய்ப்பாட்டினை, உள்ளக்கிடக்கையை, நாட்டத்தை, செயல்களை, துயரங்களை உருவகமாக்கினார். அவரின் நவீனங்களில், கதைகளில், தலை விகளேயன்றித் தலைவர்கள் காணப்பெறார். சலம் உரையாக் கங்களில் படிப்பவரின் மனக்காட்சியைப் பெண் பாத்திரமே கவர்ந்தீர்த்தது. அவள் வாயிலாகவே சலம் தம் கருத் தோட்டங்களைக் குறிப்புணர்த்தலாலும் உருவகங்களாலும் தெளிவுறச் செய்கிறார்.

சலம் கண்ணோட்டம் நான்கு பகுதிகளாக அவரது உரையாக் கங்களில் காணக்கிடக்கின்றது. இது காறும் இந்நூலில் 'வாழ்க் கை'ப் பகுதியில் விவரித்தவாறு, சலத்தின் கண்ணோட்டம், உரையாக்கம் உள்ளிடத் தன்னுரிமைக் காதல் கோட்பாட்டினை (free love doctrine) ஏற்படுத்திக் கொண்டமையால், அதனைத் தெளிவாக ஆராய்ந்து அறிய நேர்கிறது. தமது உரையாக் கங்களுக்குச் சமுதாயம் கட்டுப்பட நேர்ந்ததால், சலத்தின் உள்ளாழ்ந்த செயலாண்மை மேலும் எழுச்சியுறலாயிற்று. இவ்விரண்டாம் பருவக் கட்டத்தில் சமுதாயத்திலுள்ள கேடு களை, போலித்தனத்தை, கீழ்த்தரத்தை, பெண்களுக்கிழைக்கப் படும் தீங்கினை, மணவினை விளைவுகளின் உண்மைத் தோற்றத்தைச் சலம் தமது உரையாக்கங்களில் வெளிப்படச் செய்தார். இகழ்தல், நிந்தனை, கடுஞ்சொல், புறத்தோற்றம் இவருடைய உரையாக்கப்படைப்பில் முதலிடம் பெற்றன.

மரபுவழிவாதிகளை மட்டுமின்றி,கற்பனைவாதிகளின், உருவகக் கவிஞர்களின் 'மூடத் தன்மையை', எழுத்தாற்றல் மிக்கோரெனப் பெயரும் புகழும் பெறவேண்டுமென முயன்றவர்களின் வலிமையற்ற நிலையையும், வெட்கத்தகுந்த போக்கையும் கூடச் சலம் மிகக் கடுமையாக விமரிசனம் செய்தார். சலத்தின் சகிப்பற்ற தன்மை, அமைதியின்மை பொங்கி வெளிப்பட்டிருந்த நிலை இது. மூன்றாம் பருவக் கட்டத்தில் சலம் தத்துவயியலாளராக, நிறை சிந்தனையாளராக, மனித இயல்புகளை வரவேற்று உணர்ந்து ஏற்றுச் செயல்புரிபவராகக் காட்சியளிக்கின்றார். முடிவான பருவக்கட்டத்தில் அவர் பெரும் பக்தராகவும், இறை வழிபாடியற்றுபவராகவும், கருணை நிறைந்த முகத்தவராகவும் அவர் செய்த உரையாக்கங்கள் காட்டுகின்றன.

எளியமக்களின் விருப்புக்குரிய இலக்கியத்தில் தெலுங்கு வழக்கு மொழியை மிகவும் வலிமைபெற்றதாகச் சீரமைத்து, அதற்கு வழிகாட்டிய முதலாமவர் என்ற நிலையைப் பெற்றார் சலம். தமது நடையைக் குறித்தும் மொழியின் பிடிப்புத் திறமையைக் குறித்தும் சலம் 'தன் வரலாற்றி'ல் தாமே கூறும் கூற்றுக்கள், மேலே கூறப்பட்டவை. அவை புகழ்ச்சிக்காகவல்ல; எழுத்துக் கெழுத்து உண்மை. அவருடைய ஏற்காதவர்களும் ஒப்புக் கொண்டவை!

நவீனங்கள்

சலத்தின் முதன் முதலான படைப்பு 'சசிரேகா' நவீனமாகும் (1921). வீரேசலிங்கத்தின் 'ராஜசேகர சரித்திரம்', வேங்கட பார்வதீஸ்வருலுவின் வங்கமொழித் தொடர் கதைகளின் மொழி பெயர்ப்புகள் ஒரு வகையான எளிய நடை இலக்கியத்தை வளர்ச்சியடையச் செய்தன. சலம் தமது முதல் தொடர்கதையை அத்தகைய எளிய நடை இலக்கியமாகவே எழுதினார். பின்னரான உரையாக்கங்களனைத்தும் பேச்சுமொழியில், கல்விபுகட்டும் நடையில் எழுதினார். 'சசிரேகா' நவீனத்தைப்பற்றி 'வாழ்க்கை' அத்தியாயத்தில் சற்று விரிவாக விளக்கியமையால், மீளக் கூறுவது தேவையற்றது. அப்புதினத்தில் 'தனியுரிமைக் காதல் கொள்கை' வலியுறுத்தப் பெற்றமை தலையாய இடம் வகித்தது. பாலுணர்வு பற்றிய கருத்துக்களில்; ஒன்று: வெறும் விலங்குக்கு ஒப்பான 'காமம்,' இரண்டு: இதயம் கனிந்த நிலையில் அழகு நலம் போன்ற பண்புகளின் கவர்ச்சியில் முழுக்கமிடும் 'மோகம்,' மூன்று: வெளிப்பாடான வகையில் வாழ்க்கையுடன் இசைந்து, அப்போதைக் கெனக் காணும் கவர்ச்சியனைத்தையும், உள்ளக் கிளர்ச்சியையும் வளர்த்துத் தொடர்புறு தோற்ற நிலையடையும் 'பிரேமை' ஆகிய மூவகையும் உருவகமாக்கப் பெற்றன.

மேலை நாட்டு இலக்கியப் படைப்பின்தாக்கத்துடன், வங்க மொழி இலக்கியம் மீதான ஊக்கம், தெலுங்கு இலக்கியத்தில்

வளர்ந்து அன்று தோன்றியிருந்த கற்பனைக் காதல் (romanticism) வாதத்தின் தலையாய அச்சம் 'பிரேமை'யுடன், இனிமையான கற்பனைக் காவியத்துடன் இறக்குமதியான 'காதல்' இருவகையாகப் பிரித்துக் காணப்பெற்றது. முதலாவதாக, அரிய நிலையில் தோன்றும் 'சிருங்காரம்' எனப் பெறும் பெட்ரார்க் காதல் (Petrarchan love) இதனில் உடல் தொடர்பான உறவு, இரு நிலையில் ஒன்றுபடல் குறிக்கோளன்று. அது நிகழவியலாத தோர் சூழ்நிலை. காதல் காதலுக்கெனவேயன்றி உடல் சுகம் அதன் நோக்கமில்லை. இக்காதல் ஆண்மகனை வேறுபட்ட உணர்வு கொள்ளச் செய்து, மற்ற செயல்களுக்கு முன்னோடியாக்குகிறது. அவ் ஆடவனின் விருப்பத்துக் குரிய பெண், வேறுபட்டுப் போனாலோ அல்லது பிறன்மனைவியாக நேர்ந்தாலோ, தமக்குக் கிட்டாதவளாகி விடுகிறாள். ஆனாலும் அவள் சீலமிக்கவள், அழகு நிறைந்தவள், உயரிய பண்புடையவள். இரண்டாவதாக, 'தார்மிகச் சிருங்காரம்'. ஆண் பெண் ஒருவரோடொருவர் இணையாத கவர்ச்சியுடன், பற்றும் பாசமுமிக்கவராகி, தம்பதிகளாக வாழ்க்கை புரிதல். இத்தகைய பேரன்பினால் எத்தனை இழப்பும் துயரும் நேரிட்டாலும், தியாகம் புரிந்து அவர்கள் தாங்கிக் கொள்வார்கள். இக்காதல் இனிமையாக முடியலாம். அன்றைய இலக்கியத்தில் விரிவாக இடம் பெற்றிருந்த மேலிரண்டு வகைக் காதலை ஒப்புக் கொள்ள மாட்டாமல், சலம் பெண்ணையும் ஆணையும் தனது தோற்றத்தைப் பொறுத்து, ஒத்த எண்ணங்களையும் பொறுத்து நடந்து செயல்புரிகிறார்களென்று, 'தன்னுரிமை'க்குத்தான் முதலிடம் என்று மதித்து அதன் அடித்தளத்தின் மீது 'காதல்' காட்சியை விளக்கியுரைத்திட முயற்சி செய்தார். 'சசிரேகா', அதற்கு அடுத்ததான 'தெய்வம் தந்த மனைவி' *(1923)* புதினங்களிலுள்ள விளக்கம் இதுதான்.

'சசிரேகா'நவீனத்துக்கு *1926* இல் 'முன்னுரை' எழுதிய ஸ்ரீ சிவசங்கர சாஸ்திரி இத்தொடர்கதையின் சிறப்பியல்பு, காதல் கோட்பாட்டின் அடித்தள அமைப்பு 'வெளிப்படை' வாதமாக உள்ள தென்று அந்நாளிலேயே குறிப்பிட்டிருந்தார். சமுதாய முறைகளை விடத் தனிமனிதனின் அறநெறிகள் உயர்ந்தவை. சமுதாயம் தனது நிலைமைக் கேற்ப அப்போதைக்கு ஏதோ ஒரு செயல்பாட்டினை வகுத்துப் பின்னிக் கொள்கிறது. சமுதாயம் உயர்ந்ததா தனிநபர் உயர்ந்தவனா எனும் கேள்வி உறுத்திக் கொண்டேயிருக்கிறது... சமுதாய வழிமுறைகளை ஒருவனின் உண்மை வாழ்வில் ஏற்கத் திணிக்கச் செய்யும் மனிதர்களை தர்மத்துக்குப் புறம்பானவர்களேயன்றி, புரட்சியாளர்களாகக் கருதுவது ஒப்புக் கொள்ளத் தக்தன்று. சாதனைமிக்க இக்கதாசிரியர் உண்மை உணர்வுடன் கூடியவகையில் காதல் தத்துவத்தை எடுத்துக் காட்ட முயற்சித்திருக்கிறார்... இக்

கதையின் தலைவி எளிமையான பெண் அல்லள். இவள் காதலே உயிர் எனக் கொண்டவள். அதனாலேயே தனக்குத் தகுதியான காதலனுக்கென எத்தகைய தியாகத்தையும் செய்யலானாள். தன்னுரிமையில்லாத எளிய பெண்களைப் போன்ற பதிவிரதை அல்லள் இவள். தன் சொந்த நெறிகளுக்கொப்ப இவள் சற்றும் ஐயமின்றிப் பதிவிரதையே.''

இந்த நவீனத்தில் சலம் 'காதல் தத்துவத்தை' எடுத்துக் காட்டாக்கியிருக்கிறார் என்பதைவிட, 'தேடிக்காண' முயன்றா ரென்பதே பொருத்தமானது. இந்த நவீனத்தில் கதையைவிட, சித்தாந்த விளக்கமே தலையாய இடம் வகித்திருந்தது. கதையின் இறுதியில் இருபதாம் அத்தியாயத்தில் ஆசிரியரே கதையையும் சசிரேகாவின் கண்ணோட்டத்தையும் தொகுத்து இவ்வாறு விளக்கியுள்ளார்.

''முதலிலிருந்தே சசிரேகாவின் இயல்பு அழகினை நாடிக் கொண்டிருந்தது. அழகு மிக்க கண்கள், வனப்பு மிகுந்த உடல் வளம், மென்மையான காதல் இதயங்கொண்ட கிருஷ்ணனைக் காதலித்தாள். காதலும் அழகுமில்லாத ஒருவனைத்தனது தாய் தந்தையர் மணக்கச் செய்ததனால் அவள் அவர்களது கட்டளை களை மீறலானாள். தன் மனதுக்கொத்த கிருஷ்ணனைக் காதலித் தாள். தன்னையறியாமலே தனது வாழ்வை நில வொளியிலும் பறவைகளின் இனிய நாதத்திலும் ஓடும் நீர் ஓசையிலும் மலர்களின் நறுமணத்திலும் மென்மையான பூங்காற்றிலும் அர்ப்பணித்தாள். சௌந்தர்ய தேவதையின் அரவணைப்புக்காக நீதியை, மரியாதையை, சமுதாயத்தை, தாய் தந்தையரை, வீட்டை, ஏன், கணவனையும் பலி கொடுத்துவிட்டாள். கடுமையான இருள் கவ்விய மனவெழுச்சிச் சுழலில் கொதித்தெழுந்து, மலரின் மணத்தினுள், எரியும் நட்சத்திரங்களின் ஒளியின் கீழ், ரத்தம் கொதித்துப் பொங்கச் செய்யும் இனிமையான இசையில், வாழ்வை ஒரு கண நேரத்தில் கொடுமையாக இழக்கச் செய்யும் சுந்தரராவ் காதல் கனலினுள் எரிந்து போகிறான். வாழ்க்கை சாம்பலாயிற்று. இதயம் பெரும் புண்ணானது. கொப்புளங்கள் எழும்பின. அமைதி, அமைதி, அமைதி. ராமராவின் காதலில், ஆன்மிக அழகுணர்வில் அவள் அமைதியை நுகர்ந்தாள். ஆனால் அவன் அதற்குக் கைம்மாறாக எவருமே கேட்காத நிபந்தனையைக் கோரினான். தனது உரிமையை விட்டுக் கொடுக்க வேண்டு மென்றான்... வேண்டியது அமைதியன்று. தேவைப்பட்டது அழகு ஒன்றே, அழகு. கிருஷ்ணனிடமிருந்து எத்தகைய உடல் சுகத்தைப் பெற்றாளோ, சுந்தரராவிடமிருந்து எந்தக் காதலைப் பெற்றாளோ, அந்த இனிய எழிலே இனியும் தேவையாகிறது. இனியும் வேண்டலானது. நிலையாக உயிர் உள்ள நாளளவும் தேவை

யாகிறது. ராமராவிடமிருந்து ஆன்மிகப் பேரெழிலைக் காதலித்தாள். ஆனால் அத்துடன் மன நிறைவு கிடைக்கப் பெறுவாளா?

''சசிரேகைக்கு அழகுணர்வே பெரிய அறம், வேறு நீதியில்லை. ராமராவுக்கு நேர்மையே தலையாயது, நேர்மையில் தன்னிடம் குறையிருந்திருந்தால் ராமராவ் மிகவும் வருத்தமடைந்து போவான்....

''சசிரேகாவின் நீதி அழகு நிறைந்த ஆன்மாவிலிருந்து கேட்கின்ற ஆனந்த வெள்ளம். ராமராவுக்கு அதன் பொருள் தெரியாது. அதனாலேயே மணவினையில் அவனுக்கு அத்தனை பற்றுதல்...

''சமுதாயம் சசிரேகாவின் கருத்தோட்டத்தில் எந்த மேன்மையையும் அடைய வில்லை. புதிய கருத்தோட்டங்களுள்ள ராமராவே அவளுடைய எண்ணங்களை மன்னிக்க இயலாமல் போனான். இன்னும் அவளுடைய ஆசை எங்கே?...''

சசிரேகாவின் பிரச்சினைக்கு இறுதியான விளைவு இறப்பே. அவளுடைய பிரச்சினை யாது? சலத்தின் கருத்து விளக்கப்படி சசிரேகா கிருஷ்ணனிடம் காதல் சுகத்தையும், சுந்தரராவிடம் காதல் தீயையும், ராமராவிடம் காதல் அமைதியையும் கண்டறிந்தாள். இம்மூவகையிலும் காதல், அழகுடன் உள்ளாழ்ந்த பிணைப்பினைப் பெற்றாள். இதற்குத் தன்னுரிமை இடையூறு. காதல் அமைதிக்கென்று திருமணவினைகளில் தன்னுரிமையைப் பலியிடநேரின், அழகுணர்வு போன்ற பிற அனுபவக்காட்சிகள் தொலைவாகிவிடும். தன்னுரிமையில்லாதது அழகுணர்வாக ஆகநேராது; அது வாழ்வுமாகாது. ராமராவின் காதல் நேர்மைக்கும் கடமைகளுக்கும் கட்டுப்பட்டது. அவன் சசிரேகாவின் தன்னுரிமைக் காதலுணர்ச்சியை அறியவியலாமற் போனான். 'சசிரேகா' தொடர்கதை தெலுங்கில் தலைசிறந்த எண்ண அலைகளின் முதல் காவியமாகும் (novel of ideas).

'தெய்வம் தந்த மனைவி' புதினக்கதையில் சித்தாந்த பூர்வமான மேற்சொன்ன பிரச்சினையை, சமுதாயநடை முறைகளை, உலகத்தார் கண்ணோட்டத்திற்கிசைந்தவாறு மீளவும் விளக்கிக் காட்டினார் சலம். 'சசிரேகா'வில் தேடுங் கண்ணோட்டம், உள வெளிப்பாடு காதலாக மிளிர்கிறது. 'தெய்வம் தந்த மனைவி'யில் தெளிவுறக் காட்டப்பெறுவது தனிநபர் உரிமை. முதல் தொடர்கதையிலுள்ள உள்ளக் கருத்தாழ்ந்த பாங்கு (Subjectivity) இரண்டாம் கதையில் இல்லை.

ஜமீன்தாரக் குடும்பத்தைச் சேர்ந்த பத்மாவதி, நடுத்தர வகுப்பினைச் சார்ந்த ராதாகிருஷ்ணா இளம் வயது நட்பினர். பத்மாவதியைத் தன் பத்தாம் வயதிலேயே அம்மானான நியாயமூர்த்திக்கு மணம் முடித்தனர். இருபத்தைந்து வயதான

நியாயமூர்த்தி மேற்படிப்புக்காக இங்கிலாந்து செல்கிறான். இளம் வாலிப வயதில் அடியெடுத்து வைத்துள்ள ராதாகிருஷ்ணாவும் பத்மாவதியும் மீளா நட்பு கொண்டு, உறவாடலானார்கள். ''உனக்காக எத்தனை பெரிய செயலையும் செய்வேன்,'' என்கிறான் ராதாகிருஷ்ணா. ''பெண்கள் எதற்காக என்று எண்ணு கிறாய்! வாழ்க்கை எவ்வளவு உயர்வானது, மேலானது என்று ஆண்களுக்குத் தெரியச் செய்வது. ஆண்களைப் போற்றி ஊக்கப்படுத்த வேண்டும். வானுலகுக்குக் கொண்டு செல்ல வேண்டும். உயர்ந்த பணிகளுக்கு, சிறப்பான நோக்கங்களுக்கு, மேலான எண்ணங்களுக்கு ஊக்கமூட்ட வேண்டும்....'' என்றாவது பத்மாவதி ராதாகிருஷ்ணனிடமிருந்து நாட்டுப்பணிக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொள்ளுமாறு உடன்பட்டு வாக்குறுதி பெற்றாள். ''என் பத்மாவதி எனக்கு தெய்வம் தந்த பத்மாவதி'' என மகிழ்கிறான் ராதாகிருஷ்ணா.

இங்கே சலம் கற்பனைவாதமாகத் தொடங்கிக் காதல் கோட் பாட்டினைப் பெட்ரார்க்கின் காதலாக உருவகப் படுத்தினாலும், பத்மாவதி ராதாகிருஷ்ணாவின் பின்னால் நிகழும் தொடர்பில் இயல்பாக அவர்கள் உடலாலும் ஒன்றானதாகச் சித்தரித்திருந்தார். காதலித்தவர்கள் உடலளவில் தொலைவாக இருத்தல் வேண்டும் என்பதைச் சலம் ஒப்புக் கொள்ளவில்லை! இதனிடையில் பத்மாவதியின் கணவன் நியாய மூர்த்தி திரும்பி வந்து சேர்ந்ததுடன், ராதாகிருஷ்ணாவுக்குப் பத்மாவதியைத் தன்ன வளாக்கிக் கொள்ளவேண்டுமென்ற ஏக்கம் தீவிரமாகிறது. பத்மாவதி சொல்கிறாள். ''ராதா, நான் என்னவளாகவே இருக்கிறேன். ஒருவருக்கு உரியவளாகிவிட எனக்கு விருப்ப மில்லை. ஏன் ஆக வேண்டும்?'' சசிரேகாவைப் போன்றே 'தன்னுரிமைக் காதலு'க்குத் தலையாய மதிப்பளிக்கிறாள் பத்மாவதி. ராதாகிருஷ்ணாவிடம் நிலையாக வந்து சேர்வ தென்பது, கணவனை விட்டு அகன்று செல்வதென்பது அவளுக்கு விருப்பமில்லாதது. அப்படிச் செய்தால் ஒருவரோடொருவரின் கவர்ச்சி குன்றிப் போகுமெனவும், ராதாகிருஷ்ணனின் வாழ்க்கை நாட்டுப் பணிக்கென்றில்லாது குடும்ப ஈடுபாட்டில் பயன் பெறாமல் போகுமெனவும், தான் தொலைவில் இருப்பதனால் அவனுடைய வாழ்வின் மகிழ்ச்சிக்குத்தான் துணையாயிருக்க நேராதெனவும் பத்மாவதி விளக்குகிறாள்.

நியாய மூர்த்தி செயலூக்கமிக்கவனானமையால், பத்மாவதி விருப்பத்துக்கேற்ப அவளுக்குத் தனியான வசதிகளைச் செய்து வைக்கிறான் தனது இல்லத்தில். இதற்கிடையில் ராதா கிருஷ்ணனுக்குத் தந்தையார் திருமணம் செய்து வைக்கிறார். ராதாகிருஷ்ணாவும் ஐந்தாறு ஆண்டுகள் இங்கிலாந்து சென்று திரும்பினான். திரும்பிவந்தபின் பத்மாவதியைச் சந்திக்கத்

தொடர்கிறான். நியாய மூர்த்திக்கு, பத்மாவதி ராதாகிருஷ்ணவின் நட்பினைப்பற்றித் தெரியுமேயன்றி, அவர்களது உரிமைக் காதல் தெரியாது. ஒரு நாள் எதிர்பாராதவாறு தெரிந்துபோகிறது. நியாயமூர்த்தி கணவன் என்ற தனது பொறுப்பை நிலைநிறுத்த, பத்மாவதிக்குக் கட்டுப்பாடுகளை விதிக்கிறான். அவனுக்குச் சமுதாயம் துணையிருக்கிறது. பத்மாவதி மணவினைகளுக்குக் கட்டுண்டவளாகி நியாயமூர்த்தியிடம் மகப்பேறுகளைப் பெறுகிறாள். ராதாகிருஷ்ணாவும் கட்டுப்பாடுகளுக்கிணங்கிப் பிள்ளைப் பேறடைகிறான். ஒருமுறை கேரளாவில் எதிர்பாராமல் பத்மாவதியும் ராதகிருஷ்ணாவும் சந்திக்கிறார்கள். உடலுறவு கொள்ளாவிட்டாலும் ஓரிரவு இருவரும் ஒன்றாகச் சுற்றித் திரிகிறார்கள். இதனையறிந்த நியாயமூர்த்தி ராதாகிருஷ்ணாவை நீதிமன்றத்தில் நிறுத்திச் சிறையிலிட முயன்றான். பத்மாவதி நியாயமூர்த்தியை இம்முயற்சி செய்ய வியலாமல் போனாள். நடவடிக்கைகள் கடுமையாகிவருவது தெரிந்து, பத்மாவதி ராதாகிருஷ்ணாவிடமிருந்து விடைபெறவேண்டி அவனிடம் செல்கிறாள். அப்போது நஞ்சு உண்ட பத்மாவதி ராதாகிருஷ்ணன் மடியில் உயிரை மாய்த்துக் கொள்ளும் நிலையில் நியாயமூர்த்தி வந்து சேர்கிறான். இறந்துபோன பத்மாவதியைப் பார்த்து நியாயமூர்த்தி, ''நாம் இரண்டுபேருமாக இவளைக் கொன்று விட்டோம். இருவரும் மோதிக்கொண்டு உடைந்து போனோம்,'' என்கிறான் ராதாகிருஷ்ணாவிடம். இதுதான் முடிவு.

இக்கதைத் தொடரில் பத்மாவது தனது பிரச்சினையைத் தெளிவாக இவ்வாறு உரைக்கிறாள், ''இருவரில் எவரையாவது ஏற்றுக் கொள்வது எதற்கு? ஏன் ஏற்கவேண்டும்? எவ ரொருவரிடமாவது இருந்தாக வேண்டுமா, எதற்கு எனக்கு ஆண் துணை? நீங்களிருவருமே தேவையில்லை. நான் உங்கள் உணவுப் பண்டமல்ல, நீங்கள் சொல்கிறபடி உங்கள் ஆணைகளுக்கு அடங்கியிருக்க. ராதா, நான் உனக்குரியவளில்லை, உன்னோடு வந்து விடுவதற்கு எனக்காக நீங்களிருவரும் ஏன் இப்படி எலும்புத்துண்டுக்கு நாயாகப் போட்டியிடுகிறீர்கள்?''

பெண்ணுக்குத் தனது எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்ள, தனக்குத் தான் விரும்பியவாறு வாழ்வதற்கு, இந்தச் சமுதாயத்தில் வாய்ப்பு இல்லையா? 'இல்லை!' என்றே இக்கதைத் தொடரில் விடைகிடைக்கிறது. அங்கே கணவன் உடனாகிலும் இங்கே காதலனுடனாகிலும் பெண் தன் ஆவலை நிறைவேற்ற, கடமையுடனிருக்க வேண்டிய சூழ் நிலைக்கு எதிர்மாறாக நடக்கலானாள் பத்மாவதி. கணவனுடன் வாழ்ந்து கொண்டு, காதலனை ரகசியமாக உறவு கொள்வது ஒரு இயல்பான முறை. ஆனால் இந்தச் செயல் நடைமுறைகளோ, ஓர் ஆண்மகனோ ஒப்புக் கொள்ளக் கூடியதன்று! எனவே

பத்மாவதிக்கு, 'தனிநபர் உரிமைக்கு' முதலிடம் அளித்த பத்மாவதிக்கு இறப்பே அடைக்கலமாயிற்று.

இதில் உற்றுணரவேண்டிய அம்சம் ஒன்றுண்டு. வழக்கமான தொடர்கதைகளில் காதலுக்குத் தலையாய இடமளிக்கும் புதினங்களில், பத்மாவதி தன் காதலனுடன் இணைந்து வாழ்வதே உற்ற வழியாகும். ஆனால், சலம் மெய்ப்பாட்டுக் கண்ணோட்டத் துடன், அவ்வகை முடிவினால் உண்மைக் காதல் சிதைந்து விடுமென, நிலையான அன்றாடத் தொடர்பு வாழ்க்கையில் ஆண் பெண் இருவரிடையில் கவர்ச்சி மங்கிப்போகுமென, அதன் விளைவாக ஆடவனின் ஆளுமையும் பெண்ணின் அடிமைத் தனமும் தவிர்க்க வியலாதென இக்கதையில் வாதம் செய்கிறார். அழகும் காதலும் வாழ்வில் இன்பத்தின் அடிப்படை ஆதாரமாயின. அவற்றுக்குத் 'தனிநபர் உரிமை'யில் அல்லது செயல்கூடுவது அரிது என்பது சலத்தின் சித்தாந்தம். 'தெய்வம் தந்த மனைவி' தன்னுரிமைக் காதல் கோட்பாட்டுக்கு மற்றுமோர் உருவகக் கற்பனை. ஆயினும் இதிலுள்ள நபர்கள், செயல்கள் உண்மைக் காட்சியாக் காணப்பெற்றன. பத்மாவதியிடம் உலகியல் அறிவு, உடலுறவு இன்பத்தை விட வாழ்க்கையில் செய்து நிறைவேற்றப் பிற லட்சியங்கள் மேலானவையாகுமென்ற உணர்வு, தெளிவுறச் செயல் புரியத் தக்க மனநிலை ஆகியவை அவளை உயர்ந்த தலைமகளாகச் செய்கின்றன. நியாய மூர்த்தி செயல்களுக்கெல்லாம் பிரதிநிதியானாலும், அவன் நடைமுறை வழக்கங்களைப் பேணுபவன், நெறிகளுக்குக் கட்டுப்பட்டவன். 'சசிரேகா'வில் ராமராவைப் போன்று, ராதாகிருஷ்ணாவின் நடத்தைகளின் தீவிரமும் அக்கறையும் உள்ளெழுச்சியும் அளவுக்கு மிஞ்சிக் காணப்பெறுகின்றன. நியாய மூர்த்தியாலும் ராதாகிருஷ்ணாவாலும் தன்னுரிமைத் தியாகம் பற்றிச் சிந்திக்கவியலவில்லை. இறுதியில் பத்மாவதியின் தியாகத்தைக் குறிப்பிட்டவன் நியாய மூர்த்தியாக இருப்பது ஒரு சிறப்பு.

சலத்தின் நவீனக்கதையான 'அமீனா' ஒரு சிறந்த ஆக்கம். இதன் முதல் பாதியின் முதலாவது இரண்டாவது பாகங்கள் 1926 லும், பின்பாதியின் மூன்றாம் நான்காம் பாகங்கள் 1942 இலும் எழுதப் பெற்றன. 'அமீனா' கதைத் தொடரில் சலம் உள்ளத்தை ஆராய்ச்சி செய்துள்ளார். நடைமுறையில் தன்னுரிமைக் காதல் கோட்பாட்டின் பயனைத் தடையாகக் கொள்ளலும், ஆசிரியர் தம்மில் நேர்ந்த வளர்ச்சி மாற்றங்களைக் குறிப்பிட்டு முறையாக வெளிப்படச் செய்தலுமே இக்கதையின் கருப்பொருள். ஆசிரியர் சலமே நாயகன் இப்புதினத்தில்.

கதாநாயகி ஈடேறவியலாத ஏழை முஸ்லிம் கன்னிகை. அவளை 'மலராத மலர்' அமீனா என ஆசிரியர் வருணிக்கிறார். அமீனா கதாசிரியரின் மனசாட்சி அல்லது அந்தராத்மாவுக்குச்

சான்று. கதைக்குரிய தலைவன், செயல்வீரன். தன்னுரிமைக் காதல் கோட்பாட்டினை உரியவகையில் அமையாதவர்களான பெண்ணையும் ஆணையும் ஆளவேண்டி ஒரு சிறிய சமுதாயத்தை உருவாக்கினார். உபாத்தியாயர் பணியில் வாழ்க்கை நடத்தும் நண்பர்களான ஆண் பெண் நால்வருடன் ஓர் இடிபட்ட வீட்டில் வசித்து வருகிறான் நாயகன். விமலாவை நாடி வந்திருந்த ஸ்ரீமன் நாராயணா, சமுதாயத்தை லட்சியம் செய்யாமல், விமலாவைக் காதலித்து, அவளை மணம் புரிந்து கொள்ளாமல் போய் விடுகிறான். போகிற போக்கில் விமலாவுடன் எழுத்தாளருக்குத் தொடர்பிருப்பதாக உலகத்துக்குச் சந்தேகம் தோன்றுமாறு செயல்பட்டுச் செல்கிறான். விமலா மனமுடைந்து தற்கொலை புரிந்து கொள்கிறாள். எழுத்தாளனின் நேர்மையற்ற 'பெண்ணுரிமை' இங்கு ஸ்ரீமன் நாராயணனின் மோசடியுடன், விமலாவின் வேதனையுடன் மரணத்தைத் தழுவி ஆதரவற்று பங்க மடைந்தாள். அவ்வாறே சர்மா எனும் நபரை நாடி வீட்டைவிட்டு வெளியேறிய சத்யா, அந்த சர்மா சியாமளாவிடம் மயங்கி அவமானமடைந்து, எழுத்தாளனின் அரவணைப்பை ஒதுக்கித் தள்ளிக் கண்ணீர் மல்கப் போய்விடுகிறான். சியாமளாவை மோகித்து, அவளையடையவதற்கென 'விளக்கொளியைச் சுற்றித் திரியும் விட்டில் பூச்சி'போன்று, புகழ் பாடிக் காதல் கொண்ட எழுத்தாளனே, சியாமளா கவர்ந்தீர்த்தும் நெருங்கவிடவில்லை. சியாமளாவின் நிலைவில் எழுத்தாளன் தன்னிலையிழந்து தவிக்கும் கணங்கள்; ஆனால், 'தன்னுரிமை' பற்றிய உள்ளக்கிடக்கையிலிருந்து எழுத்தாளன் வெறுத்துச் செயலிழந் திருக்கிறான். இவ்வேதனைகளுக்குச் சான்றாக இருக்கிறாள் அமீனா. எழுத்தாளன் இல்லத்தில் வேலை செய்தாலும் பணிப் பெண்ணாக இல்லாமல் மற்றவர்களுடன் நெருங்கிச் சமமாகப் பழகிவருகிறாள், அமீனா. சியாமளா அமீனாவைக் குறிப்பிட்டு, ''அவள் வேலைக்காரியா?'' எனக் கேட்டால் எழுத்தாளன் வேண்டுமென்றே மௌன மாயிருக்கிறான். அமீனா தனது உரிமைக்கும் மனச் சாட்சிக்கும் எடுத்துக்காட்டாக உள்ளான். தன்னுரிமை விருப்பம் என்றால் காம வேட்கைக்குப் பணிப் பெண்ணா என்ற கேள்விக்கு விடை காணவியலாதவாறு இருந்தான் எழுத்தாளன். சியாமளா அமீனாவின் கூந்தலைக் கத்தரித்து, நாகரிகமாக அழகு படுத்துகின்றாள். இது ஒரு மாற்றம். பொருள் செரிந்தது. சியாமளாவினால் அவமானமடைந்து தலைகுனிந்து, ''அமீனா! அமீனா! உன்னை விட்டுப் போய் நான் எப்படியாகிவிட்டேன் அமினா! எதற்காக இருட்டில், அழகு என்று நினைத்துப் பித்தளைக்கு ஆசைப்பட்டு இதயமில்லாத அரக்கியிடம் சென்றேன், அமீனா!'' என ஆத்திரமாகக் கத்தினான். பாசத்தை விட உயர்ந்தது உரிமை. இவ்வுரிமையே மனச் சாட்சியாகத் தன்னுள் கூறிக் கொண்டிருப்பதாக உணர்கிறான்

எழுத்தாளன். அத்தகைய மனச் சாட்சியை மீறிய கணங்களில் மதிப்புமிக்க அமீனாவைக் கைவிட நேர்ந்ததெனக் கதையில் அழகாகச் சித்தரிக்கிறார் ஆசிரியர்.

இவ்வனுபவங்களை ஆசிரியர் உணர்த்தும் வாழ்க்கை உண்மை மதிப்புமிக்கது. ''வரம்பு மீறியது தன்னுமையாகாது. சுருதியின்றி சங்கீதம் இல்லை.'' நடைமுறைக் கட்டுப்பாடுகள் இருப்பதாலேயே அதனினும் மேலான தனிநபர் உரிமைக்குப் பொருள் உண்டாகிறது. கட்டுப்பாடற்ற சூழ்நிலைகளில் எல்லாமே தலைவிரி கோலம்தான். பலத்துக்கும் தீய சக்தி களுக்கும் கை யோங்கிவிடும்; தன்னுரிமைக்குப் பொரு ளிருக்காது! அவ்வாறு காதல், அன்பு ஆகியவற்றில் 'சுருதி' இல்லாமற் போனால், உள்ளங்கள் ஒன்றோடொன்று இசைந்து கலக்காமற் போனால் சங்கீதம் அழகு ஆகியவை ஆனந்தம் ஆதரிக்கும் அன்பு ஆகா!

இந்தப் பரிணாம வளர்ச்சி சலத்தின் சிந்தனையோட்டங்களில் தோன்றியபிறகு அவர் தன்னுரிமைக் காதல் கொள்கையை ஆதரிக்கும் செயலை, சமுதாயப் போராட்டமாக நடத்தும் முயற்சியைக் கைவிடலானார். ஆயினும் நடைமுறையில் துயரமடைந்து, அநியாயங்களுக்குப் பலியாகும் பெண்களுக்கு ஆதரவளிப்பது, அவர்களுக்கு உதவி புரிவது எனத் தமது அண்ணி டாக்டர் ரங்கநாயகம்மா (மன்னி) துணையுடன் செயல்புரிந்து வந்தார்.

'அமீனா' தொடர்கதையில் நான்காம் பாகம் (1942) அப்போதைய சலத்தின் மன நிலையை வெளிப்படுத்திக் காட்டியது. நான்காம் பாகத்தில் தன்னுரிமைக் காதல் கோட்பாடு, நண்பர் குழாம் காணப்பெறவில்லை. எழுத்தாளன் மனைவி சுப்புலுவுடன் குடும்பம் நடத்தக் காண்கிறோம். சுப்புலு வந்ததும் அமீனா வெளியேறுகிறாள். எழுத்தாளன் அமீனாவைத் தேடு கிறான். அமீனா காணக்கிடைத்து, ''அவள் இருந்தால் நான் வரமாட்டேன், எப்போதும் வரமாட்டேன். அவள் என்னை அடிக்கிறாள்,'' என்று கூறுகிறாள் எழுத்தாளன் மனைவியைப் பற்றி. அமீனா, நீ கூட ஒரு பலிகொடுக்க விரும்பு கிறாயா? நீ என் வேலைக்காரியில்லை, எனக்குரியவளுமில்லை. நீ விதியின் ஆயிரம் நாக்குகளில் ஒருத்தி. சிரிப்புக்குப்பலி கேட்கிறாய். பலி கேட்காமல் இதயத்துக்குள் எப்படி வருவாய்?..'' எழுத்தாளனிட மிருந்து, செயலளவில் விடுதலையை, உறுதிப்பாட்டினைக் கோரியது அவனது மனச்சாட்சி. ''எனக்குச் சேலை வேண்டும், கொடுங்கள்....'' என்கிறாள் அமீனா. எழுத்தாளனாக தனது அன்பு அரவணைப்புடன் அவளது 'சம்பளத்தைக்' கொடுக்கிறான். அதுவே அமீனா பற்றி எழுதிய நவீனம்! ''அமீனாவுக்குத் தாயில்லை, வீடு இல்லை. அமீனா விட்டுப் போகிறாள்... வண்டி

அடம்...படித்துப் படித்துச் சொல்லிக் குருடாகிவிட்ட என் கண்கள்தாம் தடை, சோப்புப் போட்டுக் கழுவிய என் கைகளே தடை. இவ்வுடலுக்கு முடிவு என் இனிய அமீனா'' என முடிக்கிறான். எழுத்தாளனின் ஆழ்ந்த காதலுக்கு, அவன் கொள்கையாகக் கொண்ட தன்னுரிமைக்கு, அவன் அடைந்த வைராக்கிய சாதனைக்குச் சான்று அமீனா.

'அமீனா' நவீனத்துக்குச் சிற்ப வடிவமான அமீனா பாத்திரத்தை எழுத்தாளரின் மனச் சாட்சி பரிணாமவளர்ச்சிக்குச் சான்றின் அடையாளமாகத் (Evolving symbol) தீட்டிக் காட்டியிருக்கிறார். கதையின் முதல் பாதி எழுதப் பெற்றுப் பதினாறாண்டுகளுக்குப் பிறகு பின் பாதியை எழுதி முடித்த சலம் தமது வாழ்க்கையை, இலக்கியப் படைப்புக்களை உயர்ந்த கருத்தோவியமாக, பெரிய நாட்டமாகச் சத்தியத்தின் சாஸ்வதத்தை உணர்ந்தவராகப் புலப்படுத்துகிறார். எப்போது எந்த மனநிலையிலிருந்தாரென்பது அவருக்குத் தெரியும்.

'அமீனா'வின் மொழி நடை உள்ளுணர் கூற்று (Interior monologue) முறைக்கு ஒப்பாக இருந்ததுடன், உரையாசிரியர் தம் உள்ளுணர்ச்சிகளின் கண்ணாடியாகக் காண்கிறோம். குறுகிய வாக்கியங்கள், சிறிய சொற்கள் இதன் மொழி நடைக்குச் சிறப்பழகு. அவற்றின் பேச்சற்ற நிலை, எண்ண வெளிப்பாடு மிகவும் கம்பீரமாக உள்ளது. அதன் பிறகு சிலகாலத்துக்குத் தெலுங்குக் காவியத்தில் வெளியான சரளக் கவிதை (Free verse) யின் தொடக்கமாக உள்ளது இந் நவீனத்தின் சில பகுதிகள் உரையாக்கம். 'அமீனா' தொடர்கதை தெலுங்கு நவீனங்களின் பரிணாமத்தில் சிலைவடிவமாக, மொழி நடையில் விளக்க வுரையமைப்புக்கு ஓர் அடையாளக் கல். இந்த முதல் மூன்று நவீனங்களுடன் (1921-26) சலம் இலக்கியப் படைப்புக்களின் முதல் பருவக்கட்டம் முடிகிறது.

'மைதானம்' புதினம் (எழுதிய காலம் 1927) படிப்போருலகில் பெரிய சலசலப்பைத் தோற்றுவித்தது. 1931 இல் இத்தொடர்கதை ஒரு பத்திரிகையில் தொடங்கிய பிறகு சில நபர்கள் தகராறு செய்து அதை வெளியிடாமல் நிறுத்திவிட்டார்களென்று சலம் நவம்பர் 14, 1931 ஆம் தேதி தீட்சிதலுக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார். 1933 இல் இந்த நவீனம் ஆந்திரா பல்கலைக் கழகத்தினர் அறிவித்திருந்த கதைப் போட்டிக்கு அனுப்பப் பெற்றது. இந்தப் போட்டியில் விஸ்வநாத சத்யநாராயணராவின் 'ஆயிரம் படகுகள்,' பாபிராஜுவின் 'நாராயணராவ்' ஆகியன பரிசைப் பங்கிட்டுக் கொண்டன. 'மைதானம்' போன்ற திடுக்கிடும் கதைக்குப் பல்கலைக்கழகப் பரிசு கிடைக்கும் வாய்ப்பில்லை! ஆயினும் தீட்சிதலு இப்படிக் கருதியதாகச் சலம் எழுதிய நவம்பர் 16, 1933 தேதிக் கடிதத்தினால் நமக்குத் தெரிகிறது.

'மைதானம்' சலம் முதலில் எழுதிய நவீனங்களில் குறுகியது. சித்தாந்தக் கருத்துக்களும் விளக்கங்களும் உள்ளார்ந்த ஆய்வு போன்றவற்றை விட்டுவிட்டு, சலம் நேராகவே போர்க் களத்திற்குள் புகலானார். இத்தொடர்கதையில் குலங்களையும் படித்தோர் வழக்கங்களையும் ஹிந்து மதத்தையும் இடித்துரைக் கலானார். சமுதாயத்தின் மீது தமக்கு ஏற்பட்ட வெறுப்பும் கூட.

நடுத்தர வகுப்பினரின் மதிப்புக்களை, நம்பிக்கைகளை மதிக்காத வழக்கறிஞரின் மனைவி ராஜேஸ்வரி அமீர் எனும் முஸ்லிம் இளைஞனுடன் வெளியேறிப் போய்விடுகிறாள். நாகரிகச் சமுதாயத்துக்கு அப்பால் தொலைவாக; ஒரு மலை, நதி, மைதானமான ஒரு வனப்புமிக்க இயற்கைச் சூழ்நிலை, அதற்கு நடுவில் ஒரு குடிசை. அங்கு தனியாகத்தான் விரும்பியவாறு இயற்கையழகையும் உடல் இன்பத்தை அமீருடன் பெற்று மகிழ்கிறாள். இடையில் ஒரு முறை அம்மான் அங்கு வந்து அவளைத் திரும்பிவருமாறு அழைக்கிறான். (இந்தக் காட்சியமைப்பில் நடுத்தர வகுப்பினரின் குடும்ப வாழ்க்கையை இகழ்வு படுத்திக் காட்ட முழுமையான வாய்ப்பைச் சலம் ஏற்படுத்திக் கொண்டு எழுதலானார்.) சில நாட்களில் அமீர் பக்கத்து கிராமத்திலுள்ள தோள்ளசாயபு என்பவரின் மகள் மீது இச்சை கொண்டு அவளை அடைய முயற்சி செய்யத் தொடங்கினான். அவனுக்குத் துணைபுரிய மீரா எனும் இளைஞன் வந்தான். ஆனால் அமீரின் ஆசை நிறைவேறினால் தவிர அவனுக்கு மன அமைதியிருக்காதென்ற முடிவுக்கு வருகிறாள். ''அமீருக்கு இதுவரை கொடுத்த சுகம் எனக்கும் சுகம்தான். இப்போது என் துன்பத்தை அவனுடைய இன்பத்தில் பங்கு கொண்டு மகிழப் போகிறேன்,'' என்று ராஜேஸ்வரி தானே முன்வந்து கலந்து பேசி அமீர் ஆசைப்பட்ட பெண்களைச் சம்மதிக்கச் செய்து உடன் வரச் செய்கிறாள். சம்மதிக்கச் செய்தது மட்டுமில்லை. ''மறுநாள் மாலை முன்னிருட்டில் அமீரை அவள் வீட்டுக்கு அழைத்துப் போனேன், நானும் அந்த அறையில் ஒரு மூலையில் தலையைத் திருப்பிக் கொண்டு உட்கார்ந்திருந்தேன். கதவுகளையும் ஜன்னல்களையும் மூடித் தாழ்ப்பாள் போட்டுக் கொண்டோம்.'' இது ராஜேஸ்வரியின் எண்ணத்தில் (சலத்தின் எண்ணத்தில்) காதல் புரியும் தியாகம். இது கற்பனைமட்டுமின்றி தீவிரவாதம் (Extremism) கூட. இங்கு புராணக்கதையில் வரும் பதிவிரதை சுமதி தன் கணவனை விலைமகள் வீட்டுக்கு அழைத்துச் சென்று செய்த தியாகத்தை எடுத்துக்காட்டி எதிரொலிக்கச் செய்தார் சலம். இது மரபு நெறியையும் பத்தினிப் பெண்மையையும் சலம் சாடியடித்த அடி! இக்கீழ்த்தரமான செய்கையினால் ஒழுக்கமானவர்களுக்கும் மரபு நெறிகளைப் போற்றுபவர்களுக்கும் எத்தனை சினமூட்டியிருக்குமென்பதை ஊகித்துக்கொள்ளலாம்.

அதன் பிறகு அமீருக்குத் தோள்ளசாயபு மகள் மீதிருந்த மயக்கம் குறைந்துபோய், பழையபடி ராஜேஸ்வரியுடன் தொடர்பு கொண்டான். ஆனால் ராஜேஸ்வரிக்கு மீரா எனும் இளைஞனுடன் நட்புறவு அதிகமாகிறது. ராஜேஸ்வரி கருவுற்றிருந்தாள். அமீர் அவளைக் கருச்சிதைவு செய்து கொள்ளுமாறு வற்புறுத்துகிறான். ராஜேஸ்வரி ஒப்புக் கொள்ளமல் போகவும் ஆறுமாதத்துக்கு அவளைப் பார்க்க மாட்டானெனச் சொல்லிச் சென்றுவிடுகிறான். அமீரைப் பிரிந்திருக்க வியலாத ராஜேஸ்வரி மீராவின் பழக்கம், அவன் மீது அவளுக்கு அலாதியான காதல் பிறந்தது. மீரா ராஜேஸ்வரியுடன் காதலீடுபாட்டிலிருந்ததை அமீரால் பொறுக்க முடியவில்லை. மீராவுக்கும் அமீருக்குமிடையில் பொறாமை மிகுந்தது. ராஜேஸ்வரி அமீர், மீராவின் பகையைப் போக்கி நட்புடனிருக்க முயற்சித்துத் தோல்வி கண்டாள். அமீர் மீராவை ஒரு விபத்திலிருந்து காப்பாற்றுகிறான். ஆயினும் மீராவுடன் சேர்ந்து ராஜேஸ்வரியைப் பங்கிட்டுக் கொள்வதற்கு மட்டும் சம்மதிக்க விரும்பவில்லை. ராஜேஸ்வரியுடன் படுத்திருந்த மீரா மீது கத்தியைக் காட்டுகிறான். ராஜேஸ்வரி தன்னுடலுடன் மீராவை அணைத்துக் கொள்கிறாள். ''என்னைக் கொன்றுவிட்டு அப்புறம் அவனைக் கொல்'' என்கிறாள். அமீர் தன்னையே குத்திக்கொண்டு கீழே சாய்கிறான். மீரா ஓடி டாக்டரையும் போலீசையும் அழைத்து வருகிறான். அமீர் தற்கொலை செய்து கொண்டான் என்பதையறியாமல், ராஜேஸ்வரிதான் குத்துக் கொலை செய்தாளெனவும், அவள் குத்தவில்லை, தான் கொன்றதாக மீரா கூறுகிறான். அமீர்தான் என்றால் போலீஸ் நம்பவில்லை. ராஜேஸ்வரி அவள்தான் கொன்றாளெனச் சொல்லிப் போலீசிடம் சரணடைகிறாள். இந்தத் தொடர்கதையின் பின் அரைப்பகுதி 'தெய்வம் தந்த மனைவி'யிலிருந்த காட்சியரங்கமே மாற்றிய மைக்கப் பெற்றது. அமீர், மீரா இருவரும் ராஜேஸ்வரியைத் தமக்கே உரியவளாக்கிக் கொள்ளப் பார்க்கிறார்கள். ராஜேஸ்வரி அமீரைத் தோள்ளசாயபு மகளுடன் பங்கிட்டுக் கொண்ட தியாகம், அக்கறையை அறிகிறோம். ஆனால் தொடக்கத்திலிருந்து நண்பர்களாக இருந்த அமீரும், மீராவும் ராஜேஸ்வரியை அத்தகைய சகிப்பும் அன்பும் பாராட்டுபவளாக உணரவியலாமல் போகிறார்கள். ஒரு பெண்ணுக்கு இரு ஆடவர் மீதும், ஒரு ஆணுக்கு இரு பெண்கள் மீதும் காதல் உண்டாவது இயல்பானதே என்பது சலத்தின் கருத்து. ஆனால் பெண்காட்டக் கூடிய தியாகம், இரக்கம் ஆண் காட்டமாட்டான் என்று கதையை முடிக்கிறார்!

இக்கதை உளவியல் சோதனையாகும். இதன் காதல் தத்துவம் ஒரு சமுதாயத்தைச் சலம் சாடித்தாக்கிய விதம் மற்றொரு படி. இவ்விரண்டாவது அமைப்பே இந்த நவீனத்துக்கு முடிவில்லாத பிரசாரமாகக் கொண்டு சேர்த்தது. பெண்களுக்குக் குடும்ப

வாழ்க்கையை அறுத்தெறிந்து செல்லுமாறு சலம் அறிவுரை கூறலானார் எனும் திட்டவட்டமான அபிப்பிராயத்தை வாசகர் உலகத்தில் இந்நவீனம் தோற்றுவித்தது. பெரும்பாலானவர்க்கு இந்த நவீனம் வாயிலாகவே சலம் புரட்சி எழுத்தாளராக அறிமுகமானார். சலம் உரையாக்கங்கள் அனைத்தையும் ஆய்ந்தறிந்து, அவருடைய நோக்கங்களையும் கருத்துக் கோட்பாடு களையும் தெரிந்து கொள்ளும் பொறுமை இல்லாதவர்களுக் கெல்லாம் சலம் என்றால் 'மைதானம்' கதை ஒன்றே நினைவுக்கு வருகிறது!

சமுதாயத்தை சாடித்தாக்கும் வலிமைமிக்க உரை விளக்கமும் இந்நவீனத்தில் காட்சி யாக்கினார். சில எடுத்துக்காட்டுகள்:

''அமீர், என் அமீர், என்னை என்ன செய்தான்? பெண்ணாகிய எனக்கு, தெய்வத்தை, அமிர்தத்தை அள்ளிவழங்கினான். 'அசதோ மாசத்கமய,' 'தமசோமா ஜோதிர்கமய, மிருத்யோர்மா அம்ருதம்கமய.' என் கணவன் படிக்கும் உபநிஷத மந்திரம் நினைவுக்கு வருகிறது. நானும் மாறிவிட்டேன். நான் நானாக இல்லை. அந்த நாளில் பழைய ராஜேஸ்வரி வந்தாள். அவனே நானெல்லாம். நான் எல்லாம் அவனே. அவனது வலிமை மிக்க மோகத்தில் நலிந்தவளாகிவிட்டேன்.''

''பவித்ரம், அவிநீதி, கோபூஜை, பதிவிரதா நீதி, இத்தகைய சொற்களுக்கு நிலையான பொருள் கிடைத்துள்ளது. அவற்றின் உண்மைப் பொருள் என்னவென்று எல்லா மனிதர்களும் சிந்தித்துப் பார்ப்பதை விட்டு விட்டார்கள். உண்மையைச் சொன்னால், மனிதர்களான பிறகு, நமது ஆசைகளையெல்லாம் ஒன்றெனவே அறிவோம். முஸ்லீமானால் என்ன? பிராமணனானால் என்ன? ஆனால் இங்கு உள்ளம் மகிழ அச்சமற்று அனுபவிப்பதற்கு வாய்ப்புள்ளது. அங்கே மாயச் சொற்களுடன், உன்னத ஆன்மிக நெறியென்று இறைவன் மீது பாரம் சுமத்தி, கடைசியில் அனுபவிக்க இயலாமல் தலை குனிகிறோம். இத்தனைக் காமம் போகட்டும், அனுபவிப்பதற்குக் கையாலாகுமானால் நன்றாக இருக்கும் என்ற எண்ணம் அங்கும் உள்ளது. ஆனால் இந்த ரசிக்கும் திறமை, தைரியம், மெய்ப்பாடு அங்கு இல்லை. இதற்கெனவே குறுக்கு அறிவுரைகள், போதனைகள், வேதாந்தங்கள், மரியாதைகள், மற்றும் சமுதாய நெறிகள் அதிகம் அங்கே...'' ''வேசிகளின் எச்சில் சுவையைச் சுவைத்துப் பார்க்கும் குலத்தை நிலை நிறுத்தும் கற்பனைத் திறமை உங்கள் நீதிநெறிகள் புகட்டுபவர்களுக்கு மட்டுமே கை வந்த கலை.''''எனது சொந்தக் குதிரை அழுதவாறே உள்ளது. ஆனால் அமீர் குதிரை மட்டும் அதிசயமாக உள்ளது. அத்தகைய வளமை. அரசமொழிக்குக் குதிரையே பொருத்தமான சொல்.''

''அமீரின் பார்வையனைத்தும் நிலைபெறக் கூடிய என் உடல்வனப்பில் எனக்கே அத்தனை காதல்! 'எனக்காக, என் கண்களை மிளிரச் செய்ய, என் கரங்களை மனம் குளிருமாறு வளைத்து அணைத்துக் கொள்ள, உங்களவர்கள் உங்கள் பிராமணர்கள் தவம் செய்து, தெய்வங்களைப் புகழ்ந்து வேண்டி உன்னைப் பெற்றார்கள்' என்பான் அமீர்.''

''என் பிறப்பு, நான் எந்தச் சூழ்நிலையில் விழுந்தேனோ அது என் கர்ம விளைவு. இவ்வுலகத்தைப் பாதுகாக்கும் பெரும் சக்தி, நம் இதயங்களை நடப்பிக்கும் மாபெரும் சூத்திரம் அதுவே... என் மீது மோதி என்னைத் துரத்துகிறார்களேயன்றி, நீங்கள் கூறும் வேதாந்தமும் அதுதானே! முடிவில் 'அவள் தலையெழுத்து' போகட்டும் என்கிறீர்கள். நான் 'உங்கள் தலையெழுத்து', போங்கள் என்கிறேன்.''

''இவ்வாறாகக் காதல் மாற்றமடைவது, காதலில் சந்தேகங்கள் வருவது, ஒரே சமயத்தில் இருவர் மீது காதல் தோன்றுவது, 'அக்காதலே' ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு வகையாக, வேறுபட்ட காரணங்களினால் உண்டாகியிருந்தும், இவையெல்லாம் உங்களைப் போன்றவர்கள் ஒப்புக் கொள்ள மாட்டீர்கள். 'உடல் கொழுத்தால் அப்படித்தான் இருப்பாள், மிருக உணர்ச்சி' என்கிறார்கள். அப்படி இருவரிடமும் உறவு கொள்வது நடவாததொன்றென்றும், தமது நீதி நூல்களில் படைத்து, அவற்றை எடுத்துக்காட்டி, இப்பூவுலகில் இதயங்களை யெல்லாம் காப்பாற்றி ஒழுங்குபெறச் செய்ய வேண்டுமென்று முயற்சிப்பதாக எழுதுகிறார்கள் சிலர் தமது புத்தகங்களாக! உங்கள் பேச்சு வெறும் பேச்சு, எனதோ ரத்தத்துடனான உண்மை அனுபவங்கள்.''சலம் மணவினைச் சடங்குகளை அடியோடு ஒதுக்கி வைத்து விடவில்லை. இதற்கு அவரின் அடுத்த தொடர்கதை 'விவாகம்' (1928) நல்லதோர் எடுத்துக்காட்டு. மணவினைச் சடங்குமுறை இந்நவீனத்தில் கதாநாயகி ரவணா போன்ற ஆதரவற்றவர்களுக்கு ஒரு பாதுகாப்பெனவும் வழிவகை கூறுகிறார். ரவணா தற்காலச் செயல்முறைகளின் வெளிப்பாடும், உள்ள வலிமையும் நிறைந்த இள நங்கையானமை, அவளை மணம்புரிந்த கோபாலராவின் பொருளாதாரக் குறைபாட்டினால் 'வெற்றுணர்வு' மனநிலையை வளர்த்துக் கொண்டமை, அவ்விருவரின் இடையில் பாச உணர்வை வளர்த்து, அச் சூழ்நிலையில் காதலும் பற்றும் நிறைந்து வாழத் திருமணம் வழி கோலச் செய்தது, இந்நவீனத்தின் கருப் பொருள். இத்தொடர்கதை மெய்ப்பாட்டு நிலையை உருவாக்கிக் காட்டுவதாயமைந்துள்ளது. ரவணாவின் பெரிய தந்தையின் பேதைமைப் பண்பினை, அவர் வீட்டுச் சூழ்நிலைகளை, அவனுடைய மைத்துனனான கற்பனைக் கவிஞன் சுப்பாராவின் வெகுளித்தனமான செய்கைகளை,

துவைதஞான போத சமிதியைச் சேர்ந்தவரான வாகலியை, கண்முன் தெளிவாகக் காட்டி ஓவியமாக்கியுள்ளார் சலம். அந்நாட்களின் பழக்க வழக்கங்களில் பித்தேறிப் போய், தாம் நடைமுறைச் சம்பிரதாயங்களைக் கடைப்பிடிப்பவரெனக் கருதிக் கொள்ளும் ஆவலில் நகைச்சுவையை விரும்புவர்களுக்கு ஓர் எடுத்துக்காட்டாக ராமமூர்த்தியைப் பற்றி இவ்வாறு கூறுகிறார் சலம். இது சலத்தின் உயர்வு நவிர்ச்சியுடனான நகைச்சுவைக்கோர் எடுத்துக்காட்டு.

''ராமமூர்த்திக்கு என்ன செயல்புரியலாம் என்ற எண்ணம் தோன்றியிருந்தது. விதவை மணம் செய்து கொள்ளலாமென்றால், கிழமான விதவையை எவரும் மணம்புரிந்து கொள்ள முன் வரமாட்டார்கள். சகோதரிகளின் கணவன்மார் எவரும் இறந்து போய்த் தங்கையாகக் கைம்பெண்கள் எவரும் இல்லை. தன் மகளுக்கோ இன்னும் மணம் ஆகவில்லை. எனவே விதவைத் திருமணம் புரிந்து கொள்வது பயனற்றதென்று முடிவுசெய்து, இளம் பெண்களுக்கு வயது வந்த பிறகுதான் மணம் புரிய வேண்டும் என்ற சேவைச் செயலில் ஈடுபடலானான். அவனது மகள் ரவணாவுக்கு பதின்மூன்று வயதாயிற்று. வயதுக்கு வந்து விட்டாளென்றே எல்லாரும் நினைத்திருந்தனர். இல்லாமற் போனாலும், வயதுக்கு வந்து விட்டாளென்று நம்பும்படிச் செய்பவன் அவன்.''

'விவாகம்,' படிப்பு, வாழ்க்கை வசதிகள், உரிய வயதுவந்த பெண்ணுக்குக் கணவன் மீது தன் கை ஓங்கியிருந்த போது, தனது செயல்கள் தன்னுரிமைக்கு இடையூறாகா என்று காட்டிய கதையென்றால், 'பிராமணியம்' (1937) தொடர்கதை, படிப்பு, தற்கால வசதி வாய்ப்பில்லாத பெண்ணுக்குத் திருமணச் சடங்கு எத்தகைய தூக்குக்கயறு என்பதைக் கண்முன் காட்டுகிறது. விதவையான சுந்தரம்மா கிழமையடைந்த தந்தையின் மரணத்துக்குப்பிறகு, ஆதரவிழந்து அம்மான் வீட்டை வந்தடை கிறாள். சந்திரசேகரம் எனும் இசையாசிரியன் காட்டிய திறமை யால் அவள் அவன் வசமாகிவிடுகிறாள். அவள் கரு தரித்திருக் கிறாளென்று தெரிந்ததும் அம்மான்காரன், சந்திரசேகரத்தை வரவழைத்து அவனுக்கு மணம் முடித்து வைக்கிறான். விதவை மணத்தில் பெண்ணுக்கு உண்டான மனக்கிளர்ச்சியை வாய்ப்பாகக் கொண்டு அவளைத் துன்புறுத்தியவற்றையெல்லாம் இக்கதையில் சலம் சித்தரித்தார். மனைவியைச் சற்றும் பொருட்படுத்தாமல் சந்திரசேகரம் மனம் போனபடி காலம் கழிக்கிறான். குழந்தை வளர்க்கும் முறைகள் அறியாமல், அக்கம்பக்கம் உதவி ஏதுமில்லாமல், மூடநம்பிக்கைகளும் கும்பிடுகளுமாகக் குழந்தை யைக் காப்பாற்றப் பலமுயற்சிகள் செய்கிறாள் சுந்தரம்மா. அவளுக்கு உதவிபுரிய வேண்டும் என்ற எண்ணத்துடன் அவள்

வீட்டுக்கு வந்த கவள்ள ராமய்யா என்பவன் அந்தணர்களைத் தூற்றுபவன். அவள் அந்தணப் பெண் எனத் தெரிந்ததும் அவளை அடைந்து அந்தணச் சமுகத்தின் மீது ஏதோ ஆதிக்கம் கொள்ள வேண்டுமென்ற வெறியுணர்ச்சி அவனை அரக்கனாகச் செய்கிறது. தன்னை வைத்தியன் எனச் சொல்லிக் கொண்டு அவளை வற்புறுத்தி உறவு கொண்டபின் தான் டாக்டர் இல்லையென்று சொல்கிறான். சுந்தரம்மா கடுங்கோபம் கொண்டு அவன் மீது பாய்கிறாள். பின்னால் அடியெடுத்து வைத்த ராமய்யா விளக்கின் மீது விழுந்து தீப்பிடித்துக் கருகிச் சாம்பலாகின்றான். சுந்தரம் மாவும் இறக்கிறாள், உயிர்பிரிந்த குழந்தையின் மீது விழுந்து. காலக் கேட்டினால் பீடித்த ஆச்சாரங்களுடனும் நம்பிக்கை களுடனும் தற்கால அறிவியலோ உளவியலோ தெரியாத பெண், ஆண் ஆதிக்கம் மிகுந்த செயல்களால் எதிர்ப்படும் அநியாயங்களையும் அவளின் ஆதரவற்ற நிலைமையையும் அழுத்தமாகச் சித்தரிப்பதான கதை 'பிராமணியம்'.

மேல் கண்ட மூன்று நவீனங்களையும், சலம் சமுதாயத்தை விமரிசித்தும், சாகித்திய சாதனமாகச் சமுதாயத்தில் போராட்டம் நடத்திய காலவரை (1927-37)க்குச் சார்ந்தவை. செயல்வாதியான சலம் தாமாகவே தமத அழகுச் சுவையுணர்வை, பெண் களுடனான தம் தொடர்புகளை அனுபவித்த காலவரையும் இதுவே! 1936 லிருந்து தம்முள்ளிருந்த பாலுறவுச் செய்கைகளைக் குறைத்துக் கொள்ளும் முயற்சிகளைத் தொடங்கிய சலம், 1936 டிசம்பரில் முதன் முதலாகத் திருவண்ணாமலை ஸ்ரீ ரமணாசிரமம் சென்றிருந்தார். 1937 முதல் சலத்தினூடே மாற்றம் துவங்கியது. கட்டுரைகளிலும் தம் நடத்தையிலும் மாற்றம் நேர்ந்தது. உரையாக்கங்களிலும் ஆன்மிகப் பரிசோதனையிலும் உள்ளார்ந்த சிந்தனை தத்துவநெறி ஆய்வுகளுக்கு முதலிடம் பெற்றது. இதுவே மூன்றாவது காலக்கட்டம்.

'அருணா' (1938) நவீனத்தில் சலம் தாம் சந்தித்த பெண்மையியலினைத் தத்துவரீதியிலான அறப் பொருளாக இணைத்து ஓவியமாக்கினார். இவ்வுருவகத்துக்கு உயிர்ப்பு அருணாவும் அவள் வெளிப்படுத்தும் உரிமை உணர்வுமாகும். ஆனால் அவளுக்கு எவருடனும் உறவோ வேறுபாடோ இல்லை. சசிரேகா, பத்மாவதி, ராஜேஸ்வரி பாத்திரங்களைப் போன்று இரண்டு ஆடவர்களிடையில் சிக்கிச் சிதைந்து போய்விட்ட நிலை அவளுக்கில்லை. அவள் எப்படி விரும்பினாளோ அவ்வாறு, தனக்கு உறவான ஆடவர் அனைவரையும் அவளுக்கு முன்னால் ஒருவரோடொருவன் பகைமையை மறந்து 'சர்க்கஸ்' மிருகங்களைப் போலத் தன்னைச் சுற்ற ஆடவைத்தாள். அருணாவின் காதல் வலிமை, அன்பு உள்ளம், ஆழ்ந்த இரக்கம் உயர்ந்ததோர் நிலையைச் சார்ந்ததாகவும், அந்நிலை தனது

உறுதியான உள்ளத்திற்கேற்ப இருப்பது இறுதியில் தெரிய வருகிறது. அவளது கதையில் கதாநாயகனான எழுத்தாளனிடம் கடைசிக் கட்டத்தில் கூறுகிறாள், ''என் இதயத்தில் ஆழ்ந்த காதல் உள்ளது. காதலிக்க வேண்டுமென்ற ஆசை அளவற்றிருக்கிறது. அதனால்தான் இவற்றைவிட என் ஆழ்ந்த ஆசை உயர்வாகிறது... இந்த மனிதர்களைப் பார்த்தால் அவர்களின் குறைபாடுகள், உடல் குறைகள் அத்தனையும் காணக்கிடக்கின்றன... எனக்குள் ஒருவரோடொருவரின் வேற்றுமை உணர்வு ஒடுங்கியது. எல்லாரும் ஒரே விதம் தான் பாவம்! அதற்கு மேல் ஒன்றுமில்லை. மனித இயல்புகளை வெல்ல வேண்டுமென்று முயல்கிறார்கள் உம்மைப் போன்ற சிலர், பாவம், கையாலாகாது. உடல் ஒன்றுதான் காதலின்பத்தின் கருவி. எந்தக் கீழ்த்தரமான வனானாலும் என்ன? ஏதோ காலம் கழிக்க! எவரோ ஒருவருக்கு ஆசையைத் தீர்ப்பது தவிர, இந்த ஆண்கள் பார்த்தாயல்லா இந்த இரவு. அது ஒருவகை... எவரையாவது கொஞ்சமாவது காதலித்தேனா என்றால், அது உன்னைத்தான். அதற்காகவே உன்பாதங்களிடையில் விழுந்து பற்றிக் கொண்டிருக்கிறேன்.'' இறுதியில் அருணா காணாமல் போய் விடுகிறாள். ஆசிரியர் முடிவுரையில் கூறுகிறார்: ''அருணா இறந்து போகவில்லை. எனக்குத் தெரியும். இன்னும் மேகங்களிலும், சிறு குழந்தைகளின் பிஞ்சுக் கன்னங்களின் மீது, கன்றிய காதலியின் உதடுகளின் மீது, ரோஜா மலரின் இதழ்களில், தாமரை இதழ் நடுவில் குடித்த, எங்கள் கண்களின் கவர்ச்சியில், சுவைத்துண்டு சிவந்த கோடுகளில் அவள் உள்ளாள்.'' வாழ்வில் இந்த உடலுக்கு, ''எனது எழில் மிகுந்த தோற்றங்களில் எவ்வாறு சொர்க்க வாசல்கள் திறந்தனவோ அவ்வாறே என் ஆன்மாவுக்கும், என் ஆன்மிகச் சந்தேகங்களுக்கும் எப்போதோ, எந்த சேர்க்கையினாலோ கைலாசக் கதவுகள் திறந்துள்ளன என்பது என் நம்பிக்கை.''

இந்த நவீனத்தில் கதை இல்லை. ஒரு செயல் விளக்கம் உள்ளது. பதினைந்தாண்டுகளுக்கு முன் தன்னை விரும்பிப் பிறகு வெறுத்து விட்டு விலகிய காதலி அருணா ஓர் இரவு எதிர்பாராத வகையில் எழுத்தாளன் வீட்டுக்கு வருகிறாள். எழுத்தாளன் அவளுக்கு நல்வரவு கூறிவரவேற்றாலும், அவள் மீது தனக்கு உடலுறவு ஆசை அதிகமாக இல்லாமற் போனதைப் பற்றிக் குறிப்பிடுகிறான். ஆனால் அருணா ஒரு அப்சரஸாக, தேவதையாகக் காட்சியளிக்கிறாள் அவனுக்கு. ''வாழ்க்கையின் பிடியில் முள்ளிலிருந்து, துகளிலிருந்து, பகைமையிலிருந்து, பழிபாவங்களிலிருந்து, நிந்தனையிலிருந்து அத்தனைத் தூய்மையுடன் இருப்பவர்கள் அரிது. தாமரையிலை மீதான நீர்த்துளி, இலைகளினூடே கீழ்சிந்தும் நிலவொளியே! நடந்த இடமெல்லாம் பல இதயங்களின் மீது காலடி எடுத்து

மிதிக்கிறாள், மிதிக்கிறாள் என்றால் ஒரு விந்தையே!'' அருணாவைத் தேடி மறுநாள் காலை இருவர் வருகின்றனர். ஒருவன் கிறிஸ்தவன். 'பீஸ்ட்' என அழைக்கிறான் எழுத்தாளன் அவன் தோற்றத்தைகற் கண்டு. இரண்டாமவன் முஸ்லிம். 'நாகன்' என்கிறான் எழுத்தாளன் அவனை. இவ்விருவரும் ஒருவனோடொருவன் அருணா தன்னைத்தான் விரும்புகிறாள் என வாதம் புரிய, எழுத்தாளன் மனத்தில் அருணா தனக்கே சொந்தமானவள் என நினைக்கிறான். இங்கு 'பீஸ்ட்' உடலுறவனுபவத்துக்கும், 'நாகன்' மனமாற ஆசையைத் தணிக்கும், எழுத்தாளன் மனம் நிறைந்த அன்புப் பிணைப்புக்கும் சான்றாவார்கள். இம்மூவரிடையில் அருணா. எழுத்தாளன் சொல்கிறான்: ''இவ்விருவரை விலக்கிவிட்டால் போதுமா? அருணா, யார் இந்த அருணா? இந்த உலகில் அழகு யாருக்குச் சொந்தம்? இந்த நித்தியமான அழகை யார் மறைத்துவைக்க முடியும்? ... ஒருவனையே காதலித்து, அவனையே நம்பியிருக்கும் பெண் அல்லள் அவள். ஆடவர்கள் அவளுக்கு விளையாட்டுக் கருவிகள். அவள் மன நிறைவுக்கான துணைப் பொருள்கள்.'' இது எழுத்தாளன் பெண்ணைப் பற்றித் தனக்குள் செய்து கொண்ட சமாதானம்.

அவன் எண்ணம் ஏமாற்றமடைவதற்குள், அருணாவின் கணவன் ஜெயராவ், அவனுடையதாய், பட்டைநாமம் தீட்டிய ஆச்சாரியார் ஒருவர், இந்தக் கேடுக்கு ஆச்சாரம், மதம் வேறு - வருகிறார்கள். ஜெயராவ் அவள் கணவன் எனத்தெரிந்தும் பீஸ்ட்டும் நாகனும் அவன் உரிமையை ஒப்புக் கொண்டனர். எழுத்தாளன் அவர்களிடம் விவரிக்கிறான்: ''அதுதான் ஆண்களுக்கும் ஆண்களுக்கும் இடையிலான மரபு, அதுதான் நல்ல முறையும். அவளின் கணவன் போலீஸ் பாதுகாப்பிலிருந்ததனால் அவள் ஆட்டமாடினாள்!.... உரிமை விடுதலை என்கிறோமே தவிர, நம்மைக் கட்டிப்போட்டு நிறுத்திவைக்கும் இந்த நாடு, சமுதாயக்கட்டுப்பாடுகள், மரியாதைகள் ஆகியவை சரியாகச் செயல்படும் நேரம் மட்டுமே நமது உரிமை வாதங்கள், காதல்கள்...'' 'அமீனா' பின் பாதி (1942 இல் எழுதியது) யிலும் சலம் இந்த உண்மையைக் கூறுகிறார். ''வரம்பில்லாமல் உரிமையில்லை. சுருதியில்லாமல் சங்கீதம் இல்லை.'' அருணா 1937-ல் எழுதப் பெற்றது.

அருணா ஜெயராவுடன் செல்வதற்கு ஒப்புக் கொள்கிறாள். எழுத்தாளன் ஜெயராவின் தந்தைக்கு நண்பன்; அவன் குலத்தைச் சார்ந்தவன். எனவே அருணா எழுத்தாளன் வீட்டில் இருப்பது அவனுக்குத் தடையில்லை. கணவனும் மனைவியும் ரயிலுக்குச் சென்று, அதைத் தவறவிட்டதனால் வீடு திரும்பினார்கள். எல்லாரும் தூங்கிக் கொண்டிருந்தபோது அருணா

எழுத்தாளனுடன் தன் முடிவை ரகசியமாகத் தெரிவிக்கிறாள். அதன் பின்தன் அறைக்குச் செல்கிறாள். விடிந்தால் அவள் காணப்படவில்லை எழுத்தாளன் கூறுகிறான்: இறந்து போக முயற்சிப்பதும் மகிழ்ச்சியுடன் உழலும் வாழ்க்கையை எதற்காக என்று அலட்சியம் செய்வதை விட்டொதுக்கி, வாழ்க்கைக் கடலின் ஆழம் எவ்வளவு என்று ஆழங்கண்டு அனுபவிப்பதும் அரும் பெரும் சாதனையே... ஆனால் தற்கொலை எப்போதும் தோல்வியின் அடையாளம் தான்! ஒன்றை ஒப்புக் கொள்ள மாட்டேன். அருணா வாழ்க்கைக்கும் அவள் கணவன் காதலர்களுக்கும் பயந்து போனாள் என்பதை. என்ன நடந்ததோ அவளின் உள்ளக் கிடக்கையில், யாருக்குத் தெரியும்?''

தன்னுரிமை, வாழ்க்கை இன்பம், முடிந்து போன காதல் தொடர்பு அருணா. இந்த அருணாவை ஒவ்வொரு மனிதனும், தன் சொந்தப் பார்வையில் மட்டுமே காண்பான். அவளை உரிமையாக்கிக் கொள்ளப்பார்க்கிறான். அவர்களுக்கு அவள் கிடைத்தமாதிரியே தெரிகிறது. ஆனால் உண்மையில் கிடைக்க மாட்டாள். பெண்ணானவள் தன் உள் கிடக்கைகளை, திட்டங்களை நிறைவேற்றிக் கொள்ளச் செயல்புரியும் போதுதான் பெண்மையின் துணிவும் பெருமையும் வெளிப்படலாகின்றன.

சலம் பெற்ற இந்தத் தத்துவார்த்த நிலையை 'அருணா'வில் கண்கூடாகக் காண்கிறோம். 'அருணா' எண்பத்தைந்து பக்கம் கொண்ட சிறிய புதினம். ஓரங்கக் காட்சியானமையால் உண்மையில் தொடராக்கமாகாது. சிறியகாவியம். உரையாக்கத்தில் சலம் வெறிப்படச் செய்த எளிமை, காட்சிமுறை தெலுங்கு நவீன உரையாக்கத்திற்கும் கதை வடிவாக்கத்திற்கும் மிகப்புதுமையானது. சலத்தைத் தீவிரமான சீர்திருத்தவாதியாக, பால் தொடர்பான கதாசிரியராக, மரபு வழிச் சடங்குகளைச் சாடுபவராகக் கணக்கிட்டு முத்திரையிட்டவர்கள், 'அருணா' எழுத்து நடையின் கம்பீரத்தை, இலக்கியச் சிறப்பைப் பல ஆண்டுகளாகக் குறிப்பிட்டதே இல்லை! 'அமீனா', 'அருணா', நவீனங்கள் இரண்டும் தெலுங்கு இலக்கியத்தில் உயர்ந்த இடத்தைப் பெற்று அலங்கரித்த படைப்புக்கள்.

'ஜீவிதாதர்சனம்' (1948) தொடர்கதையில் கதாநாயகி லாலஸா. லாலஸா கல்லூரியில் படிக்கும் நாட்களில் ஆதாம் எனும் மருத்துவமாணாக்கனுடன் திரியலானாள். அது உடலைச் சார்ந்த கவர்ச்சி. இளமையின் வீறு கொண்ட எழுச்சி. தன்னைக் காதலித்துப் போற்றிய லக்ஷ்மண சிங்கை விடுதலைப் போராட்டத்தில் பங்கு ஏற்குமாறு செய்தாள். தன்னலமற்ற செயல் வீரனாகச் செய்தாள். (இது கற்பனைவாதக் காதல்). பிறகு அவனை மணம் புரிந்து கொண்டாள். ஒரு முறை சங்கீத மேதை மாவ்லங்கரின் இன்னிசையைக் கேட்டு, அவனது இசையில்

வசமாகி அவனுடன் சென்று சேர்ந்தாள். லக்ஷ்மண சிங் அவளைத் தடுத்தி நிறுத்தவோ வற்புறுத்தவோ இல்லை. இந்த சம்பவம் நிகழ்ந்த பின்னர் இதனைச் சமாதானம் செய்ய தேசிகாச்சாரி (கதையில் சலத்தின் பிரதிபலிப்பு) செல்கிறான்: ''சுதந்திரம் யார் வேண்டாம் என்கிறார்கள்? ஆனால் வாழ்க்கையில் நலனைச் சிதைக்கச் செய்யும் சுதந்திரத்தினால் என்ன நேரும்? அதுதான் பிரச்சினை.'' மோக உணர்ச்சிக்கு ஆளான லாலஸாவை அடைந்து மாவ்லங்கர் செய்த செயலைக் கண்டிக்காமல் போனது லக்ஷ்மண சிங் செய்த தவறு என்பதே சலத்தின் தீர்ப்பு! பின்னர் மாவ்லங்கர் லாவஸாவைப் பல விதத்திலும் துன்புறுத்தினான். அத்தகைய சூழ்நிலையில் தேசிகாச்சாரி அவளைப் பார்த்துத் தன் உதவியைச் செய்தான். அவள் தேசிகாச்சாரியுடன் வந்து சேர்ந்து, கணவன் லக்ஷ்மண சிங்குக்குக் கடிதம் எழுதினாள். லக்ஷ்மண சிங் தனது மரியாதைக்கும் அந்தஸ்துக்கும் குறை எனச் சும்மா இருந்து விடுகிறான். லாலஸா தேசிகாச்சாரியுடன் தங்கியிருக்கிறாள். லக்ஷ்மண சிங்கின் நண்பன் நரசிம்மாராவுடன் சேர்ந்து சுற்றுலாப் பயணியாகச் செல்கிறான். முதலில் தேசிகாச்சாரியுடன் அறிமுகம். பிறகு லாலஸாவைப் பார்க்கிறான். அவளோ தான் லாலஸா இல்லை என்கிறாள். கடைசியில் நடந்த நிகழ்ச்சிகளைக் கேட்டுத் தெரிந்து கொண்டதுடன், லக்ஷ்மண சிங் லாலஸாவைத் தன்னுடன் வருமாறு வேண்டினான். அவள் மறுத்துவிட்டாள். தேசிகாச்சாரி லாலஸா செல்வதைப் பற்றி விருப்பமின்மையை வெளிப் படுத்தினான். ''வாழ்வின் நோக்கமே அமைதிதான். இந்த அமைதியைக் குலைக்கும் எந்த இன்பமும், எந்த கௌரவமும், எந்தக் காதல் ரசனையும் என் வாழ்க்கைக்கு மிகவும் மாறுபட்டது. அதாவது அமைதியைக் குலைப்பது சுகமாகாது, பெருந் தன்மையுமாகாது, காதல் ரசனையுமாகாது.'' இது தேசிகாச்சாரி (சலம்) ஏற்றிருந்த கொள்கை. லாலஸா சொல்கிறாள் தேசிகாச் சாரியுடன் தனது தொடர்பினைப்பற்றி: ''எனக்கும் அவருக்கு மிடையில் என்றுமே காதல் கிடையாது. விட்டுக் கொடுக்காத பண்பு, ஆசை, ஒரு வேகம் ஏதுமில்லை. ஆனால் எங்களுக்குள் பெரிய ஒற்றுமை, அமைதிதான். ஏனென்றால் எந்தப் பிடிப்பும் எந்த மனத்தாங்கலும் இல்லாமல் மதித்து அதில் சுகம் பெறும் ரகசியத்தைக் கண்டு கொண்டவர். உங்களோடு (கணவனுடன்) வந்தால் மீண்டும் பழைய தொடர்புகளைப் பற்றித் தகராறு, கௌரவம், சொந்தங்கள், பணம், நண்பர்கள்... எனது உரிமை, ஆசைகள் எல்லாம் அவர் கைகளில் ஒப்படைத்திருக்கிறேன். அவரிடம் காதலுக்கு இடமில்லாத அளவற்ற அமைதி. ஏனென்றால் அவருக்குத் தேவைகளோ பயமோ கிடையா. துன்பங்களிலிருந்து தப்பித்துக் கொள்வதில் தேர்ந்தவர். அதனால் துயரங்களைக் கண்டால் பயமில்லை. அவருடைய இதயத்தில் அமைதி, ஆகாயத்தில் ஓர் மல்லிகைப்பூ.''

'ஜீவிதா தர்சனம்' தொடர்கதையில் கலையாற்றல் மேம்பாடு இல்லை. ஆனால் சலம் எந்த உறுதிக்கோட்பாட்டை மேற்கொண்டாரோ அதனைத் தெரியச் செய்யும் உரையாக்கம். அவருள்ளிருந்த 'லாலஸா', 'தன்னுரிமை' கடைசியில் 'அமைதி' நிலையை அடையவேண்டுமெனப் பார்க்கிறாள். அந்த 'சாந்தி'க் கெனவே அவர் ரமணாசிரமம் போய்ச் சேர்ந்தார். இங்குதான் மூன்றாவது காலக்கட்டம் நிறைவடைகிறது.

'மார்த்தா' (1963) ரமணாசிரமத்தில் எழுதப் பெற்ற கதை. நவீனம், பைபிளை அடிப்படையாகக் கொண்டு எழுதப் பெற்றது. மார்த்தா, மரியா என்ற அக்காள் தங்கை ஏசுவின் பக்தர்களாக மாறுகிறார்கள். இவர்களின் சகோதரன் லாஸரஸ். முதலில் ஏசுவை நிந்தனை செய்தாலும் பிறகு 'விசுவாசி'யாகிறான். இவன் இறக்கும் நிலையிலிருந்த போது ஏசு காப்பாற்றுகிறார். வேசியான மகதலெனும் அவள் காதலன் தடயஸும் தங்கள் நடவடிக்கை களை மாற்றிக் கொண்டு ஏசுவின் சீடர்களாகின்றனர். ஆனால் ஏசுவின் சீடர்களில் ஒருவனான இஸ்காரியத் ஏசுவைப் பகைவர்களிடம் பிடித்துத் தருகிறான். ஏசுவைச் சிலுவையில் அறைந்து கொல்கிறார்கள். ஏசுவைப் போலவே தனது அன்பினை உலகம் தவறாகக் கவர்ந்து கொண்டு, தன்னை இகழ்ச்சிக்கு ஆளாக்கிய தென்பதற்குச் சலத்தின் கருத்துக்கு ஓர் வெளிப்பாடாகும் இந்த நவீனம்.

நாடகங்கள் – குறுநாடகங்கள்

சலம் எழுதிய முதல் நாடகம் 'சித்ராங்கி' (1922), 'பத்மராணி' (1923). இவ்விரு நாடகங்களும் சலத்தின் நவீனமான 'சசிரேகா', 'தெய்வம் தந்த மனைவி'க்கு நெருங்கியவாறு காண்கின்றன.

சித்தராங்கி ராஜராஜனின் மகனான சாரங்கதரனைக் காதலித்தாள். அமைச்சனின் சூழ்ச்சியினால் அவர்கள் திருமணம் நடக்காமல் அவளை வேறொருவனுக்குக் கொடுத்து, தொலைவாக அனுப்பிவைக்கும் சூழ்நிலையில், சித்ராங்கி தனது குறிக்கோளின்படி கிழவனாக ராஜராஜனையே மணம் புரிந்து கொண்டு கோட்டையில் வாழலானாள். சித்ராங்கியின் இளமை யெழில், கவர்ச்சிக்கு வசமான ராஜராஜன் அவள் சொல்படி கேட்டு நடந்து கொள்ளும் சூழ்நிலையை உருவாக்கி, சாரங்கதரனையும் அவன் தாயையும் தனது கோட்டையில் வசிக்குமாறு ராஜராஜனை ஒப்புக் கொள்ளச் செய்கிறாள் அவள். இதற்கிடையில் ராஜராஜன் வேட்டைக்குச் செல்கிறான். சித்ராங்கி சாரங்கதரனைச் சந்திக்கிறாள். இங்கு சித்ராங்கியின் காம வேட்கை 'தெய்வம் தந்த மனைவி'யில் பத்மாவதியின் காமவேட்கை போன்றதே! ஆனால் சாரங்கதரன் மரபு நெறிகளின் அடிமை. நீதியையும் ஒழுக்க நெறிகளையும் விடவியலாதென்கிறான். ''அமைச்சர்களால் சமுதாயமும் மதமும் உன்னை மற்றொரு வருக்கு உரியவளாக்கி

யுள்ளன. என்னதான் நீ என்னைக் காதலித்தாலும், என்னவளாக இயலாது...நான் செய்வது பாவ மென்பதை மறுக்க வியலாது,'' என்ற சாரங்கதரனிடம், ''பெண்ணுக்குக் காதல் தவிர வாழ்க்கை யில்லை,'' எனச் சித்ராங்கி வாதாடவும் சித்ராங்கியின் குறிக்கோள் பயனற்றுப் போனது. திரும்பி வந்த ராஜராஜனுக்கு இவ்விருவரும் கலந்து பேசியது தெரியவருகிறது. சாரங்கதரனின் கைகால்களை வெட்டி யெறியுமாறு கட்டளை இடுகிறான். மயக்கமுற்ற சித்ராங்கி தெளிந்து தாமதமாக வந்து, சாரங்கதரன் குற்ற மற்றவனென முறையிடுகிறாள். அங்கங்குலைந்த சாரங்கதரனைப் பார்த்த சித்ராங்கி தன்னைக் குத்திக்கொண்டு இறந்து விடுகிறாள். காதலுக்காகத் தன்னையே இழந்து சாதனைக் காரியான சித்ராங்கியின் பாத்திர அமைப்பினைச் சிறப்பாகக் காட்டியுள்ளார் சலம். இந்த நாடகம் ஒரு பத்தாண்டு காலத்துக்குத் தொடர்ந்து அரங்கேற்றப் பெற்று சலத்தின் நண்பர்களிடையில் புத்திலக்கியக்கப் படைப்புக்களில் மிகப் புகழ்வாய்ந்ததாக விளங்கியது. பழைய நாடகம் 'சித்ராங்கி'யில் சாரங்கதரன் அறத்துக்கோர் அரிய வீரன். பெண்ணின் மோகவலைவீச்சிலிருந்து வெற்றி கண்டவன். சித்ராங்கி எதிரியாகவும் காமவெறிக்கோர் பிரதிநிதியாகவும் இருந்ததற்குமாறானது சலம் நாடகம். சித்ராங்கியின் காதல், அறிவாற்றல், செயல்திறமை, தியாகம் ஆகியவை நிரம்பிய முகமான ஒரு மாபெரும் பெண்மணி. சாரங்கதரன் மரபுநெறிக் கட்டுப்பாடுகளில் கட்டுண்ட அப்பாவிப் பலிக்காளை. இதனில் உரைகல் 'காதல்'.

'பத்மராணி' சித்ராங்கியைப் போன்று செயலாற்றல் உள்ள ஒரு தலைவி மட்டுமல்லள். ஆடவருடன் இணையாகப் போரிடவல்ல ஆற்றலைப் பெற்றிருந்த வீரவனிதை. கதாநாயகன் அபவர்மா வீரனேயன்றித் தாய் நர்மதா கரங்களின் விளையாட்டுப் பொம்மை. தாய்க்கு அரசாளும் அதிகாரம் தன் கைகளில்தான் இருக்கவேண்டுமென்ற தீவிர ஆவல், மகன் மீதிருந்த ஆணவத்தையும் அதிகமாக்கியது. ஆட்சி கைவிட்டு அகலும் சூழ்நிலைகளில் அவளைக் கொன்று விடக்கூடத் தயங்க மாட்டான். அவளைக் கட்டுப்படுத்தும் திறமையுள்ளவள் பத்மராணி ஒருத்திதான். இந்நாடகத்தில் பத்மராணி தன்னுரி மைக்கு மற்றெல்லாவற்றையும்விட அதிக மதிப்பளிப்பவள். அவளுக்கு அபயவர்மாவிடம் விருப்பம் இருந்தாலும் அவனை மணம் புரிந்துகொள்ள அவள் ஒப்பவில்லை. தாயைப்பற்றி அவள் எச்சரித்தும் கேட்காமல், தன் காதலைப் பத்மராணி ஏற்காததற்கு வருந்தி, வெறுப்புற்று, தாயுடன் போராடிப் பலியாகிறான் அபயவர்மா. பத்மராணி அபயவர்மாவை நிராகரிக்கக் காரணம், அவனது இரண்டாம் மனைவியாகித் தனது உரிமையை இழக்க அவளுக்கு விருப்பமின்மையே. மேலும் அபயவர்மாவின் மனைவி சாரதா என்றால் பத்மராணிக்கு நட்புப் பிணைப்பு.

கடைசியில் பத்மராணி சாரதா தான் மிகுந்திருந்தவர்கள். நர்மதாவுக்குப் பைத்தியம் பிடிக்கிறது. இந்நாடகத்தில் நர்மதா அத்தையாகவும் அரசியாகவும் அதிகாரத்தைக் காட்டித் தன் மகனை, மருமகளை தம்பியரைச் செயலற்றவர்களாக்கி அடக்கி வைப்பதைச் சலம் சிறப்பாகச் சித்தரித்து, அக்கொடுமையிலிருந்து அவர்களை விடுவிக்க வந்த பத்மராணியைத் தன்னுரிமைக்கும், நட்புக்கும், வீரத்துக்கும் எடுத்துக்காட்டாகச் செய்தார். பத்மராணியைப் 'புதுமைப் பெண்'ணாக, இலக்கியத்தில் நாயகியாகக் காட்சியளிக்கச் செய்தார். இதுவும் நல்ல புகழ் பெற்ற நாடகம்.

1922-27இன் இடையில் நாடகங்களில் சலம் சமுதாய நடைமுறைகளில் செயல்வாதியாகக் காட்சி தருகிறார். வீரேசலிங்கத்தின் விதவை மணங்கள், விலைமகளிர் புறக்கணிப்பு செயலளவில் எத்தகைய சூழ்நிலைக்கு வழிகாட்டினவோ, அவ்வாறே ஒவ்வொரு குடும்ப வாழ்க்கையை, சமுதாயத்தில் சில மனிதர்களை, விலைமாதரின் பரிதாப நிலையை மெய்ப்பாட்டுடன் உருவகமாக்கியதன் வாயிலாகப் பலவகை விமரிசனத்துக்கான செயல்களை இலக்காகச் செய்தார் சலம். சலம் மரபு நெறிகளுக்கு மாறுபட்டவரல்லர். ஆனால் நடைமுறைகள் புரட்சியாக ஆனமையால் அவ்வகை மனிதர்கள் மீது காட்டிய விபரீதப் பலனைத் தெளிவுறக் காட்டினார் சலம். மனிதர்களிடையில் வரவேண்டிய உயர்ந்த மாற்றம், நற்குணம், இரக்கம், அன்பு, ஆற்றல், உரிமை ஆகியவற்றைக் குறிப்பிட்டதும் அவற்றைத் தமதாக்கி வழக்கத்திற்கொள்ளச் செய்ததும் மனிதனைச் சிந்திக்கச் செய்து, அவன் இதயத்தை உருக்கி, அவனுடைய ஜடத்தன்மையை, உறக்கத்தை விரட்டியோடச் செய்யும் வலிமைமிக்க இலக்கியமானது. அதற்கு அத்தனை சக்தி உண்டு. அத்தகைய வலிமைமிக்க உரையாக்கங்களைச் சலம் படைத்தார். அவற்றின் செல்வாக்குப் பெருமை எல்லார் மீதும் ஒரே மாதிரியாக இருக்காதல்லவா! அதனால் சலத்தை மக்கள் குறைத்தோற்றத்திலேயே பொருள் செய்து கொண்டார்கள். விவாதத்துக்குரியதோர் எழுத்தாளராகிவிட்டார்.

'சத்யம்', 'சிவம்', 'சுந்தரம்', எனும் மூன்று நாடகங்களில் (1922) முதல் குறு நாடகம் மொபாசா கதையின் ஆதாரமாக எழுதப்பெற்றாலும் ஆந்திரதேச வரலாறு படைத்த பொப்பிலி கோட்டை முற்றுகையிடப்பெற்ற தருணத்தினைப் பயன்படுத்திக் கொண்டாலும், பொருளாதாரச் சங்கடங்களில் வேசியர்களுக்குக் கண்கூடாக நடக்கும் அநியாயங்களை மையமாகக் கொண்டு காட்சி தருகின்றது. பிற்பட்ட இனத்தைச் சார்ந்த ஓர் ஆணும் பெண்ணுமான ஒரு குழுவினர் பகைவர் கையில் ஆபத்தான முறையில் அகப்பட்டுக் கொண்டபொழுது, அவர்களில் விலைமகள் தொழில் புரிந்த சத்யம் அவர்களைக் காப்பாற்று

வதற்காகச் செய்த தியாகத்தை, முதலில் புகழ்ந்து போற்றினாலும், ஆபத்து தீர்ந்ததும் அவர்கள் ஒருவரைவிட ஒருவர் அவளை எத்தனைக் கீழ்த்தனமாக, மனம்போனவாறு நடத்துகிறார்கள் என்பதைக் கண்கொட்டாதவகையில் எடுத்துக் காட்டுகிறது. இக்குறுநாடகம். கடைசியில் அவளுக்குத் தண்ணீர்கூடத் தராமல், அருவருப்பான பொருளாகப் பாதை ஓரத்தில் ஒதுக்கித் தள்ளிவிட்டுப் போய்விடுகிறார்கள் ! மனிதனின் தற்பெருமை, மரியாதை, குலம், ஆச்சாரம் என்ற பெயரில் வெளிப்படையாகச் செய்யும் அதன் கொடுமைக் காட்சி, பார்ப்பவர்களைச் சகிக்க வொண்ணாமல் செய்ய எழுதப்பெற்றது இக்குறு நாடகம்.

'சிவம்' குறுநாடகத்தில் ஒரு குடும்பக் காட்சியரங்கம். சமுதாய வாழ்க்கையில் கீழ்த்தரமானவற்றை வெளிப்படுத்தும் வகையில் காட்டப் பெற்றிருந்தது. நகராட்சித் தலைவன் வேங்கடேஸ்வரலு ஒரு காரியவாதி. மக்கள் மனதுக்கேற்ப நடந்து பிழைப்பவன். விதவையான மகள் சுசீலாவை டாக்டருக்குப் படிக்க வைக்கிறான். அவள் சிவம் என்னும் டாக்டர் நண்பனுடன் சென்னையிலிருந்து வருகிறாள். வேங்கடேஸ்வரலுவின் மகன் பந்துலு பெண்ணாசையில் உழல்பவன். ஒப்பந்தக்காரன் நாராயணராவ் நாயுடு மகள் காந்தம்மாவுடன் தொடர்புகொண்டு அவளைக் கருதரிக்கச் செய்து விடுகிறான். காந்தம்மா வேங்கடேஸ்வரலு வீட்டுக்கு வருகிறாள். அவளுடைய பிரச்சினைக்கு யாரும் பரிகாரம் கூறவில்லை. பந்துலு அவளை மணம் செய்து கொள்ள மறுக்கிறான். வேங்கடேஸ்வரலு மகனை ஏதும் சொல்லமாட்டான். அவன் மனைவிக்கோ குலம் குறுக்காக இருக்கிறது. கடைசியில் நாயுடுவும் மானமிழந்துவிட்டதாகத் தன் மகளை வீட்டுக்கு அழைத்துச் செல்ல மறுத்துவிடுகிறான். படித்துக் கொண்டிருந்த சுசீலா காந்தம்மாவை இரக்கமின்றி நடத்துகிறாள். விருந்தினனாக வந்த சிவம் ஒருவன்தான் அவளை ஏற்றுக் கொள்ளச் சம்மதிக்கிறான். ஆனால் காந்தம்மா பழக்கமில்லாத ஆடவனுடன் செல்வதற்கு உடன்படவில்லை. அவளுக்கு என்னதான் வழி? வேங்கடேஸ்வரலுவின் தாய் மகாலக்ஷ்மம்மா தன்னுடன் தங்கிவிட ஆதரவு தருவதாகக் கூறுகிறாள்! காந்தம்மாவைத் தன்னைடன் அழைத்துக் கொண்டு வீட்டைவிட்டுச் சென்று விடுகிறாள். இந்நாடகத்தில் சுசீலா விதவை. படித்துக் கொண்டிருக்கும் பெண். ஆயினும், அவளுடைய விருப்பம், சிவத்தை அவள் நடத்திய விதம் ஒரு கண்திறப்பு. பழங்கால மகாலக்ஷ்மிக்கு இருக்கும் கருணை, காட்டும் மரியாதை இக்காலத்தவரான மற்றவர்களுக்கெல்லாம் இதுவும் குறைபாடாக இருப்பது வியப்பை உண்டாக்குகிறது.

'சுந்தரம்' நாடகத்தில் மனிதனின் மதிப்பைத் தெரிந்திருந்த சுந்தரம் கணவனுடன் குடும்பம் நடத்தச் செல்கிறாள். அவளுக்குச்

சிற்றப்பா நாராயணராவ் தொல்லைகளைத் தருகிறான். நாராயணராவ் தன் மனைவி சீதையை பாசமில்லாதவளென ஒதுக்கிவிடுகிறான். நாடகத்தில் விளக்கமெல்லாம் திருமணம், மனைவியின் பணிவு, பதிவிரதத்தன்மை போன்றவற்றைப் பற்றிய முடிவில்லாத விமரிசனம் தான். ''தம்பிக்கு அக்காள் மகளைக் கொடுக்கிறாள் இல்லையா, அது போலத் தம்பிக்கு அண்ணன் கொடுத்தால் என்ன?.... ரத்த உறவு எல்லாம் ஒன்று தானே. பெண்ணின் கோத்திரம் ஏன் ஆணுக்கு வரக்கூடாது?'' வரன் உறவு வரிசைகளை ஏற்பதிலிருந்து சோப்பு இல்லையென்பது உள்ளிட, ஆச்சாரங்களைச் சாடுதல் மிகுதி இந்நாடகத்தில். முதலிரண்டு நாடகங்களிலுள்ள சமுதாய மெய்ப்பாடுகள் இந்நாடகத்தில் இல்லை. இது வெறும் வாதப்பிரதிவாதங்களின் தொகுப்பு.

ஜானகியின் பிரச்சினை, 'ஜானகியின் துயரம்', 'பொய்கள் விலகட்டும்' (1924) ஆகிய மூன்று நாடகங்களில் கருப்பொருள் ஒன்றே. விலைமாது. ஜானகி ஒரு விலைமாது. தோழி ராதாவுடன் கூறுகிறாள் தனது சோகக் கதையை. ''நான் யாருக்கும் சொந்தமில்லாத பெண். எல்லாருக்குமே சொந்தம் என்று சொல். தந்தைக்கு உரியவள், அம்மாவுக்கு உரியவள், அண்ணனுக் குரியவள், தெலுங்குக்காரி, அல்லாதவள், துலுக்கப்பெண், இந்துப்பெண், பறைச்சி என ஏதுமில்லாதவள். எப்படிப்பட்டவள் என்றில்லை. பெண்ணா? இல்லை. அறிவில்லை. இதயம் இல்லை. இத்தனைக் கீழ்த்தரமாகப் பயன்படுத்திக் கொண்டு ஆளைச் சகதியில் அழுத்திய இந்தச் சமுதாயத்தை நோயால் புழுத்துப் போகச் செய்து, பழிதீர்த்துக் கொள்கிறேன். என் மீது காரி உமிழும் இந்தக் குடும்பப்பெண்களை, என் நோயை வாங்கிக் கொண்டு, புழுபிடித்து அழியச் செய்கிறேன். உலக ராட்சசியாய், மகமாரியாய், பாவக்காடாய், பரந்து திரிந்து மாற்றிவிடுகிறேன். பூபாரத்தைக் குறைத்து சொர்க்கத்தை அடைவேன்.'' இது ஜானகியின் புலம்பல், பழி! இன்னொரு நாடகத்தில் ஜானகி தன்னிடம் வந்த ஒரு பச்சிளம் சிறுவன் மீது இரக்கம் கொண்டு, தனது நோயைப் பற்றிச் சொல்லிப் போகச் செய்து விடுகிறாள். அந்த அனுபவத்தை மறக்கவியலாமல் கூறுகிறாள். 'எனக்கு இப்போது இந்த எண்ணம் வந்துவிட்டது. இவர்கள் எல்லாருக்கும் நோயைப்பரப்ப வேண்டாம் என்ற ஆத்திரம் தப்பா என்று. இந்தக் கருணைதான் தர்மமா என்று.'' இது 'ஜானகி பிரச்சினை.' மூன்றாம் குறுநாடகத்தில், ஒரு பெரிய மனிதனுக்கு, கல்லூரி மாணாக்கனுக்கு விலைமகளிர் கூறும் பொய்புனைவுகளைப் பற்றிய உரையாடல். வேசி தான் இளம் கன்னியெனப் பொய் சொல்லிச் செயல் புரிகிறாள். அவள் உலகையறியாதவள். ''இளமங்கையைப் போலத் தீனி (உறக்கம்). மேலும் குடி. ஆண், நிறையப் பணம், புடவை, காதலர்கள், டாக்டர், வைத்தியசாலை, போலீஸ்காரன் அவ்வளவுதான் வாழ்க்கை என்பதற்குரிய

பொருள். பெரிய மரத்தைச் சிறிய பூந்தொட்டியில் வளர்த்தது போல...' என்று வேதனையுடன் வேசியரின் வாழ்க்கை விவரிக்கிறாள் அந்தப் பெரிய மனுஷி. இம்மூன்று குறு நாடகங்களும் ருஷிய மொழியிலருந்து பெயர்க்கப்பெற்றவை என்றார் சலம், உரையாசிரியர்களின் பெயரைச் சொல்லாமல்.

'பொறாமை', 'பெண்களின் பசி', 'மருந்தூசிகள்' (1927), 'வீரம்மா', 'பங்கஜம்', 'என்ன நோய்?' (1930) ஆகிய இந்த ஆறு குறுநாடகங்களில் நடுத்தர வகுப்பினரிடையிலும் தாழ்நிலை யினரிடையிலும் காணும் மனப்போக்குகள், நடவடிக்கைகள், பெண்கள் எதிர்நோக்க நேரும் பிரச்சினைகள் ஆகியவை சித்தரிக்கப் பெற்றன. பொருளாதாரத் தாக்கங்களின் விளைவுகள் குறிப்பிட்டுக் காட்டப்பெற்றன.

உத்தியோகம் செய்கின்ற விதவை சியாமளா. சங்கீத வித்வான் ஒருவன் மீது காதல் கொண்டு, வேலையை விட்டுவிட்டு அவனோடு போய்விடுகிறாள். நாடு சுற்றி, பெருமையோடு வாழ்ந்து, அந்தச் சங்கீத வித்வான் இறந்து போகிறான். சியாமளா கர்ப்பமாகியிருந்தாள். பணமில்லாமல் தங்க இடம் தேடி இளமைக்காலத்துத் தோழி ராதாவிடம் வருகிறாள். சியாமளா பாவச் செயல் புரிந்து பல துன்பங்களடைந்து வறுமை நிலை மையில் தன்னிடம் வந்து சேர்ந்தாளென்று முதலில் இரக்கம் காட்டிய ராதா, சியாமளா தனது காதல் வாழ்வை மனமாற அனுபவித்ததைச் சொல்லத் தெரிந்து கொண்டதும், ''இவளை அனுப்பிவிடவேண்டும். இவள் நம்வீட்டில் வேண்டாம்,'' என்கிறாள் கணவனிடம். ''ஏதோ பாவத்தைச் செய்துவிட்டோமே என்று பயந்து வேதனையுடன் பிழைப்பவளானால் உதவியா யிருக்கலாம். ஆனால் தீய வழியில் இவ்வளவு சுகமாக, கஷ்டப்பட்டுக் குடும்பத்தை நடத்தி வேதனைப்படும் நம்மை விடச் சுகமாக இருந்தனுபவித்தாள் என்றால் எப்படிப்பட்ட தீயவளாக இருப்பாள்? பெரிய ராட்சசியாக இருந்தாலன்றி, அத்தனை பாவத்துடன் ஆனந்தமடைந்திருக்கமுடியாது,'' என்ற மனைவியிடம் கணவன் சொல்கிறான். ''இது தான் காரணம். பாவம் செய்த பெண்களைப் பார்த்தால் இந்தக் குடும்பப் பெண்களுக்கு அப்படிக் கோபம் பிறக்கிறது.'' ''ஏன்?'' ''பொறாமை''.

'பெண்களின் பசி' பாலுறவைப்பற்றியதன்று! சில கணவன்மார் பெண்கள் கையில் பணம் தரமாட்டார்கள். கணவன் வீட்டிலிருக்காத சமயங்களில் பட்டாணி, வேர்க்கடலை போன்ற நொறுக்குத்தீனி தின்ன வேண்டுமென்று விரும்பும் பெண் வீட்டிலிருக்கும் அரிசியை வாயிலிட்டுக் கொள்வாள். அரிசியைக் கூட அளந்து கொடுக்கும் கணவன் அதற்கும் வழியில்லாமல் துன்புறுத்துகிறான். அவள் பட்டாணி விற்கும் பையனை

மறைமுகமாக வழிமடக்கி வாங்கித் திருட்டுத்தனம் புரிய முயல்கிறாள். இது தெரிந்த கணவன் அவளுக்குத் திருட்டுபுத்தி என்று சீறிச் சினக்கிறான். ''டேய், உன்னைப்போல பேர் வழியா அவள்? உனக்கு நாடகத்தின் மேல், சிகரெட்டு மீது ஆசையென்றால் அவளுக்கு வேர்க்கடலைமீது ஆசை! உனக்கேன் இந்த வித்தியாசம்?'' என்று வசைகிறான் அக்கணவனின் தோழன்.

உடல் நலம் பேணும் முறைகள் தெரியாமல், தெரிந்தாலும் டாக்டருக்கும் மருந்துக்கும் செலவாகின்றதென்று, மருமகளுக்கு வைத்தியம் செய்யாமல், ஆச்சாரம், அனுஷ்டானங்களைக் கூறி தடைசெய்து கருமித்தனத்தை எடுத்துக்காட்டும் அந்தணர் குடும்ப ஓவியம் 'மருந்தூசி' எனும் குறுநாடகம்.

'வீரம்மா' ஏழைகள் பஞ்சம் நேர்ந்தபோது படும் துயரங்களைப் பற்றிய கதை. சலம் பொருளாதார நிலைமைகளில் சரிவர அக்கறை காட்டாமல் எப்பொழுதும் பாலுணர்வு பிரச்சினை, பெண்ணுரிமை எனத் தமது உரையாக்கங்களில் சித்தரித்தார் என்ற விமரிசனத்துக்கு நல்ல பதிலாகும் இப்போது விளக்கிய மூன்று நாடகங்கள்.

'பங்கஜம்' குறு நாடகத்தில் கணவன் ஆதரவிழந்தவனாக, தனது உயிரைக் காப்பாற்றிக் கொள்ள, பங்கஜத்தைத் திருடர்களிடம் ஒப்படைக்கிறான். அவள் ஒழுக்கம் தவறி விட்டாளென அக்கணவனே அவளை ஒதுக்கிவிடுகிறான். பின்னர் குழந்தை பெற்று, பிறந்த வீட்டிலிருந்த பங்கஜத்துக்காக மீண்டும் வந்து அக்குழந்தையைக் கிறிஸ்தவ சமுகத்திடம் விட்டுவிட்டுத் தன்னோடு குடித்தனம் செய்ய வருமாறு கணவன் அழைக்கிறான். பங்கஜம் முடியாதென்கிறாள். வைத்து வாழத்தெரியாத கட்டினவனைவிட, தன் பிள்ளைதான் தனக்கு உதவுவான் என்கிறாள் பங்கஜம். குடித்தனம் செய்யப் போகும்படி தாய் சொல்லியும் கேட்கவில்லை. மரியாதைக்காக, பொறுமைக்காக நடைமுறையை ஏற்றுக்கொண்டு சமாதானமாவது தான் அறிவுடைமை எனும் சமுதாய நீதியை எதிர்த்துத் திரும்பினாள் பங்கஜம்.

'என்ன நோய்?' சுவையற்ற உரையாடலாகும். விக்டோரியா காலக் கலாசாரத்தின் செல்வாக்கு, ஈடுபாடு அதிகமாக உள்ள சமுதாயத்தில் சலம் குறுநாடகம் எத்தகைய சலனத்தைத் தோற்று வித்திருக்குமென உணர்ந்து கொள்ளலாம். வேசியரின் தொடர்பால் நோயுற்று, களங்கமற்ற மனைவிக்கும் தொற்றச் செய்து, அவளுக்குச் சிகிச்சை செய்யாது விட்டு, பிறகு டாக்டர் வைத்தியம் பார்த்து கணவனுக்கும் சிகிச்சை தேவையென்றும் சொன்னபிறகே, மரியாதைக்காகப் பெரியவர்களான அத்தையும் மாமனும் கணவனும் செய்யும் அறிவீனச் செயல்களையும் சமுதாயப் போக்கினையும் தாக்கும் விமரிசனமாகும்.

இக்குறுநாவல்களை வரைவதில் சலத்துக்கு இப்பஸ் பெர்னார்டு ஷா ஆகிய நாடகாசிரியர்களின் செயலாதிக்கம் இருந்ததென்பதில் ஐயமில்லை. 1927-30 ஆம் ஆண்டுகளில் சலம் எழுதிய நாடகங்கள், 'தியாகம்', 'பிரிவுகள்', 'கல்யாணி', 'மங்கம்மா', 'சசாங்கா' (1935) ஆகியவற்றில் சலத்தினிடமிருந்து வருகின்ற மாற்றம் தெரிய வருகின்றது. நவீனங்களைப் பற்றி விவரித்த பொழுது, குறிப்பிடப்பெற்ற மூன்றாவது காலக்கட்டம், இங்கு 'சசாங்கா' (1935)வில் காணக்கிடக்கிறது. 'சசாங்கா' நாடகத்தில் சலத்தினுள்ளான அழகுணர்வுச் சாயல், ரசிகத்தன்மை சசாங்க பாத்திரத்திலும், சலத்தினுள் நேர்ந்துவரும் ஆன்மீகவாதியான வேதாந்தி, பிருகஸ்பதி பாத்திரங்களில் இருவிதமாகக் காணச் செய்கிறார்.

'சசாங்கா'வின் கதை அனைவருமறிந்த புராணக் கதை. தேவகுருவான பிருகஸ்பதி, சீடன் சசாங்கன். அவன் பிருகஸ்பதி மனைவி தாராவுடன் உறவு கொள்கிறான். இக்கதையில் தாரா பிருகஸ்பதிக்கு இடையிலான உறவுத்தொடர்புகளை மிகவும் தெளிவாக்கியதுடன் சலம், தாரா சசாங்கனின் காதல் தொடர்பைப் பற்றி பிருகஸ்பதி உணர்ந்திருந்திருந்தார் என்ற குறிப்புணர்த் தலால் தம் கற்பனையைக் காட்டியிருக்கிறார்.

தாரா பிருகஸ்பதியைப் போற்றி விரும்புகிறவள். ''உங்கள் பார்வையை உள்ளுணர்வாக்கி, பரம ஒளியில் ஒடுங்கிய கணத்தில் நான் உங்கள் முகத்தின் பேரொளிக் கிரணங்களாகிவிட ஆவல் கொள்கிறேன்.....'' ஆனால் பிருகஸ்பதி கணவராக அவளை அருகிலழைத்து அணைத்துக் கொண்ட பொழுது, ''நீங்கள் உயர்ந்த பொற்பீடத்திலமர்ந்துள்ள மேலான மகானாகத் தோன்றுகிறீர்கள். என் பக்தி நாணத்துடன் கண்களை மூடச் செய்கிறது. ஆர்யா, உங்கள் திருவடி என் சிரசின் மீதே. கால்களின் கீழல்ல,'' என்கிறாள் தாரா. ''தவப்பிரபஞ்சம் பாசத்துக்காப் பாற்றபட்டதல்லவா?'' எனக் கேட்கும் தாராவுக்கு, ''பிரபஞ்சரசா பாசங்களை நுகர்ந்து வெல்வதே தவம்'', எனப்பதில் உரைக்கிறார் பிருகஸ்பதி. அது பயனற்ற பொருளற்ற உறுதிப்பாடாக வியலாதென்று தெளிவுறுத்துகிறார். ''உள்ளாழ்ந்திருக்கும் மோகமெனும் பாதாள கங்கை மேலெழும்புமாறு செய்து பயன் நுகரும் திறன் எனக்கில்லை. 'மாறம்' நான் அறியாதது. குறை எனதே... நானே உன் அன்புக்குத் தகுதியற்றவனெனக் கருதுகிறேன்,'' எனவும் சொல்கிறார்.

சசாங்களின் பேச்சுக்களில் சலம் தமது வாழ்க்கையில் தம்மை வருத்திவந்த அழகுணர்வார்வத்தைத் தெளிவாக்குகிறார். சசாங்கன் அநுராதாவின் பாட்டில் தன்னை மறந்து அவள் இருப்பையே மறந்து போகின்றான். அவ்விருவருக்கும்

பொருத்தம் அமைந்தால் நன்றாயிருக்குமென்பது பிருகஸ்பதியின் கருத்து.

தாராவுடன் சசாங்கன் பாசத்துடன் இருப்பது பிருகஸ்பதிக்குச் சற்று குழப்பத்தை உண்டாக்குகிறது. அதனை பிருகஸ்பதி ஆன்ம சோதனைக்கோர் வாய்ப்பாகக் கருதி ஆன்மத்தூய்மைக்கென ஆசிரமம் விட்டுச் செல்கிறார்.

''சசீ, முற்றிலுமாக அனைத்துநெறியும் பெருந்தன்மைப் பண்புமான பிடிப்புத் தளைகளைத் தவிர்த்து, அறுத்தெறிந்து, ஆசை கொண்டதுமான பெண்ணின் வாழ்வு முறையான முழுமை பெறாதது, பொருளற்றது,'' என்கிறாள் தாரா சசாங்கனிடம். தாரா சசாங்கன் ஒருமித்த இரவு பொழுது புலர்ந்ததும் சசாங்கன், ''இந்த சுப உதயஒளி எனது மலர்ந்த நிலையைச் சுடச்செய்யுமா?'' என்கிறான். தாராவுக்கு அத்தகைய ஐயம் ஏதும் இல்ல. ''நீயே நான் எனும் இன்னிசையுடன் படைப்பு ஊஞ்சலாட்டுகிறது,'' என்கிறாள். ஆனந்தமாக, அநுராதா, ''என் பாட்டுகள் உன்னைக் குழப்பமடையச் செய்து உனக்கு விருப்பமில்லாத செயலைச் செய்தாயா?'' என்றாள். அநுராதாவின் பாடல்கள் சசாங்கனூடே காமக்கிளர்ச்சியை மேலோங்கச் செய்தனவென்று, தாராவுடன் அவன் சங்கமமானதற்கு அவை தூண்டலாயமைந்தனவென்பது சலத்தின் கற்பனை. அறம் தவறிய குற்ற உணர்வுடன் தான் வெளியேறி விடுவதாகச் சசாங்கன் சொல்லவும் அநுராதாவுக்கு அவன் மீது ஆசை பெருக்கெடுக்கிறது.

பிருகஸ்பதி திரும்பி வருகிறார். தவத்தினிடையில் தாரா அழைக்கச் செவியுற்று வந்தாராம் பிருகஸ்பதி! சென்றகன்ற சசாங்கனை அழைத்துவர பிருகஸ்பதி போகிறார். பிருகஸ்பதி இல்லத்தில் நிகழ்ந்த அறம் மீறிய செயலையறிந்த தேவேந்திரன், விசுவாமித்திரர், அகல்யாவின் கணவர் கௌதமர் ஆகியோர் பிருகஸ்பதி ஆசிரமத்து வருகிறார்கள். சசாங்கனை தண்டிப்பது மிகவும் தேவை என்கிறார்கள் அவர்கள். ''உங்கள் பார்வையில் யார் தண்டனைக் குரியவரோ அவர் எனக்குப் பிரேமபாச சம்பந்தமுள்ளவர்'' என்கிறார் பிருகஸ்பதி. வாதப்பிரதி வாதம் நடைபெறுகிறது.

''கௌதமர் :	இனி நீதி, அநீதி, ஒழுங்கே இல்லையா?
பிருகஸ்பதி :	பிறர் வாழ்வில் நீதி, நீதிக்குமாறானது என்று உறுதி செய்யும் நியாயாதிபதி பீடத்துக்கு உம்மை உரியவர் ஆக்கியவர் எவர்? அவ்விதி முறை உம் வாழ்வைத் திருத்திக் கொள்ளப் பயன்பெற வேண்டும். உலகத்தைத் திருத்துவதற்காக அன்று.
கௌதமர்:	மனைவியும் உலகமும் ஒன்றா?

பிருகஸ்பதி : உம் மனைவி யார், நீர் யார்? இன்னும் உமது அகங்காரம் உம்மை விடவில்லையா முனிவரே?

தேவேந்திரன் : தங்களுக்கு இவ்வேறுபாட்டுணர்வு இல்லை. அவ்வம்மையைப் போன்ற எளியார்க்கும் ஞானம் குன்றியவர்க்கும்கூட அதே அறநெறியா?

பிருகஸ்பதி : உன் தர்மத்தைத்தவிர, எளியவனாகட்டும், இனி எவராகட்டும், இன்னொருவரின் தர்மம் நீ முடிவு செய்வது என்பது மடைமை; சாகசம்.... எளியோர்கள் அவர்களுக்குத் தோன்றியவாறு அவர்கள் நடந்துகொள்கிறார்கள். நமக் கெதற்கு?

கௌதமர் : முனிவர்கள் நாம்.. உலக ஆன்மிக வளர்ச்சிக்காக, அறம் உணர்த்துவதற்காக.

பிருகஸ்பதி: கௌதமரே ! அஞ்ஞானத்துடன் பலமற்ற நிலையில், மடைமையுடன் எல்லாவித பிணி பீடைகளுக்கும் துயரங்களுக்கும் ஆளாகி, கர்மவசத்தால் பிறப்பு இறப்புக் களிலிருந்து விடுதலை பெறவியலாமல் பேரிருளில் மூழ்கிக் கிடக்கும் கோடி கோடி பிராணங்களுக்கும் தர்மபோதனை செய்வீரா? கௌதமரே! அவர்களது ஆனம்ஞான வளர்ச்சிக்கெனச் செயல் புரியும் சங்கல்பம் உண்மையில் உமக்கு உள்ளதா? இருப்பின் விருப்பம் கொள்க. எல்லா ஜீவன்களையும் விரும்புக. மேலும் அதிகமாக விரும்புக .... கண்டனம் வேண்டாம், தண்டனை வேண்டாம்....''

அதன் பிறகு சசாங்கன் திரும்பி வருகிறான். ''எந்த தேசத்துக்கோ போய் திரும்பி வந்த குமரனைக் கட்டித் தழுவிக் கொண்டது போலிருக்கிறது எனக்கு இந்த ராத்திரி,'' என்கிறாள் தாரா. அகல்யா வருவதோடு எட்டாவது காட்சியுடன் நாடகம் முடிவடைந்தது. ஆனால் சலம் நாடகத்துக்கு ஒன்பதாவது காட்சியைப் பிறகு எழுதித் தன்னுள் இருந்த ஆவல்களை யெல்லாம் வெற்றிகொள்ள முயற்சிக்கிறார். ''தாரா சசாங்கனையும் அநுராதாவையும் சேர்த்துத் தழுவிக் கொண்டாள்'' எனும் வாக்கியத்துடன் சலம் நாடகத்தை முடித்தார். 1935இல் கடைசிக்காட்சி தனியாக அச்சிடப்பெற்றது.

இந்நாடகப் பாத்திரங்களின் உரையாடல்கள் நீண்டனவாயும் இயற்கை வர்ணனைகளுடன் அழகுணர்ச்சிக் காட்சிகளை விளக்கு

வனவாயும் உள்ளன. அரங்கமேடை மீது எந்த அளவுக்குக் காட்சியாக்கத் தகுந்ததென்று தெரியாதாயினும், இந்நாடகம் ரவீந்திரநாத தாகூரின் நாடகங்களைப் போன்று கவிதைமயமாய் இருக்கிறது. சலத்தினுள்ளாக உருவாகி வெளிப்பெறும் வைராக்கியம் ஆன்மீகமயமான கருணை, பொறையுடைமை ஆகிய மிக உயர்ந்த மதிப்பினை (பிருகஸ்பதி நிர்ணயம்) இந்நாடகத்தைத் தேர்ந்தெடுத்த உரையாக்கமாகப் பொலியச் செய்தன.

'சொர்க்கமும் நரகமும்,' 'இறப்பு', 'எமன் எதிரில் சலம்', ஆகிய குறுநாடகங்கள் (1934) சலத்தின் ஆன்மீகக் காட்சி வளர்ச்சிப் போக்கினை உணர்த்துகின்றன.

'சொர்க்கமும் நரகமும்' நாடகத்தில் திவ்யஞான சமாஜத்தினரின் கொள்கைகள் காணலாகின்றன. லெப்பீட்டர் வரைந்த 'மரணத்தின் மறுபக்கம்' (The other side of Death) நினைவுக்கு வருகிறது. இக்குறு நாடகம் பாண்டுரங்காராவ் எனும் கதைப்பாத்திரம் இறந்து போய், உடலை விட்டுப் பிரிந்து ககன உலகில் (astra plane) அடையும் அனுபவங்களின் சித்திரக் காட்சி. சலம் இந்நாடகத்தின் முன்னுரையில் இவ்வாறு எழுதினார். ''இறப்பு நீண்ட உறக்கம் என்றார்கள். உறக்கத்தில் உடல் இருப்பது தெரியாது. அதனை உணரவும் மாட்டேன். ஒருவனுக்கு இப்போது மிச்சமாக இருப்பது உறக்கத்தில் அறியும் கனவு காணும் உள்ளம். அனுபவத்துக்கு அதுதான் கருவி இப்போது. அதனை 'யாதனா சரீரம்' என்பர் சிலர். இந்திரியங்கள் செயலில்லா மையால் அவன் அதனைக் காணவியலாது, கேட்கவியலாது. ஆனால் காண்பதாகவும் கேட்பதாகவும் கனவு காண்கிறான். யாதனா சரீரமே விண்ணுடல் (astral body). குறுநாடகத்தில் பாண்டு ரங்காராவின் வாழ்க்கையில் நேர்ந்த நினைவுகளனைத்தையும் உற்றுணர்வதே சொர்க்க நரக அனுபவம். அதன் பிறகு இரண்டாம் காட்சியில் ஓர் எடுப்பான ஆழ்ந்த குரல் கேட்கிறது. எப்படி பாண்டுரங்காராவின் ஆன்மா மீண்டும் உடலை நாடுகிறது. ''எதற்கு இந்த உலகம்?'' என்கிறது அக்குரல்.

''அங்கு பயம், நோய், இறப்பு தானே'', என்கிறது. ''ஆனால் என்ன? வைகறை இளம்வெயில், மலர்கள், சிறுவர்களின் சிரிப்பொலி, சங்கீதம், திரைப்படக்காட்சிகள், அன்பான தாயின் பார்வை......நண்பர்கள்.....'' இவற்றுக்காக மீண்டும் பிறக்க வேண்டுமென்கிறான் பாண்டு ரங்காராவ்.

'இறப்பு' அதனைக் காட்டிலும் பெருமைமிக்க குறுநாடகம். சலம் இச்சிறிய நாடகத்தில் எத்தனையோ வகையான மனித இயல்புகளை, நிகழ்ச்சிகளைக் காட்சியாக்கி, உலகில் நாம் காணக்கூடிய வகைவகையான செயல்களை, இறந்துவிட்டபின் மற்றும் கனவு உலகத்தின் அர்த்தங்கள் செயல்கள் எவ்வாறு

இருக்குமோ என ஓவியமாக்கிக் காட்டுகிறார். இறப்பு இறுதியானது என்ற அச்சம் கொண்டவர்களுக்கு இறப்பு இல்லை எனவும், தமது செயல்களை இறந்த பின்னும் செய்ய இயலும் எனவும் தெரியச் செய்வது பெரியதொரு பரிகாரம் (relief). பசி, நோய் போன்ற வேதனைகளில்லை. செயல்புரிபவர்களுக்கும் கண்காணித்து உதவுபவர்களுக்கும் இடமில்லை. இது முதல்காட்சி. இரண்டாம் அரங்கக்காட்சியில் மீளவும் பிறப்பைத் தரும் 'அதிகாரி' எவரெவர்க்கு என்ன தகுதியோ அவரவர்க்குப் புதிய பிறப்பைத் தருகிறான். பூர்வ வாசனைகள், தீராத ஆசைகள் மறுபிறப்புக்குரிய காரணமாகின்றதென்ற விதியை அவ்வத் தொழில் செய்பவர்களுக்குச் சலம் உருவகமாகச் சித்தரித்துக் காட்டினார். பற்றினை உண்டாக்குவதற்குரியவை தத்துவஞானி கேட்கும் நுண்மையான வினாக்கள்: ''இந்தப் படைப்புக்குக் காரணம் என்ன? இதில் அந்தரங்க இரகசியம் எதற்காக? இறைவன் இருக்கின்றானா?'' இதற்கு விடையாக, ''இருப்பதாகத் தெரியும் வரை, படைப்பின் மறைப்பு காணும்வரை முயற்சி செய். அவசரம் எதற்கு?'' ''நம்பாதவர்களுக்குத் தண்டனை உண்டென்கிறார்கள்?'' ''நம்பாமலிருப்பதே தண்டனை. அதுவே அந்த வேதனையெல்லாம்.'' ''ஆனால் நம்பும் மூடர்கள், அவர்களின் பயம், பக்தி, வழிபாடு இவைதான் அவர்களின் இறைவனா?'' ''ஆம், நம்புவதே அவர்களுக்கு தண்டனை, போதனை. அப்படியே மூடத்தனமாக நம்புவதே அவர்களது நரகம்.'' இறுதியில் இறைவனை நம்பாத சலம் தோன்றுகிறார். ''என் தலை வெடித்துவிடப் போகிறது. சாந்தி, சாந்தி,'' கிடைக்க வேண்டுமென்கிறார். ''சாந்தி இல்லை, காந்தி தேவை உனக்கு. புறவுலகக் காட்சிகளைவிட உன்னிலேயே அகவுலகங்கள் உள்ளன. அவற்றை ஆராய்ந்தறிந்து கொள். இந்த உலகில் இப் பிறவியில் மக்களால் தூற்றப்பெற்று, தனித்த வாசத்தில் ஞானம் வேண்டத் தொடங்கிவிட்டாய். போ''. ''என் ஆத்மார்த்த ஆசைகளெல்லாம், என் அழகுணர் ஆவலெல்லாம் அடைந்து திருப்தியடையும் மனித நேயத்தை அளிப்பாயாக'' என்று பிரார்த்திக்கிறார். ''அத்தகைய திவ்ய தோற்றமொன்றே உள்ளது இப்பிரபஞ்சமெல்லாம். அத்திருத்தோற்றத்து நட்பே ஒவ்வொரு கணமும் உன்னுடன் உள்ளது. அதை உணரும் தகுதி உனக்கு இல்லை. அத்தகுதியைப் பெற்றாலே உயர்ந்ததோர் பாசத்தைப் பெறுகிறாய்.'' ''முக்தி?'' ''எதற்கு முக்தி?'' ''முக்தியென்றால் துன்பங்களிலிருந்தும் இன்பத்திலிருந்துமல்ல.''

'எமன் முன்னால் சலம்' குறுநாடகத்தில் மேற்கண்ட கருத்துக்களே வெளிப்படுகின்றன. எமன் இருக்கிறானா? என்றால், இருக்கிறான் எனக்கருதினால் இருக்கிறான். இல்லையென்றால் இல்லை! அந்த பதிலுரைகளும் வினாக்களும் எல்லாரும் நடத்தும் உரையாடல்தான்! ''சொல்லுங்கள், நீதி

என்றாலென்ன?'' என்கிறார் சலம் எமனிடம். ''நீ என்ன என்கிறாயோ அதுவே!'' ''என்றால் எனக்கு தண்டனை எதற்கு?'' நீ கொண்ட நீதிக்கே நீ மாறுபட்டுப் பலமுறை நடந்துகொண்டாய். அதற்கே அல்லவா?'' ''எனக்கு நரகத்தைப் பற்றி எப்போதும் நம்பிக்கை இல்லை!'' ''இல்லை. ஆனால் ஊகங்கள், எழுத்துக்கள், செயல்கள் உலகத்தில் ஏதோ மாற்றத்தைக் கொண்டு வருகின்றன என்று கருதுகிறாயா? உலகத்திலுள்ளவன்தானே நீயும். உன்னில் அது கொண்டுவரும் பலன்தான் நரகம்.''

சலத்தினூடே உருவாகிய அத்வைத வேதாந்த தரிசனத்துக்குச் சான்று இம்மூன்று நாடகங்கள். இவை அமைக்கப் பெற்றவிதம் அரங்கத்தின்மீது காட்சியாகக் காண்பதைவிட, வானொலி ஒலிபரப்புக்குத் தகுந்தவையாயிருக்கின்றன.

1935-36ஆம் ஆண்டு காலத்தில் ஆசனங்கள், பிராணாயாமம் செய்யத் தொடங்கி தமது உடலைப் பேணும் ஆவலுடன் கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ள வேண்டுமென முயற்சித்தார். சற்றேனும் தணியாத பெண்ணாசையுடன் சலம் தன் உள்ளப் போராட்டத்தை 'ஜெயதேவர்' நாடகம் பிரதிபலிக்கிறது. இது முற்றிலும் 'சசாங்கா'வுக்கு முன்னரே இயற்றப்பட்டதாகும்.

ஜெயதேவனின் மனைவி பத்மாவதிக்கு உரியவனானலும், அவன் இன்னிசை, கவிதையாற்றல் பெண்களைக் கவர்ந்ததனால், உள்ளுணர்வால் பெண்களை அனுபவித்தவாறு உள்ளான். பத்மாவதி மரணத்தால் வெறுப்புற்று. ''பத்மாவதீ, உன்னோடு என் பெண்ணாசையையும் சாம்பலாக்குகிறேன். நான் சன்யாசி, இனி எந்தப் பெண்ணையும் இக்கரங்கள் தீண்டமாட்டா... எரிக்கிறேன், எரிக்கிறேன், என் கனவுகளை, என் அழகின் மீதான ஆசையை, என் ரசிப்புகளையெல்லாம் சாம்பலாக்குகிறேன். இனி ஜெயதேவன் இல்லை. பைராகி சன்யாசி'' என்றவாறு காவி யுடையணிந்து காசியாத்திரை செல்கிறான். அங்கே ஓர் அந்தணன் அவனைத் தன் இல்லத்துக்கு அழைத்துச் செல்கிறான். அந்தணன் மனைவி சுவர்ணமுகியை விரும்பி, அவள் கடுமையாக எதிர்க்கவும் மேலும் வெறியுணர்ச்சியுடன் அவளை பலாத்காரம் செய்கிறான். அவள் கணவன் கூறுகிறான்: ''உனது சிறந்த அழகு அந்த மகாத்மாவின் பார்வையைக் கவர்ந்துவிட்டது பெரிய பாக்கியம் நமக்கு. பேசாதே. அவரை மகிழ்ச்செய்.'' தனது வனப்புமிக்க தோற்றம்தான் இந்த பெரும் முறை கேட்டுக்குக் காரணமாயிற்றென்றுணர்ந்த சுவர்ணமுகி முகத்தையும் உதடுகளையும் விளக்குத் தீயில் தீய்த்துக் கொள்கிறாள். இரக்கமடைந்த ஜெயதேவன் அவளிடமிருந்த கத்தியை வாங்கித் தனது கண்களைக் குத்திக்கொள்கிறான்! ''என் இந்த மானபங்கச் செயலுக்கு இந்தக் கண்கள் பாவியின் கண்கள்.... வென்று விட்டேன். பெண்களெல்லாரும் என் துன்புறுத்தலிலிருந்து

விடுவிக்கப்பட்டார்கள்,'' என்று அகன்று போகிறான். அதன்பின் காட்டில் ஒரு வயதான பிட்சுணி இந்தக் கண்ணில்லா சன்யாசியைப் பார்த்து அறிவுரைகள் கூறுகிறார்.

''குற்றமுள்ள மனிதர்கள் சன்யாசமேற்று மேலும் குற்றம் செய்கிறார்கள். ஞானபோதமடைந்தவர்கள் ரிஷிகளாகிறார்கள். மனிதனின் வாழ்வுசக்தி முழுமையாகக் கொடுத்து தீர்ந்தபின்னரே முழுமையான இன்பமடைகிறான். இல்லறத்திலாகட்டும் ஆன்மீக வாழ்விலாகட்டும் காவி உடைகள் நமது மன வாணங் களுக்குக் கவசமாகுமென்கிறாயா.... எப்போது தோன்றும் உலகச் சுகங்களிலிருந்து வைராக்கியம்? மோட்சத்தின் மீது மோகம் உண்டாகும்போது... உன்னைப் போன்ற உத்தம மனிதர்களுக்கு வைராக்கியம் எதற்கு? உனது அழகாராதனை, உனது காமத்தின் வலிமை, உனது இசைப்பித்து, உனது கவிதைக்கனல் எல்லாமே ஈஸ்வரனின் பாதங்களில் அர்ப்பிக்கும் மலர்களாக வேண்டும். அம்மலர்களை மலர்ச்சியாக்கும் வானத்து ஒளி உதயமாகும் போது, இந்தச் சின்னஞ்சிறு ஒளிக்கதிர்கள் யாவும், இந்த அற்ப ஆசைகளெல்லாம், அந்த திவ்யமான தேஜஸில் கலந்து கரைகின்றன. ஏதோ, எப்போதோ, காலமோ, மரணமோ, இறைவனோ, கர்மமோ, அம்மகா சக்தியின் கரங்களில் ஒப்படைக்குமுன் உன்வாழ்க்கைச் சுமையை இதற்கிடையில் சுமந்து அனுபவி, இனிய வேதனையுடன். எந்தக் கணத்திலும் அமைதியைத்தராத உன் தீவிர ரசனையில் ரத்த நிருத்தியம் செய்.'' அந்த குரு எப்போது காணப்பெறுவார்? என்று திரிந்தவாறு நிர்குண உபாசனை செய்ய வேண்டுமென முயல்கிறான். இப்பிரபஞ்சமே ஆகர்ஷண மந்திரம் பொருந்திய உருவமான போது, இப்புவியின் மீது பிறந்த மனிதர்களுக்கு ஒருமை நிலையில் ஆன்மா இசைந்து கலக்கிறதா என எண்ணுகிறான், தன்னிலையிழந்து. மலர்கள், இறப்பு, காற்று, பச்சிலை எல்லாமே, உலகமே சம்போக நடனமாடுவதாக அதனுள்ளதான தன்னை இயற்கையன்னை காந்த வடிவமாக விருப்பமுடன் தவழ்ந்து தன்னிலான அழகு ஆராதனையை மேலும் சுடர்விடச் செய்வதாக அவனுக்குத் தோன்றுகிறது. காட்டிற்குள் இடைச்சிமகள் ஒருத்தி வருகிறாள். அவளுக்குப் பாடக் கற்பிப்ப தாக வரச் சொல்கிறான் ஜெயதேவன். அவளை நெருங்கித் தொடவே அவனுள்ளாக ஆசை மேலோங்குகிறது. அவள் தானும் மயங்கிவிட்டாளென்கிறான். ஜெயதேவனுக்குத் தீவிரமான இரக்க உணர்வு பற்றிப்பரவுகிறது. ''இனி ஒரு பாட்டையும் பாடவிடமாட்டேன். மலை உச்சிக்கு வழி பார். என்னைத் தொடாதே. முன்னால் நட,'' என்று அவள் வழிகாட்டிவர, மலைச்சிகரத்திலிருந்து குதித்து இறந்து போகிறான். ''இறைச்சிப்பிண்டம்! எத்தனை இனிமை! எத்தனை ஆட்சி! அந்த பாடும் குரலும் இனிய இசையும் என்ன ஆயிற்றோ! சீ ! எனது

ஒழுக்கக்கேட்டினால் எத்தனை உயர்ந்த நிலையைப் பாழ்படுத்தி விட்டேன்,'' என்கிறாள் இடைச்சிமகள். 'ஜெயதேவா' நாடகம் சலத்தின் யோக சாதனைகளின் முதல்படி. 'என்னுள்ளிருந்த கீழ்த்தரப்பாலுணர்வுடன் நான் இத்தனை போராட்டம் செய்யாமற் போயிருப்பின் ஒரு ஜெயதேவனைக் கற்பித்திருக்க வியலும்? பாலுணர்வு காண்பித்த இனிப்புமிக்க பிணைப்புக்களுடனான என் யுத்தமும் என் தோல்வியும் தான் அந்நாடகம்.

- சலம்.

1940-50க் கிடையில் சலம் எழுதின நாடகங்களில் உணர்ச்சி விளக்கங்களுடன் நகைச்சுவையும் வெளிப்பாடாகின்றன. 'பக்த குசேலர்' அறவுரை விளக்கம் நகைச்சுவையூட்டுமாறு அமைக்கப் பெற்றிருந்தது. குசேலர் கண்ணனைக் கடைசியாகக் கேட்ட வரம், ''அனைத்து வல்லமை மிக்கவர் நீங்கள். ஆசை நிறைவேறும்படி, குழந்தைகளைப் பெறாமலிருப்பதற்கு ஒரு சாதனத்தை உபதேசித்தருளக்கூடாதா?'' 'சத்தியவந்தன்' நாடகத்தில் சாவித்ரியை விமரிசிக்கிறான் சத்தியவந்தன்: ''உனக்கு என்மீது அன்பிருந்தால், சுகமாகச் சுவர்க்கத்துக்குப் போனவனை இந்தப்பாழும் உலகத்துக்கு இழுத்துக் கொண்டு வருவாயோ? இது எனது, இது எனக்குதான், இதை விடமாட்டேன் என்னும் எண்ணம் அன்பு ஆகாது. அது பதிவிரதத்தன்மை''. சாவித்ரியின் மகள் பிரியம்வதை விதவை. தான் மீண்டும் மணம்புரிந்து கொள்ளப் போவதாகச் சொல்கிறாள். இறந்து போன கணவனைக் காப்பாற்றிக் கொள் என்று சாவித்ரி கூறவும், அவர்மீது எனக்கு விருப்பமில்லை. எங்கள் இல்லறத்தில் விருப்பமில்லாததால்தான் கடவுள் அவரை இறக்கச் செய்தார். 'இறைவனைவிட அறிவு படைத்தவளாக மாட்டேன் நான்' என்கிறாள் பிரியம்வதை. 'சுதந்திரம்', நாட்டு விடுதலை வந்துவிட்டவுடனேயே எளிய மக்களின் பிரச்சினைகள் தீர்ந்துவிட இயலாதென விளக்கிக் காட்டும் குறுநாடகம். 'பண்டிகைப் பிச்சை' சந்தாக்களை வசூல் செய்து சங்க சேவை செய்பவர்களை இகழும் விமரிசனம்.

'அந்தகன்' தொழிற்சாலை முதலாளிகளுக்கும் தொழிலாளர் களுக்கும் இடையிலிருப்பதாகக் கூறும் பகைமையைப் பரிகசிக்கும் உரையாக்கம். ''மாமாக்கள்', 'மிஸ் கோமளம்' நடுத்தர வகுப்பினரின் வெற்றுப் பெருமைகளையும் தகுதிகளையும் பொருளற்ற வீண் செயல்களையும் சுட்டிக் குறை கூறும் குறுநாடகங்கள். 1922-30க்கிடையில் சமுதாய விமரிசகராகச் சலம் எழுதிய குறுநாடகங்களுக்கும் 1940-50ஆம் பத்தாண்டில் எழுதிய இக்குறு நாடகங்களுக்கும் மிகுந்த வேறுபாடு காணக்கூடும். தொடக்க நாட்களில் ஆழ்ந்த சிந்தனை எழுச்சிக்குப் பதிலாக ஆழமான இழித்துக் காட்டும் நகைச்சுவை காணக்கிடக்கின்றது இவ்வுரையாக்கங்களில்.

1947-48இல் சலம் எழுதிய 'புரூருவர்' உயர்ந்ததோர் உரையாக்கம். அரங்க மேடைக் காட்சிப்பார்வையில் சிறந்த நாடகமென்று கூறவியலாமற்போகலாம். ஆனால் நாடக உருவத்தில் சலம் அமைத்திருந்த மிகச்சிறந்த தத்துவ விளக்கவுரை 'புரூருவர்'. தொலைக்காட்சி போன்ற சாதனத்தின் வாயிலாக அழகாகக் காட்சியமைப்புக்குத் தகுந்த கதை.

இவ்வுலகப் போக்குகளைத் தாண்டி, சலத்துக்கு எட்டாமல் போய்ச் சேர்ந்த அமீனா, இவ்வுலகத்தின் இழிநிலைத் தன்மையை, அற்பத்தனத்தைத் தாங்கவியலாமல் காணாமல் போனாள் அருணா. இவ்வுலகிலிருந்து தெய்வவடிவமான ஊர்வசியாகப் பிறந்து, சலம் 'உயர்ந்த ஆன்மீக ஐயப்பாடுகளுக்கு வானுலகக் கதவுகளைத்' திறந்தது 'புரூருவர்'. சலத்தின் ஜடப்பொருளுக்கப் பாலான அகக்காட்சியைத் தெளிவுறக் காட்டிய உபநிஷதம்.

புரூருவருடன் அன்பு செலுத்தி, அபூர்வமான அழகின் படைப்பாய் அவள் இருந்த வரைக்கும் ஊர்வசி யார் எனப் புரூருவருக்குத் தெரியாது! அவள் அகன்று செல்ல நேர்ந்த பொழுது அவள் ஊர்வசியெனத் தெரிகிறது. இதனுள் பெரிய கருத்து பொதிந்துள்ளது. அழகுச் செல்வத்தைப் பற்றிய உண்மை உணர்த்தலும் விளக்கமும் மேலும் அதிகமான அனுபவமடைந்த பொழுதுதான் இயல்கிறது!

''பெண்ணின் முன்னால் பெருமை படுத்திக்கொள்ளும் நீ என்ன தெரிந்து கொண்டாய்? என்ன வாழ்ந்துவிட்டாய்? நீ இத்தனை அற்பனென்று தெரியாது எனக்கு,'' எனத் தொடங்கினாள் ஊர்வசி தனது தத்துவ போதனையை. புரூருவன் தனது அரசாட்சியை, சூரத்தனத்தை, ஐசுவரியத்தைத் 'தான்' எனவே பாவித்தான். ''நான் இல்லாது நீ என்ன? என்னைத் தெரிந்து கொள்வதின் வாயிலாக உன்னை நீ தெரிந்து கொள்,'' என்கிறாள் ஊர்வசி. காலம், காதல், சமயம், அன்றாடச் செயல், காமக்கிளர்ச்சி, அழகார்வம் இவற்றையெல்லாம் புதிய பார்வை யுடன் அறிவுறுத்தலாகிறாள். ''முறைப்படி காலத்தில் சொந்த அனுபவத்தைப் போற்றியறிய வேண்டும்தான். சொற்களால் கற்றறியும் பொருள்கள் மிகவும் அற்பமானவை.... தேடு பரவலாக, தெரியும். தெரிகிறதென்றால் அனுபவிக்கும் தகுதி உண்டாகின்றதென்பதாகும்.''

ஆண் பெண் உடலுறவைப் பற்றி ஊர்வசி கூறுகிறாள். ''அழகுத் தோற்றத்துக்கும் கலவிக்கும் தொடர்பு என்ன? அது காமத்தின் வலிமை, படைப்பாற்றல். கைகளில் ஏந்திக் கொண்டு, அணைத்து, சுவைத்து, கள்வெறியுடன், ரத்தம் புடைத்துக் கொள்ள, மனம் திரையகன்று, அக்கணத்தில் வனப்புக்குக்கவர்ச்சி என்ன இருக்கிறது? அத்தகைய சௌந்தரியத்தை அனுபவிக்கத் தெரிந்து கொண்ட நாளில் சுவர்க்கமே உன் கரதலத்தின்

நெல்லிக்கனியாகும். ஆலிங்கனத்திலுள்ளான விந்தையான உடல் வனப்பை மட்டுமன்று, பெருமைமிக்க செயல்பாட்டினை, பரந்த அறிவாற்றலை, மிகுந்த ஆன்மிக வலிமையை நீ அடைகிறாய். உனது ஆன்மா மலர்ச்சியடையாவிடின் இந்தப் படைப்பு பொருளற்றது.... பெண்ணின் சிருங்காரத்தினால் ஏதும் அதிகமான அறிவைப்பெற இயலாதவர்கள் வெறும் துர்பாக்கியசாலிகள். இவ்வுலக ஒளியினுள் பிறப்புக்கே மட்டுமன்று. அவ்வுலக ஒளியினுள்ளான பிறப்புக்கும் கூட பெண்களே வாயில்.''

''அறம் என்பதற்குப் பொருள் தெரியுமா? நமது விளக்கமான ஆசை... நமது இயல்பான அதிகாரத்துக்கப்பாலான அறம் வெளியில் எங்கும் இல்லை?''

புரூருவன் தனக்குக் காணப்பெறும் ஊர்வசியை இப்படி வருணிக்கிறார். இது சலம் கற்பனையாற்றலுக்கு, தத்துவ விளக்கத்துக்கு உரைகல்.

''நமது உடல்கள் ஸ்தூலம். எனது உடல் எப்போதும் சலனமாகிக் கொண்டிருக்கும் நீரின் மீது வெளிச்சம் நிறம் மாறுவதைப் போல் காணப்பெறுகிறது. உனது அசைவுகளுடன் நீ சூரியக்கிரணங்களின் மாலைகளுக்குக் கீழாக, நிறை ஆபரணங்களின் அடியில் மாற்றி அலங்கரித்துக் கொள்கிறாய். அசையும் பெண் ஸ்தனத்தைச் சுற்றி முகர்ந்து, நிலைக்காத சூரியகாந்திகள், சுழன்று வட்டமிட்டு மாறின.'' இது சாபவயப்பட்டு பூமியில் அவதரித்த ஊர்வசியின் படைப்பு.

ஊர்வசி புரூருவனின் தலைநகருக்கு வருகிறாள். நல்ல தோற்றம், கவிதைத்திறன், சிற்பம், கானம், விஞ்ஞானம், யுத்தம், மனிதனின் கற்பனையத்தனையையும் விளக்கி விரிவுரை கூறுகிறாள். ''உங்கள் உலகத்தில் அழுகை ஓர் அறமாகிவிட்டது,'' என்கிறாள். ''இறப்பிலே... இடர்பாட்டில் பிழைத்திருப்பவர்களும் இறந்தவர்களும் இருபிரிவினரும் கோரிக்கொண்டால்தான் நிகழ்கிறது. இந்தப் படைப்பில் கொடுமை, அநியாயம் என்ற சொற்களே கேட்கவியலாது. எங்கேயும் இராது.'' எல்லா மனிதர்களின் உள்ளத்தின் ஆழத்தில் மறைந்து கிடக்கும் ஆசாபாசங்களின் வெளித்தோற்றமே என்கிறாள் ஊர்வசி. நினைவுகளை விலக்கவேண்டும்... விலக்காவிட்டால் எங்கு சென்றாலும் எவராக மாறினாலும் பயனில்லை. நினைவுகளை விலக்க முடிந்தால் எங்கும் இடம் பெயறவேண்டியதில்லை. ''உன் மனம் என்பது வேறில்லை. உனது மனத்தையே ஆயிரம் திசைகளில் ஆயிரம் எண்ணங்களில் பிரதிபலிக்கச் செய்து கொள்கிறாய். எத்தனையோ பிறவிகளாக உன்னிலேயே நீ தேடிக் கொண்ட சிருங்காரத்தை இதுவரைக்கும் அனேகப் பெண்ணுருவத்தில்,

இன்று என் உருவத்தில், உன் கரங்களில் ஏந்திக் கொண்டு அனுபவிக்கிறாய். அதாவது நான் பல யுகங்களின் பலனாக உனது சிருங்கார ஆசை என உருவத்தைத் தாங்கி வந்திருக்கிறேன்.'' ஊர்வசி தான் யார் என்பதைப் புரூருவனுக்கு விளக்கிய விதம் இது.

அரசனின் மனைவி மிருணாளினிதேவி இறந்துவிட்ட செய்தி வருகிறது. ''மிருணாளினியை எனக்குத் தரமாட்டாயா என்கிறான் புரூருவன்.'' மிருணாளினி இறப்புக்குக் காரணம் என் வருகைதான் என என்மீது உனக்குள் பகைமை. உனது காதல் பறிபோனதென்று தான் என உனக்கு உன் மீதே வருத்தம். நான் வராத முன்பே இறப்பை நீ அறியாயா? நான் வராமல் போயினும் வேதனையை, இறப்பைத் தடைசெய்யக் கூடுமா?'' என்பது ஊர்வசியின் சமாதானம். ''எனவே உன் வாழ்வெல்லாம் கனவென்கிறாயா?'' ''அவ்வளவு தான். வாழ்க்கையென்றால் ஒவ்வொரு அடிக்கும் அசைவு, அதாவது தியாகம், வழிமேலிட்டால் விலகிப் போவது. வாழ்க்கை என்பது மிக வேகமான அசைவு. கணத்துக்குக் கணம் தீவிரமான முழுத்தியாகம்''. இம்முழுத் தியாகம் செய்ய மாட்டாமல், அகத்தினூடே பிரமையை விடவியலாமல் புரூருவன் இறுதித் தேர்வில் தேரமுடியாமல் போகிறான். ஊர்வசி விடைபெற்றுக் கொள்ளும் போதுதான் தான் ஊர்வசி யென்கிறாள். அதுமட்டுமின்றி ''ஊர்வசி என்றாலே ஓர் அனுபவம். உடல் அன்று. உடலானாலும் ஓர் அனுபவ மல்லவா?'' ஊர்வசி இந்திரலோகத்தில் எத்தனையோ பேருக்குக் கிடைக்கிறாள், பொறாமை கொள்ளத் தேவையில்லை என்று புரூருவனுக்கு விளக்குகிறாள்: ''தீயின் தூய்மையொத்த காதல் பற்று, காதல் துயரத்திலல்லாது கற்றுக் கொள்ளவியலாது மனிதனால். அதனாலேயே உங்களுக்கு இழப்பு, அமைதியின்மை வேதனை.'' ''உன் வாழ்வு ஒரு கணப்பொழுதே. ஊர்வசியுடனான அனுபவம் முடிவற்றது.'' ''தண்டனை என்பது படைப்பிலே இல்லை, அன்பு தவிர.''

ஊர்வசி சலம் தரிசித்த பெண்ணின் பரந்ததோர் மூர்த்தி. தத்துவார்த்த நாட்டத்தில் சலம் சேர்ந்தடைந்த முழுமை. இந்தத் தத்துவ விளக்கத்தில் சலம் கடைசித் தொடர்பான காதலி லீலாவுடன் சேர்ந்து ரமணாசிரமம் செல்ல வேண்டுமென எண்ணமிட்டார். ஆனால் லீலா 'மாயை வடிவமான பெண்' என உணர்ந்து, தீட்சிதலுக்கு ஜூலை 2, 1947இல் கடிதம் எழுதினார். அவளைவிட்டுப் பிரிந்து, ரமண மகரிஷியைச் சரணடைந்தார். லீலா ஊர்வசியாக இல்லாமற் போனாள்! பெண்ணில், இயற்கையில் சௌந்தரியத்தை உபாசனை செய்வதன் வாயிலாக அத்வைத சித்திபெறும் மார்க்கத்துக்குக் கலைவடிவமான உருவமைப்பு 'புரூருவ' நாடகம்.

கதைகள் - சிறுகதைகள்

சலம் எழுதிய கதைகளும் சிறுகதைகளும் நூறுவரை உள்ளன. சலம் செயலாற்றுபவராக, பாலுறவு எழுத்தாளராக மிகப்பரவலாக அறிமுகமடைந்தது கதைகளால்தான். இக்கதைகள் இலக்கியப் பத்திரிகைகளில் தொடங்கிப்பிறகு மக்கள் பரவலாகப்படிக்கும் வழக்கமான பட்சம் மற்றும் மாதப்பத்திரிகைகளில் வெளியிடப் பெற்றன. அச்சில் முப்பத்தைந்து நாற்பத்தைந்து பக்கநீளமான உரையாக்கங்களைக் கதைகளாகவும், அதைவிடக் குறைந்த நீளமுள்ளவற்றைச் சிறுகதைகளாகவும் பெயரிடலாம். கதைகள் முதலில் சில பத்திரிகைகளிலும் சில புத்தகவடிவங்களிலும் வெளிவரவும், அவற்றைப் பிரித்துச் சிறிய இணைப்பாக அவ்வப்போது அச்சிடுதலும், முதல் பதிப்புக்கள் கிடைக்கமாற் போனது காரணமாக, இன்று சலம் கதைகளைப் பொறுத்த வரையில் உரையாக்கக் காலத்தை வரையறுப்பது இயலாத பணி. நவீனங்கள், நாடகங்கள் வளர்ச்சியின் காலவரை தெரிவிக்கப் பெற்றது போலவே கதைகளிலும் இந்த வளர்ச்சிப் போக்கைக் கண்டறிவதற்கு இயலும். ஆனால் புறத்தோற்றத்தால் மட்டுமே கதைகளை அவ்வாறு பகுத்தறிவது இயலும். பொருளின் தரத்தைக் கொண்டு, கதைகளை வகைப்படுத்தி, சலம் கதைப்படைப்பை அரியாசனமேற்றுவது இங்கு இயலும்.

இயல்பான காட்சிக்குமாறான, வலிமைமிக்க நடை எனப்படிப்போர் மிகப்பொதுவாகப் புகழ்ந்த மொழி நடை, சலத்தின் கதைகளில் நமக்குப் புலனாகின்றது. சாமானிய வாசகர்களைச் சிறப்பாகப் பெண்களை மனக்கண் முன்கொண்டு எழுதிய உரையாக்கங்கள் இக்கதைகளும் சிறுகதைகளும். மொழி நடையும் கதைப்பொருளும் தம் பார்வையில் வேறானவை யல்லவெனக் கூறும் சலம் இவ்வாறு சொல்கிறார். ''துயரப்பட வேண்டும், நசுங்கவேண்டும், வாழ்க்கைத்தேரின் சக்கரங்களின் கீழிருந்து பேனாவில் ரத்தம் பேசவேண்டுமென்றால்! எழுத்துக்களா? புலமையா? அல்ல ! பல்லாண்டுகளான ஊமைத்துயரம். இருட்டிலே தேடுதல், என்னைப் போன்ற எளியவர்களின் ரகசிய இதயத்தினூடான சோகம், திக்கற்று வலிமையிழந்தோரின் செரித்துப்போன ஆவேசம், எவரிடமும் சொல்லமாட்டாத கீழ்த்தர வரலாற்றின் கர்ப்ப சோகம், இதுவே என் மொழி நடை.''

தெலுங்குச் சிறுகதைப் படைப்பு குருஜாடாவுடன் தொடங்கியது. அதற்கு மொழி நடையில், எடுப்பில், சேர்க்கையில் புதுமையைப் புகுத்திக் கைவரப்பெற்றவர் சலம். தொடக்க நாட்களின் கதைத்தொகுப்புக்கள் 'கர்மம் இப்படிக் கருகியது' (1925), 'அதிர்ஷ்டம்' (1931) கலந்து தொகுப்பாக்கிய கதைகளில் இப்புதுமை படைப்பாகக் காண்கின்றது.

எடுத்துக்காட்டுக்கு, 'விதவை'க் கதை ஒரு நீண்ட தன்கதை. ஆனால் நாடகங்களிலும் காவியங்களிலும் தன்கதைகளுக்குக் குறைவே இல்லை! சித்தப்பிரவாகம் என்னும் உள்ளத்தின் வெள்ளம் (Stream of Consciousness) எனும் வகையில் உள்ளன.

''இந்தப் பெண் நன்றாக மறந்தாள் பால் குடிக்க. இன்று பால் கிடைக்கவில்லை. கோலம் பண்ணுகிறாள். பசி அவளுக்கு பாவம். எனக்கு மொத்தத்தில் தூக்கம் பிடிக்காது. போகட்டும் போய் எலிகளைப் பிடிக்கக்கூடாதா... என் சால்வையைப் போர்த்திக் கொண்டு கணவன் பக்கத்தில் மங்கம்மா தூங்கறாப் போலிருக்கிறாள் மறுபடியும். விடியும் வரைக்கும் அந்த அறையில் என்னதான் செய்யறாங்களோ கதவை மூடிக்கொண்டு! அவரே உயிரோடிருந்தால் நானென்ன செய்யப்போறேன் உள்ளதை? என்னை இப்படி அடுப்படியில் இருக்கவிடுவாரா! சின்னவன்தான் ! எப்படித்தான் வந்ததோ அந்த காயலா ! வேலையானால் நல்லாயிருக்கும். எல்லாம் தெரியும். என்ன செய்யறாங்களோ தெரியும். ஆனால் எப்படிப் பண்ணு கிறாங்களோ. அப்போது உடம்பு எப்படி இருக்குதோ, தெரிஞ்சுக் கணும்னு இருக்குது. சிலபேர் அழறாங்க. யாரையாவது கேட்கணும்னு இருக்குது. வெட்கம், பயம், சொல்ல மாட்டாங்கண்ணு நினைக்கிறேன். அவங்களுக்கும் வெட்கந்தானே. அப்போ வெட்கம் இருக்காதா! பேசறது மாத்திரம் வெட்கம். உனக்கேன் என்கிறாங்க !

''ஐயோ! பசுவா, கோழியா ஏன் பிறக்கலை நான்! ஆனால் மனுஷப் பிறப்பு மேலெங்கிறாங்க. மனுஷப் பிறப்பு உசத்திதான். ஆனால் விதவையாவக்கூடாது. யாரோ ஒருத்தர் இதயத்தோட அணைச்சுக்க முடியாமப் போனப்புறம் உயிர் எதுக்கு? குழந்தைங்க இல்லாம விதவை ஜென்மம் என்னத்துக்கோ கடவுளுக்கு! என்ன கஷ்டம், ஆசை, கனா, எனக்குள்ளே. ஆம்பிளெ இருந்தாதான் தீருமா? என்னவெறும் லோகம்!''

கதை இப்படித் தானே கூறும் உருவமாக இருப்பதனால், விதவையொருத்தியின் படுமோசமான தனிமை, ஆதரவில்லாமை சிற்பத்தின் உட்புறக் காட்சியாகவே வெளிப்படக் காணலாகிறது. அவ்வாறே இந்தத் தொகுப்பில் 'லக்ஷ்மி கடிதம்' எனும் கதை, கடிதத்தின் வாயிலாகவல்லாமல் வேறு எவ்விதத்திலும் கணவனுடன் சொல்லிக்கொள்ள வியலாத மனவேதனை; தற்கொலைக்கு வழிவகுத்த நிகழ்ச்சி; தற்கொலை செய்து கொள்வதற்கு முன் எழுதிய கடைசிக் கடிதமாயிற்று. இக்கதை விளக்கமும் சிற்பமும் இயல்பாக ஒன்றென அமைந்த சிறுகதைகள் இவை.

சலத்தின் கதைப்பணியிலுள்ள வலிமை, புலன்களின் பல வேதனைகளைக் கண்முன் கொட்டி மனதைப் பறிக்கும் ஆற்றல்,

இந்தத் தொடக்கப் படைப்புக்களிலேயே காணலாம். 'சக்கிலிப்பெண்' கதையில் விளைநிலங்களையும், நாட்டுப்புற இளமங்கையரின் அழகையும் பார்த்து ஒரு பட்டணத்துக்காரன், உத்தியோகஸ்தன் அடையும் மனக்கலக்கம்:

''புற்களால் மென்மையான நடைபாதையை.... கன்றுகளைப் போல வளர்ந்து, தாம் தமது பலத்தையெல்லாம் என்ன செய்வது என்று தெரியாமல் வேதனைப்படுவதுபோல் நடக்கும் கன்னியரைப் பார்க்கும் போது, எதிர்பார்க்காமலே உள்ளூர எழும் வேகம். நமது கைகளை அவர்கள்மீது வைக்க வேண்டும் போன்ற ஆசை பிறக்கிறது. மென்மையான சலவைக்கல் மீது மெத்தென்ற அணையைப் பரப்பி அதனைத் தொட்டணைக்கும் எண்ணம் போன்று வழவழப்பாக்கின நல்ல இனத்துக் குதிரையின் பிடரி மீது தாக்கவேண்டும் போன்ற எண்ணம்; அன்னத்தைப் புறாவின் முதுகின்மீது ஏறிச்செல்வது போன்று. முகங்கள் அழகில்லாமல் இருக்கலாம். நகைகள் இல்லாமற் போகலாம். தலைமுடி சீவாமலிருக்கலாம். ஆனால் கழுத்திலிருந்து பாதம் வரைக்கும் அக்கண்பார்வையை அசைக்கும் அந்த குனிவுகளே போதும்; நடக்கும் போது அந்த இடையின் கீழான மாற்றங்களே போதும்; சிவப்பாக இல்லாமற்போனாலென்ன! அந்த உடலில் மேலான தூய்மையான பளபளப்பே போதும்; வேலை செய்து உழைத்து உடம்பு சற்றுத்தடித்திருந்தாலென்ன? பாதங்கள் காப்புக் காய்த்து வெடிப்புடன் இருந்தாலென்ன?.... ஆண்களைப் பார்த்ததுமே ஓடி ஒளியமாட்டார்கள். கதவுக்குப் பின்னாலிருந்து எட்டிப்பார்க்க மாட்டார்கள். பேசினால் வெட்கமடைந்து, கேட்டும் கேளாதவாறு நாணமாட்டார்கள்...''

சலத்தின் உரைநடை எத்தனையோ போக்குகளில் உள்ளன. இன்சுவை, அவலச்சுவை, வீரம், அறிவாற்றல், கவித்திறன் ஆகியவை அவர் கதைகளில் விரிந்திருந்தன. தத்துவார்த்த சிந்தனைகள், கற்றறிந்த விவாதங்கள், விமரிசனங்கள் இடம் பெற்றன. ஆனால் புலனுணர்ச்சி வெளிப்பாடுகளை மெருகேற்றிய, அழுத்தமான தெளிவுடன் சித்தரிக்கும் காட்சியமைப்பில் சலத்துடன் வேறெந்தத் தெலுங்கு எழுத்தாளனும் இணையாக முடியாது. ஜனவரி 1949இல் 'பாரதி' சாகித்திய பத்திரிகையின் வெள்ளி விழா இதழில் அவர் எழுதிய கதை 'ஓர் மலர் மலர்ந்தது' அவர் கதைகளில் மிக உயர்ந்ததோர் இடத்தைப் பெற்று, புகழடைந்தது. அக்கதையில் நடையும் வடிவமும் ஒன்றாயமைந்தன: கதையின் சுருக்கம்:

''அனைத்தையும் மறந்து கண் திறந்து பார்க்கும் பூவின்மீது தீட்சணமாக ஓர் ஒளிக்கீற்றை வீசினான் கதிரவன். 'செத்தேன்' எனக் கண்களை மூடிக்கொண்டாள் கன்னிகை. உடலெல்லாம் நடுக்கம். அடிபட்டவளைப் போல் அயர்ந்தாள். தான் முழுமை

யாகச் சிவந்து போனாள். ஒரு தரம் தனது சிரசிலிருந்து, நிலத்திலிருந்து பிளந்து கொண்டு தனக்குள்ளே திரண்டுவரும் அமுதத்துடன் தான் அத்தனையும் நிறைந்தவளானாள்... புத்திளமை தனது இதழ்களில் தளதளக்க, தனது நரம்புகளில் மென்மையான துகள். தனது இடையில் வெடித்து உடையும் மென்மை எழில், தனது கொடியிடையில் பரந்துவரும் பலம், தனது மொத்தத்தில் நில்லாத, முடிவற்ற காரணம் காணாத காந்தி....

''பிடிபடவியலாது கபக்கெனச் சிரித்தாள். அச்சிரிப்பு வெயிலுக்கே வெளிச்சம் தந்தது. பூப்போன்ற வெள்ளியைத் தூவிச் செல்கிறான். தேன் குடம். வெயிலில் வெள்ளியிலிருந்து கறுமையாக மின்னும் அவனது உடல், கொடிய துதிக்கை, ரத்தம் போன்ற சிவந்த கண்கள், காற்றைச் சூலமாகக் குத்தும் பெரிய மீசைகளைக் கண்டு நடுங்கினாள் மலர்.... இரக்கமற்று, எதனையும் தான் பொருட்படுத்தாது, கொடுமையாக நகங்களால் கீறிப்பிளந்து, தலையை உள்நுழைத்து, தான் எப்போதும் தனக்குள்ளிருப்பதறியாது, தனது கர்ப்பக் குகைத்துளையைத் துதிக்கையால் சிதைத்து குடிக்கிறான் தேனமுதத்தை... முயற்சியின்றியே தன் இதழ்களால் அவனைப் போர்த்தி மூடிக்கொண்டாள். தனது ஈர்க்குகளால் மெல்லிய வளைந்த இடுப்பினைச் சேர்த்து நெருங்க அணைத்துத் தழுவிக் கொண்டாள். தன்னுள்ளான பசுமைப்பரிமள கந்தமனைத்தையும் அவன் மேலெல்லாம் இறைத்துப் பூசினாள். தன்னையேதான் அர்ப்பணித்துக் கொண்டாள்.

''தனக்குள்ளே புதிய உயிர் அசைகிறது. இடத்துக்காகத் தேடியோ தனது பக்கமாகச் சாய்ந்துகொடுக்கிறாள்.

''கடுமையாகப் பார்த்தவாறு எதிரில் நிற்கின்றது காலம். வாசமற்ற, தேனில்லாத, வண்ணமிழந்த அம்மலரைத் தேவையற்றதென்று உதிரச்செய்தது சிருஷ்டி.

''தேடித்தேடி மூலை முடுக்குகளில் தாக்கும் வெளிச்சத்தை விழுங்கிவிடுகிறது ஆயிரம் நாக்குடன் இருள். முதல் விண்மீனின் மினுக்கல், மின்னிப்படர்ந்த காந்திக்கீற்று மீது அமர்ந்துவந்து நின்றான் தன்முன்னால். தன் பெயரை அழைத்தான். ''யார்?'' என்றாள் மலர். ஆயினும் தெரியும் தனக்கு, 'வா', என்றான். ''என் பாப்பா'' என்றாள். ''உன் உயிரை உன் பாப்பாவுக்குக் கொடுத்து விட்டு என்னோடுவா,'' என்றான் மலரிடம், சிரிப்போடு.

''உலகமெங்கும் பேரொளி... அவ்வொளியெல்லாம் அவன்தான். எல்லா இடத்திலும் அவன் ''வா''.. தனது இன்சொல், பொருளின்மை, வெம்மை எல்லாம் போய், குழந்தைமை, இளமை, வலிமை, மகிழ்வு, தாய்மை, பிரேமை எல்லா வற்றையும் அவன் முன்வைத்து வணங்கினாள். அவனது

கரத்தைப் பற்றிக்கொண்டு எல்லையில்லா வானில் ஒரு தூக்கு தூக்கினாள். விண்ணில் மிதந்து பக்தியுடன் அவன் முகம் நோக்கி கபக்கெனச் சிரித்தாள். ஆனந்தத்தை அடக்கவியலாமல்.'' பூவிலே வாழ்வின் பேருண்மையைப் படைத்துக் கதையைக் காவியமாக்கினார் சலம்! -

சலம் எழுதிய கதைகளில் எத்தனையோ வகையமைப்புகள் உள்ளன. அனைத்தும் தற்காலச் சமுதாயத்திலிருந்து வந்தவையே. அத்தனை இனத்து மக்களும் காணப்பெறுகிறார்கள். வாழ்க்கையில் வெவ்வேறு பருவங்களில், காட்சியரங்குகளில் மானிட இயல்பு, சிறப்பாக பாலுறவுகளில், எவ்வாறுள்ள தென்பதைச் சித்தரிக்கின்றன சலம் கதைகள்.

ஒன்று : திருமணத்தால் துன்பமுற்ற யுவதிகள் கதை: 'ஜானகி'. இக்கதை 'தெய்வம் தந்த மனைவி'யிலான காட்சியமைப்பை நினைவூட்டுகிறது. சிறுவயதுத் தோழன், மணம்கொண்ட கணவன், இவ்விருவரிடையில், காதலுக்கும் தர்மத்துக்கு மிடையில், எதைத் தேர்ந்தெடுப்பதென்றறியவியலாத ஜானகி தூக்கத்தில் நடக்கும் (somnambulism) மன நோய்க்கு ஆளாகி விடுகிறாள். உளநூலறிவினை இவ்வாறு கதையில் ஜோடனை செய்வித்ததில் சலத்தின் கதையே முதலிடம். 'கர்மம் இப்படிக் கருகியது'. படிப்பு வாசனையில்லாத நாட்டுப்புறக் குடும்பத்தில் காதலனுக்கும் கணவனுக்குமிடையில் இளம் மங்கை கணவனால் தொற்றிய சிபிலிஸ் பால்வினை நோயைக் காதலன் வாயிலாக அவன் குடும்பத்துக்கும் தொற்றச் செய்கிறாள். இவ்வாறு பால்வினை நோய்களைப் பற்றிய விளக்கம் தந்ததிலும் சலம்தான் முதல் எழுத்தாளர். இவ்விரு கதைகளும் (1925) ஒரு தொகுப்பைச் சேர்ந்தவை. 'மச்சங்கள்': மனஏக்கம் கொண்ட (Sadist) கணவன் மனைவியின் உடம்பெல்லாம் கடித்துப் புண்ணாக்குகிறான். கணவன் மனைவியின் சரசமென்று யாரும் நினைக்கமாட்டார்கள். அவள் இறந்து போகிறாள். 'ராமபக்தன்': நோய்வாய்ப்பட்ட மனைவிக்கு ராமநாம மகிமையைச் சாக்காக வைத்து வைத்தியம் செய்யாமல், அவள் இறந்துவிட்டால் அவள் தங்கையை மணம் புரிந்து கொள்ளப்பார்க்கிறான் கணவன். 'மாமனாரின் மரியாதை:' மருமகளைத் தன்வசமாக்கிக் கொண்டு மகனையும் மருமகளையும் பொருளாதார வகையில் துன்பங்களுக்காளாக்கிக் கடைசியில் தோல்வி கண்ட வீட்டுப் பெரியவரின் கதை.

இரண்டு : ஏமாற்றுதலாலோ பலாத்காரத்தினாலோ ஆடவர் ஆசைக்குப் பலியான பெண்கள்: 'ரெட்டி ரங்கம்மா' நாட்டுப்புற இளமங்கை பட்டணத்தில் நாடகம் பார்த்துக் கண்ணன் வேடந்தரித்தவனிடம் கவர்ச்சிகொண்டு, அவனைப்பார்க்கத் திரைக்குள் சென்று, அவனிடம் கேவலமாகக் கெடுக்கப் படுகிறாள். 'மொழி தெரியாது'. இக்கதையில் வற்புறுத்தல்மீது

தன்னை அழைத்துச் சென்ற கிழவனிடமிருந்து விடுவித்துக் கொண்ட வட இந்திய மாதொருத்தி, ஆந்திர வாலிபன் தனக்கு உதவுவானென அவனோடு வந்தால், வரும் வழியில் பயணப்படகில் அவளை பலாத்காரம் செய்யப்போய் பயனில் லாமல் அவள் அணிந்திருந்த சேலை ரவிக்கைகளைப் பிடுங்கிக் களைந்து, விட்டுவிட்டுப் போகிறான். 'லக்ஷ்மியின் கடிதம்': கணவன் விடியற்காலையில் ரயிலுக்குப் போவதையறிந்து கொண்டு, அவன் மனைவியிடம் திருட்டுத்தனமாகச் சென்று அவளை மோசம் செய்து அனுபவித்த பக்கத்துவீட்டுக்காரன் கதை. 'அவதாரமா?': சாமியார் ஒருவன் தனக்குப் பணிசெய்து வந்த விதவை புன்னம்மாவுக்கு மகிமைகள் செய்வதாகக் கூறி மோசம் செய்து, கர்ப்பமாக்கி, அவள் தெய்வீகக் கர்ப்பமடைந்திருக்கிறாள் என்று எல்லாரிடமும் சொல்லி, கடைசியில் அவள் 'சிபிலிஸ்' நோயுடன் பிறந்த குழந்தையை, அவள் ஏதோ அபசாரம் செய்துவிட்டபலனென்று கூறி ஓடிவிடுகிறான்.

மூன்று : இளம் வாலிபர்களைக் காமுறும் வயதான பெண்கள்: 'சீதாவின் தாய்?' சீதைக்குப்பாடம் சொல்லித்தர விரும்பி, இளம் வாலிபனை வரவழைத்து மிரட்டி, கவர்ந்து அவன் சீதையைக் காதலிக்கவிடாமல் தன் ஆசைக்கு அவனைப் பயனாக்கிக் கொள்கிறாள் சீதாவின் தாய். 'அவள் உதடுகள்?': வயதானவளானாலும், அவள் உதடுகளின் அழகு வாலிபர்களைக் கவர்கின்றன. அவளுக்கு எத்தனையோ காதலர்கள். கணவன் தடையேதும் சொல்லமாட்டான். அவளோ செல்வந்தர் வறியவர் என வேற்றுமை காட்டமாட்டாள். ஊர்த்தலைவன் அநுமந்தராவ் அவளுடன் தொடர்பு கொண்ட பிறகு அவளை அடிக்கலானான். அவளிடம் உறவு கொண்ட அவ்வூர்க் காதலர்கள் தலைவனைக் கொன்றே விடுகிறார்கள். ''ஆண் ஒருவன் பெண்டாட்டி வைப்பாட்டிகள் வேண்டுமென்றால் அது அவனுக்குப் பெருமை. பெண் என்றால், அவளுக்கு மதிப்பு ஆகாதா?'' என்பது வாதம். 'அதிர்ஷ்டம்': கல்லூரியில் படிக்கும் இளைஞன், சர்க்கஸில் சிங்கத்துடன் ஆட்டம் புரியும் இளமங்கையை மோகங் கொள்கிறான். அவளுக்கு விலை முன்னூறு ரூபாய். தேர்வுக்குச் செலுத்தவேண்டிய கட்டணத்தை அவளுக்குக் கொடுத்து ஓர் இரவு உறவுக்காக அவளிடம் செல்கிறான். அவள் அவனது ரசனையை நுகர்ந்து பணம் வாங்காமல் அவனுக்கு எத்தனையோ இரவுகள் சுகத்தைத் தருகிறாள். 'புத்திளமை': வயது குறைந்த பன்னிரண்டு வயதுச் சிறுவன் நாடகத்தில் வேடம் போடும் ரத்தியை ஆசை நெஞ்சத்துடன் காதலித்து, அவள் நோயுற்ற போது அவளுக்குப் பணிபுரிதல், வேசியானாலும் ரத்தியின் வெளிப்பட்ட நட்பு, பையனின் அக்காவும் மாமனும் காட்டிய பொறாமையும், அவர்கள் காட்டிய வெறுப்பு, அதிகாரம், இறுதியில் ரத்தி காட்டிய பரிவும் என இப்பெரியகதையை நாற்பது பக்கங்களில் சலம்

கதைகளில் தேர்ந்தெடுக்கத்தக்க உரையாக்கமாக்கின. இளமை தளிர்க்கும் சிறுவனின் கற்பனையுலகினை, அவனது உள்ள உணர்ச்சிகளை, உலகம் அதனைப் பற்றிக் காட்டிய அலட்சியத்தை, பளிச்சிடும் வகையில் இதயத்தில் பதியச் செய்தார் சலம் இக்கதையில்.

நான்கு : சினிமா அரங்கங்களில் பெண்கள் எதிர்நோக்க நேரும் பிரச்சினைகள்: 'சினிமா சாயம்', மரியாதைக் குரியவர்க் கொருகதை', 'காண்போர் உள்ளம்', 'செமந்தகமணியுடன் நேர்முகம்', 'அபிநவ சாரங்கதரா', பிறகதைகள். சலம் 1938இல் 'மாலபில்லா' தாழ்குலப்பெண் எனும் சினிமாவுக்குக் கதை வசனம் எழுதினார். அவருக்கு சினிமா அரங்கத்துடன், அத்தொழிலைச் சார்ந்தவர்களிடம் அறிமுகம் இருந்தது. ஆனால் தொடர்பற்றவர்களே அதிகம்.

ஐந்து : செயலும் செயல்பாடும் : 'விதவை' எனும் கதையை இதுவரைக்கும் குறிப்பிட்டேன். 'மதுரை மீனாட்சி' கதையும் அத்தொகுப்பிலுள்ளதே (1925). விதவை காமாட்சி தாய், மகள் வயதுவந்த சடங்கு. சுற்றுலாவின் போது தன்னுடன் வந்த சேஷய்யாவுடன் நெருக்கமாக இருப்பதற்கு முதலில் தடை செய்தாலும், மதுரை மீனாட்சி ஆலயத்தில் உற்சவங்களில் அழகுணர்வுக்காளாகி, தனது இளமையை, தன் கணவனுடன் கடத்திய காதல் வாழ்வை நினைவு கூர்ந்து, மகளின் நடவடிக் கையை ஏற்றுக் கொண்டு, மதுரை மீனாட்சி ரதத்தின் கீழ் விழுந்து இறந்து போகிறாள். அவளின் நடத்தைகளின் மாற்றத் தைச் சித்தரித்த சலத்தின் மொழி நடை கதைக்கு வண்ணம் பூசியது. 'பொறாமை' (1931): சீர்திருத்த மணம் புரிந்து கொண்ட ஆண்களின் உள்ளூர நேரும் மனப்போக்கு அவர்களின் வாழ்க் கையை எவ்வாறு பாதித்து வருத்துகிறதென்பதைப் பொருத்தமான நடையில் விவரிக்கப்பெற்ற கதை. சீர்திருத்தவாதி தான் மணம் புரிந்து கொண்ட பெண் தனது முதல் கணவனை மறக்க வியலாமல், பொறாமையால் தொடர்ந்து வேதனைப்படுகிறான். தன் மனைவியையும் வேதனைப்படுத்துகிறான். 'கலை ஆராதனை': கலையின் பெயரில் கணவன் மனைவியரைப் பிரித்து, சேவை புரிகின்ற மேல்தர வங்காளப் பெண்களை, அவர்களுக்குப் பணிபுரிகின்ற தெலுங்கு இளைஞர்களை இகழ்ந்து கூறும் கதை. 'முக்காலி மணை'. மேலைநாடுகளிலிருந்து திவ்ய ஞான சமாஜத்தின் வாயிலாக அறிமுகமான 'ஓஜா போர்டு' (ouija board) இறந்து போனவரின் ஆவிகள் அவர்களின் உறவினர் நண்பர்களுடன் பேசுவதற்கான சாதனம் என ஒரு நம்பிக்கை. சுலோசனாவை இரண்டாம் மணம் புரிந்து கொண்ட சியாமாராவ் முதல் மனைவியுடன் முக்காலி மணையின் உதவியுடன் உரையாடி சுலோசனாவை அலட்சியம் செய்கிறான். சுலோசனாவின்

அண்ணன், அவன் நண்பன் ஓர் ஐரோப்பிய மாதினை மருள் வந்து குறி சொல்பவளாக (medium) நியமித்து முக்காலிமணை உதவியால் முதல் மனைவியை வரவொண்ணாமல் செய்கிறார்கள். ஆனால் சியாமாராவ் சுலோசனாவுடனல்லாமல் ஒரு நர்ஸுடன் குடும்பம் நடத்தவே, சுலோசனா விவாகரத்து கோருகிறாள், தன் விருப்பம் போல் வாழ்வதற்கு.

ஆறு: சமுதாயத்தில் பாதுகாப்பற்ற பெண்கள்: 'சக்கிலிப் பெண்' கதையில், போக்கிரிகளுக்குப் பயந்து காவல் நிலையத்துக்கு ஓடிவந்த சக்கிலி மங்கையை காவல்நிலையத்தில் சேர்த்து, அவள் பிழைப்புக்காக விலைமாதுத் தொழில் நடத்துமாறு செய்தார்கள். 1925இல் எழுதிய இத்தகைய நிலைமை இந்நாட்களிலும் உள்ளதென்னும் செய்திகளைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம்! 'லில்லியுடன் நட்பு': கணவனை விட்டுப் பிரிந்து ஆசிரியை பணிபுரியும் பெண்ணை, அப்பணியில் பாதுகாப்பில்லாமல் செய்து, அரசு அதிகாரிகள், நகராட்சித் தலைவன் ஆகியோர் அவளை விளையாட்டுக் கருவியாகப் பயன்படுத்தியதும், அதனிடையில் கல்விக்கூடத் தலைவி பொன்னம்மாவின் பொறாமையுடன் கூடிய பாத்திரங்களைக் கொண்டது இக்கதைக்குரிய பொருள். 'நான் என்ன செய்தேன்?': இதயத்தை இளகச் செய்யும் எளியவளின் கதை. தாய் தந்தையராலும் அவளுக்கு ரௌடி வெங்கடசாமியிடமிருந்து பாதுகாப்பளிக்கவியலாமல் போகிறார்கள். கிறிஸ்த சமயத்தைச் சேர்ந்தவராயினும் மண நிகழ்ச்சிகளில் குலவேற்றுமைகள் போகவில்லை. அவளுக்கு மணம் முடித்தார்கள். ஆனால் 'ரௌடி' வெங்கடசாமி விட்டுக் கொடுக்கமாட்டான். பணத்துக்காக வருகிறான். அவள் கணவன் இதையறிந்து அவளை வீட்டை விட்டுத் துரத்திவிடுகிறான். தாய் தந்தையர் கொடுத்த நகைகளைத் தனதென்கிறான். தாய் தந்தையரும் பாஸ்டரும் அவள் நெறி தவறி விட்டாளென்று, அவள் வேண்டுதலை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். எனவே வெங்கடசாமி அவளைத் தன் குடிசைக்குள் இருக்கச் செய்கிறான். ஆனால் அவன் குடிகாரன். வீணன். ''நான் என்ன செய்தேன் என் இந்த அவலநிலைக்கு, என்னை எல்லாரும் கைவிட்டுவிட?'' என ஏங்குகிறாள் அவள். சலம் சித்தரித்துக் காட்டிய இந்த உண்மைச் சூழ்நிலைகள் இன்னும் மாறவில்லை என்பது தெளிவு!

ஏழு: குடியாட்சிப் புரட்சி அரசியல்: 'சுசீலா': இக்கதை (1924), 'கண்ணீர்க் கால்வாய்' தொகுப்பிலுள்ளது. கணவன் நாராயணப் பாவை வேண்டாமென்று போலீஸ் அதிகாரி சுலேமானைக் காதலித்த சுசீலா, ஒத்துழையாமை இயக்கத்தில் தன் கணவன் சிறைக்குச் செல்லவும், காசநோயால் அவன் அவதிப்பட்டும் அவனது தியாகத்தைக் கண்டு அவன் மீது பாசம்

கொண்டு சுலேமானிடமிருந்து விலகிக் கணவனிடம் சேர்கிறாள். அந்நாட்களில் நாட்டுக்கெனத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர்களின் தன்னலமற்ற செயல்களுக்குச் சலம் அக்கறையுடன் எழுதியகதை. ''அப்போதும் இப்போதும்'': 1927இல் எழுதிய கதைகளில் சலத்தின் கோட்பாடுகள் மாறலாயின. வழக்காடும் தொழிலில் சுப்ரமண்யம் சம்பாதித்து நல்ல நிலையிலிருக்கிறான். ஆனால் பின்னால் ஒத்துழையாமை இயக்கத்தில் தனது சொத்துக்களை இயக்கத்துக்காக அளித்துத் தன் தொழிலையும் நிறுத்திக் கொண்டான். வீட்டிலோ வறுமை. வயதான தாய் தந்தையர், மனைவிமக்கள் யாரைப்பற்றியும் எண்ணமாட்டான். அவன் தியாகத்துக்கு வரையில்லை. அவனது வறுமையைக் கண்டு கட்சியில் மரியாதையும் நம்பிக்கையும் இழந்தான். சுப்ரமண்யம் பைத்தியக்காரனைப் போலாகி விட்டான். 'ஹரிஜனப் பிரச்சினை' (1946): குலங்களுக்கிடையில் சமரச மனப்பான்மையை வளர்க்க கிராமத்தில் தங்கியிருந்த போது, ஒரு சாமியார் வளர்த்த பையன் வீரண்ணா இரு இனத்தவரிடையில் பகைமையை வளர்க்கவும், கலவரத்தில் இறந்துபோன சாமியாருக்குக் கோவில் கட்டுகிறார்கள். அஹிம்சை நெறிமுறைகள் ஹிம்சைக்கு வழிகாட்டியதென்ற வேதனையுடன், குலவேற்றுமைகள் வெறும் உபதேசத்துடன் செயல்படுவதனால் மறைந்து விடமாட்டா எனும் கருத்தினைத் தெளிவாக்கிய கதை. 'ஹிந்து முஸல்மான்' (1947) கதை நாடு பிளவுற்ற காலத்தில் பஞ்சாபில் எரி தணலென நேர்ந்த ஹிம்சைக்காண்டத்தைச் சித்தரிக்கிறது. மதவெறி, பகைமை மனிதத்தன்மையை மறைத்து விட்டாலும், மனிதப்பண்பே இறுதியில் வெற்றிபெறும் என முடிக்கிறார். '1960' : இத்தலைப்பில் 1947 வாக்கில் எழுதப்பெற்ற கதை. காந்திஜியின் அறக்கொள்கைகளை எழுத்துக்கெழுத்து நடைமுறையில் கொண்டு வந்தால் நாட்டுக்கு ஏற்படும் நன்னிலையைப் பற்றி மிகவும் விளக்கமாகக் காட்டும் உரையாக்கம்.

எட்டு : கற்பனையாளர், ஆதாரநிலைவாதி; பெண்களைப் பற்றிய காதல் கற்பனைவாத (romanticism) செயல்பாடுகள் காரணமாகப் பெண்கள் மீதான காதலையும் ஆராதனை யையும் வளர்த்துக் கொண்ட கனவுகளுடன், இனிக்கும் மோக உணர்வுடன், கவிதைப் படைப்புடன் சலம் காட்டிய ஆடவர்களைவிட, பெண்டிரின் பாசம் ஆதாரமாக, எல்லா வகையான துன்பங்களையும் செயல்முறைகளையும் ஏற்ற மனிதர்களே அந்தப் பெண்டிரை அடைந்து அனுபவித்து வாழ்க்கையில் வெற்றியடைகிறார்களெனக் காட்டி, மிதமிஞ்சிய சிருங்கார ரசத்தையும் அக்காலத்திய கற்பனைக் கவிதைகளையும் மறுத்துரைத்த கதைகள் 'அந்த இரவு' (1951), 'கல்யாணி' (1949), 'அவர்கள் நால்வர்' (1947) ஆகியவை. இக்கதைகளில் வரிசையாக

ராஜய்யா, துரைக்கண்ணு, விஸ்வநாதம் போன்ற சீர்திருத்தவாதிகள், சியாமாராவ், ஆனந்தராவ், சூர்யாராவ் போன்ற சிந்தனையாளர்கள் (idealists) நட்புடன், அவர்கள் புகழ்ந்து போற்றிய அந்தக் கதைகளின் தலைவிகளான விசாலாட்சி, கல்யாணி, ரோகிணி போன்றவருடன் மிகுந்த ஆசை தோன்றிக் கடைசியில் அந்தப் பெண்களையடைந்து அனுபவித்து வெற்றிகாண்கிறார்கள். வாழ்க்கையில் நிகழும் சிக்கலான சூழ்நிலைகளில் ஆற்றல்மிக்கவனுக்கே வெற்றி.

ஒன்பது : பாசம் நிறைந்த காதல் பிணைப்பு: 'புரூருவன்' நாடகம் எழுதிய நாட்களில் (1948) சலம் ஆடவர் பெண்டிர் இடையில் ஓர் உலகாயதத்துக்குப்பாலான காதல் பிணைப்பைக் குறித்துச் சிந்திக்கிறார். 'கல்யாணி' (1947) கதையில் கல்யாணிக்காக துரைக்கண்ணு ஆற்றின் நடுவில் ஒரு தீவு போன்ற இடத்தில் வீடு அமைத்துக் கொண்டு உலகுக்கு மறைந்திருக்கிறான். 'ஆத்ம அர்ப்பணம்' (1948) கதையில் நகராட்சித் தலைவனாகத் தேர்ந்தெடுக்கப்பெற்ற ஸ்ரீதர் எல்லாவற்றையும் விட்டுவிட்டு மதுரம் என்பவளுடன் அமலாபுரம் அருகில் ஒரு தீவில் இருந்து, பிறகு கல்கத்தா அருகில் கோசாயி மடத்திலும் வசித்து அவள் உறவே எல்லாமும் என வாழ்கிறான். 'போகம் மேளம்' கதையில் கூட இத்தகைய கதைப் பொருளே உள்ளது. 'வெண்ணிலாத் தோட்டங்கள்' (1948) கதையில் ஜமீன்தாரப் பெண் ஒருத்தி குடிகாரன் ஒருவனுடன் ஓடிப்போய் இறுதியில் பிச்சைக்காரியாகப் பட்டணத்தில் முன்னாளைய அறிமுகமான ஒருத்தியைப் பார்த்து, அவளுடன் குடிகாரனுக்கும் தனக்குமான உலகவழக்கத்திலில்லாததோர் தொடர்பு மற்றெல்லாவற்றையும் விடமிக மதிப்பானது எனக் கூறுகிறாள். 'மைதானம்' நவீனத்தில் ராஜேஸ்வரியும் அவ்வாறே அமீருடன் ஓடிப்போய், காட்டில் குடி வைக்கிறாள். ஆனால் ராஜேஸ்வரி அமீருக்கிடையில் மோக உணர்வு தவிர காதல்பிணைப்பேதும் இல்லை! 1947-48இல் எழுதப்பெற்ற மேற்கூறிய கதைகளில் உலகியல்பலாத காதல்தொடர்பு தலையாய இடம் பெற்றது. 'எதற்கு?' எனும் கதையில் இக்கருத்தினைப் பற்றி விளக்க உரையும் அமைத்தார் சலம். யோகவாசிஷ்டத்திலிருந்து கதைக்குச் சான்று காட்டினார். காதலரிருவரை அரசன் சித்திரவதை செய்தும், அவர்கள் அக் கொடுமைக்கும் தண்டனைக்கும் தயங்கவில்லை. ஏனெனில் அக்காதலன் இவ்வாறு விவரிக்கிறான்: ''அவள் மோகத் துன்பத்தை நான் காண்கிறேன். அவள் என் துன்பத்தைப் பார்க்கிறாள். அந்த இன்பத்தில் எங்கள் உடல்கள் எங்களுக்குப் புலப்படவில்லை. உள்ளம் ஏதேனுமொன்றில் ஆழ்ந்துவிட்டால் உடலின் வலி உணர்வு தோன்றாது. மனம் ஒன்றுபட்டபின்னர் இவ்வுடல்களின் செயல்களுக்குத் தேவை என்ன? இந்த உடல்களை அழிக்கச் செய்தாலும், எதன் மீது அதிகமான

ஆசையோ அதனில் எளிதாக ஆழ்ந்து விடுகிறது உள்ளம். வலிதெரிவதற்கு இடமேது? இந்த சரீரத்தை அழித்துவிட்டாலும் உள்ளங்கள் தமக்கு விருப்பமான புதிய உடம்புகளைப் பெற்றுவிடும்.'' உலகை மறந்து, உலகம் வேண்டாமெனத் தொலைவாகச் சென்று, ஆண் பெண் ஒருவரோடொருவர் ஒத்தவராயிருந்து பெறும் இந்த ஒருமையுணர்வு யோக சமாதி நிலைக் கொப்பானது எனச் சலம் உறுதிசெய்கிறார். அதற்கே 'புரூருவர்' நாடகத்தில் அச் சமாதியிலிருந்து வெளிப்பட்டதுடன் புரூருவன் ஊர்வசியிடமிருந்து தொலைவாகிவிடுகிறான். ஆனால் சலம் 1949 இல் 'ஜீவிதா தர்சனம்' எனும் வாழ்க்கைக் காட்சிப் புதினத்தை எழுதிய நாளில் இக்கண்ணோட்டத்தில் சற்று மாற்றம் வந்தது. அங்கே தேசிகாச்சாரி லாலஸா அனுபவிக்கும் பரஸ்பரநிலையில் வெளிப்பாடான தன்னுரிமை, உலகத்திலிருந்து தொலைவாகிவிடாமல் உலகினைக் குறிப்புணர்த்தல் உள்ளது. அவ்வொருவருடன் மற்றவர் அரவணைப்பில் மயக்குறுநிலை (Intoxication) யைக் காட்டிலும் 'சாந்தி' (Peace) தலையாயதாக உள்ளது.

எண்ணங்கள் - கடிதங்கள்

தீட்சிதலுக்கு மே 5, 1937 ஆம் தேதிய கடிதத்தில் சலம்: ''எண்ணங்கள்'' (Musings) எனும் புதுவகைத் தொடர் எழுதிகிறேன். அந்தச் சொல்லுக்குத் தெலுங்கில் என்னவோ'' என எழுதினார். மீயூசிங்ஸ் தெலுங்கில் புதிய படைப்பு. சலம் தமது சிந்தனைகளுக்கு, ஊகங்களுக்கு, ஆவல்களுக்கு நேராகவே வெளிப்படுத்திக் கற்பனை செய்வதே 'எண்ணங்கள்' உரையாக்கம். இது மூன்று பாகங்களாக முதலில் வெளியானது, 1937-57 இல். 1976 இல் ஒரு தொகுப்புநூலாக, சலம் சாகித்தியம், ஹைதராபாத்காரர்கள் அச்சிட்டளித்தார்கள். இந்நூலினைச் சலம் லீலாவுக்கு அர்ப்பணமாக்கினார். இவ் 'எண்ணங்களில்' பல இடங்களில் லீலாவுடன் சலம் நிகழ்த்திய உரையாடல்கள் காணக்கிடக்கின்றன.

'எண்ணங்களில்' சலம் விளக்கிய பொருள்கள்:

கவித்துவம், வாழ்க்கை, அழகு: கவித்துவத்துக்கும் வாழ்க்கைக்கும் உள்ள தொடர்பு, துன்புறு நிகழ்வுகள், கருணை, அழகினை ஆராதித்தல், இன்பம், புதிய சமுதாயத்தில் பெண்ணுரிமை, பரிவு, பாசப் பெண்டிர், செயல் வீரர்கள், ராமனும் கிருஷ்ணனும், கல்வியமைப்பு, தெலுங்குத் திரைப்படம், காதல், கலைகள், வாழ்க்கை, படைப்பும் அதன் பொருளும், இறந்துவிட்ட நண்பன் தாராநாத்தின் நினைவுகள், கலையும் வாழும் வழியும், ஆழ்ந்த விருப்பங்கள், பெண்ணுரிமைப் போராட்டமும் விளைவுகளும், மரணம் என்றால் என்ன? ஆன்மிக சக்திகளும் சாதனைகளும், மதமும்

கர்மவினைக் கொள்கையும், கம்யூனிசம், மேலை நாட்டு நாகரிகப் பெருமை, சமுதாயத்தில் சமன்பாடு, ஏக்கமன நிலை (sadism), அணுகுண்டு, அரசியல்கள், நாட்டுப் பற்று (patriotism), மனிதர்களும் மரபொம்மைகளும், சங்கீதமும் சாகித்தியமும், காந்தி நினைவுகள், ரவீந்திரரின் விமரிசனங்கள், ஹரீந்திரநாத் நினைவுகள், காலமும் தொடர்பாற்றல் கோட்பாடும், உளநூல் அறிவியல் கோட்பாடுகள், வேதாந்தம், ஏசு கிறிஸ்து, காந்தியும் சத்திய சோதனையும், கலைப் படைப்புக்கள், கலையும் கம்யூனிசமும், அறிவியலும் வேதாந்தமும், மாயைத் தோற்றம், ஆன்மிகச் சாதனை, வைராக்கியம், ரமணாசிரமம், மனிதனின் பரிணாம வளர்ச்சி, நீதியும் அந்தராத்மாவும். இவ்வாறு பல பொருட்களைப் பற்றியன 'எண்ணங்கள்' தொகுப்பு.

சலம் 'எண்ணங்களின்' இறுதிப்பக்கங்களிலிருந்து இதனைச் சான்றுரைகளாக எடுத்துரைக்கின்றேன். ''மனிதன் இயல்புகளில் மிக உயர்ந்தது அவனது அந்தராத்மா. அம்'மனசாட்சி'யைக் கீழ்த்தரமாக்கிக் கொள்வதனாலேயே இத்தனை பதிதன் ஆனான். சாந்திக்கும் ஆனந்தத்துக்கும் மிகத் தொலைவாகிவிட்டான். நான் இன்று உறுதியாகத் தெரிந்து கொண்டது யாதெனின் மனிதன் பரிணாம வளர்ச்சியில் பல நிலைகளில் உள்ளான். அவன் தனது நிலைக்கேற்றவாறு நீதியையும் தர்மத்தையும் காணச் செய்கிறது அவனது அந்தராத்மா. மனிதன் ஒவ்வொருவனும் சாந்தியையும் சுகத்தையும் வேண்டுகின்றான். தனது உள்ளுணர்வு உணர்த்து வதற்கேற்ப நடந்து கொணடான் என்றால் அவனுக்கு அமைதி. இக்காலத்தில் உடல் சுகத்துக்கான வசதிகள் மிகுதியாக மேம் பட்டிருப்பினும், அந்தராத்மாவில் சாந்தி இல்லாமற் போவதனால், எங்கும் அவ்வுளநிறைவு காணாமல் அடிபட்டுப் போகின்றான். உலக மனைத்துமே அமைதியற்றுப் போய்விட்டது. உள் நிறைந்த அமைதியடைந்தவன் புலன்களின் இன்பத்துக் கெனக் கூத்தாடமாட்டான். உள்ளுறை அமைதி உள்ளுணர் ஆன்மாவிலிருந்து வரும் அமைதியாலேயே பிறக்கின்றது... எப்படி? 'சுற்றிலும் பாருங்கள் அறத்துடன் வாழக்கூடிய காலமா இது?' எனக் கேட்கிறார்கள். 'உண்மையே கடினம்தான். சரி, அறமற்றவற்றையே செய்யுங்கள். அதன் பயனையும் அனுபவியுங்கள்' என்பதைத் தவிர வேறு மறுபதில் இல்லை!''

தெலுங்கில் கடித இலக்கியம் மிகவும் குறைவு. சலம் தீட்சிதலுக்கு 1924-54-க் கிடையில் எழுதிய கடிதங்கள் 'சலம் கடிதங்கள்' என்ற தொடரில் இணைக்கச் செய்து வெளியிடப் பெற்றது. இக்கடிதங்கள் சலம் வாழ்க்கையில் வந்த உள்ளார்ந்த மனமாற்ற வளர்ச்சியைக் கண்ணாடி போல் காட்டுகின்றன. சலம் முதுமையில் தமது கடந்த வாழ்க்கையை நினைவுகள் வடிவமாக எழுதி வெளியிட்டாலும், பல நிகழ்ச்சிகளில் கடிதங்களே நமக்குச்

சரியான ஆதாரமுள்ள செய்திகளைக் கிடைக்கச் செய்கின்றன. சலம் 'காதல் கடிதங்கள்' தொடரில் மற்றுமொரு நூலை வெளியிட்டார். அக்கடிதங்களைப் பெற்றுக் கொண்ட அன்புக்குரியவள் யாரெனச் சுட்டிக்காட்டவில்லை. 1922-27 ஆம் ஆண்டுகளில் தமது அன்புக்குரியவள், துணைவியான டாக்டர் ரங்கநாயகம்மா எனும் மன்னிக்கு எழுதிய கடிதங்களாக அவற்றைக் குறிப்பிடுவதற்கு இயலும். அவ்வாண்டுகளில் அவள் மருத்துவப்படிப்பை ஹைதராபாதில் படித்துக் கொண்டிருந்தாள். காதல் கடிதங்களில் கடைசிக்கடிதத்தில் ரா - இறப்பினைக் குறித்து சான்று உள்ளது. அந்த ரா - சலத்தின் அன்புத் தோழனான மொக்கமாடி ராமமூர்த்தி என்று தெளிவாகத் தெரிகின்றது. 'காதல் கடிதங்கள்' சலம் வாழ்க்கையைப் பற்றி நன்கு பொருளுணர்ந்து கொள்ளச் சிறந்த ஆதாரம். கடிதங்களை முதலில் எழுதும் போது அச்சிட்டு வெளியிடும் எண்ணம் இல்லாமற் போனதால், அவை உரையாசிரியரின் உள்ளக் கிடக்கையை நன்கு எடுத்துக் காட்டுகின்றன. சலம் அருணாசலம் போய்ச் சேர்ந்த பிறகு நண்பர்களுக்கு எழுதிய கடிதங்கள், பி. வி. நரசிம்மா ராவ் (1950-1979), பி. ராமஜோகா ராவ் (1947-1977), வஜீர் ரஹ்மான் (1955-1956) தொகுப்புக்களாக வெளியிடப் பெற்றன. கடித எழுத்தாளராகத் தெலுங்கில் பெரும் புகழுற்றவர்களில் சலம்

முடிவு

சலம் சீர்திருத்தச் செயல் புரிந்தவரல்லர். வீரேசலிங்கமும் பிரம்ம சமாஜமும் அவரைப் புகழ் பெற்றவராகச் செய்தமையால் சீர்திருத்தச் செயல் புரியும் உறுதியுடன் அவர் வாழ்க்கையைத் தொடங்கினார். 1920 ஆம் ஆண்டில் சமுதாயத்திலிருந்து வெளியேற்றப் பெற்றவரானமையால் புரட்சி செய்ய வேண்டுமென்பதற்கான வாய்ப்புக்கள் சலத்துக்கு இல்லை. எழுத்தாளராகத் தாம் நடுத்தர வகுப்பினரின் வாசக உலகில் பெரியதோர் எழுச்சியை உண்டாக்கக் கூடுமென அறிந்து கொண்டபிறகு செயல்புரியும் எண்ணத்துடன் சிறிதுகாலம் உரையாக்கம் செய்துவந்தார். வீரேசலிங்கம் 'சதிஹித போதனை' எழுதி வெளியிடப்பட்ட சமயம், சலம் 'பெண்' (1925), 'குழந்தைக் கல்வி,' (1924) எழுதினார். 'பெண்', 'குழந்தைக் கல்வி' இலக்கிய நூல்கள் அல்ல. அதனாலேயே இவற்றை மூன்றாவது அத்தியாயத்தில் சேர்க்கவில்லை. 'பெண்' நூலில் பொருளாதார, சமுதாய நடவடிக்கைகளில், குடும்பத்தில் பெண்கள் எவ்வாறு மிதித்து அடக்கப் பெறுகிறார்கள் என விவரித்து, நூலின் கடைசியில் கருத்தடைச் சாதனங்களைப் பற்றியும் உடலுறவு நோய்களைப் பற்றியும், கருச் சிதைவுபற்றியும் சலத்தின் அறிவியலைப் பொதுமக்களுக்குக் கிடைக்கச் செய்தார். இங்கிலாந்தில் மேரி ஸ்டோப்ஸ் செய்த பணியைச் சலம் இங்கு செய்யலானார். 1930 ஆம் ஆண்டில் இது ஒரு புரட்சி. 1926 இல் ஆங்கிலத்தில் "Man and Woman' எனும் கட்டுரையை எழுதி பந்தர் நோபில் கல்லூரியில் ஒரு கூட்டத்தில் படித்துக்காட்டினார். இக்கட்டுரை சலம் தொடங்கிய பெண் உரிமைப் போராட்டத்துக்கான திட்டக்கொள்கை அறிக்கை (Manifesto) க்கு ஒத்தாகும். 1930 இல் முதலாவதாக அச்சிடப் பெற்ற 'பெண்', பின்னர் 1940, 1945, 1950 இல் இருமுறை, 1979, 1982, 1984 ஆம் ஆண்டுகளில் வரிசையாக மறுபதிப்புள்ளிட அச்சிடப் பெற்றது. சலம் இப்பதிப்புக்களில் முதல் ஐந்து வெளியீடுகளுக்கு 'ஐந்து

முன்னுரை' எழுதினார். சலம் செயல்பாட்டு நோக்கத்தின் மாற்றம் அதில் தெரிகின்றது தெளிவாக:

'அப்போதைவிட இப்போது என் பொறுப்பு அதிகமாகியுள்ளது... மக்களுக்கு மொத்தத்தில் இவ்வழி மிகவும் நல்லதென எழுதுவது , தனிப்பட்ட முறையில் ஒருவருடன் இது உனக்கு நல்லதெனச் சொல்வது இவ்விரண்டும் வெவ்வேறு சங்கதிகள். நிகழ்ந்த நிகழ்ச்சி என்ன வென்றால், எனக்குச் சமுதாயத்தின் மீது கோபம், மனிதர்கள் மீது பாசம்' (டிசம்பர் 2, 1940).

'இந்தப் பிரசாரத்தினால் ஒவ்வோர் இதயத்திலும் சற்றேனும் அல்லது மிகுந்த அளவு மாற்றம் நேர்ந்தே தீருமெனவும், புதிய கோணத்திலிருந்து பார்த்துத் தெரிந்து கொள்வார்கள் எனவும், மௌனத்தினால், அறியாமையினால், மூடத்தனத்தினால் தாம் பிறருக்கு, ஆதரவற்றவர்களுக்கு, நலிந்தவகுப்பினருக்குச் செய்யும் அநியாயம் வெளிப்படையாகத் தெரியும் என்ற ஆவல். முறையாக மனிதன் புதிய ஒளிக்குக் கண்களைத் திறப்பானென்ற நம்பிக்கை... நன்மை பயப்பதற்குச் செல்வமும் ஆஸ்தியும் மிகவும் தேவை எனக்கருதும் காலம் வரை இனி எதற்கும் மதிப்பு இராது... இவ்வளவு எழுதுகிறேனே தவிர கம்யூனிசம் போன்ற பொதுவுடமைப் பெருமாற்றம் வந்து இந்தக் குப்பைகளெல்லாம் பெருக்கித் துடைக்கும் வரையில் இம் மனிதர்கள் எப்படியும் அசைய மாட்டார்கள்.' (ஜூலை 27, 1945.)

'இந்த ஆண் பெண் தொடர்பு எவ்வளவு தேவையாயினும், உலகிலுள்ள பலவகைத் தொடர்புகளில், பிரச்சினைகளில் இதுவும் ஒன்று... நான் எழுதிய புத்தகத்தில் உங்களுக்குப் பயன்தரும் வாக்கியங்களை முழு உண்மையென ஏற்கச் செய்யும் குற்றத்தைச் செய்யக் கூடாது. படைப்பில் ஆழ்ந்து அறிந்து கண்டபின் பின்னப் படுத்த வாய்ப்பில்லாத 'ஒருமை' தோன்றுகிறது. இந்த ஒருமையுணர்வே இறைவன். அத்தகைய சத்தியத்தை நெருங்கி வந்தால் கணவன் கட்டளையிடுவது இராது, பெண் மறுப்பளிப்பதும் இராது'. (செப்டம்பர் 20, 1952).

'முதலில் பல ஆண்டுகளுக்கு இப்புத்தகத்தை அசசிட்டு வெளியிடும் துணிவு எவருக்கும் இல்லாமற் போயிற்று. அத்தகையோர் ஊர் பேர் தெரியாமல் அடங்கிப் போய் விட்டார்கள். நாட்டு விடுதலையுடன் பல வகைச் சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. அவற்றின் விளைவாகப் பெண்களின் கரங்களில் அதிகாரம் கிடைத்தது... மனித தர்மம், சமுதாய நீதி ஆகியவை போய், ஆட்சி நெறியொன்றே மிகுந்துள்ளது. மனிதர்களுக்கும் சமுதாயத்துக்கும் தாம் சொந்தமாகச் சிந்தித்து முடிவெடுக்கும் சக்தி இல்லாமற் போயிற்று. மதத்தைப் பற்றி நாம் கொண்ட எண்ணமெல்லாம் தகர்ந்து போயிற்று. இந்த நாட்களில் நமக்கு

என்ன ஒழுக்க நெறிகள், விதிமுறைகள் இருக்க வேண்டுமெனக் கூறி, நியாயச் சட்டங்களை இயற்றுமாறு அரசாங்கத்தைக் கேட்கிறார்கள், தமது பிழைப்பை நடத்துவதற்கான நீதி நெறிகளை மறந்து விட்டு. அதனாலேயே தம் பிழைப்பின் மீது அக்கறையில்லாமற் போனது... நீதி, அறம், ஒழுக்கம் ஆகியவையும் தேசிய மயமாகிவிட்டன... என்னை அப்புறப் படுத்திய நீங்கள், அரசாங் கத்தையும் விலக்கி வைத்தால் உங்களைப் பார்த்து எத்தனை பெருமைப் படுவேன்! எப்படி வெண்ணெய்யாக உருக்குலைந்து போயிற்று உங்கள் தர்மம்!' (டிசம்பர் 31, 1952).

சலம் சீர் திருத்தக் கருதிய சமுதாயம் மாறிப்போய் விட்டது. முதலிலிருந்தே மக்களின் மனமாற்றம் வரவேண்டுமென்பதே அவரின் ஆவல். அந்த மாற்றம் சமுதாயத்தின் மீது பிரதிபலிக்கும் என்பது அவரது எண்ணம். சமுதாயத்தில் மதிப்புகள் மாறிவிட்டன. ஆயினும் மக்களிடையில் சலம் விரும்பிய மாற்றமாகிய தன்னுரிமை, உண்மை நாட்டம், அன்பு, மகிழ்ச்சி ஆகியவை வரவில்லை. 1945 இல் கம்யூனிஸம் சற்று ஆவலைத் தூண்டியது அவரிடத்தில். ஆனால் 1952 ஆம் ஆண்டில் அவ்வாசை இல்லை! அனைத்துக்கும் அரசாங்கத்தைச் சார்ந்து நிற்கும் நிலையில் வந்த மக்களை, சமுதாயத்தைப் பார்த்துத் தம் ஏமாற்றத்தை வெளிப்படுத்தினார் சலம்.

சலம் தனிநபர் உரிமைக்கும் மானிட வளர்ச்சிக்கும் தலையாய இடமளித்தவர் ஆனமையால், சமுதாயம் எவ்வளவு மாறினாலும், எத்தகைய செயல்பாடுகளிலும் மனிதனுக்கும் அவன் தன் செயல்களுக்கும் விடிவு கிடைக்காதென்ற உண்மையை முறையாக உணர்ந்து கொண்டார் சலம். தம் உரையாக்கங்களில் மானிடவாதியாகவே அவர் காலத்துச் சமுதாயத்தை விமரிசித்தார். அதன் மீது ஆத்திரம் கொண்டார். செயல்பாடுகளை விவரித்ததனால் தனியொருவரின் செயல் நெறிகளைப் போற்றி விரும்புகிறார் என்ற அபிப்பிராயத்தைப் பெரும்பாலான வாசகர்கள் ஏற்படுத்திக் கொண்டு, அவரைச் சீர்திருத்தவாதியாகக் கருதிக்கொண்டு, அதற்குத் தகுந்த வழி காட்டு நெறியை அவர் அளிக்கவியலாமற் போனார் எனவும், ரமணாசிரமத்துக்குச் சென்று சேர்ந்துவிட முடிவெடுத்தார் எனவும் விமரிசித்தார்கள். இன்றைக்கு மார்க்ஸிஸ்ட் விமரிசகர்கள் செய்யும் முறையீடு அதுதான்.

தனிமனித உரிமைக்குப் பணிபுரிந்த சலம், தமது உரையாக்கங்களில் அதிகமாகப் பெண் உரிமையைப் பற்றி எழுதுவதற்கான காரணம், சமுதாயத்தில் பெண் பாதிக்கப் பெற்று ஆண் ஆளும் நிலையில் இருப்பதே. ஆணுக்கு உள்ள மணவினையிலுள்ள உரிமை பெண்ணுக்கு இல்லை என்பது

கண்கூடு. மனிதன் தன் நடை முறைச் செயல்பாடுகளில் கூட அவர், சிறப்பாகத் திருமணம், ஆண் பெண் உடலுறவுத் தொடர்பு, இவற்றையே மையமாகக் கொண்டதுடன், சலம் உடலுறவுக் கதை ஆசிரியர் என முத்திரையிடப் பெற்றார். ஆனால் 'இறப்பு', 'ஜெயதேவன்', 'புரூருவன்' போன்ற நாடகங்களிலும் 'எண்ணங்கள்' ஆகியவற்றில் ஆராய்ந்து பார்த்தால், சலம் குறிக்கோள் எத்தகைய மகுடம் போன்றதென உணர்வார்கள்.

''பெண்ணை ஓடிப்போக நீங்கள் புத்திமதி கூறுகிறீர்களா?'' என்ற கேள்விக்கு ''இல்லை'' என்பது அவருடைய பதில். ''பெண்கள் நீங்கள் காட்டும் வழியைத்தான் கடைப்பிடிக்க வேண்டும் என்பது உங்கள் எண்ணம் அல்லவா?'' என்றதற்கு, ''கடைப்படித்தல் தகாது என்பது தானே என் குறிக்கோள்'' என்கிறார் சலம். எவருடைய சொந்த தர்மத்தையும் அவரே முடிவெடுத்துக் கொள்ள வேண்டும். அம் முடிவு தன் சொந்த அனுபவத்தின் மீது உரிமையுடன் செய்யவேண்டிய செயல் என்பது அவரது கருத்து.

எழுத்தாளராகச் சலம் இந்திய இலக்கியப் படைப்பாளர்களில் தெலுங்கு மொழியில் தலைமை வரிசையில் நிற்கிறார். நவீனத்துக்கு, நாடகத்துக்கு, கதைப்படைப்புக்குப் புதிய வடிவத்தைத் தந்தார். தெலுங்கு உரையாக்கப் படைப்புக்களில் காவியச் சிற்பமாக அளித்து அறிமுகமான எழுத்தாளராக விஸ்வநாத சத்யநாராயணாவுடன் சலம் பெரும் புகழைப் பங்கிட்டுக் கொண்டார். நவீனக் காவியங்கள் உருவாக்கம் இவ்விருவரினால் நிகழ்ந்தது. சலத்தின் 'அமீனா', 'அருணா', தொடர்கதைகள் இதற்குச் சான்று. கதைகளில் 'ஒரு மலர் மலர்ந்தது' தூய்மையான கவிதையமைப்பு (Pure poetry). 'யசோதை கீதங்கள்' ரவீந்திரனின் கவிதைத் தரத்தை எட்டும் மர்மக் கவிதைப் படைப்பு.

சலம் உரையாக்கங்களில் எல்லாமக்களையும் கவர்ந்து கொண்ட உண்மை, புரட்சிக் கருத்துள்ள நவீனங்கள் 'மைதானம்', 'பிராமணியம்' சம்மட்டியடி அடித்துத் தாழ்ந்த சமுதாயத்தை, பழக்க வழக்கங்களை வெறுத்தொதுக்கிப் பெரியதொரு மாற்றத்தைத் தூண்டுவித்துப் பெரும் புகழுக்கு உயர்ந்தன.

சலம் தொடர்ந்து படிப்பார்வ நெறியுடனிருந்தவர். எச்.ஜி. வெல்ஸ், பெர்னார்ட்ஷா, ரஸ்ஸல், பெரட்டர்லிங்க், மொபாசா, துர்க்நேவ், செக்கோவ் போன்ற ஐரோப்பிய உரையாக்கத்தினரின் கருத்தாழம் கொண்டவர். டி.எஸ். லாரென்ஸுக்கும் தமக்குமுள்ள ஒற்றுமையை மெதுவாக உணர்ந்து கொண்டார். லாரென்ஸ் படைப்புக்களைப் படித்த நாட்களிலேயே சலம் எத்தனையோ உரையாக்கங்களைச் செய்து புகழ் பெற்றிருந்தார். ''லாரென்ஸுக்கும் எனக்கும் ஒருமித்ததன்மை, பாலுணர்வைத்

தலையாய பொருளாகக் கொண்டமை ஆகியவற்றால், இருவருமே ஆசிரியர்களானமையாலும் இணையானவரானோம். இருவரும் இடம் பெயர்ந்து போனவர்கள். இருவரும் உடல் தடித்தவர்கள். இருவரின் தந்தையரும் குடிகாரர்கள். இருவருக்கும் தந்தையென்றால் வெறுப்பு...'' (சலம்).

வங்க மொழி நவீன ஆசிரியர் சரத் சந்திரரையும் சலத்தையும் பல விமரிசகர்கள் ஒப்பிட்டுப் பார்த்தார்கள்:

''சலத்துக்கு எதன்மீதும் பகைமையில்லை. தமது நோக்கத்தை எவரையும் நோகவைக்காமல் சாதித்துக் கொள்கிறார். சலம் 'இவ்வுலகத்துக்கு எதனுடனும் சமாதானம் செய்துகொள்வதற்காக வரவில்லை. எல்லாவற்றுடனும் தகராறு செய்து கொள்ளவே வந்தேன்' என்கிறார். சரத் சந்திரர் ஒரு 'பகுதிப் பிரச்சினையிலேயே மேலைநாட்டு நடைமுறைகள் அனைத்தையும் கண்டனம் செய்தார். சலம் தமது கட்டுரைகள் அனைத்திலும் அவற்றைக் கண்டனம் செய்தார். உள்ளத்தின் ஆழமான தளையை விடுவிப்பதற்காகவே அவ்விருவரும் மாளாத பணிபுரிந்தார்கள்... 'சூர் சூர் துளசி சசி' என்றவாறு சலம் கடுமையான வெப்பந்தரும் கதிரவன், சரத் சந்திரரோ மார்கழிச் சந்திரன்''. (சலம், வாழ்க்கையும் இலக்கியமும் : கொர்ரபாடி வேங்கடசுப்பய்யா.

சரத்தினிடமும் சலத்தினிடமும் ஒரேயொரு எளிமையான பொருத்தம், இரக்கத்துக்குரிய, விலக்கப்பட்ட, செயலிழந்த பெண்கள் மீதான அளவற்ற கருணை, அன்பு, மதிப்பு... சரத் எவ்வளவு அன்பும் ஆதரவும் காட்டினாலும், மதித்தாலும் பெண்ணுக்குத் தரவியலாத உரிமையை, அவளுக்கு அபகாரம் தரத்தக்க தன்னுரிமையைச் சலம் ஏராளமாக அள்ளித்தரலானார்.'' (தெலுங்கு ஒளி, சலம் : புராணம் சுப்ரமண்ய சர்மா).

1942ஆம் ஆண்டு வாக்கில் சரத் நவீனங்கள் தெலுங்கில் மொழியாக்கமடைந்து வெளிவந்தன. நல்ல பிரசாரமடைந்தன. சலம் சரத்தைத் தெலுங்கில் படித்து தமது கருத்தை வெளிப்படுத்தினார்.

''சரத் என்ற சொல்லுக்கடுத்த சொல் சலம். அவர் எதைச் செய்வதற்குத் தயங்கினாரோ அதனைச் சலம் செய்து காட்டினார். சலம் புத்தகங்களைப் படித்திராமலிருந்தால் தெலுங்கு தேசம் இத்தனை நிறை மகிழ்ச்சியுடன் சரத்'தைத் தழுவிக் கொண்டிருக்காது. அந்தக் கடும் வீச்சிலிருந்து அதேவிதமாக எழுதும் இந்த சரத்தின் வேகத்துக்கு மிகவும் கடமைப்பட்டவராக உணரலானார். இந்தப் பெண்களுக்கெல்லாம் நடக்கும் 'அநியாயம் உங்களது' என்று அவர் எவரையும் குறிப்பிட்டுக் கூறமாட்டார். எனக்கு மன்னிப்பு கோரும் போக்கு பிடிக்காது. என் கதாநாயகிகளை எப்போதும் பரிவுக்குரியவர்கள் எனக்கூற மாட்டேன். அவர்கள் பரிதாபத்துக்குரியவர்கள் என்பவர்களையே

இரக்கத்துக்குரியவர்கள் என்கிறேன். பல கோணங்களிலிருந்து அவர்களது ஆதிக்கத்தைக் காட்டுகிறேன். சரத் சமுதாயத்தில் உள்ள மனப்பாங்கினை அசைக்கவில்லை. அவர் சம்பிரதாயவாதி. இதயத்தை உருகச் செய்து பிறகு நடப்பதை மனித இயல்புக்கு விட்டு விடுகிறார். சலம் 'நீதி என்றால் என்ன? உங்கள் அபிப்பிராயங்களை மாற்றிக்கொள்ள வேண்டும்' என வாதம் பிடிக்கிறார். சரத்தின் முறையீடு இதயத்துக்கு மட்டுமே. சலத்தின் முறையீடு மூளைக்கு.'' (டிசம்பர் 11, 1956 சலம், பி.வி. நரசிம்மாராவுக்கு).

சலம் சிக்கலான எழுத்தாளர். விவாதத்துக்குரிய எழுத்தாளர். அவரது இலக்கியத்தைக் குறித்து வாதங்களும் பிரதிவாதங்களும் விமரிசனங்களும் நடந்தவாறே உள்ளன. படிப்போர் உலகத்தில் அவர் மீதுள்ள பேராவல் குன்றுவதற்கான அறிகுறிகள் இல்லை. 1985இல் அவரது இலக்கியங்களைப் படித்தாராய்ந்த ஒரு குடும்பப் பெண்மணி தெரிவித்த கருத்துடன் இக்கட்டுரையை முடிக்கிறேன்.

'பாலுறவு என்பது விருப்பமன்று என்பது தர்மமாகிவிட்ட இந்த நாட்டுக்குச் சலம் உயர்ந்த நீதிப்பிரசாரகராக, சமுதாய மதிப்புகளை, நீதிமுறைகளைத் தகர்த்துத் துகளாக்கிய புரட்சி எழுத்தாளராகக் காணப்பெறுவதில் வியப்பேதுமில்லை. கலாசாரம், மரபுநெறி எனும் விலங்குக்கரங்களை விடுவித்து வெளிவந்து, காலத்தின் சிந்தனைத் தெளிவினைத் தமதாக்கிக் கொண்டவர்களுக்குச் சலம் இலக்கியங்களில் வாழ்க்கைக்குத் துணிபுரியும் பற்பல வளர்ச்சிக்குரிய அம்சங்கள் புலப்படாமல் இருக்கமாட்டா.'

(சலம் இலக்கியப் படைப்பின் மேம்பாடு: எஸ்.என். லக்ஷ்மி)

பின்னிணைப்பு

சலம் உரையாக்கங்கள்

நவீனங்கள் :

1. *சசிரேகா 1921*
2. *தெய்வம் தந்த மனைவி 1923*
3. *அமீனா (I பாகம், II பாகம்) 1926, 1942*
4. *மைதானம் 1927*
5. *விவாகம் 1928*
6. *பிராமணியம் 1937*
7. *அருணா 1938*
8. *ஜீவிதா தர்சனம் 1948*
9. *மார்த்தா 1963*

நாடகங்கள் - குறு நாடகங்கள்

1. *சித்ராங்கி 1922*
2. *பத்ம ராணி 1923*
3. *மங்கம்மா 1930*
4. *இறப்பு 1930*
5. *தியாகம் 1935*
6. *விடையளிப்பு 1935*
7. *ஜெயதேவன் 1935*
8. *சசாங்கன் 1935*
9. *புரூருவன் 1948*
10. *சத்தியம், சிவம், சுந்தரம் 1922*
    (மூன்று நவீனங்கள்)
11. *சாவலினி, ஜானகியின் துயரம், விளையட்டும் பொய்கள் 1924*
12. *மலையான், தெலுங்கு நவீனம், கடைசிப்பானை, சொர்க்கமும் நரகமும், ஜானகியின் பிரச்சினை 1925-27*
13. *குறுநாடகக் கோவை (ரங்கதாஸ், என்ன நோய், பங்கஜம், வீரம்மா, பொறாமை, பெண்களின் பசி, மருந்தூசிகள்) 1930*
14. *எமனின் எதிரில் சலம்*
    (பதினோரு குறு நாடகங்கள்) 1930-35

கதைகள் - சிறுகதைகள் (தொகுப்புக்கள்)

1. கண்ணீர்க் கால்வாய் 1924
2. கருமம் இப்படிக் கருகியது 1925
3. அநசூயா 1930
4. சலத்தின் பேனா 1931
5. அதிர்ஷ்டம் 1932
6. சுக்கம்மா 1932
7. சௌசௌ 1934
8. பாவம் 1936
9. விசித்ர நளீயம் 1937
10. சலம் கதைகள் 1927-51
11. சினிமாக் காய்ச்சல் 1941
12. ஹம்பிக் கன்னிகைகள் 1944
13. கல்யாணி 1947-48
14. ஒரு மலர் மலர்ந்தது 1949-57
15. புத்திளமை 1949
16. ரயில் நியைக் குழாய் 1958
17. ஆத்ம அர்ப்பணம் 1960
18. புதுத்துளிர்கள் 1962

பிறவகை

எண்ணங்கள் 1944-57

சலம் கடிதங்கள் (தீட்சிதலுக்கு) 1927-54

பெண் 1925

குழந்தைக் கல்வி 1924

சலம் (தன் வரலாறு) 1973

சலம் கடிதங்கள் (பி.வி. நரசிம்மா ராவுக்கு) 1947-77

சலம் அருணாசலம் கடிதங்கள் (பி.வி. நரசிம்மாராவுக்கு) 1950-79

கவிஞராகச் சலம் (வஜீர் ரஹ்மானுக்குக் கடிதங்கள்) 1955-56

சலத்தைப் பற்றிய நூல்கள்

1. சலம் வாழ்க்கையும் இலக்கியமும்:
கொர்ரபாடி வேங்கடசுப்பய்யா 1958

2. ஸ்ருஜன: 1958 மே (சலம் சாகித்திய சமாலோசனை சஞ்சிகை)
3. இலக்கியத்தில் இலக்குகள் - சலம்: ஆர்.எஸ். சுதர்சனம் 1968
4. சலத்தின் சுடுகாட்டு இலக்கியம் : நிம்மகட்டவெங்கடேஸ்வரராவ்
5. சலத்தின் நவீனங்கள்-சமுதாயக் கண்ணோட்டம்: வென்னவரம் ஈடாரெட்டி 1980
6. சலமும் இலக்கியமும்: ரங்க நாயகம்மா 1982
7. தெலுங்கு ஒளி, சலம்; அருணாசலத்தில் சலம்; ஆந்திராவில் சலம் - மூன்று பாகங்கள்: புராணம் சுப்ரமண்யசர்மா 1983
8. சலத்தின் இலக்கிய மேம்பாட்டு நோக்கு: எஸ்.எஸ். லக்ஷ்மி 1985

குறிப்பு:

சலம் எழுதிய உரையாக்கங்கள் எழுதப்பெற்ற காலம் குறிப்பிடப்பெற்றுள்ளது. இப்பொழுது அவ்வுரையாக்கங்கள் அருணா நூல் வெளியீட்டாளர், விஜயவாடா, பெரும்பாலானவற்றை மீண்டும் அச்சிட்டளித்துள்ளனர்.

எளிய மக்கள் இலக்கியத்தில் தெலுங்கு வழக்குமொழியை வலிமையுறச் சீரமைத்து வழிகாட்டிய எழுத்தாளர் சலம். நவீனங்களுக்கு, நாடகங்களுக்கு, கதைகளுக்கு புதியதோர் வடிவம் தந்து, உரைநடைப்படைப்புக்களில் காவியச் சிற்பத்தைத் துவக்கி வைத்த சலம், இந்திய இலக்கியப் படைப்பாளர்களில் தலையாய தெலுங்கு எழுத்தாளர். மனிதவுரிமையை, தன்னற நெறியைப் போற்றிப் பற்றிய சலம் மிகுதியாகப் பெண் உரிமையைப் பற்றி எழுதுவதற்கான காரணம், சமுதாயத்தில் பெண் பாதித்தவளாகி ஆண் ஆளும் நிலைமையில் இருப்பதே! மணவினைச் சடங்கு, பாலுறவுத் தொடர்புகள், பெண்ணின் பெருமை முதலான பொருள்களில் மரபுவழிக் கோட்பாட்டினை மாற்றி, புதிய கண்ணோட்டத்தை எளிமையான சிந்தனைப் பாங்கினைச் சலத்தின் உரையாக்கங்கள் கொணர்ந்து வைத்தன. இந்நூற்றாண்டில் மேலை நாடுகளில் ஃபிராய்டு உளநூல் கொள்கைகள் அளித்த அளவு மாற்றம் சலம் உரையாக்கங்களின் வாயிலாகத் தெலுங்கு வாசகர் உலகத்துக்கும் வந்தது. சலம் இலக்கியப் படைப்பாளர் மட்டுமல்லர், ஒரு புரட்சியாளர். சீர்திருத்தவாதியெனப் பெயர் பெற்ற சலம் தனிமனிதவாதியாகவே சமுதாயத்தை விமரிசித்தார். அவர் மனித உரிமைக்கும் மனித முன்னேற்றத்துக்கும் தலையாய இடமளித்தார். 1937க்குப் பிறகு மறைமுகமாகி 1950இல் ரமணாச்ரமம் சேர்ந்து, ஆன்மீக ஞானம் தேட முனைந்தார். ‘மரணம்’, ‘புரூருவர்’, ‘ஜீவிதாதர்சம்’ போன்ற உரையாக்கங்களில் சலம் ஆன்மீகக்காட்சி, துறவுநிலை அழகிய முழுமையடைந்து, அவரது உளமாற்றத்தை, வாழ்வின் நிறைவை எடுத்துணர்த்துகின்றன.

இந்நூலில் ஸ்ரீ ஆர்.எஸ். சுதர்சனம் சலம் இலக்கியத்தை யல்லாமல், அவரின் ஆன்மநேய நாட்டத்தையும் சலம் கடிதங்கள் வாயிலாக, தன் வரலாறு வாயிலாக ஆராய்ந்து, சலம் உரை யாக்கத்துக்கும் அவர் வாழ்க்கைக்கும் இணையான தொடர்பினைக் கிட்டச் செய்தார். கற்றறிந்த மேதையாக, விமரிசகராக, நவீன எழுத்தாளராக, பெரும்புகழ்பெற்ற ஸ்ரீசுதர்ஸனம் அவர்களின் புதினம் ‘சம்சார விருட்சம்’ ஹிந்தியில் ‘மட்கெ பந்தன்’ என மொழியாக்கமாயிற்று. அவர் ஆந்திரப்பிரதேச சாகித்திய அக்காடெமி பரிசினை 1975இல் தம் இலக்கிய விமரிசனத்துக்கும், 1977இல் நவீனத்துக்கும் பெற்றார்.

Gudipadi Venkata Chalam (Tamil)
ISBN 81 7201-741-3 **Rs. 15**